மாகாண தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டம்

மத்திய மாகாணம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு

”நிபுணதா பியச”, 03 ஆவது மாடி, 354/2, எல்விட்டிகல மாவத்தை,

கொழும்பு 05, இலங்கை

தொலைபேசி : +94-(0)115849291 தொலைநகல் : +94(0)11-2555007

ஈமெயில்: info@tvec.gov.lk, இணையம்: www.tvec.gov.lk

ISBN 978-955-0545-03-2

மாகாண தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் (VET) திட்டம்

மத்திய மாகாணம்

2015 தொடக்கம் 2019

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

(திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு)

மூன்றாம் மாடி, “நிபுணதா பியச”

354/2, எல்விட்டிகல மாவத்தை

கொழும்பு - 05

முன்னுரை

மத்திய மாகாணத்தின் கௌரவ முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க திறைசேரியின் நிதியுதவியுடன் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில், மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) ஆனது நாட்டிலுள்ள தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையின் அனைத்து மட்டங்களிலும் திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியன தொடர்பாக தனக்கு வழங்கப்பட்டுள்ள நிபந்தனையிற்கு இணங்க செயற்பட்டுவருகின்றது.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவிடம் (TVEC) 20 ஆம் இலக்க திருத்தப்பட்ட மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி (TVE) சட்டத்தின் மூலம் பல பயிற்சி வழங்குநர்களினால் நடாத்தப்பட்டு வருகின்ற TVET நிகழ்ச்சித் திட்டங்களின் திட்டமிடல், ஒருங்கிணைப்பு, தர உத்தரவாதம் ஆகியனவை தொடர்பான கடமையானது ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்திற்கு அமைவாக, மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) தேசிய தொழிற் தகைமை சட்டகமானது (NVQ) ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் இதன்மூலம் தேசிய ரீதியிலான தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிறுவகங்கள் ஆகியனவற்றுக்கான ஒருங்கிணைப்பானது மேற்கொள்ளப்படுகின்றது. உண்மையில், தேசிய தொழிற் தகைமை (NVQ) சட்டகத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள தேசிய தொழிற் தகைமை (NVQ) செயற்பாட்டு கையேட்டில் பல்வேறுபட்ட அரசதுறைசார் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) நிறுவகங்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. தேசிய தொழிற் தகைமை (NVQ) சட்டகத்தின் உருவாக்கத்திற்கு இணையாக, வளங்களினை வினைத்திறனான முறையில் பயன்படுத்தி தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்துவதற்காக மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் அவ்வாறான தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி (TVE) சட்டத்தில் மாகாண தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களை (VET திட்டங்களை) விருத்தி செய்தல் தொடர்பான ஏற்பாடுகள் காணப்படுகின்றன. இது தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி (TVE) சட்டத்தில் மாகாண மற்றும் மாவட்ட மட்ட தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களை (TVET) ஒருங்கிணைத்தல் மற்றும் மேம்படுத்தல் என்பவற்றுக்குரிய கருவியாக காணப்படுகின்றது. மேலும், மாகாண தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டமானது மாகாணத்திலுள்ள பிரதான கைத்தொழிற் துறை நிறுவகங்களுக்கு தேவையான திறன்கள் தொடர்பான அபிவிருத்தி தேவைகளை அடையாளம் காண்பதனையும் மற்றும் அவற்றிற்கு ஏற்றவாறு தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களை (TVET) வழங்குவதனையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

அனைத்து பங்காளிகள்; மத்திய மாகாண சபையின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், மாகாணத்திலுள்ள பிரதான கைத்தொழிற் துறை நிறுவக பிரதிநிதிகள் மற்றும் மாகாண தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்ட (TVET) நிறுவகங்கள் ஆகியன தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை (VET) விருத்தி செய்வதில் பங்குபற்றியிருந்தன. மேலும் இது தொடர்பாக பங்காளிகளினால் வழங்கப்பட்ட பங்களிப்புக்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்வதுடன், இத்திட்டத்தினை வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவதற்கு அனைவரினதும் ஒத்துழைப்புக்களை எதிர்பார்த்துள்ளோம். சப்பிரகமுவ, கிழக்கு, தென், வட மேல், ஊவா மற்றும் வடக்கு ஆகிய மாகாணங்களுக்கான மாகாண தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டங்கள் (VET) ஏற்கெனவே விருத்திசெய்யப்பட்டுள்ளதுடன் அவை அடுத்துவரும் ஐந்து வருட காலப்பகுதியில் மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டங்களை அவசியமான முறையில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்வதற்கும் அத்துடன் எதிர்வரும் நாட்களில் சம்பந்தப்பட்ட நிறுவகங்களுக்கும் மற்றும் பயனாளிகளுக்கும் அவற்றினை விநியோகிப்பதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பேராசிரியர். என். ஆர். அத்தநாயக்க

தலைவர்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

நன்றி நவிலல்

தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டமானது (VET திட்டம்) மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) மற்றும் மத்திய மாகாண சபை அலுவலகம் ஆகியன குழுவாக இணைந்து மேற்கொண்ட செயற்பாட்டின் ஓர் விளைவாகும். முதலாவதாக, மத்திய மாகாண சபையின் முதலமைச்சரான கௌரவ சரத் ஏக்கநாயக்க அவர்கள் மாகாண தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்திற்கான (VET) கோரிக்கையினை மேற்கொண்டமைக்காகவும் மற்றும் ஊக்குவிப்பினை வழங்கியமைக்காகவும் எனது பாராட்டினையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றேன். மாகாணத்தின் பிரதம செயலாளரான திரு. சரத் பிரேமவன்ச அவர்கள் இத்திட்டத்தினை விருத்திசெய்வதற்காக பங்காளிகள் மற்றும் ஏனைய பங்கேற்பாளர்கள் ஆகியோருடன் நடாத்தப்பட்ட கூட்டத்திற்கு தலைமை தாங்கியிருந்தார். திரு. எம். ஆர். ஜி. எச். தசநாயக்க, பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்) அவர்கள் கைத்தொழிற் துறை நிறுவகங்களின் பிரதிநிதிகள், பயிற்சி நிறுவகங்கள் மற்றும் ஏனைய பங்காளிகள் ஆகியோருடன் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செயலமர்வுகளினதும் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டதுடன் இம்முயற்சியானது வெற்றிபெறுவதற்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் தரவு சேகரிப்பிற்கு அவசியமான பல்வேறு வகையான தரவு மூலங்களை வழங்கி உதவியுள்ளதுடன் இடம்பெற்ற செயலமர்வுகளிற்கு தமது வல்லுநர்களை அனுப்பியுமுள்ளனர். மாகாண சபையில் கடமையாற்றும் திருமதி. ஆர். எம். எஸ். மனிக்கே மற்றும் திரு. பிரதீப் ராஜபக்ஸ மற்றும் ஏனைய அதிகாரிகள் ஆகியோர் செயலமர்வுகளை ஒழுங்கமைத்தல் மற்றும் அவற்றினை நடாத்துதல் ஆகியவற்றுக்கு உதவிகளை வழங்கியமைக்காகவும் மற்றும் தேவையான தகவல்களை அளித்தமைக்காகவும் அவர்களுக்கு விசேடமான பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டமானது (VET) பேராதனை பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட கல்விசார் குழு மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC), மாகாண அரசதுறை நிறுவகங்கள் மற்றும் தொடர்புடைய பங்காளிகள் ஆகியோரின் ஆலோசனையுடன் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை (VET) விருத்தி செய்வதற்கான பொறுப்பானது பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினைச் சேர்ந்த கலாநிதி. ஆனந்த ஜெயவிக்கிரம அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அத்துடன், அவருக்கு திரு. பாரத தொடங்கொட்டுவ, முகாமைத்துவ கற்கைகள் துறை, கலாநிதி. ஜே. ஜி. ஸ்ரீ ரஞ்சித், முகாமைத்துவ கற்கைகள் துறை, திரு. ரவி குறுப்புகே, முகாமைத்துவ கற்கைகள் துறை மற்றும் திரு. சுசந்த ரஸ்நாயக்க, சமூகவியல் துறை ஆகியோர் ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளனர். இச் செயற்திட்டத்தினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தமைக்காக திட்ட குழுவிற்கு மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) தனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

மேலும், தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) நிறுவகங்களான தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA), கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை (VTA), தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் (DTET), தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் (NYSC), மற்றும் ஏனைய அரச, தனியார் துறைகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவக பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் ஆகியனவற்றினை சேர்ந்த அதிகாரிகளால் வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்களுக்கு மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) தனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றது. செயலமர்வுகள் மற்றும் கலந்துரையாடல்கள் என்பனவற்றில் பங்குபற்றிய REDA, DIDEP, BOI மற்றும் வர்த்தக சம்மேளனம் ஆகிய வெவ்வேறு அரசசார் நிறுவகங்களை சேர்ந்த அதிகாரிகள் வழங்கிய ஒத்துழைப்புகளிற்கும் பாராட்டுகள் தெரிவித்துக்கொள்ளப்படுகின்றது. பயிற்சி பெற்றவர்கள், பயிலுநர்கள், கைத்தொழிற்துறை நிறுவக உரிமையாளர்கள் மற்றும் முகாமையாளர்கள், பயிற்சி வழங்கும் நிறுவக முகாமையாளர்கள் மற்றும் பயிற்றுநர்கள், ஏனைய அரசசார் அதிகாரிகள் ஆகியோரால் வழங்கப்பட்ட

ஒத்துழைப்புக்களுக்கும், தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) செயலமர்வுகளில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவானது (TVEC) திரு. பீ. சீ. பீ. ஜெயதிலக்க, பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி) மற்றும் ஏனைய பணிப்பாளர்கள், அனைத்து பிரதி பணிப்பாளர்கள், திரு. ஜி. ஏ. எம். யூ. கனேபொல, உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி) உள்ளடங்கலாக ஏனைய உதவிப் பணிப்பாளர்கள், செல்வி. குமுது அமரசிங்க, கணனி பிரயோக உதவியாளர் உள்ளடங்கலாக அனைத்து உத்தியோகத்தர்கள் ஆகியோர் மூலம் ஒரு குழுவாக இச்செயற்பாட்டினை மேற்கொண்டுள்ளது. இவர்கள் இப்பெறுமதி வாய்ந்த ஆவணத்தினை தயாரிப்பதில் காட்டிய ஈடுபாடுகள் மற்றும் அர்ப்பணிப்புக்கள் பற்றி கருத்திற்கொள்ளும் போது இந்த தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை (VET) வெற்றிகரமாக பூர்த்திசெய்வதற்கு ஒத்துழைப்புக்களை வழங்கிய அனைவருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், நான் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு அனைத்து அதிகாரிகள் மற்றும் பங்காளிகள் ஆகியோரின் அதிகூடிய பங்களிப்பினை எதிர்பார்க்கின்றேன்.

மல்காந்தி ஜெயவர்தன
பணிப்பாளர் நாயகம்
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

உள்ளடக்கம் **பக்கம்**

அட்டவணைகள் மற்றும் படங்களின் பட்டியல் i
சுருக்கங்கள் vii
நிறைவேற்று சுருக்கம் viii

அத்தியாயம் 01: அறிமுகம்

1.0 கண்ணோட்டம்
1.1 அடிப்படைக் கோட்பாடு
1.2 திட்ட அபிவிருத்திக்கான நோக்கங்கள்
1.3 செய்முறை
1.4 துறைசார் கற்கைகள் மற்றும் கேள்வி எதிர்வுகூறல்கள்
1.5 பயிற்சி தேவைப்படுகள் மற்றும் பயிற்சி திட்டம்
1.6 குறைபாடுகள்

அத்தியாயம் 02: மத்திய மாகாணத்தின் சமூக - பொருளாதார சூழல்

2.0 கண்ணோட்டம்
2.1 நிர்வாக கட்டமைப்பு
2.2 புவியியல் மற்றும் காலநிலை
2.3 சனத்தொகை
2.3.1 சனத்தொகை பரம்பல் மற்றும் பால் நிலைமை
2.3.2 துறைசார் சனத்தொகை பரம்பல்
2.3.3 மாற்றுத்திறனாளிகளின் சனத்தொகை
2.4 மத்திய மாகாணத்தின் பொருளாதார கட்டமைப்பு
2.5 தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை
2.5.1 தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் பங்குபற்றல்கள்
2.5.2 வேலைவாய்ப்பு
2.5.3 வெளிநாட்டு வேலைவாய்ப்பு
2.5.4. வேலைவாய்ப்பின்மை மற்றும் தகுதிக்கான வேலைவாய்ப்பின்மை

2.6 குடும்ப வருமானம், வருமான பரம்பல் மற்றும் வறுமை தொடர்பான கூறுகள்
2.6.1 குடும்ப வருமானம், செலவீனங்கள் மற்றும் சேமிப்புக்கள்

2.6.2 வருமான பரம்பல் மற்றும் வறுமை
2.7 கல்வி
2.7.1 கல்வியறிவு வீதம்
2.7.2 பாடசாலைகள் மற்றும் மாணவர் சேர்க்கை
2.7.3 ஆசிரியர்கள் மற்றும் தகுதிகள்
2.7.4 மாணவர் சனத்தொகைமற்றும் உயர்கல்வி
2.8 சாரம்சம்

அத்தியாயம் 03: மத்திய மாகாணத்திற்கான கைத்தொழிற் துறை அறிக்கைகள்

3.0 கண்ணோட்டம்
3.1 கட்டுமான கைத்தொழிற் துறையின் துறைசார் அறிக்கை
3.1.1 பின்னணி
3.1.2 பதிவு செய்யப்பட்ட கட்டுமான கம்பனிகள்
3.1.3 கட்டுமான துறையில் காணப்படுகின்ற வேலைவாய்ப்புக்கள் தொடர்பான மதிப்பீடு
3.1.4 மாவட்ட மற்றும் தொழில்கள் அடிப்படையில் கட்டுமான துறையில் காணப்படுகின்ற வேலைவாய்ப்புக்கள் தொடர்பான மதிப்பீடு
3.1.5 மாவட்ட மற்றும் திறன்கள் அடிப்படையில் கட்டுமான துறையில் காணப்படுகின்ற வேலைவாய்ப்புக்கள் தொடர்பான மதிப்பீடு
3.1.6 கட்டுமான தொழிலாளர்களுக்கு வெளிநாட்டில் நிலவுகின்ற கேள்விகள்
3.1.7 கட்டுமான துறையிற்கான வருடாந்த பயிற்சி தேவைகள்
70
3.2 இலகு பொறியியல் துறை
3.2.1 பின்னணி
3.2.2 நிறுவகங்கள் மற்றும் வேலைவாய்ப்பு எண்ணிக்கைகள்
3.2.3 தொழில் அடிப்படையில் வேலைவாய்ப்பு தொடர்பான மதிப்பீடு
3.2.4 வருடாந்த சராசரி தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள்
3.2.5 இலகு பொறியியல் துறைசார் தொழிலாளர்களுக்கு வெளிநாடுகளில் நிலவுகின்ற கேள்விகள்
3.2.6 இலகு பொறியியல் துறையில் காணப்படுகின்ற மொத்த பயிற்சி தேவைப்பாடுகள்

3.3 தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு துறை

3.3.1 பின்னணி

3.3.2 நிறுவகங்கள் மற்றும் வேலைவாய்ப்பு எண்ணிக்கைகள்

3.3.3 தொழில் அடிப்படையில் வேலைவாய்ப்பு தொடர்பான மதிப்பீடு

3.3.4 வருடாந்த சராசரி தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள்

3.3.5 தன்னியக்க இயந்திரவியல் துறைசார் தொழிலாளர்களுக்கு வெளிநாடுகளில் நிலவுகின்ற கேள்விகள்

3.3.6 தன்னியக்க இயந்திரவியல் துறையில் காணப்படுகின்ற மொத்த பயிற்சி தேவைப்பாடுகள்

3.4 வீட்டு மின்சார உபகரணம் பழுதுபார்த்தல் துறை

3.4.1 பின்னணி

3.4.2 நிறுவகங்கள் மற்றும் வேலைவாய்ப்பு எண்ணிக்கைகள்

3.4.3 தொழில் அடிப்படையில் வேலைவாய்ப்பு தொடர்பான மதிப்பீடு

3.4.4 வருடாந்த சராசரி தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள்

3.4.5 வீட்டு மின்சார உபகரணம் பழுதுபார்க்கும் தொழிலாளர்களுக்கு வெளிநாடுகளில் நிலவுகின்ற கேள்விகள் 88

3.4.6 மின்சார உபகரணம் பழுதுபார்க்கும் துறையில் காணப்படுகின்ற மொத்த பயிற்சி தேவைப்பாடுகள்

3.5 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) துறை

3.5.1 பின்னணி

3.5.2 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறை தொடர்பான மாகாணத்திற்கான தரவுகள்

3.5.3 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறை தொடர்பான பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்புக்கள்

3.5.4 தொலைத் தொடர்பாடல் கைத்தொழிற் துறை தொடர்பான பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்புக்கள்

3.6 அச்சிடுதல் மற்றும் பிரசுரித்தல் தொடர்பான கைத்தொழிற் துறை நிறுவகங்கள்

3.6.1. பின்னணி

3.6.2 நிறுவகங்களின் எண்ணிக்கை, தொழிலாளர்கள் மற்றும் பயிற்சிகள்

3.7 புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழிற் துறை

3.7.1 பின்னணி

3.7.2 ஆடைக் கைத்தொழிற் துறை

3.7.3 மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற கைத்தறி ஆடைத் துறை

3.7.4 ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் கைத்தறித் துறை ஆகியவற்றிலுள்ள தொழிலாளர்கள் தொடர்பான விபரங்கள்

3.7.5 ஆடைக் கைத்தொழிற் துறையில் எதிர்காலத்தில் காணப்படக்கூடிய தொழிலாளர்களுக்கான தேவைகள்

3.8 மத்திய மாகாணத்தின் ஹோட்டல் மற்றும் சுற்றுலா துறை

3.8.1 பின்னணி

3.8.2 இலங்கைக்கான சுற்றுலா பயணிகளின் வருகை

3.8.3 மத்திய மாகாணத்திலுள்ள பிரதான சுற்றுலா ஸ்தலங்கள்

3.8.4 மத்திய மாகாணத்திலுள்ள ஹோட்டல்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய தகவல்கள்

3.8.5 சுற்றுலா கைத்தொழிற் துறையில் காணப்படுகின்ற வேலைவாய்ப்புக்கள்

3.8.6 சுற்றுலா துறையில் எதிர்காலத்தில் காணப்படக்கூடிய தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள்

3.9 குடிசை கைத்தொழிற் துறை

3.9.1 பின்னணி

3.9.2 மாகாணத்திலுள்ள குடிசை கைத்தொழிற் துறை தொடர்பான விபரங்கள் 137

3.9.3 தொழிலாளர்களுக்கான சராசரி வருடாந்த தேவைப்பாடுகள்

3.10 சாரம்சம்

அத்தியாயம் 04: மத்திய மாகாணத்தில் தொழிலாளர் சந்தைகளுக்கு திறனுடைய தொழிலாளர்களின் வழங்கல்

4.0 கண்ணோட்டம்

4.1 தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (TVET) நிறுவகங்களில் மாணவர்கள் பயிற்சி பெறுதல்

4.2 பயிற்சி நிறுவகங்களின் விபரம்

4.3 பாடநெறிகளின் எண்ணிக்கை மற்றும் பாடநெறிகளின் கலப்பு

4.4 பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை

4.5 பாடநெறிகளை பூர்த்திசெய்யவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான மதிப்பீடு

4.6 தற்போது பயிற்சிகளில் காணப்படும் இடைவெளிகள் மற்றும் எதிர்கால பயிற்சித் தேவைகள்

4.6.1 கட்டுமான துறை

4.6.2 இலகு பொறியியல் துறை

4.6.3 தன்னியக்க இயந்திரங்களினை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் 170

4.6.4 வீட்டு மின்சார உபகரணங்கள் பழுதுபார்த்தல் சேவைகள்

4.6.5 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) மற்றும் அச்சிடுதல் துறை 172

4.6.6 புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழில் நிறுவகங்கள்

4.6.7 ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலா துறை

4.6.8 குடிசைக் கைத்தொழில் நிறுவகங்கள்

4.7 பயிற்சி வழங்கும் நிறுவகங்களினால் வழங்கப்பட்ட பதில்கள்

4.8 தேசிய தொழிற் தகைமை (NVQ) இனை பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் பதில்கள்

4.8.1 பயிற்சி பெற்ற நபர்களிடம் அடையாளம் காணப்பட்ட இயல்புகள்

4.8.2 பயிற்சி பெற்ற நபர்களது வேலைவாய்ப்பு/ வேலைவாய்ப்பின்மை

4.8.3 பயிற்சியின் நன்மைகள்

4.8.4. பயிற்சி நிறுவகங்களில் பயிற்சி வழங்கல் மற்றும் வசதிகள் தொடர்பான அபிப்பிராயங்கள்

4.8.5. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் விரிவாக்கம் தொடர்பான அபிப்பிராயங்கள்

4.9 தற்போதைய தேசிய தொழிற் தகைமை (NVQ) இனை பெற்றுக்கொள்வதற்காக பயிற்சிபெறும் பயிலுநர்களின் பதில்கள்

4.9.1 தற்போதைய பயிலுநர்களிடம் அடையாளம் காணப்பட்ட பிரதான இயல்புகள்

4.9.2 கற்பிக்கப்படுகின்ற பாடநெறிகள்

4.9.3 பாடநெறிக்கான காலப்பகுதி

4.9.4. பயிற்சிகள் தொடர்பான பிரச்சினைகள்

4.9.5 பாடநெறிகள் மற்றும் பயிற்சி நிறுவகங்கள் தொடர்பான மாணவர்களின் மனோநிலை 188

4.9.6 பாடநெறிகள் நிறைவுசெய்யப்பட்டிருத்தல்

4.10 பயிற்சிகள் மற்றும் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் தொடர்பான பிரச்சினைகள் 190

4.11 சாரம்சம்

அத்தியாயம் 05: மத்திய மாகாணத்திற்கான தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டம்

5.0 கண்ணோட்டம்

5.1 பயிற்சி தேவைப்பாடுகள்

5.2 பயிற்சி தலையீடுகள்

5.3 தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டம்

நூல் விபரத் தொகுப்பு

அட்டவணைகள் மற்றும் வரைபடங்கள் தொடர்பான பட்டியல்

பக்கம்

அட்டவணை 2.1 மத்திய மாகாணத்திலுள்ள மாகாண நிர்வாக அலகுகள்

அட்டவணை 2.2 மத்திய மாகாணத்திலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகள் ரீதியான கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கை

அட்டவணை 2.3 நில விஸ்தீரணம் மற்றும் சனத்தொகை

அட்டவணை 2.4 2012 ஆம் ஆண்டிற்கான மாவட்ட மற்றும் பால் அடிப்படையிலான சனத்தொகை

அட்டவணை 2.5 துறைகள் அடிப்படையிலான சனத்தொகை பரம்பல்

அட்டவணை 2.6 மாவட்ட அடிப்படையில் மாகாணத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளின் சனத்தொகை

அட்டவணை 2.7 மாகாண அடிப்டையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) கூறுகள்

அட்டவணை 2.8 மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) பொருளாதாரத் துறைகளின் அடிப்படையிலான பங்களிப்பு

அட்டவணை 2.9 சனத்தொகை, தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் பங்குபற்றல்கள், 2012

அட்டவணை 2.10 பிரதான பிரிவுகள் அடிப்படையில் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் பரம்பல், 2008 மற்றும் 2012

அட்டவணை 2.11 தொழில் வகைகளின் அடிப்படையில் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் பரம்பல், 2008 மற்றும் 2012

அட்டவணை 2.12 கைத்தொழிற்துறை நிறுவகங்கள் அடிப்படையில் தற்போது தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் பரம்பல், 2008 மற்றும் 2012

அட்டவணை 2.13 தொழிலாளர்களின் மட்டங்களின் அடிப்படையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் பரம்பல், 2011

அட்டவணை 2.14 தகுதிக்கேற்ற வேலையின்மை மற்றும் வேலையின்மை, 2012

அட்டவணை 2.15 குடும்பங்களின் சராசரி வருமானம், செலவீனம் மற்றும் சேமிப்புக்கள், 2009/10

அட்டவணை 2.16 வருமான சமத்துவமின்மை, 2009/10

அட்டவணை 2.17 வறுமை அளவீடுகள், 2009/10
அட்டவணை 2.18 மாவட்ட மற்றும் பால் ரீதியில் கல்வியறிவு வீதம், 2010
அட்டவணை 2.19 அரச பாடசாலைகளின் எண்ணிக்கை, 2012
அட்டவணை 2.20 தொழிற்பாட்டு தரங்களின் அடிப்படையில் அரச பாடசாலைகள், 2012
அட்டவணை 2.21 தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளின் எண்ணிக்கை, 2012
அட்டவணை 2.22 இன அடிப்படையில் அரச பாடசாலைகளின் எண்ணிக்கை, 2012
அட்டவணை 2.23 உள்ளூராட்சி பிரிவுகளின் அடிப்படையில் பாடசாலைகளின் எண்ணிக்கை, 2012
அட்டவணை 2.24 பெருந்தோட்ட பிரிவுகளிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை, 2012
அட்டவணை 2.25 மொழி மூலங்களின் அடிப்படையில் அரச பாடசாலைகளின் எண்ணிக்கை
அட்டவணை 2.26 பால் அடிப்படையில் அரச பாடசாலைகளின் எண்ணிக்கை, 2012
அட்டவணை 2.27 கஷ்ட நிலைமைகளின் அடிப்படையில் பாடசாலைகளை வகைப்படுத்தல், 2012
அட்டவணை 2.28 அரச பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை (தரம் 1 - 13), 2012
அட்டவணை 2.29 Schools by Number of Teachers, 2012 ஆசிரியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பாடசலைகள், 2012
அட்டவணை 2.30 கல்வித் தராதரங்களின் அடிப்படையில் அரச பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள், 2012
அட்டவணை 2.31 தராதரங்களின் அடிப்படையில் அரச பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள், 2012
அட்டவணை 2.32 ஆசிரியர்கள் மற்றும் மாவட்டங்களின் அடிப்படையில் மொத்த மாணவர் ஆசிரியர் விகிதம், 2012
அட்டவணை 2.33 மாணவர் தொகையின் அடிப்படையில் பாடசாலைகளை வகைப்படுத்தல், 2012
அட்டவணை 2.34 வகுப்பு மட்டங்களின் அடிப்படையில் பாடசாலைகளின் எண்ணிக்கை, 2012

அட்டவணை 2.35 க. பொ. த (உ/ த) விஞ்ஞான பிரிவினை கொண்டுள்ள அரச பாடசாலைகளின் எண்ணிக்கை, 2012

அட்டவணை 2.36 தனியார் பாடசாலைகள் மற்றும் மாணவர்கள் மற்றும் ஆசிரியரகளின் எண்ணிக்கை, 2012

அட்டவணை 2.37 க. பொ. த (சா/ த) பரீட்சையில் பாடசாலை பரீட்சார்த்திகளின் தேர்ச்சி

அட்டவணை 2.38 க. பொ. த (உ/ த) பரீட்சையில் பாடசாலை பரீட்சார்த்திகளின் தேர்ச்சி

அட்டவணை 2.39 மாகாண மற்றும் மாவட்ட ரீதியில் பல்கலைக்கழக அனுமதி, 2003/ 04 - 2010/ 11

அட்டவணை 3.1 மத்திய மாகாணம் மற்றும் இலங்கையில் கட்டுமான கைத்தொழிற் துறை நிறுவகங்களின் செயல்திறன்

அட்டவணை 3.2 மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கு மற்றும் கட்டுமான துறையின் வளர்ச்சி வீதம்

அட்டவணை 3.3 மத்திய மாகாணத்தில் நிலையான விலை நிலைமைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற கட்டுமான துறையின் விளைவு

அட்டவணை 3.4 கட்டுமான கம்பனிகளின் வகைப்படுத்தல்கள்

அட்டவணை 3.5 கண்டி மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட கட்டுமான கம்பனிகள்

அட்டவணை 3.6 மாத்தளை மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட கட்டுமான கம்பனிகள்

அட்டவணை 3.7 நுவரெலியா மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட கட்டுமான கம்பனிகள்

அட்டவணை 3.8 மத்திய மாகாணத்திலுள்ள கட்டுமான கைவினைஞர்களின் எண்ணிக்கை தொடர்பான மதிப்பீடு

அட்டவணை 3.9 மத்திய மாகாணத்தின் கட்டுமான துறைசார் வேலைவாய்ப்புகள் தெடர்பான மதிப்பீடு, 2013 - 2018

அட்டவணை 3.10 கண்டி மாவட்டத்திலுள்ள கட்டுமான துறைசார் வேலைவாய்ப்புக்கள் தொடர்பான மதிப்பீடு, 2013 - 2018

அட்டவணை 3.11 மாத்தளை மாவட்டத்திலுள்ள கட்டுமான துறைசார் வேலைவாய்ப்புக்கள் தொடர்பான மதிப்பீடு, 2013 - 2018

அட்டவணை 3.12 நுவரெலியா மாவட்டத்திலுள்ள கட்டுமான துறைசார் வேலைவாய்ப்புக்கள் தொடர்பான மதிப்பீடு, 2013 - 2018

அட்டவணை 3.13 கட்டுமான துறை வேலைவாய்ப்புகளுக்கான சராசரி வருடாந்த தேவைகள், 2014 - 2018

அட்டவணை 3.14 கைவினைஞர் தொழில் வகைகளுக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - கண்டி

அட்டவணை 3.15 கைவினைஞர் தொழில் வகைகளுக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - மாத்தளை

அட்டவணை 3.16 கைவினைஞர் தொழில் வகைகளுக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - நுவரெலியா

அட்டவணை 3.17 கைவினைஞர் துறையிலுள்ள மேலதிக வேலைவாய்ப்புகள் (வருடாந்த சராசரி)

அட்டவணை 3.18 இயந்திர இயக்குநர்களுக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - கண்டி

அட்டவணை 3.19 இயந்திர இயக்குநர்களுக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - மாத்தளை

அட்டவணை 3.20 இயந்திர இயக்குநர்களுக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - நுவரெலியா

அட்டவணை 3.21 இயந்திர இயக்குநர் துறையிலுள்ள மேலதிக வேலைவாய்ப்புகள் (வருடாந்த சராசரி)

அட்டவணை 3.22 தொழில்நுட்ப தரத்தில் உள்ளோருக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - கண்டி

அட்டவணை 3.23 தொழில்நுட்ப தரத்தில் உள்ளோருக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - மாத்தளை

அட்டவணை 3.24 தொழில்நுட்ப தரத்தில் உள்ளோருக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - நுவரெலியா

அட்டவணை 3.25 தொழில்நுட்ப பிரிவிலுள்ள மேலதிக வேலைவாய்ப்புகள் (வருடாந்த சராசரி)

அட்டவணை 3.26 எதிர்கால வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்

அட்டவணை 3.27 மத்திய மாகாணத்தில் கட்டுமான துறையிலுள்ள மொத்த பயிற்சி தேவைப்பாடுகள்

அட்டவணை 3.28

இலகு பொறியியல் துறையில் உள்ள அலகுகளின் எண்ணிக்கை மற்றும் வேலைவாய்ப்பு, 2013
அட்டவணை 3.29 இலகு பொறியியல் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கான வருடாந்த சராசரி கேள்விகள் தொடர்பான மதிப்பீடு
அட்டவணை 3.30 இலகு பொறியியல் தொழிலாளர்களுக்கு வெளிநாட்டில் நிலவுகின்ற கேள்விகள்
அட்டவணை 3.31 இலகு பொறியியல் துறையில் காணப்படுகின்ற மொத்த பயிற்சித் தேவைப்பாடுகள்
அட்டவணை 3.32 தன்னியக்க இயந்திரவியல் துறைசார் தொழிற்சாலைகள் மற்றும் வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை - 2013
அட்டவணை 3.33 தன்னியக்க இயந்திரவியல் துறையில் நிலவுகின்ற தொழிலாளர்களுக்கான கேள்விகளின் கணிக்கப்பட்ட ஆண்டுச் சராசரிப் பெறுமானம்
அட்டவணை 3.34 தன்னியக்க இயந்திரவியல் துறையில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள்
அட்டவணை 3.35 தன்னியக்க இயந்திரவியல் துறையில் நிலவுகின்ற வருடாந்த சராசரி பயிற்சி தேவைப்பாடுகள்
அட்டவணை 3.36 மின் உபகரணம் பழுதுபார்த்தல் துறையில் உள்ள கணிக்கப்பட்ட வேலைவாய்ப்புக்கள் 2013
அட்டவணை 3.37 மின் உபகரணம் பழுதுபார்த்தல் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கான கணிக்கப்பட்ட ஆண்டு சராசரி கேள்விகள்
அட்டவணை 3.38 மின் உபகரணம் பழுதுபார்த்தல் துறையில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்கான கேள்விகள்
அட்டவணை 3.39 மின் உபகரணம் பழுதுபார்த்தல் துறையில் காணப்படுகின்ற மொத்த பயிற்சித் தேவைப்பாடுகள்
அட்டவணை 3.40 துறை மற்றும் மாகாண ரீதியாக வீடுகளில் கணனிகளை சொந்தமாக வைத்திருப்போர்
அட்டவணை 3.41 துறை மற்றும் மாகாண ரீதியான கணனி தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கணனி கல்வியறிவு
அட்டவணை 3.42 துறை மற்றும் மாகாண ரீதியான இணைய வலையமைப்பு (Internet) மற்றும் இலத்திரனியல் தபால் முறைமையின் (Email) பாவனை 2009
அட்டவணை 3.43 5 - 59 வயது வரையான கணனி அறிவுள்ள குடிசனத் தொகை 2009

அட்டவணை 3.44 கணனி சம்பந்தப்பட்ட துறைகளில் உள்ள சிறிய அளவிலான நிறுவகங்கள்
அட்டவணை 3.45 கணனி சம்பந்தப்பட்ட துறைகளில் உள்ள நடுத்தர அளவிலான நிறுவகங்கள்
அட்டவணை 3.46 கணனி கைத்தொழிற் துறை நிறுவகங்களில் காணப்படுகின்ற மதிப்பீடு செய்யப்பட்ட தொழிலாளர் தேவைப்பாடுகள்
அட்டவணை 3.47 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையில் எதிர்வு கூறப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள்
அட்டவணை 3.48 தொலைத் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையில் எதிர்பார்க்கப்படுகின்ற தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள்
அட்டவணை 3.49 அச்சிடல் மற்றும் பிரசுரித்தல் கைத்தொழிற் துறைசார் நிறுவகங்களின் எண்ணிக்கை
அட்டவணை 3.50 அச்சிடல் மற்றும் பிரசுரித்தல் கைத்தொழிற் துறையில் காணப்படுகின்ற வேலைவாய்ப்புக்கள் தொடர்பான வகைப்படுத்தல்கள் 2010
அட்டவணை 3.51 அச்சிடல் மற்றும் பிரசுரித்தல் கைத்தொழிற் துறையில் காணப்படுகின்ற வேலைவாய்ப்புக்கள் தொடர்பான வகைப்படுத்தல்கள், 2009
அட்டவணை 3.52 அச்சிடல் துறையில் தீர்மானிக்கப்பட்ட மாகாண மட்டத்திலான தொழிலாளர் தேவைப்பாடுகள்
அட்டவணை 3.54 மத்திய மாகாணத்தின் ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்களின் பரம்பல்
அட்டவணை 3.55 மத்திய மாகாணத்தின் ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்களின் அளவறி ரீதியான பரம்பல்
அட்டவணை 3.56 மத்திய மாகாணத்தின் கைத்தறி ஆடைத் துறை தொடர்பான நிறுவகங்களின் எண்ணிக்கை 2013
அட்டவணை 3.57 மாகாணத்தில் காணப்படுகின்ற ஆடைத் தொழிற்சாலைகளிலுள்ள தொழில்களின் வகைகள் மற்றும் தொழிற் பிரிவுகள்
அட்டவணை 3.58 வயது மற்றும் பால் ரீதியாக மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற ஆடைத் தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை
அட்டவணை 3.59 ஆடைத் தொழிற்சாலைகளிலுள்ள தொழில் வகைகள் மற்றும் தொழிலாளர்கள்

அட்டவணை 3.60 மத்திய மாகாணத்தில் உள்ள கைத்தறி ஆடைத்துறையில் காணப்படுகின்ற வேலைவாய்ப்புகள் 2013

அட்டவணை 3.61 ஆடைத்துறையில் காணப்படுகின்ற முகாமைத்துவம் அல்லாத தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள்
அட்டவணை 3.62 ஆடைத்துறையில் காணப்படுகின்ற முகாமைத்துவம் சார்ந்த தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள்
அட்டவணை 3.63 ஆடைத்துறையில் காணப்படுகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்கள்
அட்டவணை 3.64 இலங்கைக்கு வருகை தருவதற்கான நோக்கங்கள்

அட்டவணை 3.65 பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தரும் சுற்றுலாப் பிரயாணிகள் 2013
அட்டவணை 3.66 பிரதேச ரீதியிலான சுற்றுலா பிரயாணிகளின் வருகை, 2013

அட்டவணை 3.67 தங்கியிருந்த கால அளவு, 2012

அட்டவணை 3.68 தரப்படுத்தப்பட்டுள்ள நிறுவகங்களின் தங்குமிட கொள்ளளவு மற்றும் அவற்றின் பரம்பல்
அட்டவணை 3.69 மத்திய மாகாணத்தில் சுற்றுலாப் பிரயாணிகள் அடிக்கடி வருகை தரும் இடங்கள்
அட்டவணை 3.70 மத்திய மாகாணத்தில் சுற்றுலா துறையின் பங்களிப்பு தொடர்பான சாராம்சம்
அட்டவணை 3.71 மத்திய மாகாணத்தில் உள்ள அறைகளின் கொள்ளளவு தொடர்பான பகுப்பாய்வு
அட்டவணை 3.72 சுற்றுலா ஸ்தலங்களின் அடிப்படையில் தங்கியிருப்பு வீதம்

அட்டவணை 3.73 மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள நட்சத்திர தரம் வாய்ந்த ஹோட்டல்கள்
அட்டவணை 3.74 கண்டி மாநகரத்தில் காணப்படுகின்ற கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண கடைகள்
அட்டவணை 3.75 தாவரவியற் பூங்காக்களுக்கான சுற்றுலாப்பயணிகளின் வருகைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானங்கள் 2008

அட்டவணை 3.76 மத்திய மாகாணத்திலுள்ள மிகவும் பிரபல்யமான நீர்வீழ்ச்சிகள்

அட்டவணை 3.77 சுற்றுலா கைத்தொழிற் துறையில் காணப்படுகின்ற நேரடி வேலைவாய்ப்புக்கள் - 2008 மற்றும் 2012

அட்டவணை 3.78 சுற்றுலா துறையின் உப பிரிவுகளில் உள்ள நேரடி வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் - 2012

அட்டவணை 3.79 சுற்றுலா துறையின் பிரதானமான வேலைவாய்ப்பு வகைகளிலுள்ள நேரடி வேலைவாய்ப்புகள்

அட்டவணை 3.80 சுற்றுலா துறையில் காணப்படுகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கான கேள்விகள் மற்றும் சந்தர்ப்பங்கள்

அட்டவணை 3.81 சுற்றுலா துறையில் காணப்படுகின்ற வருடாந்த தொழிலாளர்களுக்கான கேள்விகள் தொடர்பான மதிப்பீடு

அட்டவணை 3.82 மத்திய மாகாணத்தின் சுற்றுலா துறையில் காணப்படுகின்ற தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள்

அட்டவணை 3.83 மாகாணத்திற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குடிசைக் கைத்தொழிற் துறையின் பங்களிப்பு

அட்டவணை 3.84 மத்திய மாகாணத்தில் உள்ள குடிசை கைத்தொழில் மற்றும் ஏனைய சிறிய அளவிலான கைத்தொழில்கள்

அட்டவணை 3.85 கண்டி மாவட்டத்தில் காணப்படுகின்ற குடிசைக் கைத்தொழிற்துறை நிறுவகங்களில் உள்ள தொழிலாளர்கள் தொடர்பான மதிப்பீடு

அட்டவணை 3.86 மாத்தளை மாவட்டத்தில் காணப்படுகின்ற குடிசைக் கைத்தொழிற்துறை நிறுவகங்களில் உள்ள தொழிலாளர்கள் தொடர்பான மதிப்பீடு

அட்டவணை 3.87 நுவரெலியா மாவட்டத்தில் காணப்படுகின்ற குடிசைக் கைத்தொழிற்துறை நிறுவகங்களில் உள்ள தொழிலாளர்கள் தொடர்பான மதிப்பீடு

அட்டவணை 3.88 மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற குடிசைக் கைத்தொழிற்துறை நிறுவகங்களில் உள்ள தொழிலாளர்கள் தொடர்பான மதிப்பீடு

அட்டவணை 4.1 மத்திய மாகாணத்தில் TVET துறையில் காணப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை

அட்டவணை 4.2 மாவட்ட ரீதியிலான நிலையங்களின் மூலமாக பதிவு செய்யப்பட்ட பயிற்சி வழங்குநர்கள் 2013

அட்டவணை 4.3 பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் ரீதியான NVQ மற்றும் NVQ அல்லாத பாடநெறிகளின் எண்ணிக்கை , 2013
அட்டவணை 4.4 கண்டி மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள பாடநெறிகள் மற்றும் பயிற்சிநெறிகள், 2013
அட்டவணை 4.5 மாத்தளை மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள பாடநெறிகள் மற்றும் பயிற்சிநெறிகள், 2013
அட்டவணை 4.6 நுவரெலியா மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள பாடநெறிகள் மற்றும் பயிற்சிநெறிகள், 2013
அட்டவணை 4.7 பதிவு செய்யப்பட்ட பாடநெறிகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2013
அட்டவணை 4.8 எதிர்பார்க்கப்பட்ட பதிவு செய்த மற்றும் பயிற்சியை பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை
அட்டவணை 4.9 கணிக்கப்பட்ட பயிற்சி வழங்கலின் கேள்விக்கும் வழங்கலிற்கும் இடையிலான இடைவெளி (NVQ மற்றும் NVQ அல்லாத)
அட்டவணை 4.10 பயிற்றப்பட்ட நபர்களின் பால், விவாக நிலை மற்றும் கல்வி 177
அட்டவணை 4.11 பயிற்றப்பட்ட நபர்களின் அடிப்படையில் அளிக்கப்பட்ட பயிற்சிகளின் வகைகள்
அட்டவணை 4.12 பயிற்சி மற்றும் நிறுவக தகவல்கள்
அட்டவணை 4.13 தேசிய தொழிற் தகைமையினை (NVQ) பெற்றுக்கொண்ட நபர்களுக்கான வேலைவாய்ப்பு நிலைமை
அட்டவணை 4.14 தேசிய தொழிற் தகைமையினை (NVQ) பெற்றுக்கொண்ட நபர்களிடையில் வேலைவாய்ப்பின்மைக்கான காரணங்கள்
அட்டவணை 4.15 தொழிற்கல்வி மற்றும் பயிற்சியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்மைகள்
அட்டவணை 4.16 பயிற்சி மற்றும் பயிற்சிக்கான வசதிகள் தொடர்பாக பயிற்சி வழங்கப்பட்ட நபர்களின் கருத்துகள்
அட்டவணை 4.17 தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வழங்கலினை விரிவு படுத்துவதற்கான ஆலோசனைகள்
அட்டவணை 4.18 தற்போதைய பயிலுநர்களின் கல்வி மட்டம் மற்றும் பால்
அட்டவணை 4.19 தற்போதைய பயிலுநர்களால் பயிலப்படும் பாடநெறிகள்

அட்டவணை 4.20 பாடநெறிகளுக்கான கால அளவு
187
அட்டவணை 4.21 மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

அட்டவணை 4.22 பாடநெறிகள் மற்றும் நிறுவகங்கள் தொடர்பான மாணவர்களின் கருத்துகள்
அட்டவணை 4.23 பாடநெறிகளின் அடைதல் மட்டம்/ திருப்தி நிலைமை தொடர்பான மாணவர்களின் வெளிப்பாடுகள்
அட்டவணை 4.24 மாகாணத்தில் VET நிகழ்ச்சித்திட்டத்தினை விரிவாக்கம் செய்வது தொடர்பான ஆலோசனைகள்
அட்டவணை 5.1 மத்திய மாகாணத்தில் தற்போது வழங்கப்படுகின்ற பயிற்சிகள் மற்றும் மற்றும் பயிற்சித் தேவைப்பாடுகள்

வரைபடம் 2.1 இலங்கையில் மத்திய மாகாணத்தின் அமைவிடம்

வரைபடம் 2.2 மத்திய மாகாணத்தின் வரைபடம்

வரைபடம் 2.3 சனத்தொகை பரம்பல், 2012
வரைபடம் 2.4 இன ரீதியிலான சனத்தொகை, 2012

வரைபடம் 2.5 மாகாண அடிப்படையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கு

வரைபடம் 2.6 மாகாண அடிப்படையில் சனத்தொகை மற்றும் தொழிலாளர்களின் பரம்பல்
வரைபடம் 2.7 வேலைவாய்ப்பு நிலைமைகளின் அடிப்படையில் வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ள நபர்களின் பரம்பல்
வரைபடம் 2.8 பால் அடிப்படையில் வேலைவாய்ப்புகளின் பரம்பல், 2012

வரைபடம் 2.9 வேலை செய்யும் மணித்தியாலங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் எண்ணிக்கை, 2012
வரைபடம் 2.10 மாகாண ரீதியிலான இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான பங்களிப்பு 2006 - 2011
வரைபடம் 2.11 மாவட்ட ரீதியில் மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு பரம்பல்

வரைபடம் 2.12 மத்திய மாகாணத்தின் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் பெண்களின் பங்களிப்பு (%) 2011
வரைபடம் 2.13 வயது அடிப்படையில் வேலைவாய்ப்பின்மை வீதம் (%), 2010
வரைபடம் 2.14 கல்வியறிவு மட்டங்களின் அடிப்படையில் வேலைவாய்ப்பின்மை வீதம் (%), 2010
வரைபடம் 3.1 வீடுகளில் கணனிகளை சொந்தமாக வைத்திருப்பவர்கள் (%), 2009
வரைபடம் 3.2 மாகாண அடிப்படையில் கணனி அறிவு தொடர்பான சனத்தொகை - 2006/ 07 மற்றும் 2009
வரைபடம் 3.3 ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பயிற்சி வழங்கும் நிறுவகங்களின் பங்குகள்
வரைபடம் 3.4 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையில் காணப்படுகின்ற கணிக்கப்பட்ட தொழிலாளர் தேவைப்பாடுகள், 2012-2018
வரைபடம் 3.5 அனைத்து வகைகளிலும் வருடாந்த வேலைவாய்ப்புகளின் போக்கு
வரைபடம் 3.6 மாகாண அடிப்படையில் ஆடைத் தொழிற்சாலைகளின் பரம்பல்
வரைபடம் 4.1 தேசிய தொழிற் தகைமையினை (NVQ) பெற்றுக்கொண்ட நபர்களிடையில் வேலைவாய்ப்பின்மைக்கான காரணங்கள்

சொற்றொடர்களின் சுருக்கங்கள்

AC	வளிச் சீராக்கல்
ASI	கைத்தொழில் நிறுவகங்களின் வருடாந்த கணக்கெடுப்பு
BOI	முதலீட்டு ஊக்குவிப்பு சபை
BPO	தொழில் செயல்முறை அயலாக்கம்
CLS	கணனி அறிவு தொடர்பான கணக்கெடுப்பு
DCS	மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
DIDEP	கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் தொழில்முயற்சி ஊக்குவிப்பு திணைக்களம்
DS	பிரதேச செயலகங்கள்
DTET	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்

GCE (A/L)	கல்விப் பொது தராதரப் பத்திர உயர் தரம்
GCE (O/L)	கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரம்
GDP	மொத்த உள்நாட்டு உற்பத்தி
GN	கிராம அலுவலர்
HDI	மனித அபிவிருத்தி சுட்டெண்
ICTAD	கட்டுமான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்
ICT	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
INGRIN	வரையறுக்கப்பட்ட இலங்கை அச்சிடுதல் மற்றும் கணனி வரைபட நிறுவகம்
MFA	பன்முக இழை ஏற்பாடு
NAITA	தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
NGO	அரச சார்பற்ற நிறுவகங்கள்
NVQ	தேசிய தொழிற் தகைமைகள்
NYSC	தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
OJT	வேலைப் பயிற்சி
SLASSCOM	இலங்கை மென்பொருள் மற்றும் சேவை கம்பனிகள் கூட்டுத்தாபனம்
SLTDA	இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
TVEC	மூன்றாம் நிலை, தொழிற்கல்வி ஆணைக்குழு
TVET	தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி
VET	தொழிற் கல்வி மற்றும் பயிற்சி
VTA	தொழிற் பயிற்சி அதிகாரசபை (மாவட்ட மற்றும் பிரதேச பயிற்சி நிலையங்கள்)

நிறைவேற்று சாரம்சம்

இவ் அறிக்கையில் அடுத்துவரும் ஐந்து வருட காலப்பகுதிக்கான மத்திய மாகாணத்திற்குரிய தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டமானது தரப்பட்டுள்ளது. இம்மாகாணத்திற்கான தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தில் (VET) திறனுடைய தொழிலாளர்களுக்கான கேள்விகள் மற்றும் வழங்கல்கள் ஆகியவற்றுக்கிடையில் காணப்படுகின்ற இடைவெளிகளை நிரப்புவதற்கு அவசியமான மூலோபாயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் இத்துறையுடன் தொடர்புபட்டுள்ள அனைத்து பங்காளிகளான கைத்தொழிற் துறையினர், தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) வழங்குநர்கள் மற்றும் பயிற்சியினை தொடர்வதற்கு ஆர்வமாக உள்ள இளைஞர்கள் ஆகியோருக்கு குறிப்பிடத்தக்களவான நன்மைகள் ஏற்படும். இந்த தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தில் (VET) சம்பந்தப்பட்ட பங்காளிகளை ஒருங்கிணைப்பதற்கான பொறிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை (VET) நடைமுறைப்படுத்தும் போது அவர்களிடையில் வினைத்திறனான ஒருங்கிணைப்பானது எதிர்பார்க்கப்படுகின்றது. தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டத்திற்கு (VET) அமைவாக, தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) நிறுவகங்கள் மனித மற்றும் பௌதிக வளங்களை கூடியளவில் மேம்படுத்தும் பொருட்டு கேள்விகளின் அடிப்படையில் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு தமது வளங்களை பயன்படுத்துதல் வேண்டும்.

மத்திய மாகாணத்திற்கான தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டமானது (VET) மத்திய மாகாணத்தின் முதலமைச்சரின் கோரிக்கைக்கு இணங்கவும் மற்றும் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) பிரிவிற்கு பொறுப்பான அமைச்சின் வழிகாட்டலுக்கு இணங்கவும் தயாரிக்கப்பட்டுள்ளது. மாகாணத்தின் பொருளாதாரமானது முதன்மையாக பெருந்தோட்ட மற்றும் விவசாய துறைகள் சார்ந்த்தாக காணப்படுவதோடு சேவைத் துறை மற்றும் சிறிய அளவிலான குடிசைக் கைத்தொழிற் துறை ஆகியனவும் இதற்கு கணிசமான பங்களிப்புக்களை வழங்குகின்றன. மாகாணத்திலுள்ள பெரும்பாலான வளங்கள் தற்போது பயன்படுத்தப்படாமல் அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்றமையினால் இங்கு வளர்ச்சிக்கான பெரிய சாத்தியக்கூறு காணப்படுகின்றது.

தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தின் (VET) பிரதான நோக்கங்களாவன, மாகாணத்திலுள்ள பிரதான கைத்தொழில்சார் துறைகளில் நிலவுகின்ற திறன்களுக்கான தேவைகள் தொடர்பான கேள்விகள் மற்றும் வழங்கல்கள் ஆகியனவற்றினையும் மற்றும் பிரதான கைத்தொழில்சார் துறைகளில் காணப்படுகின்ற கேள்விகள் மற்றும் திறன்களின் வழங்கல்கள் ஆகியனவற்றுக்கு இடையில் ஏதேனும் இடைவெளிகள் காணப்படுகின்றனவா என்பதனையும் அடையாளங்காணுதல் ஆகும். தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தில் (VET) பிரதான கைத்தொழிற் துறைகள், அவற்றின் அபிவிருத்தி போக்குகள் என்பனவற்றினை அடையாளங்காணுதல், அடுத்துவரும் ஐந்து வருடங்களுக்கு அவசியமான திறன்கள் தொடர்பான எதிர்வுகூறல்களை மேற்கொள்ளல், பல்வேறுபட்ட வாழ்வாதார செயற்பாடுகளுக்கு அவசியமான திறன்களை அடையாளங் காணுதல், திறன்களுக்கான கேள்விகளையும் அவற்றின் வழங்கல்களையும் தொடர்புபடுத்துதல், தொழில்முறை வழிகாட்டல் சேவைகளை ஸ்தாபிப்பதற்கான பரிந்துரைகளை வழங்குதல், தற்போது கற்பிக்கப்பட்டுவரும் பாடநெறிகளை மேம்படுத்துதல், தற்போது கற்பிக்கப்பட்டுவரும் பாடநெறிகளை விரிவாக்குதல் அல்லது சுருக்குதல், புதிய பாடநெறிகள் மற்றும் பயிற்சி வழங்கும் நிறுவகங்களை ஸ்தாபித்தல், பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளித்தல், கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை (VET) நடைமுறைப்படுத்துவதனை ஒருங்கிணைப்பதற்கான பொறிமுறைகளினை முன்மொழிதல் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தின் பகுப்பாய்வின்போது பின்வரும் பிரதான தொழிற் துறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன அவையாவன கட்டுமான துறை, இலகு பொறியியல் துறை, தன்னியக்க இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல் துறை, வீட்டு மின்சார உபகரணங்கள் திருத்துதல் சேவைகள், தகவல் மற்றும் தொடர்பாடல் கைத்தொழிற் துறை, அச்சிடுதல் மற்றும் பிரசுரித்தல் கைத்தொழிற் துறை, புடைவை மற்றும் ஆடைகள் கைத்தொழிற் துறை, ஹோட்டல் மற்றும் சுற்றுலா கைத்தொழிற் துறை, குடிசைக் கைத்தொழிற் துறை என்பனவாகும். துறைசார் அறிக்கைகளில் நிறுவகங்களின் எண்ணிக்கை, அவற்றின் உற்பத்தி, எதிர்கால வளர்ச்சி வாய்ப்புகள், வேலை வாய்ப்புகள், எதிர்கால வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் மற்றும் தொழில்கள்/ தொழில் வகைகளுக்கான பயிற்சி தேவைகள்

என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. கட்டுமான துறை, ஹோட்டல் மற்றும் சுற்றுலா கைத்தொழிற் துறை, இலகு பொறியியல் துறை, தன்னியக்க இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல் துறை, தகவல் மற்றும் தொடர்பாடல் கைத்தொழிற் துறை, அச்சிடுதல் மற்றும் பிரசுரித்தல் கைத்தொழிற் துறை ஆகியன மாகாணத்தில் மிக வேகமாக வளர்ச்சியடைந்துவரும் துறைகளாக காணப்படுகின்றன. மேலும், சில குடிசைக் கைத்தொழிற் துறை நிறுவகங்கள் குறிப்பாக உணவு மற்றும் குளிர்பானங்கள், தனிப்பட்ட சேவைகள் என்பன வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றுக்கு குறிப்பிடத்தக்களவான பங்களிப்பினை வழங்குகின்றது. அண்மைய தசாப்தங்களில் வளர்ச்சி வீதமானது குறைவடைந்துள்ளமையினால் புடைவைகள் மற்றும் ஆடைகள் கைத்தொழிற்துறையானது மாகாணத்தில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் பிரதான துறையாக விளங்குகின்றது. இந்த அத்தியாயத்தின் உரிய துறைசார் அறிக்கைகளின் கீழ் வெளிநாட்டு சந்தைகளுக்கு தொழிலாளர்களை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக கவனம்செலுத்தப்பட்டுள்ளது. துறைசார் அறிக்கைகளில் அதிகளவு எண்ணிக்கையான தொழில்களுக்கு அவசியமான பயிற்சித் தேவைகள் இனங்காணப்பட்டுள்ளன.

பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் தொடர்பான விபரங்கள், அவற்றினால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள், பயிற்சி வகைகளின் அடிப்படையில் ஒன்றுக்கு மேற்பட்ட பாடநெறிகள் காணப்படுதல் மற்றும் உரிய பாடநெறிகள் காணப்படல் மற்றும் தொழிற்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான மதிப்பீடு ஆகிய விடயங்கள், கிடைக்கப்பெறுகின்ற துணையான தரவுகள் மற்றும் பயிற்சி நிறுவகங்களில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்கெடுப்பு, இலக்கு குழு கலந்துரையாடல்கள் மற்றும் நேர்முகத் தேர்வுகள் என்பனவற்றின் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளன. விருதளிக்கப்பட்டுள்ள தேசிய தொழிற் தேர்ச்சித் தகைமை சான்றிதழ்களின் (NVQ) எண்ணிக்கையின் அடிப்படையில் பயிற்சிகளை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்த்துள்ளோரின் எண்ணிக்கையானது, திறன்களுக்கான தேவைகள், திறனுடைய தொழிலாளர்களுக்கான கேள்விகள் மற்றும் வழங்கல்கள் ஆகியவற்றுக்கிடையிலான இடைவெளிகள் என்றவாறாக ஒவ்வொரு துறையிலும் உள்ள பல்வேறு வகையான தொழில்களிற்கும் பெறப்பட்டுள்ளது. தேசிய தொழிற் தகைமையினை (NVQ) பெற்றுக்கொண்டுள்ள நபர்கள் மற்றும் தற்போதைய பயிலுநர்கள் ஆகியோர் தமக்கான வேலைவாய்ப்புக்கள் தொடர்பாக அளித்துள்ள பதில்கள், பயிற்சியிலிருந்து கிடைக்கும் நன்மைகள், பயிற்சின் தரம், பயிற்சி

தொடர்பான பிரச்சினைகள் மற்றும் கருத்துக்கள் ஆகியன மத்திய மாகாணத்தில் நிலவுகின்ற பயிற்சிகளுக்கான கேள்விகள் மற்றும் வழங்கல்கள் என்பவை தொடர்பான பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன.

இறுதியாக, அடுத்து வரும் ஐந்து ஆண்டு காலப் பகுதிக்காக முன்மொழியப்பட்ட மத்திய மாகாணத்திற்கான தொழிற் கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான பயிற்சி திட்டமானது கேள்விகள் மற்றும் பயிற்சிகளின் வழங்கல்கள் மற்றும் பயிற்சி நிறுவகங்கள், பயிற்சி பெற்ற நபர்கள், தற்போதைய பயிற்சி பெறுநர்கள் ஆகியோரிடத்தில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்கெடுப்புக்கள் மற்றும் நிபுணர்களுடனான நேர்முகத்தேர்வுகள் மற்றும் இலக்கு குழு கலந்துரையாடல்கள் என்பனவற்றின் விளைவுகள் ஆகியவற்றுக்கிடையில் காணப்படுகின்ற இடைவெளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் பல்வேறுபட்ட தொழிற்துறைகளுக்கான பயிற்சி தேவைகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட பயிற்சி வழங்குநர்களின் விபரங்கள் என்பன தரப்படுகின்றது. மேலும், முன்மொழியப்பட்ட பயிற்சிகளை மேற்கொள்வது தொடர்பான பாடநெறிகள் மற்றும் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் என்பனவற்றின் காணப்படும் தன்மையானது தரப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மத்திய மாகாணத்தில் தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சியின் (TVET) அபிவிருத்தி தொடர்பாக குறுகிய கால மற்றும் நடுத்தர கால நடவடிக்கைகள் மற்றும் தொடர்புடைய அமைப்புகள் ஆகியன அடையாளம் காணப்பட்டுள்ளன. தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டமானது (VET) முன்மொழியப்பட்ட செயற்பாடுகளை அமுல்படுத்துவதன் மூலமாக இலக்குகளை எட்டுவது தொடர்பான விவரங்களை வழங்குகின்றது.

அத்தியாயம் 01

அறிமுகம்

1.0 அறிக்கை பற்றிய கண்ணோட்டம்

இலங்கையின் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவானது (TVEC) பின்வரும் நோக்கங்களை இலக்காக கொண்டு 1990 ஆம் ஆண்டின் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி சட்ட இலக்கம் 20 இற்கமைய 1991 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதுடன் 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க (சட்டத்திருத்தத்திற்கு) அமைவாக TVE இனால் பின்வரும் பிரதான நோக்கங்களை இலக்காக கொண்டு சட்டபூர்வமான நிறுவகமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது:

- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பாக தேசிய கொள்கைகளை அபிவிருத்தி செய்தல், மீளாய்வு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல் ஆகியனவற்றினை மேற்கொள்ளல்;
- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையின் அபிவிருத்திக்கு அவசியமான திட்டங்களை வகுத்தல்;
- பயிற்சிப்பாட நெறிகளை அங்கீகரித்தல் மற்றும் நிறுவகங்களை பதிவு செய்தல் என்பவற்றினூடாக தர நிர்ணயம் தொடர்பான தேசிய திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்;
- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) நிறுவகங்களினால் தர நியமங்கள் நடைமுறைப்படுத்தப் படுவதனையும் பேணப்படுவதனையும் உறுதிப் படுத்துதல்;
- தேசிய வர்த்தக சோதனை மற்றும் சான்றிதழ்ப் படுத்தல் திட்டத்தின் அமுலாக்கத்தினை திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்;
- தொழிற்கல்வி தகைமைகள் தொடர்பாக தேசிய திட்டம் ஒன்றினை அபிவிருத்தி செய்வதற்கு மற்றும் அதனை தொடர்ந்து பேணுவதற்கு;

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) துறைகளுக்கான தொழிலாளர் சந்தை தகவல்கள் முறைமையினை பேணுதல்;
- முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிதி உதவிகள் என்பவற்றினூடாக தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) நிறுவகங்களை அபிவிருத்தி செய்வதல், மற்றும்,
- கல்வி வழங்குதல் மற்றும் பயிற்சி வழங்குதல் ஆகியவற்றிற்கு இடையிலான சமநிலையின் உச்ச வரம்பினை மேம்படுத்துதல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடையும் பொருட்டு, மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவானது (TVEC) 1999 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வழங்கல் என்பவற்றினை ஊக்குவிக்கும் மற்றும் விருத்தி செய்யும் நோக்கில் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) ஆரம்பிக்கப்பட்ட முக்கியமான நடவடிக்கைகளில் ஒன்றாக பொருளாதாரத்தில் செல்வாக்கு செலுத்தும் பிரதானமான கைத்தொழிற் துறைகளுக்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் (VET) திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளமை மற்றும் மாகாணத்திற்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களில் தற்போதைய பயிற்சி வழங்கல் தொடர்பான விபரங்களையும் அவை தொடர்பான கேள்விகளையும் எதிர்கால தேவைப்பாடுகளையும் குறிப்பிட்டுள்ளமை காணப்படுகின்றது.

மாகாண பயிற்சி வழங்கும் திட்டங்கள் பயிற்சி வழங்கலினை ஆராய்வதற்கும் அவசியத்தின் அடிப்படையிலான பயிற்சித் தேவைப்பாடுகளை அடையாளம் காண்பதற்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. மாகாண மட்டத்தில் பல்வேறு அரச, தனியார், மற்றும் அரச சார்பற்ற துறைகள் சார்ந்த பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் தொழிற்கல்வி மற்றும் பயிற்சியினை (VET) வழங்கி வருகின்றன. தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) வழங்கலின் முன்னேற்றம்

மற்றும் விருத்திக்கு பயிற்சித் திட்டங்களின் நியாயப்படுத்துகை மற்றும் இவ்வாறான பல்வேறு பயிற்சி வழங்குநர்களின் வளங்கள் என்பன அவசியமாகும். இதன் காரணமாக, மாகாண ரீதியான தொழிற் பயிற்சித் திட்டங்கள் (VET plan), மூன்றாம்நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி சட்டத்திற்கமைய, பயிற்சிகளின் நியாயமான வழங்கல் மற்றும் மாகாண மட்டத்திலான தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) திட்டங்களின் மேலதிக விருத்திக்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்குதல் என்பவற்றினை உறுதிப்படுத்துகின்றது. தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வழங்கும் திட்டமானது (VET Plan) மூன்றாம்நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு, பயிற்சி வழங்குநர்கள், சம்பந்தப்பட்ட மாகாண மற்றும் உள்ளூர் அதிகாரிகள், தொழிற் துறைப்பிரிவு, பயிற்சி வழங்குநர்கள், பயலுநர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் ஆகியோரின் பங்களிப்புடனும் ஆலோசனையுடனும் தயாரிக்கப்பட்டுள்ளது. தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டமானது சட்டத்திருத்தம் மூலம் அல்லது சட்டமூலம் இன்றி தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக்கு பொறுப்பான கௌரவ அமைச்சர் அவர்களுடனான ஆலோசனையின் பேரில் அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டவுடன், மாகாண நிர்வாக கட்டமைப்பு ஆனது தொழிற்கல்வி மற்றும் பயிற்சித்திட்டத்தின் உரிமையை ஏற்றுக்கொள்வதுடன் மாகாணத்திலுள்ள அனைத்து பயிற்சி வழங்குநர்களின் பங்களிப்பினையும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித்திட்டத்தினை (VET திட்டம்) சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ளும். தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டத்தின் (VET திட்டம்) நடைமுறைப்படுத்தல் தொடர்பான முன்னேற்றமானது பொது நிர்வாகிகள் மற்றும் பயிற்சி வழங்குநர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் கூடிய ஒழுங்கான மாகாண ரீதியான மற்றும் மாவட்ட ரீதியான முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களின் மூலம் மீளாய்வு செய்யப்படும்.

ஒரு மாகாண ரீதியான தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டமானது (VET திட்டம்) திறன்சார் மனித வலுவிற்கான கேள்வி மற்றும் வழங்கல் ஆகியவற்றிற்கு

இடையிலான இடைவெளியினை நிரப்புவதற்கான வழிமுறைகளை பரிந்துரை செய்வதுடன் அனைத்து பங்குதாரர்களுக்கும், உதாரணமாக கைத்தொழிற் துறை பிரிவினர், பயிற்சி வழங்குநர்கள், மற்றும் பயிற்சியை பெற்றுக்கொள்ள விரும்பும் இளைஞர்கள் ஆகியோரிற்கு குறிப்பிடத்தக்களவான நன்மையையும் வழங்குகின்றது, அத்துடன் இத் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது (VET திட்டம்) சம்பந்தப்பட்ட பங்குதாரர்களை ஒருங்கிணைப்பதற்கான பொறிமுறைகளை விபரித்துள்ளது, அதன் காரணமாக அவ்வாறான வினைத்திறன் மிக்க ஒருங்கிணைப்பினை தொழிற் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் (VET திட்டம்) அமுலாக்கத்தின் போது எதிர்பார்க்கக்கூடியதாக இருக்கும். தொழிற் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு (VET திட்டம்) அமைவாக, தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) வழங்கும் நிறுவகங்கள் சிறந்த கேள்விகளை உருவாக்கக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் பொருட்டு மனித மற்றும் பௌதிக வளங்களின் அதி உச்ச பயன்பாட்டினை உறுதிப்படுத்தும் நோக்கில் தமது வளங்களை பயன்படுத்திக்கொள்ள முடியும்.

1.1 நியாயப்படுத்துகை

இத்தொழிற் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமானது (VET plan) மத்திய மாகாணத்தின் கௌரவ முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) துறைக்கு பொறுப்பான கௌரவ அமைச்சர் அவர்களின் வழிகாட்டலின் கீழ், மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) வினால் மத்திய மாகாணத்திற்காக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள ஒரு திட்டமாகும். ஏறத்தாழ 2.4 மில்லியன் வேறுபட்ட இன, மொழி, மத மற்றும் கலாச்சார பாரம்பரியங்களை உடைய சனத்தொகையினை கொண்டுள்ள இம் மாகாணமானது கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மூன்று மாவட்டங்களை கொண்டுள்ளது. இம் மாகாணத்தின் பொருளாதாரமானது

பெருமளவில் பயிர்ச்செய்கை மற்றும் விவசாயத்தினை அடிப்படையாக கொண்டுள்ளதுடன், சேவைத்துறை மற்றும் குடிசைக் கைத்தொழில் ஆகியனவற்றின் பங்களிப்பினையும் கணிசமான அளவில் கொண்டுள்ளது. இம் மாகாணத்தில் தற்போது காணப்படுகின்ற வளங்களில் பெரும்பான்மையானவை பயன்படுத்தப்படாமல் அல்லது மிகவும் குறைந்தளவில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக அவை சார்ந்த பொருளாதார வளர்ச்சிக்கான சாத்தியக்கூறு மிக அதிக அளவில் காணப்படுகின்றது. இங்கு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள தொழிற் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமானது (VET plan) பயிற்சி வழங்குநர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் ஆகியோருக்கு மத்திய மாகாணத்திற்கான தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) தொடர்பான நியாயப்படுத்துகை, முன்னேற்றம் மற்றும் விரிவாக்கம் என்பன தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகள் என்பவற்றினை வழங்கியுள்ளது.

1.2 தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்ட தயாரிப்பின் நோக்கங்கள்

மத்திய மாகாணத்திற்கான இத் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்ட தயாரிப்பின் பிரதானமான நோக்கங்கள் ஆவன, பிரதானமான கைத்தொழிற் துறைகளில் நிலவுகின்ற அவசியமான திறன்கள் சார்ந்த கேள்வி மற்றும் வழங்கல்களை அடையாளம் காணுதல், மற்றும் கேள்வி மற்றும் வழங்கல் ஆகியவற்றிற்கு இடையிலான இடைவெளியினை அடையாளம் காணுதல், மற்றும் பயிற்சித் தேவைப்பாடுகள் தொடர்பாக முன்மொழிவுகளை மேற்கொள்ளல் மற்றும் பயிற்சி வழங்கல்களில் நிலவும் இடைவெளிகளை நிரப்புவதற்கான திட்டங்களை மேற்கொள்ளல் என்பனவாகும்.

தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்ட (VET திட்டம்) தயாரிப்பின் தனித்துவமான நோக்கங்கள்:

- மாகாணத்தின் குடித்தொகை, கல்வி, தொழிலாளர் வலு, மற்றும் பொருளாதார போக்குகள் என்பனவற்றினை அடையாளம் காணும் நோக்கில் சமூக பொருளாதார பின்னணியை ஆய்வு செய்தல்;
- மாகாணத்திலுள்ள பிரதானமான தொழிற்துறைப் பிரிவுகளை அடையாளம் காணல்;
- பாடசாலை கல்வி முறைமையை ஆய்வு செய்வதன் மூலம் தொழிலாளர் சந்தையினுள் புதிதாக நுழைபவர்களின் தொழில் தேர்வுகள் மற்றும் அவர்களின் எண்ணிக்கை என்பனவற்றினை அடையாளம் காணல்;
- வாழ்வாதாரத்திற்கான கைத்தொழில்களை மதிப்பீடு செய்வதன் ஊடாக பல்வேறு வாழ்வாதார தொழில்களில் நிலவுகின்ற திறன்களுக்கான தேவைப்பாடுகளை அடையாளம் காணுதல்;
- அடுத்துவரும் ஐந்து வருட காலப்பகுதிக்கான திறன் தேவைப்பாடுகள் தொடர்பான எதிர்வுகூறல்களை மேற்கொள்ளல்;
- மாகாணத்தில் காணப்படுகின்ற தொழிற் கல்வி பயிற்சி பாடநெறிகளை மதிப்பீடு செய்தல் மற்றும் திறன்களின் வழங்கல்கள் தொடர்பான சாத்தியக்கூறுகளை அடையாளம் காணல்;
- திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுடன் கூடிய புதிய வாழ்வாதார திறன்களை அறிமுகம் செய்தல் தொடர்பான சாத்தியக்கூறுகளை பரிசோதித்தல்;
- திறன்களுக்கான தேவைகள் மற்றும் வழங்கல்களை பொருந்தச் செய்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் சேவைகளை விருத்தி செய்தல் தொடர்பான சிபாரிசுகளை முன்வைத்தல், தற்போதுள்ள பாடநெறிகளின் முன்னேற்றுதல், மற்றும் விரிவு படுத்தல் அல்லது குறைத்தல், மற்றும் புதிய பாடநெறிகள், பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் என்பனவற்றினை

விருத்தி செய்தல், பயிற்சி வழங்குநர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல்; மற்றும்,

- மத்திய மாகாணத்தில் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்ட (VET Plan) அமுலாக்கத்தினை ஒருங்கிணைப்பதற்கான பொறிமுறை ஒன்றினை சிபாரிசு செய்தல்.

1.3 ஆய்வுச் செயன்முறை

தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டமானது (VET திட்டம்) மாகாணத்தின் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) முறைமையின் பிரதானமான பங்குதாரர்களின் பங்களிப்புடன் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக முதலாவது கூட்டம் பிரதி தலைமை செயலாளர் (திட்டமிடல்) அவர்களால் 18 ஆம் திகதி யூலை மாதம் 2013 ஆம் ஆண்டு மாகாண செயலகத்தில் நடாத்தப்பட்டு மத்திய மாகாணத்திற்கான தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்ட (VET Plan) தயாரிப்பிற்கான அடித்தளம் இடப்பட்டது. இக்கூட்டத்தில், மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC), மாகாண செயலகம், மற்றும் செயற்திட்ட குழு ஆகியன தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்ட (VET Plan) தயாரிப்பு தொடர்பாக ஒரு கட்டமைப்பினையும் செயற்பாடுகள் தொடர்பான ஒருங்கிணைப்பினையும் ஏற்றுக்கொண்டிருந்தன.

மத்திய மாகாணத்தின் தற்போதைய சமூக பொருளாதார கட்டமைப்பு, பிரதானமான கைத்தொழிற் துறைப் பிரிவுகள் மற்றும் அபிவிருத்திப் போக்குகள் என்பனவற்றினை தீர்மானிக்கும் பொருட்டு இரண்டாம் நிலை தரவுகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில், பல்வேறு தேசிய மற்றும் மாகாண மட்ட தரவு மூலங்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் பதிவு செய்யப்பட்ட தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. அவசியமான அடிப்படை தரவுகள் பிரதானமாக

வினாக்கொத்துகள், நேர்காணல்கள் மற்றும் இலக்கு குழு விவாதங்கள் என்பவற்றின் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன.

மத்திய மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பிரதானமான கைத்தொழிற்துறைகளை அடையாளம் காணும் நோக்கிலான திட்டமிடல் செயலமர்வுகள் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் பங்களிப்புடன் 6 ஆம், 16 ஆம், மற்றும் 23 ஆம் திகதிகளில் முறையே கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்டது. இத் திட்டமிடல் செயலமர்வுகளின் போது மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற பின்வரும் பிரதானமான கைத்தொழிற் துறைகள் மற்றும் அவற்றின் உபதுறைகள் என்பன இனங்காணப்பட்டுள்ளன, கட்டுமானத்துறை, மென் பொறியியல் துறை, ஓட்டோ மொபைல் பழுது பார்த்தல் மற்றும் சேவை வழங்கல் துறை, வீட்டுப்பாவனை மின் உபகரணம் பழுதுபார்த்தல் சேவை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறை, அச்சிடல் மற்றும் வெளியீட்டு துறை, தைத்த ஆடை மற்றும் ஆடைத் தொழிற்சாலை கைத்தொழில் துறை, சொகுசு விடுதி மற்றும் சுற்றுலா துறை மற்றும் குடிசைக் கைத்தொழில் மற்றும் சேவைகள் துறை சார்ந்த அறிக்கைகள் குறித்த நோக்கத்திற்காக சேகரிக்கப்பட்ட முதல் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் என்பவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற தொழிற்துறை தொடர்பான அவசியமான தகவல்களை சேகரிப்பதன் பொருட்டு ஒரு பகுதியாக கட்டமைக்கப்பட்ட வினாக் கொத்து பயன்படுத்தப்பட்டுள்ளது.

பயிற்சி வழங்கும் நிறுவகங்கள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் வகைகள், பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் மாவட்ட ரீதியாக அவற்றினுடைய சாத்தியப்பாடுகள், மற்றும் தேசிய தொழிற் தகைமை (NVQ) பயிற்சியை பூர்த்தி செய்த நபர்களின் எண்ணிக்கை என்பன தொடர்பான தரவுகள் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) தரவுதளத்திலிருந்து பெறப்பட்டுள்ளன.

பயிற்சி வழங்கல் தொடர்பான தகவல்கள், பயிற்சி வழங்கும் நிறுவகங்கள், பயிற்சிகளின் பொருத்தப்பாடு, வேலைவாய்ப்பு, மற்றும் ஏனைய பிரச்சினைகள் மற்றும் அவை தொடர்பான சிபாரிசுக்கள் என்பன, சம்பந்தப்பட்ட பயிற்சி வழங்கும் நிலையங்களின் தலைவர்கள் மற்றும் அவற்றினுடைய ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட பயிற்சி வழங்கும் நிலையங்களில் தற்போது பயிலும் மாணவர்கள் (பயிலுனர்கள்), அவ்வாறான பயிற்சி வழங்கும் நிலையங்களில் பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர்கள் (பயிற்சியை பூர்த்தி செய்தவர்கள்) ஆகியோரிடமிருந்து மூன்று வினாக்கொத்துகளின் உதவியுடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பாட நெறிகளின் வகைகள், மாணவர்களின் உட்சேர்கை, பயிற்சித் தேவைப்பாடுகள், பிரச்சினைகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு அரச பயிற்சி வழங்கும் நிறுவகங்களின அனைத்து தலைமை அலுவலகங்கள், மற்றும் தேர்வு செய்யப்பட்ட தனியார் மற்றும் அரச சார்பற்ற பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் ஆகியன தொடர்பு கொள்ளப்பட்டிருந்தன/ நேர்முகத் தேர்விற்கு உட்படுத்தப்பட்டிருந்தன. தேசிய தொழிற் தகைமை தொடர்பான பயிற்சியை பூர்த்தி செய்த 132 நபர்களிடமிருந்து, பிரதானமாக பெற்றுக்கொண்ட பயிற்சியின் வகை, தரம் மற்றும் பயிற்சியின் பொருத்தப்பாடு, தற்போதைய வேலைவாய்ப்பு நிலைமை, பயிற்சியின் நன்மைகள், எதிர்கால இலக்குகள், பயிற்சி வழங்கல் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் பயிற்சி வழங்கலை முன்னேற்றுவதற்கான ஆலோசனைகள் என்பன தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஒரு வினாக்கொத்து வழங்கப்பட்டிருந்தது. மற்றொரு வினாக்கொத்து பயிற்சி நிலையங்களில் பயிற்சியினை பெற்றுக்கொண்டிருக்கும் 130 மாணவர்களுக்கு பின்வரும் தகவல்களை, பிரதானமாக பயிற்சியின் வகை, தரம் மற்றும் பயிற்சியின் பொருத்தப்பாடு, பயிலுனர்களின் எதிர்கால இலக்குகள், பயிற்சி வழங்கல் தொடர்பான பிரச்சினைகள், மற்றும் பயிற்சி வழங்கலை முன்னேற்றுவதற்கான ஆலோசனைகள் என்பன தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளும் நோக்கில் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன், மேலதிகமாக கலந்துரையாடல்கள் மற்றும் நேர்காணல்கள் என்பனவும் பல்வேறு

பங்குதாரர்களுடன் அதாவது வணிகர் கழக பிரதிநிதிகள், அரச நிறுவகங்களின் அலுவலர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோருடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. துறை ரீதியான அறிக்கை மற்றும் பயிற்சித்திட்டம் என்பன மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட உறுதிப்படுத்தல் செயலமர்வுகளில் முன்வைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டதுடன் அவசியமேற்படின் திருத்தியமைக்கப்பட்டன.

1.4 துறை ஆய்வுகள் மற்றும் கேள்வி தொடர்பான எதிர்வுகூறல்கள்

முதலாவதாக திட்டமிடல் செயலமர்வுகளில் அடையாளம் காணப்பட்ட பல்வேறு துறைகள் மற்றும் உப துறைகளில் திறன்கள் மற்றும் மனித வளங்கள் ஆகியவற்றின் தேவைப்பாடுகள் அல்லது கேள்விகள் தொடர்பாக ஆய்வு செய்வதன் பொருட்டு துறைசார் நிபுணர்களின் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு துறைசார் அறிக்கைகள் தயார் செய்யப்பட்டன. துறைசார் நிபுணர்களால், மத்திய மாகாணத்திற்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) திட்டத்தின் தயாரிப்பிற்கு அவசியமான துறைசார்ந்த அடிப்படை மற்றும் இரண்டாம் நிலை தரவுகளை சேகரித்திருத்தல் மற்றும், திறன்கள் தொடர்பான கேள்வி மற்றும் வழங்கல் ஆகியவற்றிற்கு இடையிலான இடைவெளி தொடர்பான ஆய்வினை மேற்கொள்தல் மற்றும் வழங்கப்படவேண்டிய திறன்களின் வகைகள் மற்றும் ஒவ்வொரு தொழிற்துறைகளிலும் அந்த துறையின் திறன்சார் தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் பயிற்சி வழங்கப்படவேண்டியவர்களின் எண்ணிக்கை என்பனவற்றின் அடிப்படையில் மனித வளங்களின் கேள்விகள் தொடர்பான எதிர்வுகூறல்களை மேற்கொள்ளல், ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டதுடன் பிரதானமாக இரண்டாம் நிலை தரவுகள் உடனடியாக கிடைக்காத பிரதேசங்களில் மாகாண சபையின் உதவியுடன் முதல் நிலை தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஒவ்வொரு பொருளாதார துறைகளுக்குமான அறிக்கைகள் மூன்றாம் நிலைக்கல்வி

மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC), அரச அலுவலர்கள், துறைசார் வல்லுநர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தொழிற்துறை சார்ந்த பயிற்றுநர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் 22 ஆம் திகதி மே மாதம் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற உறுதிப்படுத்தற் செயலமர்வின் போது கலந்தாலோசிக்கப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

1.5 பயிற்சித் தேவைப்பாடுகள் மற்றும் பயிற்சித் திட்டம்

பயிற்சி வழங்கும் நிறுவனங்களின் உற்பத்தி திறன் தேவைப்பாடுகள் மற்றும் அவற்றால் எதிர்நோக்கப்படுகின்ற தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) திட்டம் தொடர்பான பிரச்சினைகள் என்பன, மாதிரி ஆய்வுகள், நேர்காணல்கள் மற்றும் இலக்கு குழு விவாதங்கள் என்பனவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மாகாணத்தின் தற்போதைய பயிற்சி விபரங்கள், தொழில் துறை பிரிவுகளின் மனித வள தேவைப்பாடுகள், திறன்கள் பற்றாக்குறை, தொழிலாளர் சந்தை, பயிற்சி பெற்ற தனிநபர்கள் மற்றும் தற்போதைய பயிலுநர்கள் ஆகியோரிடம் இருந்து பெறப்பட்ட கருத்துக்கள் என்பன பயிற்சி வழங்குநர்கள், மாகாணத்தின் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி பயிற்சி (TVET) துறையில் உள்ள அரச அதிகாரிகள் ஆகியோரிற்கு கேள்விக்கும் வழங்கலிற்கும் இடையே உள்ள இடைவெளியை நிவர்த்திப்பதற்கான தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி பயிற்சி (TVET)வழிமுறைகளை கண்டறியும் நோக்கில் வழங்கப்பட்டது. தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) திட்டமானது 2014 10ஆம் திகதி மாகாண சபை சிரேஷ்ட அதிகாரிகள், மாவட்ட செயலகங்கள், மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) மற்றும் பிற தொடர்புடைய பங்குதாரர்களின் பங்கு பற்றுதலுடன் நடைபெற்ற செயலமர்வின் போது உறுதிப்படுத்தப்பட்ட இந்த அனைத்து விளைவுகளையும் ஒருங்கிணைத்து தயாரிக்கப்பட்டுள்ளது.

1.6 எல்லைகள்/ வரம்புகள்

செயற்திட்ட குழுவானது மத்திய மாகாணத்திற்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) திட்டத்தின் அபிவிருத்தியின் போது பல சிரமங்களை எதிர்கொண்டது. வேலைவாய்ப்பு, முதலீட்டின் அளவு, மற்றும் வணிக வகை என்பவற்றின் அடிப்படையில் மாகாணத்தின் அனைத்து வணிக நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய ஒரு சரியான மற்றும் புதுப்பிக்கப்பட்ட தொழில் துறை தகவல்கள் இல்லாத நிலைமை ஒரு பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது. செயற்திட்ட குழுவானது தொழில்துறைகள் மற்றும் வணிக மையங்களை அடையாளம் காணும் பொருட்டு தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் காணப்பட்ட ஏனைய குறிப்பிட்ட நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட பல்வேறு தரவுத்தளங்களை நாட வேண்டியிருந்தது. தொழிலாளர்களின் கேள்விகள் வியாபார நடவடிக்கைகளின் அளவில் தங்கி உள்ளதன் காரணமாக, தகவல்கள் காணப்படாமை பிரதானமாக பொருளாதார நடவடிக்கைகளின் அளவுகள்/ நிறுவகங்கள் என்பன தொடர்பான தகவல்கள் இன்மையானது எமது இலக்கினை மேலும் கடினமாக்கியது. தேர்வு செய்யப்பட்ட மாதிரிகள் தற்போது காணப்படவில்லை என முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டதன் காரணமாக மாதிரிகளை தேர்வு செய்யும் நடவடிக்கையானது பலதடவைகள் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட்டது. கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளிற்கு வருகை தந்தவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக காணப்பட்டமை செயற்திட்ட குழுவினால் எதிர் கொள்ளப்பட்ட மற்றுமொரு பிரச்சினையாகும்.

அத்தியாயம் 02

மத்திய மாகாணத்தின் சமூக - பொருளாதார சூழல்

2.0 கண்ணோட்டம்

இலங்கையின் மத்திய மாகாணமானது நாட்டின் மொத்த சனத்தொகையில் 12.6% இனையும் மொத்த நிலப்பரப்பில் 8.89% இனையும் கொண்டுள்ளது. இம் மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பின் விஸ்தீரணம் 5,575 சதுர கிலோமீற்றர்கள் ஆகும். இம்மொத்த நிலப்பரப்பின் விஸ்தீரணமானது இப்பிரதேசத்தில் உள்ள உள்நாட்டு நீர் நிலைகளின் பரப்பளவான 99 சதுர கிலோமீற்றர்களையும் உள்ளடக்கியுள்ளது. மத்திய மாகாணமானது நாட்டின் மத்தியில் காணப்படுகின்ற உயரமான பிரதேசத்தில் அமைந்துள்ளதுடன், இலேசான வெப்ப - ஈரமான காலநிலையினையும் கொண்டுள்ளது. அத்துடன் ஒப்பீட்டளவில் அதிஉயர் மழைவீழ்ச்சி (வருடாந்த மழை வீழ்ச்சி 2200 மில்லி மீற்றர்கள்), குறைந்தளவான வெப்பநிலை (ஏறத்தாழ 20 பாகை செல்சியஸ்) மற்றும் 80 % ஆன சாரீரப்பதன் ஆகிய சூழற் காரணிகள் இப்பிரதேசத்தினை கவர்ச்சியானதாகவும் சூழலியல் ரீதியில் தனித்துவம் வாய்ந்ததாகவும் உருவாக்கியுள்ளன. மத்திய மாகாண சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசம் மூன்று நிர்வாக மாவட்டங்களை கொண்டுள்ளது, அவையாவன கண்டி, மாத்தளை, மற்றும் நுவரெலியா என்பனவாகும். இரண்டாவது மிக அதிகளவான மக்கள் தொகை அடர்த்தியை கொண்டுள்ள பிரதேசமாக காணப்படுவதன் காரணமாக நாட்டின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது மத்திய மாகாணமானது குறிப்பிடத்தக்களவான வேறுபாட்டினையும், தனித்துவமான பௌதீக, வரலாற்று, கலாச்சார மற்றும் சமூக பொருளாதார விழுமியங்களையும் கொண்டுள்ளது. மேலும், இம் மாகாணமானது அதன் தனித்துவமான மேற்கூறப்பட்டுள்ள சூழலியற் சிறப்புகள் காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு

சுற்றுலாப் பயணிகள் ஆகிய இரு சாராரையும் கவர்கின்ற ஒரு சுற்றுலாத் தலமாக விளங்குகின்றது.

தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2011 ஆம் ஆண்டிற்கான மத்திய மாகாணத்தின் பங்களிப்பு ஆனது 9.8% ஆகும். மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயம், கைத்தொழிற்துறை மற்றும் சேவை துறை ஆகியவற்றின் பங்களிப்புக்கள் முறையே 15.8%, 29% மற்றும் 55.2% ஆகும். அதே ஆண்டில், தற்போதைய பெறுமதியில் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 15.4% ஆக அதிகரித்து ரூ.644 பில்லியன் ஐ எட்டியுள்ளதுடன் தனிநபர் வருமானமாக ரூபா 236,931.00 ஐயும் கொண்டுள்ளது. அத்துடன் தனிநபர் வறுமை விகிதம் கடந்த 20 வருடங்களாக தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வரும் போக்கினை காட்டுகின்றது, மேலும் மாகாண ரீதியான குடும்ப வருமானத்தின் "கினி" குணகமானது 0.51 ஆக பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் நாட்டிலுள்ள ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது இது மிக அதிகளவான பெறுமதியினையும் கொண்டுள்ளது. மத்திய மாகாணத்திலுள்ள தொழிலாளர்களிடையே காணப்படுகின்ற வேலைவாய்ப்பின்மை சதவீதமானது ஏறத்தாழ 6 % ஆகும். மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற பொருளாதார ரீதியாக செயற்திறன் மிக்க சனத்தொகை ஆனது அம் மாகாணத்தில் உள்ள மாவட்டங்களுக்கிடையே வேறுபட்ட பெறுமானங்களை கொண்டுள்ளது. 2011 ஆம் ஆண்டில் பொருளாதார ரீதியாக செயற்திறன் மிக்க சனத்தொகையானது கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் முறையே 65 % ஆன ஆண்களையும் 35 % ஆன பெண்களையும் கொண்டிருந்ததுடன் நுவரெலியா மாவட்டத்தில் அது 55 % ஆன ஆண்களையும் 45 % ஆன பெண்களையும் கொண்டிருந்தது.

2.1 நிர்வாக கட்டமைப்பு

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் 1988 ஆம் ஆண்டு இலங்கையில் மாகாண சபை அமைப்பானது உருவாக்கப்பட்டது. அதற்கு இணங்க மத்திய மாகாண சபையின் செயற்பாடுகள் 1988 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் திகதி அன்று ஆரம்பிக்கப்பட்டது. மத்திய மாகாண சபையில் 58 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் காணப்படுவதுடன், அவர்கள் மாகாணத்தில் வாழுகின்ற பிரதானமான சமூகங்களை அதாவது சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

மத்திய மாகாணத்தின் ஆளுநர், மத்திய மாகாணத்தின் பிரதம நிறைவேற்று செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். மாகாண சபையில் முதல் அமைச்சரை தலைவராக கொண்ட அமைச்சரவை காணப்படுவதுடன் மேலதிகமாக நான்கு அமைச்சர்கள் ஆளுநருக்கு, அவருடைய செயற்பாடுகளில் உதவுவதற்கும் மற்றும் ஆலோசனை வழங்குவதற்கும் என நியமிக்கப்பட்டுள்ளனர். 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான மத்திய மாகாணத்தின் ஐந்தாவது மாகாண சபையின் உறுப்பினர்கள் கீழே தரப்பட்டுள்ள ஐந்து அமைச்சுக்களை கொண்டுள்ளனர்.

1. முதலமைச்சு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மனித வளம், கல்வி மற்றும் கலாசார அலுவல்கள், சுற்றுலா, போக்குவரத்து, காணி, கூட்டுறவு அபிவிருத்தி, வாணிபம் மற்றும் வர்த்தகம், உணவு பொருட்கள் வழங்கல் மற்றும் முதலீட்டு ஒருங்கிணைப்பு தொடர்பான விடயங்கள் தொடர்பான அமைச்சு, மற்றும் இந்த விடயத்திற்கு பொறுப்பாக உள்ள அமைச்சர் அவர்கள் ஏனைய துறைகளின் கீழுள்ள விடயங்களிற்கும் பொறுப்பாக இருப்பார்.
2. வீதி அபிவிருத்தி, மின்வலு, எரிசக்தி, வீடமைப்பு மற்றும் கட்டுமானத்துறை அமைச்சு

3. விவசாய, நீர்ப்பாசன, கால்நடை பராமரிப்பு மற்றும் உற்பத்திதுறை, கமநல சேவைகள், உள்நாட்டு மீன்பிடி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சு.
4. சுகாதார, சுதேச மருத்துவ, சமூக நலன், சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு.
5. தொழிற்துறை, விளையாட்டு, கல்வி (தமிழ்), தோட்ட உட்கட்டமைப்பு, மகளிர் விவகார, கிராம அபிவிருத்தி, இந்து கலாச்சார மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு.

மத்திய மாகாணத்தின் ஆளுநர் மாகாணத்தில் வாழ்கின்ற மக்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரின் வாழ்க்கை தரத்தினை முன்னேற்றும் நோக்கில் பல்வேறு சமூக நலச் செயற்பாடுகள் மற்றும் சேவைகள் என்பனவற்றினை மேற்கொண்டு வருகிறார். அத்துடன், அவரால் கல்வி மற்றும் கல்விசார் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கும் மேலாக, மாகாணத்தில் காணப்படுகின்ற நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற சேவைகளின் அடிப்படை தரத்தினை மேம்படுத்தும் நோக்கினை இலக்காக கொண்டு மக்கள் மீது நேரடி தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு சிறந்த திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1

மத்திய மாகாணத்தில் உள்ள மாகாண நிர்வாக அலகுகள்

மாவட்டம்	பிரதேச செயலக பிரிவுகள்	கிராம சேவையாளர் பிரிவுகள்	கிராமங்கள்	நகர/ மாநகர சபைகள்	பிரதேச சபைகள்
கண்டி	20	1188	2758	05	17
மாத்தளை	11	545	1373	01	11
நுவரெலியா	05	491	1134	03	05
மத்திய மாகாணம்	36	2224	5265	9	33

மூலம்: கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்2012

அட்டவணை 2.1 ல் காட்டப்பட்டுள்ளவாறு மத்திய மாகாணத்தில் மாகாணத்திற்கான உள்ளூர் அரசாங்க சேவைகளை வழங்கும் மற்றும் நிர்வகிக்கும், நகர மற்றும் மாநகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் என்பன உள்ளடங்கலாக 42 உள்ளூர் அதிகார சபைகள் காணப்படுகின்றன. இவ் அனைத்து அதிகார சபைகளும் உள்ளூராட்சி சபையின் ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பினுள் உள்ளதுடன் இவை பிராந்திய உதவி ஆணையாளர்களின் உதவியுடன் ஆணையாளர் அவர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. மேலும் இம் மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் செயற்பட்டு வருகின்ற பிரதேச செயலகங்கள் (பி/ செ) மற்றும் கிராம சேவையாளர் (கி/சேவையாளர்) பிரிவுகளின் எண்ணிக்கை 2260 ஆகும். மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் 2013 ஆம் ஆண்டிற்கான புள்ளி விபரக் கையேட்டின் படி கிராமங்களின் எண்ணிக்கை உட்பட இந்த உள்ளூர் அதிகார சபைகளின் பரம்பல் கீழ்வரும் அட்டவணை 2.2 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.2

மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற பிரதேச செயலக பிரிவுகள் ரீதியான கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை

கண்டி			மாத்தளை			நுவரெலியா		
பிரதேச செயலாளர் பிரிவு	பிரதேச எண்ணிக்கை	கிராமங்களின் எண்	பிரதேச செயலாளர் பிரிவு	பிரதேச எண்ணிக்கை	கிராமங்களின் எண்	பிரதேச செயலாளர் பிரிவு	பிரதேச எண்ணிக்கை	கிராமங்களின் எண்
தம்பனை	67	135	கல்லேவல	59	151	கொத்மலை	96	249
பூஜாபிட்டிய	67	125	தம்புள்ளை	59	138	ஹங்குரன்கந்த	131	296

அக்குர ணை	35	90	நவுல	52	100	வலப்பன	125	294
பாததும்புர	52	126	பல்லே பொல	44	102	நுவரெலியா	72	99
பன்வில	14	57	யட்டவத் த	56	147	அம்பகமுவ	67	196
உடதும்புர	63	102	மாத்தள	52	116			
மினிப்பே	48	110	அம்பன்க ங்கை கோரளை	20	63			
மெடதும்புர	94	222	லக்கல-பல்லேக ம	37	80			
குண்டசா லை	80	253	வில்கமு வ	39	100			
கங்காவத்த கோரளை	64	92	றத்தோட் ட	54	178			
ஹரிஸ்பத் துவ	84	139	உக்குவெ ல	73	198			
ஹத்தரலி யட்ட	57	122						
யட்டிநுவர	95	152						
உடுநுவர	124	244						
தொலுவ	33	137						
பத்தஹேவ த்த	73	212						
தெல் தோட்ட	29	72						
உடபலத்த	49	131						
கங்கா இகல கோரளை	31	145						
பஸ்பகே கோரளை	29	92						
மொத்தம்	**1188**	**2758**	**Total**	**545**	**1373**		**491**	**1134**

மூலம்: மாவட்ட புள்ளிவிபர கையேடு 2012, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்.

மாகாண சபை அமைப்பு மூலம் உருவாக்கப்பட்ட உள்ளூர் அபிவிருத்தி மற்றும் நிர்வாக அதிகார சபைகள் தமக்குரிய விடயங்களில் முகவர்களாக தொழிற்படுவதன் மூலம் உள்ளூர் மட்டங்களிலான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு உரிய ஒரு பெரிய பங்களிப்பினை வழங்கி வருகின்றன. இந்த அபிவிருத்தி செயற்பாடுகள் சில மத்திய மற்றும் மாகாண அரசாங்க நிறுவகங்களின் கூட்டு முயற்சியின் ஊடாகவும், தொடர்ச்சியாகவும் நிறைவேற்றப்படுவது, உள்ளூராட்சி சபைகளின் உருவாக்கத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட மற்றொரு நன்மையாக கருதப்படக்கூடியதாக உள்ளது. அட்டவணை 2.2 இல் மத்திய மாகாணத்தில் உள்ளமூன்று மாவட்டங்களினதும் முழுமையான / அனைத்து பிரதேச செயலகங்கள் மற்றும் அவற்றின் கிராம சேவகர் பிரிவுகள்மற்றும் அவற்றிலுள்ள கிராமங்கள் தொடர்பான தரவுகள் மூன்று மாவட்டங்களிற்கும் தனித்தனியாக பட்டியற்படுத்தப்பட்டுள்ளது.

2.2 புவியியல் மற்றும் காலநிலை

மத்திய மாகாணம் ஆனது அடிப்படையில் இலங்கையின் மத்திய பிரதேசத்தில் உள்ள மலைப்பாங்கான பகுதியில் அமைந்துள்ளது. இம் மாகாணமானது பரப்பளவு ரீதியாக 6 ஆவது பெரிய மாகாணமாகவும் 2.56 மில்லியன் மக்களை கொண்டுள்ள பிரதேசமாகவும் காணப்படுகின்றது. இப்பிரதேசமானது நிலத்தினால் சூழப்பட்டுள்ள ஒரு பிரதேசமாக காணப்படுவதுடன், படம் 2.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு வடக்கில், வட மத்திய மாகாணத்தினையும், கிழக்கில் ஊவா மாகாணத்தினையும் மேற்கில் வடமேல் மாகாணத்தினையும், தெற்கில் சப்ரகமுவ மாகாணத்தினையும் எல்லைகளாக கொண்டுள்ளது. இம்மாகாணத்தின் தலைநகரமாக கண்டி விளங்குகின்றது. இம் மாகாணமானது அதன், கோப்பி பயிர்ச் செய்கை

நோய்த்தாக்கத்தின் காரணமாக முற்றாக அழிவடைந்த பின்னர் 1980 களில் பிரித்தானியரினால் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந் தோட்ட உற்பத்திப் பொருளான இலங்கைத் தேயிலைக்கு (Ceylon tea) மிகவும் பிரசித்தி பெற்றது. மத்திய மாகாணமானது கம்பளை, ஹட்டன் மற்றும் நுவரெலியா போன்ற மலைப்பாங்கான பிரதேசங்களில் அமைந்துள்ள நகரங்களை கொண்டிருப்பதன் காரணமாக அதிகளவான சுற்றுலா பயணிகளை கவர்கின்ற பிரதேசமாகவும் காணப்படுகின்றது (மேலதிக விபரங்களிற்கு படம் 2.2 இனை பார்க்க).

வரைபடம் 2.1
இலங்கையில் மத்திய மாகாணத்தின் அமைவிடம்



வரைபடம் 2.2

மத்திய மாகாணத்தின் வரைபடம்



மத்திய மாகாணம் ஆனது குளிர்ச்சியான காலநிலையினை கொண்டிருப்பதுடன், இரவு நேரங்களில் உறைநிலை வெப்ப நிலையினை கொண்டுள்ள பல பிரதேசங்களையும் கொண்டுள்ளது. மேற்கு சரிவு மலைகள் மிகவும் ஈரலிப்பாக காணப்படுவதுடன், சில பிரதேசங்கள் வருடம் ஒன்றிற்கு கிட்டத்தட்ட 7000 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியினையும் கொண்டுள்ளன. இதன் கிழக்கு சரிவுகள் வட கிழக்கு பருவமழையில் இருந்து மட்டும் மழைவீழ்ச்சியினை பெறுவதன் காரணமாக அவை

உலர் வலயத்தினை சேர்ந்த பிரதேசங்களாக காணப்படுகின்றன. இம் மாகாணத்தின் வெப்பநிலையின் வீச்சு ஆனது கண்டி மாவட்டத்தில் 24 பாகை செல்சியஸ் (° C) இல் இருந்து நுவரெலியா மாவட்டத்தில் 16 பாகை செல்சியஸ் (° C) வரை காணப்படுவதுடன் இது கடல் மட்டத்திற்கு மேல் 1,889 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள ஒரு பிரதேசமாகவும் காணப்படுகின்றது. இலங்கையின் மிக உயரமான மலை மத்திய மாகாணத்திலேயே அமைந்துள்ளது.மேலும் இம் மாகாணத்தின் நிலப்பரப்பு ஆனது பெரும்பாலும் மலைப்பாங்கானதாக காணப்படுவதுடன் அவற்றினை ஊடறுக்கும் ஆழமான பள்ளத்தாக்குகளையும் கொண்டுள்ளது. இம் மாகாணத்தில், கண்டி மாவட்டத்தின் கிழக்கு பகுதியில் மத்திய நாட்டு மலைத்தொடர் மற்றும் நக்கீள்ஸ் மலைத்தொடர் ஆகிய இரண்டு பிரதானமான மலைத்தொடர்கள் காணப்படுகின்றன.

இம்மாகாணத்தின் பொருளாதாரமானது பெரும்பாலும் பெருந்தோட்டம் மற்றும் விவசாயத்தினை அடிப்படையாக கொண்டுள்ளதுடன் சேவை துறை மற்றும் குடிசைக் கைத்தொழில்கள் ஆகியனவற்றின் கணிசமான பங்களிப்பினையும் கொண்டுள்ளது. பெருமளவான பயன்படுத்தப்படாத வளங்கள் மற்றும் கல்வி அறிவுள்ள தொழிலாளர்கள் என்பனவற்றின் சாத்தியத்தன்மை காரணமாக இம் மாகாணத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் சாத்தியமாக காணப்படுகின்றன. மத்திய மாகாணத்தின் நிலப்பரப்பில் 52% ஆன நிலப்பகுதி ஏற்கனவே பயிர்ச் செய்கையின் பொருட்டு பயன்படுத்தப்பட்டு வருவதுடன் மேலும் 6.3% ஆன நிலப்பகுதி பயிர்ச் செய்கைக்கு ஏற்ற பிரதேசமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்பட்டு வரும் நிலப்பிரதேசத்தில் 35 % ஆனது தேயிலை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்பட்டு வரும் அதேநேரம் 15 % நெற் செய்கைக்கு பயன்படுத்தப்படுகின்றது. மேலும் இம்மாகாணத்தில் தென்னை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் விவசாய நிலங்களின் பரப்புகளின் சதவீதங்கள் முறையே 5% மற்றும் 2.3% ஆகும்.

2.3 சனத்தொகை

அட்டவணை 2.3 ஆனது மத்திய மாகாணத்திற்கு உரிய சனத்தொகை, நிலப் பரப்பு மற்றும் பிற மாவட்டங்களுடன் ஒப்பீட்டு ரீதியான சனத்தொகை அடர்த்தி என்பன தொடர்பான தகவல்களை வழங்குகிறது. மத்திய மாகாண சபையின் நிர்வாக பிரதேசமானது கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மூன்று நிர்வாக மாவட்டங்களை கொண்டுள்ளது, அம் மாவட்டங்களின் பரப்பளவுகள் முறையே 1,917 சதுர கிலோமீற்றர்கள், 1,952 சதுர கிலோமீற்றர்கள் மற்றும் 1,706 சதுர கிலோமீற்றர்கள் ஆகும். மத்திய மாகாண சபையில் 58 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் காணப்படுவதுடன், அவர்கள் மத்திய மாகாணத்தில் வாழுகின்ற பிரதானமான சமூகங்களான சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

அட்டவணை 2.3
நில விஸ்தீரணம் மற்றும் சனத்தொகை

மாகாணம்	நிலப்பரப்பு (சதுரகி.மீ.)	மக்கள் தொகை '000 இல்	சதுர கி.மீ.ஒன்றிற்கான சனத்தொகை அடர்த்தி
மேற்கு மாகாணம்	3,593	5,837	1,625
மத்திய மாகாணம்	5,575	2,557	459
தென் மாகாணம்	5,383	2,466	458
வட மாகாணம்	8,290	1,060	128
கிழக்கு மாகாணம்	9,361	1,547	165
வடமேல் மாகாணம்	7,506	2,372	316
வடமத்திய மாகாணம்	9,741	1,259	129
ஊவா	8,335	1,259	151

மாகாணம்			
சப்ரகமுவ மாகாணம்	4,921	1,919	390
மொத்தம்	**62,705**	**20,278**	**323**

மூலம்: இலங்கை சமூக-பொருளாதார தரவு 2012 (தொகுதி. XXXV) இலங்கை மத்திய வங்கியில் இருந்து

2.3.1 மக்கள்தொகை பரம்பல் மற்றும் பால் சதவீதம்

வரைபடம் 2.3 ஆனது மத்திய மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் காணப்படுகின்ற சனத்தொகைப் பரம்பல் தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளது. இலங்கையின் சமூக - பொருளாதார தரவுகள், 2012 எனும் இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைக்கு அமைய, மத்திய மாகாணத்தின் மொத்த சனத்தொகையானது 2.6 மில்லியன் ஆக காணப்படுவதுடன், இது இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 13% ஆகவும் உள்ளது. மத்திய மாகாணமானது இலங்கையின் இரண்டாவது மிக அதிக சனத்தொகை அடர்த்தியை கொண்டுள்ள பிரதேசமாக காணப்படுவதுடன் சதுர கிலோ மீட்டருக்கு 488 நபர்களையும் கொண்டுள்ளது. இது மேல் மாகாணத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது மிக உயர்ந்த சனத்தொகை அடர்த்தி ஆகும்.

மத்திய மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் கண்டி மாவட்டமானது அதன் மொத்த மாகாண சனத்தொகையின் 53 % இனை கொண்டுள்ளதுடன் சதுர கிலோ மீட்டருக்கு 747 நபர்கள் எனும் சனத்தொகை அடர்த்தியினையும் கொண்டுள்ளது. ஏனைய இரண்டு மாவட்டங்களான மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்கள் முறையே சதுர கி.மீ. ஒன்றுக்கு 255 நபர்கள் மற்றும் 446 நபர்கள் எனும் அடர்த்தியினை கொண்டுள்ளன. இந்த ஒவ்வொரு மாவட்டங்களினதும் பிரதேச அமைப்பு பெருமளவில் ஒரே மாதிரியாக காணப்படுகின்ற போதும் மக்கள் தொகை அடர்த்தி கணிசமான வேறுபாட்டினை காட்டுகின்றது. இவ் வேறுபாடு கண்டி மாவட்டத்தின் சனத்தொகை செறிவில் பிரதிபலிப்பதை அவதானிக்கக் கூடியதாக

உள்ளது. அதாவது, அட்டவணை 2.5 இல் காட்டப்பட்டுள்ளவாறு மத்திய மாகாணத்தின் 60 % இற்கும் அதிகமான நகர்ப்புற மக்கள் தொகையினர் தற்போது கண்டியில் வசித்து வருகின்றனர்.

வரைபடம் 2.3

சனத்தொகைப் பரம்பல் 2012



மூலம். இலங்கை சமூக-பொருளாதார தரவுகள் 2012 (தொகுதி. XXXV) இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.4 ஆனது மத்திய மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் காணப்படுகின்ற சனத்தொகையின் பரம்பலினையும் அதன் பால் ரீதியான விகிதத்தினையும் காட்டுகிறது. மேலும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விபரங்களில் மூலம், மூன்று மாவட்டங்களிலும் காணப்படுகின்ற பெண்களின்

எண்ணிக்கையானது அதன் ஆண்களின் எண்ணிக்கையிலும் பார்க்க சிறிதளவு அதிகமாக உள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்த பால் விகிதமானது இலங்கையின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது சமனாக காணப்படுகின்ற போதும் தேசிய ரீதியில் அவதானிக்கும் போது தற்போது 100 பெண்களுக்கு சுமார் 98 ஆண்கள் எனும் விகிதமே காணப்படுகின்றது.

அட்டவணை 2.4

2012 ஆம் ஆண்டிற்கான மாவட்ட மற்றும் பால் அடிப்படையிலான சனத்தொகை

மாவட்டம்	சனத் தொகை	%	ஆண்	%	பெண்	%
கண்டி	1,369,899	53.58	649,790	47.4	720,109	52.6
மாத்தளை	482,229	18.86	232,,855	48.3	249,374	51.7
நுவரெலியா	706,588	27.64	338,646	47.9	367,942	52.1
மத்திய மாகாணம்	**2,556,774**	**100**	**1,221,291**	**47.70**	**1,337,425**	**52.30**

மூலம்: மக்கள் தொகை மற்றும் வீடமைப்பு புள்ளிவிபர கணக்கெடுப்பு -2012

அட்டவணை 2.4 இற்கு அமைய கண்டி மாவட்டத்திலேயே ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையிலான விகிதாச்சாரத்தில் மிகப் பெரிய ஏற்றத்தாழ்வு காணப்படுகின்றது. ஆயினும், மத்திய மாகாணத்தின் ஏனைய இரு மாவட்டங்களினதும் விகிதம் இந்த எண்ணிக்கையை மிகவும் அண்மித்ததாகவே காணப்படுகின்றது. இந்த புள்ளிவிபரங்களில் இருந்து பொருளாதார வளர்ச்சிக்கு ஆண் தொழிலாளர்களுக்கு பதிலாக பெண் தொழிலாளர்களின் பங்களிப்பு அதிகளவில் காணப்படுவதை முக்கியமான கொள்கை வகுப்புகள் காட்டுகின்றன. எனவே, பால் வேற்றுமையினை குறைத்து கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களில் பங்கேற்பதற்கு

ஆண்களை ஊக்குவிக்கும் பொருட்டு கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அபிவிருத்தி பயிற்சியாளர்களின் அதிகரித்த அவதானம் தேவையாக உள்ளது.

2.3.2 துறைகள்/ பிரிவுகள் ரீதியான சனத்தொகைப் பரம்பல்

அடிப்படையில் நகர்ப்புற, கிராமப்புற மற்றும் பெருந்தோட்ட பிரிவுகள் ரீதியாக மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் மக்கள் தொகை பரம்பல் கண்டி மாவட்டத்தின் மக்கள் தொகை பரம்பலில் இருந்து கணிசமான விலகலைக் காட்டுகிறது. மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் தரவின் தற்போதைய வரையறையின் படி, நகர்ப்புற பகுதிகள் அனைத்து மாநகர மற்றும் நகர சபை பகுதிகளினை கொண்டுள்ளன. அட்டவணை 2.1 இல் காண்பிக்கப்பட்டுள்ளதற்கு இணங்க, கண்டி மாவட்டமானது அவ்வாறான மாநகர மற்றும் நகர சபை பகுதிகளையும் கிராம சேவையாளர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பனவற்றினையும் மிக அதிக அளவில் கொண்டுள்ளது. இதன் காரணமாக, கண்டி மாவட்டமானது மாகாண மக்கள் தொகையில் பெரும்பான்மையான சதவீதத்தினை அதாவது 60% இற்கும் அதிகமான நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்கள் தொகையினை கொண்டுள்ளது. நுவரெலியா மாவட்டமானது அதன் வரலாற்று, பொருளாதார மற்றும் சூழலியல் கட்டமைப்புகள் காரணமாக தனித்துவம் வாய்ந்த பிரதேசமாக காணப்படுவதுடன் பெரும்பாலும் பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள் தொகையினை கொண்டுள்ள அதேநேரம் மாத்தளை மாவட்டமானது அனைத்து பிரிவுகளிலும் மிக குறைந்த மக்கள் தொகை கொண்ட பகுதியாகவும் மாகாணத்தில்

குறைந்தளவான மக்கள் தொகையினை கொண்டுள்ள பிரதேசமாகவும் காணப்படுகின்றது.

அட்டவணை 2.5

துறைகள் அடிப்படையிலான சனத்தொகை பரம்பல்

மாவட்டம்	பிரிவுகள்						மொத்த சனத் தொகை	பரப்பு சதுர கி. மீ	சனத் தொகை அடர்த்தி
	நகரம்		கிராமம்		பெருந்தோட்டம்				
	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%			
கண்டி	174,522	67	1,152,259	61	104,219	19	1,431,000	1,917	747
மாத்தளை	40,659	16	431,843	23	24,498	5	497,000	1,952	255
நுவரேலியா	46,722	18	306,721	16	407,557	76	761,000	1,706	446
மத்திய மாகாணம்	261,903	100	1,890,823	100	536,274	100	2,689,000	5,575	488

மூலம்: மாவட்ட புள்ளிவிபர கையேடு - 2010

அட்டவணை 2.4 இல் குறிப்பிடத்தக்க அம்சமாக மாகாணம் முழுவதும் காணப்படுகின்ற மக்களின் இன பரம்பல் சமமற்ற வகையில் உள்ளமையை குறிப்பிடலாம். இலங்கையில் பெரும்பான்மையாக உள்ள சிங்கள மக்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் மாகாண மட்டத்தில் அதிகளவான பிரதிநிதித்துவத்தினை வழங்குகின்றமையை அவதானிக்க கூடியதாக உள்ளது. மேலும் முஸ்லிம் இன மக்களின் பரம்பல் ஆனது மேற்கு மற்றும் மத்திய மாகாணங்களிலும் மற்றும் மத்திய மாகாணத்தின் மாவட்டங்களிலும் சமனான பரம்பலினை கொண்டுள்ளமையை காணக்கூடியதாக உள்ளது. எனினும், மாகாண ரீதியிலான இலங்கை தமிழ் மக்களின் பரம்பல் ஆனது மொத்த இலங்கை தமிழ் மக்களின் பரம்பலின் சராசரியிலும் பார்க்க குறைவாக உள்ளமையினையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்தில் காணப்படுகின்ற பாரியளவான பெருந்தோட்டத் துறையின் பரம்பல் காரணமாக பெரும்பான்மையான இந்திய தமிழ் மக்கள் அம்மாவட்டத்தில் செறிந்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மத்திய மாகாண மக்களின் இனரீதியான பரம்பல் அட்டவணை 2.4 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.4

இன ரீதியான சனத்தொகைப் பரம்பல் 2012



மூலம்: மாவட்ட புள்ளிவிபர கையேடு – 2013 மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தரவுகளின் படி, மாகாணங்கள் முழுவதும் தரப்பட்டுள்ள வயதுக் குழுக்கள் மூன்றினதும் பரம்பல் ஆனது ஒரே மாதிரியான அமைப்பினை கொண்டுள்ளது. இந்த வயது கட்டமைப்பு முறையின் மிக பெரிய நன்மையாக, பெருமளவு எண்ணிக்கையான தொழில் செய்யக்கூடிய வயதுக் குழுக்களின் சாத்தியத்தன்மையானது காணப்படுவதுடன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தொடர்ச்சியான தொழிலாளர் வழங்கலினை மேற்கொள்ளக் கூடிய சாத்தியக்கூறு காணப்படுவதையும் உறுதிப்படுத்துகின்றது. இது இந்நாட்டின் பொருளாதார மற்றும் சமூக நலனுக்கு ஒரு வலிமையான சாதகமான காரணியாக உள்ளது.

மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் காணப்படுகின்ற மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ 60 % ஆனவர்கள் 15 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாக உள்ளனர். எவ்வாறாயினும் ஒவ்வொரு பிரதேசத்தில் இருந்தும் அல்லது மாவட்டத்தில்

இருந்தும் வெவ்வேறு இடங்களிற்கான தொழிலாளர்களின் உள்நோக்கிய மற்றும் வெளிநோக்கிய இடம்பெயர்வு காரணமாக, மாகாணத்தில் சாத்தியமாக உள்ள தொழிலாளர்களில் இந்த விகிதாச்சாரத்தினர் மூலம் கிடைக்கக்கூடிய நன்மைகள் தொடர்பாக எதிர்வு கூறுவது மிகவும் கடினமான ஒரு விடயமாகும். இதன் காரணமாக, மாகாணத்தில் சாத்தியமாக உள்ள தொழிலாளர்களிடம் இருந்து அதிகூடிய அபிவிருத்திக்கான சாத்தியப்பாட்டினை பெற்றுக்கொள்வது என்பது மாகாண அபிவிருத்திச் செயற்பாடுகளிலும், அவர்களிற்கு வழங்கப்படும் கல்வி அறிவு மற்றும் தொழில்முறை ரீதியான திறன்கள் மற்றும் பயிற்சி என்பவற்றின் அளவிலுமே தங்கியுள்ளது. மேலும் இவ்வாறான அபிவிருத்தி திட்டங்கள் அத் தொழிலாளர்களின் தனிப்பட்ட வளர்ச்சி சார்ந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற தவறும் பட்சத்தில் அது எதிர்காலத்தில் வயதான மக்களில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பும் காணப்படுகின்றது.

2.3.3 மாற்றுத்திறனாளிகளின் குடித்தொகை

தொழில்செய்யக்கூடிய வயதினை கொண்டுள்ள மக்கள் குடித்தொகையில் குறிப்பிட்ட சதவீதத்தினர் 'மாற்றுத் திறன்களைக் கொண்டுள்ள நபர்கள்' என அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். யாராவது ஒரு நபர், பிறப்பின் மூலமாக அல்லது பிறப்பின் மூலமாக அல்லாது, அவருடைய உடலியல் அல்லது உளவியல் திறன்களின் ஏதாவது குறைபாட்டின் விளைவாக, தானாக செயற்பட முடியாதவராக, முழுமையாக அல்லது பகுதியாக தனது வாழ்வாதார தேவைகளை பூர்த்தி செய்ய முடியாதவராக காணப்படுவாராயின் அவர் மாற்றுத்திறனாளி என வகைப்படுத்தப்படுவார். மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் தரவுகளின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகள் தொடர்பாக 6 விதமான குறைபாடுகள் விபரிக்கப்பட்டுள்ளது, அவையாவன, பார்த்தல் குறைபாடு, கேட்டல் மற்றும் பேச்சு குறைபாடு, கைகளில் குறைபாடு, கால்களில் குறைபாடு, ஏனைய உடலியல் குறைபாடுகள், மற்றும் மனவியல் குறைபாடுகள் என்பனவாகும்.

அட்டவணை 2.6
மாவட்ட அடிப்படையில் மாகாணத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளின் சனத்தொகை

மாவட்டம்	மொத்த குடித்தொகை	மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை	மாற்றுத்திறன் விகிதம் (10000 நபர்களுக்கு)	%
கண்டி	1,279,000	19357	152.1	1.51
மாத்தளை	441,300	7466	168.8	1.69
நுவரெலியா	703,600	10465	149.5	1.49
நாடு முழுவதும்	18,797,300	274,711	162.9	1.5

மூலம்: மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் வீடமைப்பு 2001, இலங்கை

அட்டவணை 2.6 இல் மத்திய மாகாணம் மற்றும் இலங்கை முழுவதிலும் காணப்படுகின்ற மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை மற்றும் அதன் விகிதம் என்பன காட்டப்பட்டுள்ளது. மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற மாவட்ட ரீதியான பரம்பல் இலங்கை முழுவதற்குமான ஊனமுற்றவர்களின் விகிதத்தினை ஒத்ததாக காணப்படுகின்றது. மாத்தளை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள விகிதம் நாடு முழுவதும் மற்றும் ஏனைய இரண்டு மாவட்டங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ள விகித்தினை விட அதிகமாக காணப்படுகின்றது. எனினும் இந்த வேறுபாடு தொடர்பாக எந்த ஒரு குறிப்பிட்ட காரணத்தினையும் கூறுவது கடினமான ஒருவிடயமாகும்.

2.4 மத்திய மாகாணத்தின் பொருளாதார கட்டமைப்பு

மத்திய மாகாணமானது, அதனுடைய மக்கள் தொகை மற்றும் பல முதலீட்டு வாய்ப்புக்களை கொண்ட பொருளாதார நடவடிக்கைகள் அதாவது சுற்றுலா, பொழுதுபோக்கு மற்றும் ஓய்வு, கணினி மென்பொருள் மேம்பாடு மற்றும் வேறு பல இலகு தொழில்கள் என்பனவற்றின் காரணமாக பொருளாதார வளர்ச்சி

அடிப்படையில் இலங்கையில் வேகமாக வளர்ந்து வருகின்ற பகுதிகளில் ஒன்றாக காணப்படுகின்றது (மேலதிக விபரங்களுக்கு : http://www.kandyinvestor.org/ என்ற இணைய தளத்தினை உசாவுக). மத்திய வங்கியின் சமூகப் பொருளாதார தரவு 2012, இன் பிரகாரம் 2011 ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.644,214 மில்லியன் ஆகும்.

தற்போது மற்றும் அண்மைய கடந்த ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மத்திய மாகாணத்தின் பங்களிப்பு 9 - 10% ஆக காணப்பட்டதுடன், அதன் 50% ஆனது சேவைத்துறை மூலமாகவே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அட்டவணை 2.6 இல் காண்பிக்கப்பட்டுள்ளது போன்று, 2010 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மேல் மாகாணம் அதி உயர் பங்களிப்பினை வழங்கியிருந்தது. எனினும் 2009 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் பங்களிப்பான 45.8 % இல் இருந்து 2010 ஆம் ஆண்டில் 45.1% ஆக குறைவடைந்திருந்தது. 2009 ஆம் ஆண்டில் காட்டப்பட்டுள்ளது போன்று 2010 ஆம் ஆண்டிலும், தென் மாகாணம் ஆனது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டாவது அதி உயர்ந்த பங்களிப்பாக 10.7% ஆன பங்களிப்பினை வழங்கியிருந்ததுடன் அதன் பங்களிப்பானது 2009 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் பங்களிப்பான 10.5% இலும் பார்க்க சிறிதளவு அதிகரிப்பினை காட்டியிருந்தது, அத்துடன் இது 2011 ஆம் ஆண்டில் மேலும் அதிகரித்து 11.1% ஆக காணப்பட்டது. மத்திய மாகாணம் ஆனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூன்றாவது அதி உயர்ந்த பங்களிப்பினை வழங்கியிருந்ததுடன் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது தொடர்ந்தும் தனது நிலையினை தக்கவைத்துள்ளதுடன் 2010 ஆம் ஆண்டில் 10% ஆக அதிகரிப்பினையும் காட்டியுள்ளது. வடமேல் மாகாணம் ஆனது 2011 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% ஆன பங்களிப்பினை அடைந்துள்ளதுடன் அதன் அமைவிடம் சார்ந்த காரணிகள் மற்றும் நாட்டின் முக்கிய நகரங்களிற்கு அண்மையில் காணப்படுதல் போன்ற காரணங்களால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூன்றாவது அதிகளவு பங்களிப்பை

வழங்குகின்ற மாகாணமாக வருவதற்குரிய சாத்தியக்கூறுகளை அதிகளவில் கொண்டுள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வடக்கு, கிழக்கு, வட மத்திய மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களின் பங்களிப்புகள் 2010 ஆம் ஆண்டில் அதிகரிப்பினை காட்டியுள்ள அதேநேரம் ஊவா மாகாணத்தின் 2010 ஆம் ஆண்டிற்கான பங்களிப்பு தொடர்ந்தும் மாற்றமின்றியே காணப்படுகின்றது. மத்திய மாகாணத்தின் தனிநபர் வருமானம் ஆனது ஏனைய மாகாணங்களில் காணப்படுவது போன்றே தொடர்ந்தும் தேசிய தனிநபர் வருமானத்தின் பெறுமதியிலும் பார்க்க குறைவான பெறுமானத்தினையே காட்டுகின்றது, இது 2011 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 271,000 ஆக காணப்பட்டது. எவ்வாறாயினும், கடந்த காலத்தில் காணப்பட்ட குறைவான தனி நபருக்கான வருமான வளர்ச்சி வீதம் காரணமாக மத்திய மாகாணமானது 5 ஆவது அல்லது 6 ஆவது இடத்தினையே பெற்றுக்கொண்டுள்ளது.

வரைபடம் 2.5

மாகாண அடிப்படையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கு

Gross Domestic Product Share by Province



மூலம்: சமூக-பொருளாதார தரவு 2012 (தொகுப்பு XXXV.) இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.7

மாகாண அடிப்படையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) கூறுகள்

		மேற்கு	மத்திய	தெற்கு	வடக்கு	கிழக்கு	வடமேல்	வடமத்திய	ஊவா	சப்பிரகமுவா	இலங்கை	சேர்க்கை பெறுமதி (மில்லியன் ரூபா)
விவசாயம்	**2009**	2.8	19.2	17.3	18.3	22.9	18.8	30.7	30.7	19.9	12.7	614
	2010	3.0	18.2	16.7	16.0	22.3	18.3	29.8	32.6	21.8	12.8	718
கைத்தொழில்	**2009**	33.0	27.2	32.1	9.3	33.5	29.5	19.9	20.4	25.7	29.7	1,435
	2010	31.9	28.8	34.8	14.2	29.3	30.9	20.2	19.1	24.4	29.4	1,649
சேவைகள்	**2009**	64.2	53.7	50.6	72.3	43.6	51.7	49.4	48.9	54.4	57.6	2,787
	2010	65.1	53.0	48.5	69.8	48.4	50.8	50.0	48.3	53.8	57.8	3,237

மூலம்: ஊடக வெளியீடு, இலங்கை மத்திய வங்கி, 2011

அட்டவணை 2.7 ஆனது இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாகாணங்களின் துறை ரீதியான பங்களிப்பினை காட்டுகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாகாணங்களின் பங்களிப்பானது மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் ஒரே மாதிரியான நிலைமையினையே கொண்டுள்ளதுடன், மேல் மாகாணத்தில் மிகக் குறைந்த பங்களிப்பானது விவசாயத்துறையில் இருந்தும் மிக அதிகளவான பங்களிப்பானது சேவைத்துறையில் இருந்தும் பெறப்படுகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மத்திய மாகாணத்தின் மிக பெரிய பங்களிப்பானது சேவை துறையில் இருந்தே பெறப்படுகின்றது, இது ஏறத்தாழ 50 சதவிகிதம் ஆகும். கைத்தொழில் துறையானது மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25% இலும் சிறிதளவு அதிகரித்த பங்களிப்பினை வழங்கும் அதேநேரம் விவசாயத் துறையானது மிகவும் குறைந்தளவான பங்களிப்பான 20 % சதவீதத்தினையே வழங்கியுள்ளது. எனினும், இந்த அனைத்து துறைகளின் பங்களிப்பின் உண்மையான பெறுமதி ஆனது

அட்டவணை 2.7 இல் வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களை விடவும் அதிகரித்த பெறுமதியினை கொண்டிருக்கலாம்.

ஏனெனில், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபார முயற்சிகள் முறையாக பதிவு செய்யப்படாமல் முறைசாரா பொருளாதார நடவடிக்கைகளாக மாகாணத்தின் மொத்த உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு என்பனவற்றில் குறிப்பிடத்தக்களவான பங்களிப்புகளை வழங்குகின்றவையாக காணப்படலாம். ஒரு மாகாண ரீதியான தகவல் தளத்தினை வடிவமைப்பதற்கு அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பான திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்ற செயல்பாடுகள் அவசியமான தேவையாக உள்ளன. அட்டவணை 2.8 ஆனது கடந்த தசாப்தத்தில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாகாணங்களின் பங்களிப்பில் காணப்படுகின்ற வேறுபாடுகள் தொடர்பான விபரங்களை காட்டுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாகாணங்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பில் பிரதானமான பங்களிப்பினை வழங்குகின்ற பிரதேசங்களாக காணப்படுகின்றன.

அட்டவணை 2.8

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) பொருளாதாரத் துறைகளின் அடிப்படையிலான பங்களிப்பு

மாகாணம்	2000			2005			2010			2012		
	விவசாயம்	கைத்தொழில்	சேவை	விவசாயம்	கைத்தொழில்	சேவை	விவசாயம்	கைத்தொழில்	சேவை	விவசாயம்	கைத்தொழில்	சேவை
மேல் மாகாணம்	11.78	64.27	55.87	8.25	60.03	59.38	10.58	48.68	50.49	11.35	48.35	46.89
மத்திய மாகாணம்	15.29	5.25	9.36	16.76	6.02	7.09	14.17	9.78	9.26	13.99	9.03	9.42
தென்	18.53	5.06	8.33	16.29	7.33	7.44	13.97	12.52	9.03	13.61	12.29	10.66

மாகாணம்												
வடமேல் மாகாணம்	15.17	12.26	7.73	12.50	10.09	7.19	13.59	9.84	8.50	12.67	9.20	9.27

மூலம்: மத்திய வங்கி அறிக்கை 2011

இலங்கை மத்திய வங்கியின் சமூகப் பொருளாதார தரவுகளின் படி மேல் மாகாணம் ஆனது 2000 ஆம் ஆண்டிலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்களிப்பின் அடிப்படையில் முன்னணியில் இருந்து வருகின்றது. ஏனெனில் மேல் மாகாணம் நகர்ப்புற தொழில்துறை அடித்தளத்தை கொண்டுள்ளமையின் காரணமாக அங்கு பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான பெறுமதி சேர் நடவடிக்கைகள் மற்றும் உற்பத்திக்கான வாய்ப்புகள் மிக அதிகளவில் காணப்படுகின்றமையே இதற்கான பிரதானமான காரணம் ஆகும். ஆயினும் வழமை போன்று விவசாயத் துறையிலான அதன் பங்களிப்பு தொடர்ந்தும் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. தொடர் காலப்பகுதிக்கான தரவுகளில் இருந்து கவனத்திற் கொள்ள வேண்டிய மற்றொரு முக்கிய அம்சமாக தென் மாகாணத்தில் வேகமாக வளர்ந்து வரும் கைத்தொழில் துறை காணப்படுகின்றது. உதாரணமாக, மத்திய மாகாணத்தில் கைத்தொழிற் துறையின் வளர்ச்சியானது 2010 ஆம் ஆண்டு மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் முறையே 12.5% மற்றும் 5.8% ஆக காணப்பட்டது. அதே வருடங்களுக்கான தரவுகளை காட்டும் அட்டவணைகளில் அதே வருடங்களில் தென் மாகாணத்தின் தொழிற்துறை வளர்ச்சியாக 26 % மற்றும் 23 % பதிவு செய்யப்பட்டுள்ளது. வடமேல் மாகாணமும் ஒரு மிக வேகமாக வளர்ந்து வரும் மாகாணமாக காணப்படுகின்றது. இதன் காரணமாக, கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் வேகமாக வளர்ந்து வரும் தென் மாகாணம் மற்றும் வடமேல் மாகாணங்களுடன் போட்டியிடக்கூடியவாறு மத்திய மாகாணத்தின் போட்டித்தன்மையை உயர்த்துவதற்கான மூலோபாய திட்டங்களை வகுப்பதில் கவனம் செலுத்த வேண்டியது கட்டாயமாகும்.

2.5 தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை

2.5.1 தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்களின்பங்களிப்பு

இலங்கையில் 10 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினையுடைய மக்கள் தொகையானது 2012 ஆம் ஆண்டில் 17.92 மில்லியன்களாக காணப்பட்டது. இந்த வயதினையுடைய மக்கள் தொகையில் ஏறத்தாழ 11 % ஆன மக்கள் தொகை மத்திய மாகாணத்தில் காணப்பட்டது (வரைபடம் 2.6 இனை பார்க்க). அத்துடன் நாட்டின் மொத்த தொழிலாளர் படையான 8.5 மில்லியன் தொழிலாளர்களில் 12 % ஆனோர் மத்திய மாகாணத்திலேயே காணப்படுகின்றனர். மத்திய மாகாணமானது மேல் மாகாணம், தென் மாகாணம் மற்றும் வடமேல் மாகாணம் ஆகியனவற்றிற்கு அடுத்து அதிகூடிய சனத்தொகை மற்றும் தொழிலாளர் படை ஆகியவற்றினை கொண்ட நான்காவது மாகாணமாக உள்ளது. அட்டவணை 2.8 ஆனது 2012 ஆம் ஆண்டில் வீட்டு மக்கள் தொகை தொடர்பான விவரங்கள் (10 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினை உடையவர்கள்), தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலும், மத்திய மாகாணம், மேல் மாகாணம் ஆகிய மாகாணங்களிலும் மற்றும் நாடு முழுவதிலும் தொழிலாளர்களின் பங்களிப்பு விகிதம் என்பன தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளது.

வரைபடம் 2.6

மாகாண அடிப்படையில் சனத்தொகை மற்றும் தொழிலாளர்களின் பரம்பல் -2012



மூலம்: தொழிலாளர் தொகை கணக்கீடு, வருடாந்திர அறிக்கை, 2012, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மத்திய மாகாணத்தின் மொத்த வீட்டு மக்கள் தொகையில் கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்கள் முறையே 6%, 2% மற்றும் 3% ஆன மக்கள் தொகையினை கொண்டுள்ளன. பால் ரீதியான வீட்டு மக்கள் தொகை பரம்பலில் மேல் மாகாணம் மற்றும் மொத்த இலங்கையின் (சுமார் 53%) பெண்களின் சதவீதத்திலும் பார்க்க மத்திய மாகாணத்தின் சனத்தொகையில் பெண்களின் பங்களிப்பு (54%) சிறிதளவு அதிகரித்து காணப்படுகின்றது. மத்திய மாகாணத்தின் மொத்த தொழிலாளர் தொகையானது 2012 ஆம் ஆண்டில் ஏறத்தாழ ஒரு மில்லியன் ஆக காணப்பட்டது, இது இலங்கையின் மொத்த உழைக்கும் பிரிவினரில் 12 % ஆகும். கண்டி, மாத்தளை, மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தொழிலாளர்

படையின் சதவீத பரம்பலானது வீட்டு மக்கள் தொகையின் பரம்பலினை மிகவும் ஒத்ததாக காணப்படுகின்றது. மாகாணத்தின் மொத்த தொழிலாளர் படையானது, 62 % ஆன ஆண்களையும் மற்றும் 38 % ஆன பெண்களையும் கொண்டுள்ளது. மாகாணத்தின் தொழிலாளர் படையின் இந்த பால் ரீதியான விகிதாச்சாரமானது மேல் மாகாணத்திலும் (ஆண் மற்றும் பெண்களின் சதவீதங்கள் முறையே 68 % மற்றும் 32 %), மற்றும் இலங்கை சராசரியிலும் (முறையே 67%மற்றும் 33%) குறிப்பிடத்தக்களவான வேறுபாட்டினை காட்டுகின்றது. மத்திய மாகாணத்தின் தொழிலாளர் படையில் பெண்களின் பங்களிப்பு கணிசமான அளவு அதிகமாக காணப்படுகின்றது. மத்திய மாகாணத்திற்குள் காணப்படுகின்ற மாவட்டங்களிலும் தொழிலாளர் படையின் பால் ரீதியான தரவுகள் குறிப்பிடத்தக்களவான வேறுபாட்டினை காட்டுகின்றன. கண்டி (37 %) மற்றும் மாத்தளை (34 %) ஆகிய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது நுவரெலியா மாவட்டத்தில் தொழிலாளர் படையில் பெண்களின் பங்களிப்பு ஆனது மிகவும் அதிகமாக (42%) காணப்படுகின்றது.

மத்திய மாகாணத்தின் தொழிலாளர் படையின் பங்களிப்பு விகிதம் 2012 ஆம் ஆண்டில் நாட்டின் சராசரியினை விட 1% அதிகமாகவும் மேல் மாகாணத்தின் சராசருயிலும் பார்க்க 2% அதிகமாகவும் காணப்பட்டது. இதன் காரணமாக மத்திய மாகாணம் ஆனது ஒப்பீட்டளவில் உயர்ந்தளவான தொழிலாளர் படையின் பங்களிப்பினை பதிவு செய்துள்ளது. மத்திய மாகாணத்தில் உள்ள, நுவரெலியா மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்கள் ஒப்பீட்டளவில் அதிகளவான தொழிலாளர் பங்களிப்பினை கொண்டுள்ள அதேநேரம் (முறையே 53% மற்றும் 50% ஆன தொழிலாளர்கள்) கண்டி மாவட்டமானது (45% ஆன தொழிலாளர்கள்) நாட்டின் சராசரி மற்றும் மேல் மாகாணத்தின் சராசரி ஆகியவற்றிலும் பார்க்க மிகவும் குறைந்தளவான பங்களிப்பினையே வழங்கியுள்ளது. மத்திய மாகாணத்தில் ஆண் தொழிலாளர் படையின் பங்களிப்பானது நாட்டின் சராசரியை விட சற்று குறைவாகவே உள்ளது. அதேநேரம் மத்திய மாகாணத்தில் (34%) உள்ள பெண்

தொழிலாளர் படையின் பங்களிப்பானது இலங்கை (30%) மற்றும் மேல் மாகாணம் (28%) ஆகியவற்றிலும் பார்க்க மிகவும் அதிகளவில் காணப்படுகின்றது. பெண் தொழிலாளர் படையின் பங்களிப்பானது நுவரெலியா மாவட்டத்தில் (42%) மிகவும் அதிகரித்து காணப்படுவதுடன் இப் பெறுமதியானது கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்கள் மறும் மேல் மாகாணம் ஆகியவற்றின் சராசரியிலும் மற்றும் நாட்டின் மொத்த சராசரியிலும் அதிகமாகும். இதற்கான காரணம் நுவரெலியா மாவட்டத்தின் பெருந்தோட்டத் துறையில் அதிகளவான பெண் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றமையாகும்.

அட்டவணை **2.9**

சனத்தொகை, தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் பங்குபற்றல்கள், 2012

	வீட்டிலிருக்கும் மக்கள் தொகை (10 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்) (HH% மக்கள் தொகை)			**தொழிலாளர்கள் (மொத்த உழைக்கும் பிரிவினரின் சதவீதம் %)**			**தொழிலாளர்களின் பங்களிப்பு விகிதம்%**		
	மொத்த (எண்)	**ஆண் %**	**பெண் %**	**மொத்த (எண்)**	**ஆண்%**	**பெண் %**	**மொத்த (எண்)**	**ஆண்%**	**பெண் %**
கண்டி	1,086,796	45.4	54.5	490,678	63.3	36.7	45.1	62.9	30.4
மாத்தளை	390,063	46.3	53.7	195,500	65.5	34.5	50.1	70.9	32.2
நுவரெலியா	545,472	46.7	53.3	290,354	58.1	41.9	53.2	66.2	41.9
மத்திய மாகாணம்	2,022,331	45.9	54.1	976,532	62.2	37.8	48.3	65.4	33.8
மேல் மாகாணம்	5,414,658	47.3	52.7	2,454,645	67.7	32.3	45.7	65.3	27.9
இலங்கை	17,915,383	47.1	52.9	8,464,706	66.6	33.4	47.2	66.6	29.9

மூலம்: தொழிலாளர் ஆற்றல் மதிப்பீடு, வருடாந்திர அறிக்கை, 2008 மற்றும் 2012, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்.

2.5.2 வேலைவாய்ப்பு

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் படை கணக்கெடுப்பின் பிரகாரம் கண்டி, மாத்தளை, மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் முறையே ஏறத்தாழ 93%, 97% மற்றும் 98% ஆன தொழிலாளர் படையினர் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொண்டுள்ளனர். இதன் காரணமாக மத்திய மாகாணத்தின் வேலைவாய்ப்பு சதவீதம் ஆனது 95% ஆக காணப்படுவதுடன் இது மேல் மாகாணத்தினதும் (96.5%) மற்றும் நாட்டினதும் (96%) வேலைவாய்ப்பு சதவீதத்தினை விட சற்று குறைவாக உள்ளது.

அட்டவணை 2.9 ஆனது 2008 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பிரதானமான பொருளாதார துறைகள் ரீதியான தொழிலாளர்களின் பரம்பல் தொடர்பான தகவல்களை காட்டுகின்றது. 2012 ஆம் ஆண்டில், தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ளவர்களின் சதவீத பங்கீடு பின்வருமாறு காணப்பட்டது: விவசாயம் 40 %, கைத்தொழிற் துறை 20% மற்றும் சேவை துறை 40%. இந்த துறை ரீதியான வேலை வாய்ப்பு பரம்பலானது மத்திய மாகாணத்துடன் ஒப்பிடும் போது இலங்கை மற்றும் மேற்கு மாகாணம் ஆகினவற்றில் வேறுபட்டு காணப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டில், இலங்கையின் மொத்த வேலை வாய்ப்பினை பெற்றுக் கொண்டுள்ளவர்களில் 31% ஆனவர்கள் விவசாயத் துறையிலும், 26% ஆனவர்கள் கைத்தொழிற் துறையிலும் 43% ஆனவர்கள் சேவை துறையிலும் காணப்படுகின்றனர். நாட்டின் சராசரியுடன் ஒப்பிடுகையில், மத்திய மாகாணத்தில் ஒப்பீட்டளவில் சிறிது அதிகளவான தொழிலாளர்கள் விவசாய துறையில் தொழிலில் ஈடுபடுவதுடன் குறைந்தளவான தொழிலாளர்கள் கைத்தொழிற் துறையில் ஈடுபட்டு வருகின்றனர். அதேநேரம் மேல் மாகாணத்தின் புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடும் போது, விவசாயத் துறையின் வேலைவாய்ப்பில் மத்திய மாகாணத்தின் ஆதிக்கத்தை மிகவும் தெளிவாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மேல் மாகாணத்தில் மொத்த வேலைவாய்ப்பில் விவசாயத் துறையானது வெறும் எட்டு சதவீதமான பங்களிப்பினையே வழங்கியுள்ள அதேநேரம் கைத்தொழில் துறை 34% ஆன வேலைவாய்ப்பினையும் சேவை துறை

58% ஆன வேலைவாய்ப்பினையும் வழங்கியுள்ளன. மேல் மாகாணத்தில் கைத்தொழில் துறை மற்றும் சேவை துறை ஆகிய இரு துறைகளும் ஏறத்தாழ 92% ஆன வேலைவாய்ப்புக்களை வழங்கியுள்ள அதேநேரம் அவை மத்திய மாகாணத்தில் 59% ஆன வேலை வாய்ப்புக்களை மட்டுமே வழங்கியுள்ளன.

அட்டவணை 2.10

பிரதான பிரிவுகள் அடிப்படையில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் பரம்பல், 2008 மற்றும் 2012

	2008				2012			
	விவசாயம்	கைத்தொழில்	சேவைகள்	மொத்தம்	விவசாயம்	கைத்தொழில்	சேவைகள்	மொத்தம்
	%	%	%	No	%	%	%	No
கண்டி	27.5	26.9	45.6	444,952	23.0	26.5	50.5	455,326
மாத்தளை	46.9	15.7	37.4	168,427	43.0	17.9	39.1	190,082
நுவரெலியா	67.4	8.9	23.7	325,666	67.4	10.8	21.8	284,998
மத்திய மாகாணம்	44.8	18.7	36.5	939,046	40.4	20.2	39.4	930,407
மேல் மாகாணம்	7.9	35.2	56.9	2,295,060	8.3	34.1	57.6	2,369,799
இலங்கை	32.6	26.2	41.2	7,648,305	31.0	26.1	42.9	8,128,704

மூலம்: தொழிலாளர் மதிப்பீடு, வருடாந்திரஅறிக்கை, 2008 மற்றும் 2012, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும்புள்ளிவிபரத் திணைக்களம்

மத்திய மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிற்கு இடையிலும் துறை ரீதியான வேலைவாய்ப்பு பரம்பலில் குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படுகின்றது. கண்டி மாவட்டத்தின் பொருளாதாரத்தில் சேவைத்துறையானது (கிட்டத்தட்ட 51%) ஆதிக்கம் செலுத்தும் அதேநேரம் மாவட்டத்தின் மொத்த வேலைவாய்ப்பில் விவசாயம் மற்றும் கைத்தொழிற் துறைகள் முறையே 23% மற்றும் 26% ஆன பங்களிப்பினையே வழங்கியுள்ளன. மாத்தளை மாவட்டத்தின் மொத்த வேலை வாய்ப்பில், விவசாய துறை (43%) மற்றும் சேவை துறை (39%) ஆகியன பெரும்பாலான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கியுள்ள அதேநேரம் கைத்தொழில் துறையானது மிகவும் குறைந்தளவான ஏறத்தாழ 18% ஆன தொழிலாளர்களுக்கே வேலைவாய்ப்பினை

வழங்கியுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் விவசாய துறையானது மொத்த வேலைவாய்ப்பில் 67% இற்கும் அதிகமான வேலைவாய்ப்பினை தொழிலாளர்களுக்கு வழங்கியுள்ளது. இதற்கான பிரதானமான காரணம் இம் மாவட்டத்தில் பெருந்தோட்டத் துறை செல்வாக்கு செலுத்துகின்றமை ஆகும். சேவை துறையானது மொத்த தொழிலாளர்களில் மற்றொரு 22% இனருக்கு வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் கைத்தொழிற் துறையின் வேலைவாய்ப்பு மொத்த வேலைவாய்ப்பில் 11% ஆக மட்டுமே காணப்படுகின்றது.

கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களின் மொத்த வேலைவாய்ப்பில் கைத்தொழில் துறை மற்றும் சேவைத் துறை ஆகியனவற்றின் வேலைவாய்ப்புக்களின் பங்களிப்புகள், முறையே 77%, 57% மற்றும் 33% ஆகும். விவசாய துறை, கைத்தொழிற் துறை மற்றும் சேவை துறை ஆகியனவற்றின் மாவட்ட ரீதியான வேலைவாய்ப்புக்களின் தொகுப்பானது மாகாணத்திலுள்ள தொழிலாளர்களுக்கான பயிற்சிகளை வழங்குவது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுவதில் பயனுடையதாக உள்ளது. அட்டவணை 2.9 ஆனது மத்திய மாகாணத்தில் விவசாயத் துறையின் வேலைவாய்ப்பு வீதமானது 2008 ஆம் ஆண்டில்இருந்து 2012 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருவதை காட்டுகின்றது. கண்டி மாவட்டத்தில் 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான ஐந்து வருட காலப்பகுதியில் சேவை துறையின் வேலைவாய்ப்புகள் மிக வேகமான அதிகரிப்பினை காட்டியுள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அத்துடன் குறித்த காலப்பகுதியில் மாத்தளை மாவட்டத்தில் கைத்தொழிற்துறை மற்றும் சேவைத்துறை ஆகிய இரு துறைகளினதும் வேலைவாய்ப்புக்கள் அதிகரிப்பினை காட்டியுள்ள அதேநேரம் நுவரெலியா மாவட்டத்தில் கைத்தொழிற் துறையின் வேலைவாய்ப்புக்கள் அதிகரிப்பினை காட்டியுள்ளன.

அட்டவணை 2.11

தொழில் வகைகளின் அடிப்படையில் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் பரம்பல், 2008 மற்றும் 2012

தொழிற் பிரிவுகள்		மத்திய மாகாணம்				மேல் மாகாணம்		இலங்கை	
		2008		2012		2012		2012	
		எண்.	%	எண்.	%	எண்.	%	எண்.	%
1	சிரேஷ்ட அலுவலர்கள் மற்றும் முகாமையாளர்கள்	10,812	1.2	7,644	0.8	103,645	4.4	143,877	1.8
2	தொழில் வல்லுநர்கள்	50,609	5.4	52,191	5.6	199,017	8.4	516,673	6.4
3	தொழில்நுட்ப மற்றும் அதனுடன் இணைந்த தொழில் வல்லுநர்கள்	45,666	4.9	37,957	4.1	189,891	8.0	461,096	5.7
4	எழுது வினைஞர்கள்	31,939	3.4	40,545	4.4	158,854	6.7	359,444	4.4
5	நிறுவனத்தின் உரிமையாளர்கள் மற்றும் மேலாளர்கள்	48,692	5.2	50,567	5.4	84,474	3.6	309,827	3.8
6	விற்பனை மற்றும் சேவை தொழிலாளர்கள்	63,957	6.8	55,354	5.9	316,374	13.4	876,891	10.8
7	திறன்சார் விவசாய மற்றும் மீன்பிடி தொழிலாளர்கள்	225,877	24.1	178,827	19.2	137,826	5.8	1,745,344	21.5
8	கைவினை மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிலாளர்கள்	119,608	12.7	119,659	12.9	448,369	18.9	1,378,561	17.0
9	இயந்திர மற்றும் பொறிஇயக்குநர்கள், இணைப்பாளர்கள்	44,836	4.8	66,876	7.2	300,022	12.7	701,962	8.6
10	தொடக்கநிலை வேலைகள்	297,049	31.6	318,441	34.2	417,364	17.6	1,590,816	19.6
	மொத்தம்	939,045	100.0	930,406	100.0	2,369,799	100.0	8,128,704	100.0

மூலம்: தொழிலாளர் மதிப்பீடு, வருடாந்திர அறிக்கை, 2008 மற்றும் 2012, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வேலைவாய்ப்பினை பெற்றுக் கொண்டுள்ள நபர்களின் தொழிற் பிரிவுகள் ரீதியான தகவல்கள் அட்டவணை 2.11 இல் வழங்கப்பட்டுள்ளன. தொழிலாளர் கணக்கெடுப்பில் வழங்கப்பட்டுள்ள தரவுகளுக்கமைய, 10 விதமான தொழிற் பிரிவுகள் எம்மால் இனம் காணப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டில், மத்திய மாகாணத்தில் வேலைவாய்ப்பினை பெற்றுக் கொண்டுள்ள நபர்களின் தொழிற் பிரிவுகளின் அடிப்படையிலான பரம்பல் தொடர்பான தரவுகள் இலங்கையின் பெருமளவு தொழில் மயமாக்கப்பட்ட /வளர்ச்சியடைந்த மாகாணமான மேல் மாகாணத்தின் தரவுகளுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. மத்திய மாகாணத்தில் உள்ள மொத்த தொழிலாளர்களில் 34 % ஆனோர் தொடக்கநிலை தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். அதே வருடத்தில் மேல் மாகாணத்தில் தொடக்கநிலை தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் சதவீதம் 18 % ஆகும். மத்திய மாகாணத்தின் மற்றொரு 19 % ஆன ஊழியர்கள், திறன்சார் விவசாய மற்றும் மீன்பிடி தொழிலாளர்களாக காணப்பட்ட அதேநேரம் மேல் மாகாணத்தில் சுமார் 6% ஆன தொழிலாளர்களே இத்துறையில் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ளனர். இந்த இரண்டு பிரிவுகளும் ஒன்றாக இணைந்து மத்திய மாகாணத்தின் மொத்த வேலைவாய்ப்பில் 53% ஆன பங்களிப்பினை வழங்கியுள்ள அதேநேரம் இவை மேல் மாகாண மொத்த வேலைவாய்ப்பில் சுமார் 24% ஆன பங்களிப்பினையே வழங்கியுள்ளன. மத்திய மாகாணத்தில் மொத்த தொழிலாளர்களில் 47% ஆனவர்கள் மட்டுமே தொடக்க நிலை தொழில்கள், விவசாயம் மற்றும் மீன்பிடி என்பன தவிர்ந்த ஏனைய தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மத்திய மாகாணதில் காணப்பட்ட மொத்த வேலைவாய்ப்பினை பெற்றுக் கொண்டுள்ளவர்களில் 13 % ஆனவர்கள் கைவினை மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்களை புரிபவர்களாகவும் (இது மேல் மாகாணத்தில் 19 % ஆகும்), 7 % ஆனவர்கள் இயந்திரங்கள் மற்றும் பொறிகள் இயக்குபவர்கள் மற்றும் பொருத்துபவர்களாகவும் (இது மேல் மாகாணத்தில் 13 % ஆகும்), 6% ஆனவர்கள்

விற்பனை மற்றும் சேவைத் துறை தொழிலாளர்கள் ஆகவும் (இது மேல் மாகாணத்தில் 13% ஆகும்), மற்றொரு 6 % ஆனவர்கள் தொழில் வல்லுநர்களாகவும் (இது மேல் மாகாணத்தில் 8 % ஆகும்), 5 % ஆனவர்கள் உரிமையாளர்கள் மற்றும் நிறுவனத்தின் மேலாளர்களாகவும் (இது மேல் மாகாணத்தில் 4 % ஆகும்), 4 % ஆனவர்கள் எழுதுவினைஞர்களாகவும் (இது மேல் மாகாணத்தில் 7 % ஆகும்), 4 % ஆனவர்கள் தொழில்நுட்ப மற்றும் அதனுடன் இணைந்த தொழில் வல்லுநர்களாகவும் (இது மேல் மாகாணத்தில் 8 % ஆகும்), 1 % இனர் சிரேஷ்ட அலுவலர்கள் மற்றும் முகாமையாளர்களாகவும் (இது மேல் மாகாணத்தில் 4 % ஆகும்), உள்ளனர்.

இது தொடர்பாக கவனத்திற் கொள்ள வேண்டிய விடயம் யாதெனில் மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற, சிரேஷ்ட அலுவலர்கள் மற்றும் முகாமையாளர்கள், தொழில்நுட்ப மற்றும் அதனுடன் இணைந்த தொழில் வல்லுநர்கள், விற்பனை மற்றும் சேவை தொழிலாளர்கள், திறன்சார் விவசாய மற்றும் மீன்பிடி தொழிலாளர்கள், கைவினை மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிலாளர்கள், இயந்திர மற்றும் பொறி இயக்குநர்கள், இணைப்பாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கையானது நாட்டின் மொத்த சராசரியிலும் பார்க்கவும் குறைவாகவே காணப்படுகின்றது. அத்துடன் அடிப்படை தொழிலாளர்களுக்கான நாட்டின் மொத்த சராசரியானது 20 % இலும் குறைவாக உள்ள அதேநேரம் அதன் சராசரியானது மத்திய மாகாணத்தில் 34 % இலும் அதிகமாக காணப்படுகின்றது. இந் நிலைமையானது மத்திய மாகாணத்தில் பயிற்சி பெற்ற மற்றும் திறன் வாய்ந்த தொழிலாளர்கள் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளமையினை காட்டுகின்றது. அத்துடன் தொழிற் பிரிவுகள் ரீதியாக 2008 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் மத்திய மாகாணத்தில் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் பரம்பலை ஒப்பிட்டு நோக்குவோமாயின் இந் நிலைமையானது மேலும் பிரச்சினைக்குரிய ஒரு விடயமாக காணப்படுகின்றது. குறிப்பிட்ட காலப்பகுதியில் தொடக்க நிலை வேலைகளின் வேலைவாய்ப்பு பங்களிப்பானது 32 % இலிருந்து 34 %

ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் குறித்த காலப்பகுதியில் மத்திய மாகாணத்தின் மொத்த வேலைவாய்ப்பில் சிரேஷ்ட அலுவலர்கள் மற்றும் முகாமையாளர்கள், தொழில்நுட்ப மற்றும் அதனுடன் இணைந்த தொழில் வல்லுநர்கள், விற்பனை மற்றும் சேவை தொழிலாளர்கள், திறன்சார் விவசாய மற்றும் மீன்பிடி தொழிலாளர்கள் ஆகிய தொழில்களின் பங்களிப்புகள் வீழ்ச்சியடைந்துள்ளமையை காணக்கூடியதாக உள்ளது. இந்நிலைமையானது மத்திய மாகாணத்திலுள்ள தொழிலாளர்களின் திறன்களை முன்னேற்ற வேண்டியதன் அவசியத்தினை தெளிவுபடுத்துகின்றது.

அட்டவணை 2.12 ஆனது மத்திய மாகாணத்தின் கைத்தொழிற் துறை பிரிவுகள் ரீதியான வேலைவாய்ப்பு பரம்பல் தொடர்பான தகவல்களை விபரித்துள்ளது. மத்திய மாகாணத்தில், விவசாயம், வனத்துறை மற்றும் மீன்பிடித் துறை ஆகியன தொழில் வாய்ப்பினை வழங்கியுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முன்னணி வகிக்கின்ற தொழில் துறைகளாக உள்ளன. மாகாணத்தின் மொத்த வேலைவாய்ப்பில் இந்த துறைகள் 40% இற்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளன. அத்துடன் இத் துறைகள் சார்ந்த மாகாணத்தின் வேலைவாய்ப்பு பங்களிப்பானது மேல்மாகாணம் (8%) மற்றும் இலங்கையுடன் (31%) ஒப்பிடுகையில் மிகவும் அதிகமாக காணப்படுகின்றது. மத்திய மாகாணத்தின் (12.5%) உற்பத்தித்துறை சார்ந்த வேலைவாய்ப்பு பங்களிப்பானது மேல் மாகாணத்தின் பங்களிப்பிலும் பார்க்க (26%) இரண்டு மடங்கு குறைவாக உள்ளது. மேலும், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் மற்றும் மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் தனிப்பட்ட மற்றும் வீட்டு பாவனைப் பொருட்கள் என்பனவற்றினை பழுதுபார்த்தல்; போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தகவல் தொடர்பாடல்; நிதி முகவர், போக்குவரத்து, சேமிப்பு மற்றும் நில விற்பனை, வாடகை மற்றும் வணிக நடவடிக்கைகள்; மற்றும் கல்வி சார்ந்த துறைகள் ஆகியனவற்றின் பங்களிப்பிலும் மத்திய மாகாணமானது இலங்கையின் மற்றும் மேற்கு மாகாணம்

ஆகியனவற்றின் பங்களிப்பின் சராசரியிலும் பார்க்க குறைவான பங்களிப்பினையே வழங்கியுள்ளது. கைத்தொழிற் துறை சார்ந்த குழுக்கள் ரீதியான ஊழியர்களின் பரம்பல் ஆனது மத்திய மாகாணத்தில் வேலைவாய்ப்பு கட்டமைப்பில் திறன்சார் பயிற்சிகளில் பற்றாக்குறை நிலவுவதனை மீண்டும் உறுதிப்படுத்துகின்றது. ஒரு குறைந்த திறனுடைய தொழிலாளர்கள் படையானது மாகாணத்தில் விவசாயம் சம்பந்தப்பட்ட மற்றும் தொடக்க நிலை தொழில்களின் ஆதிக்கம் நிலவுவதற்கு காரணமாக அமையலாம். மறுபுறம் மாகாணத்தில் ஆதிக்கம் செலுத்துகின்ற அடிப்படைப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு குறைந்த எண்ணிக்கையான பயிற்சி பெற்ற தொழிலாளர்களே தேவையாக உள்ளனர்.

அட்டவணை 2.12

கைத்தொழிற்துறை நிறுவகங்கள் அடிப்படையில் தற்போது தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் பரம்பல், 2008 மற்றும் 2012

கைத்தொழில் வகைகள்		மத்திய மாகாணம்				மேல் மாகாணம்		இலங்கை	
		2008		2012		2012		2012	
		எண்.	%	எண்.	%	எண்.	%	எண்.	%
1	விவசாயம், வனவிலங்கு துறை, மற்றும் மீன்பிடி	420,564	44.8	376,538	40.5	197,608	8.3	2,519,271	31.0
2	உற்பத்தித்துறை	117,168	12.5	116,495	12.5	613,129	25.9	1,437,457	17.7
3	கட்டுமானம், அகழ்தல் மற்றும் கல்லுடைத்தல், மின்சாரம், எரிவாயு மற்றும் நீர் வழங்கல்	58,007	6.2	71,282	7.7	193,987	8.2	681,587	8.4
4	மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், மற்றும் மோட்டார் வாகனங்கள், மோட்டார்சைக்கிள்கள் மற்றும் தனிப்பட்ட மற்றும் வீட்டு பாவனைப் பொருட்கள்	112,934	12.0	111,186	12.0	439,084	18.5	1,138,693	14.0

	என்பனவற்றினை பழுதுபார்த்தல்;								
5	ஹோட்டல்கள் மற்றும் உணவு விடுதிகள்	16,114	1.7	16,365	1.8	52,096	2.2	130,791	1.6
6	போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தகவல் தொடர்பாடல்	39,955	4.3	55,739	6.0	223,628	9.4	525,989	6.5
7	நிதி முகவர் மற்றும் நில விற்பனை, வாடகை மற்றும் வணிக நடவடிக்கைகள்	17,409	1.9	24,177	2.6	144,402	6.1	283,083	3.5
8	பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு, கட்டாய சமூக பாதுகாப்பு	54,497	5.8	75,056	8.1	173,716	7.3	567,081	7.0
9	கல்வி சார் நடவடிக்கைகள்	37,564	4.0	26,585	2.9	105,050	4.4	335,194	4.1
10	சுகாதார மற்றும் சமூக நடவடிக்கைகள்	13,861	1.5	9,576	1.0	49,730	2.1	135,389	1.7
11	ஏனைய சமுதாய, சமூக மற்றும் தனிப்பட்ட சேவை செயற்பாடுகள், கூடுதல் பிராந்திய நிறுவகங்கள் மற்றும் அமைப்புக்கள்	12,052	1.3	11,621	1.2	84,177	3.6	162,345	2.0
12	தனியார் வீடுகளில் வேலையில் உள்ளவர்கள்			7,017	0.8	61,135	2.6	94,021	1.2
13	ஏனைய கூலித் தொழிலாளர்கள்	33,837	3.6	28,769	3.1	32,057	1.4	117,296	1.4
	மொத்த வேலைவாய்ப்பு	939,045	100.0	930,406	100.0	2,369,799	100.0	8,128,704	100.0

மூலம்: தொழிலாளர் மதிப்பீடு, வருடாந்திர அறிக்கை, 2008 மற்றும் 2012, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 2.7 ஆனது மேல் மாகாணம் மற்றும் இலங்கை முழுவதும் வேலைவாய்ப்பினை பெற்றுக் கொண்டுள்ள தொழிலாளர்களுடன் மத்திய மாகாணத்தில் வேலைவாய்ப்பினை பெற்றுக் கொண்டுள்ள தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு நிலைமை ரீதியான ஒரு ஒப்பீட்டினை வழங்கியுள்ளது. மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை ஆனது அரச அலுவலர்கள், தனியார் ஊழியர்கள், தொழில்

வழங்குநர்கள் (குறைந்தது ஊழியர் ஒருவருக்கு சம்பளம் வழங்குபவர்), சொந்த தொழில் செய்பவர்கள் (எந்த ஒரு தொழிலாளருக்கும் சம்பளம் வழங்காமல் தமது பொருளாதார நடவடிக்கையை முன்னெடுத்து செல்பவர்), மற்றும் ஊதியம் பெறாத குடும்ப தொழிலாளர்கள் என ஐந்து வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. மாகாணத்தில் மொத்த வேலைவாய்ப்பில் 39% தனியார் ஊழியர்களாகவும், 27% சொந்த தொழில் செய்பவர்களாகவும் 23% அரச ஊழியர்களாகவும் உள்ளனர். மொத்த ஊழியர்களின் வெறும் 2% ஆனவர்கள் மட்டுமே தமக்கு சொந்தமான தொழிலினை மேற்கொள்வதுடன் ஏனையவர்களுக்கு வேலை வாய்ப்பினையும் வழங்கியுள்ளனர். மத்திய மாகாணத்தின் அரச ஊழியர்களின் பங்கு மேல் மாகாணம் மற்றும் இலங்கையின் சராசரியிலும் பார்க்க ஒப்பீட்டளவில் உயர்வாக உள்ளது. மேல் மாகாணம் மற்றும் இலங்கை முழுவதும் அரச துறைகளில் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் சதவீதம் மொத்த சதவீதத்தின் 15% ஆக காணப்படும் அதேசமயம், மத்திய மாகாணத்தில் அரச துறையில் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் சதவீதமானது அதன் மொத்த வேலைவாய்ப்பில் 23% ஆக உள்ளது. மறுபுறம், தனியார் துறையில் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ளவர்களின் பங்கானது மேல் மாகாணத்தினதும் (53%) மற்றும் இலங்கையினதும் (41%) சராசரியுடன் ஒப்பிடும்போது மத்திய மாகாணத்தில் (38%) குறிப்பிடத்தக்களவு குறைவாகவே காணப்படுகின்றது. மேலும் மத்திய மாகாணம் ஆனது மேல் மாகாணம் மற்றும் இலங்கையின் மொத்த சராசரியுடன் ஒப்பிடுகையில் குறைந்த எண்ணிக்கையான தொழில் வழங்குநர்களையே கொண்டுள்ளது. அத்துடன் மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற ஊதியம் பெறாத குடும்ப தொழிலாளர்களின் பங்களிப்பானது மேல் மாகாணத்தினை விட அதிகமாகவும் நாட்டின் சராசரிக்கு இணையாகவும் உள்ளது.

வரைபடம்2.7

வேலைவாய்ப்பு நிலைமைகளின் அடிப்படையில் வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ள நபர்களின் பரம்பல் - 2012



மூலம்: தொழிலாளர் ஆற்றல் மதிப்பீடு, வருடாந்திர அறிக்கை, 2012, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மேல் மாகாணத்திலும் பார்க்க மத்திய மாகாணம் ஆனது சொந்த தொழில் செய்பவர்களின் கூடிய வேலைவாய்ப்பு பங்களிப்பினை கொண்டுள்ள அதேநேரம் அது நாட்டின் சராசரியை விட குறைவாக காணப்படுகின்றது. வரைபடம் 2.8 இல் வழங்கப்பட்டுள்ளதற்கு இணங்க, தொழில் வழங்குநர்கள், தனியார் துறை தொழிலாளர்கள் மற்றும் சொந்த தொழில் புரிவோர் ஆகிய தொழில் வகைகளில் ஆண்களின் செல்வாக்கு அதிகரித்து காணப்படுகின்றது. தொழில் வழங்குநர்கள் தொழில் வகையில் ஏறத்தாழ 96% ஆனவர்கள் ஆண்களாக உள்ள அதேநேரம் தனியார் துறையில் தொழில் புரிபவர்கள் மற்றும் சொந்த தொழிலினை மேற்கொள்பவர்கள் ஆகிய தொழில் வகைகளில் ஆண்களின் பங்களிப்பானது மொத்த வேலைவாய்ப்பில் முறையே 70 % மற்றும்76 % ஆக காணப்படுகின்றது. இதற்கு விதிவிலக்காக பெண்களின் ஆதிக்கமானது ஊதியம் பெறாத குடும்ப தொழிலாளி வகையில் மிக அதிகமாகவும் (76 %) அரச ஊழியர் பிரிவில் ஓரளவு அதிகமாகவும் காணப்படுகின்றது. ஏறத்தாழ எண்பத்து நான்காயிரம் தொழிலாளர்கள் (மொத்த வேலைவாய்ப்பில் 9 %) சம்பளம் அற்ற குடும்பத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் அதேநேரம் அவர்களில் பெரும்பான்மையானோர் பெண்களாவர்.

வரைபடம்2.8

நிலைமை மற்றும் பால் அடிப்படையிலான வேலைவாய்ப்புக்களின் பரம்பல், மத்திய மாகாணம் 2012



மூலம்: தொழிலாளர் ஆற்றல் மதிப்பீடு, வருடாந்திர அறிக்கை, 2012, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம்2.9

வேலை செய்யும் மணித்தியாலங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் எண்ணிக்கை, 2012



மூலம்: தொழிலாளர் ஆற்றல் மதிப்பீடு, வருடாந்திர அறிக்கை, 2012, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

படம் 2.9 ஆனது தொழிலாளர்கள் ஒரு வார காலப்பகுதியில் வேலை செய்யும் உண்மையான மணித்தியாலங்களின் அடிப்படையில் மொத்த தொழிலாளர்களின் சதவீத ரீதியான பரம்பல் தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளது. தொழிலாளர் கணக்கெடுப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு வரையறையின்படி, ஒரு நபர் குறிப்பிட்ட ஒரு வாரத்தில் குறைந்தது ஒரு மணி நேரம் வேலை செய்வாராயின் அவர் வேலை வாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ளவராக/ தொழில் புரிபவராக கருதப்படுவார். எனினும், ஒரு வாரத்தில் ஒரு மணி நேரம் வேலை செய்பவரை வேலை வாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ளவராக கருத்தில் கொள்வது பொருத்தமற்றதாக காணப்படுகின்றது. அதே கணக்கெடுப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள மற்றொரு வரையறையில், ஒரு வாரத்தில் இருபது அல்லது அதற்கு மேற்பட்ட மணித்தியாலங்கள் வேலை செய்பவரை வேலை வாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ளவராக கருதப்படுகிறது. நாம் தொழிலாளர் கணக்கெடுப்பில் வழங்கப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் வேலை வாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ள நபர்களை அவர்கள் உண்மையில் வேலை செய்யும் மணித்தியாலங்களின் அடிப்படையில் சில வகைகளாக வேறுபடுத்தியுள்ளோம்:

அவையாவன ஒருவாரத்தில் 20 மணி நேரத்திற்கும் குறைவாக வேலை செய்பவர்கள், ஒரு வாரத்தில் 20 மணி நேரத்திற்கும் 40 மணி நேரத்திற்கும் இடைப்பட்ட மணித்தியாலங்கள் வேலை செய்பவர்கள் மற்றும் ஒரு வாரத்தில் குறைந்தது 40 மணி நேரம் வரை வேலை செய்பவர்கள் என்பனவாகும். 8 மணித்தியாலங்களை ஒருவேலை நாளாக கருத்திற் கொள்ளும் போது, ஒரு வாரத்தில் குறைந்தது 40 மணி நேரம் வேலை செய்யும் ஒரு நபர் (அவள் / அவன்) முழுமையாக வேலைவாய்ப்பினை பெற்றுக் கொண்டுள்ளவராக கருதப்படுவார். ஒரு நபர் ஒரு வாரத்தில் 20 மணி நேரத்திற்கும் குறைவாக வேலை செய்தால் அவர் (அவன் / அவள்) தகுதி குறைந்த/ பகுதி வேலையில் உள்ளவராக கருதப்படுவார்.

இலங்கையில் ஒட்டுமொத்த வேலை வாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ள நபர்களில் 73 % ஆனவர்கள் ஒரு வாரத்தில் குறைந்தது 40 மணி நேரம் வேலை செய்பவர்களாவர். மத்திய மாகாணத்தில் இவர்களின் இப் பெறுமதியானது முழு நாட்டின் சராசரியிலும் பார்க்க பத்து சதவிகிதம் குறைவாக உள்ளது. இதற்கான காரணமாக மாத்தளை மாவட்டத்தில் முழுமையாக வேலைவாய்ப்பில் உள்ளவர்களின் எண்ணிக்கையானது குறிப்பிடத்தக்களவு குறைவாக (48 %) காணப்படுகின்றமையை குறிப்பிடலாம். அத்துடன் கண்டி மாவட்டத்திலும் ஒரு வாரத்தில் குறைந்தது 40 மணி நேரம் வேலை செய்பவர்களின் சதவீதம் ஆனது (71%) நாட்டின் சராசரி பெறுமதியிலும் பார்க்க சற்று குறைவாக காணப்படுகின்ற அதேநேரம் நுவரெலியா மாவட்டத்தில் இது (75%) நாட்டின் சராசரியிலும் பார்க்க அதிகளவாக காணப்படுகின்றது. கண்டி, மாத்தளை, மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தகுதி குறைந்த/ அரைகுறை வேலையில் உள்ள தொழிலாளர்களின் சதவீதங்கள் முறையே 29%, 52% மற்றும் 25% என்பன ஆகும். இந்த புள்ளிவிவரங்களை நாடு முழுவதிலும் உள்ள தகுதிக்கு குறைந்த வேலையில் உள்ள தொழிலாளர்களின் சதவீதமான 26 சதவீதத்துடன் ஒப்பிடலாம். ஒரு நபர் வேலை செய்யும் மணித்தியாலங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தகுதி குறைந்த வேலை நிலைமை ஆனது மாத்தளை மாவட்டத்தில்

மிகவும் கடுமையாக காணப்படுகின்றது. மாத்தளை மாவட்டத்தில், 52 % ஆன ஊழியர்கள் வாரத்திற்கு 40 மணி நேரத்திற்கும் குறைவான நேரமே வேலை செய்வது மட்டும் அல்லாது வேலை உள்ளவர்களில் 18 சதவீதமானவர்கள் உண்மையில் வாரத்திற்கு 20 மணிநேரத்திற்கும் குறைவான மணித்தியாலங்களே வேலை செய்கின்றனர்.

2.5.3 வெளிநாட்டு வேலைவாய்ப்பு

2006 ஆம் ஆண்டில் இருந்து 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், மத்திய மாகாணம் ஆனது இலங்கை மொத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பில் சராசரியாக 12 % க்கும் அதிகமான பங்களிப்பினை கொண்டிருந்தது. இந்த சதவீதம் ஆனது 2006 ஆம் ஆண்டில் 11.45 % இல் இருந்து 2010 ஆம் ஆண்டில் 13.5 % வரை படிப்படியாக அதிகரித்துள்ளது (வரைபடம் 2.10 இனை பார்க்க). விநாட்டு வேலைவாய்ப்பில் மத்திய மாகாணத்தின் பங்களிப்பு ஆனது 2011 ஆம் ஆண்டில் இலேசான வீழ்ச்சியினை காட்டிய போதும் அதற்கான காரணம் பெற்றுக் கொள்ளப்பட்ட தற்காலிக தரவுகளில் காணப்பட்ட வழுக்களாக இருக்கலாம். 2010 ஆம் ஆண்டுவரை, மத்திய மாகாணம் ஆனது மேல் மாகாணம் மற்றும் வடமேல் மாகாணம் ஆகியவற்றிற்கு அடுத்து வெளிநாட்டு வேலை வாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ள தொழிலாளர்களின் பங்களிப்பின் அடிப்படையில் மூன்றாவது இடத்தில் காணப்பட்டது. கிழக்கு மாகாணத்தின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பங்களிப்பின் தொடர்ச்சியான அதிகரிப்பு மற்றும் மத்திய மாகாணத்தின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பங்களிப்பின் தொடர்ச்சியான சரிவு என்பவற்றின் காரணமாக 2011 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பங்களிப்பின் அடிப்படையில் இலங்கையில் உள்ள மாகாணங்களில் மத்திய மாகாணமானது நான்காவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

வரைபடம்2.10

பிரதானமான மாகாணங்களின் அடிப்படையிலான இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான பங்களிப்பு 2006 - 2011



மூலம்: வருடாந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புப் புள்ளிவிபர அறிக்கை, 2011 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

வரைபடம்2.11

மாவட்ட ரீதியில் மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு பரம்பல், 2006 - 2011 (வெளியேறிய நபர்களின் எண்ணிக்கை)



மூலம்: வருடாந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புப் புள்ளிவிபர அறிக்கை, 2011 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

வரைபடம் 2.12 ஆனது 2006 ஆம் ஆண்டில் இருந்து 2011 ஆம் ஆண்டு வரை கண்டி, மாத்தளை, மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் இருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் பொருட்டு மாவட்டங்களை விட்டு வெளியேறிய நபர்களின் எண்ணிக்கை தொடர்பான தரவுகளை வழங்கியுள்ளது., கண்டி மாவட்டத்தில் இருந்து சுமார் 14,466 பேர் 2006 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காக நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர். இந்த எண்ணிக்கையானது 2010 ஆம் ஆண்டளவில் படிப்படியாக 25,201 ஆக அதிகரித்திருந்த போதும் அவ் எண்ணிக்கையானது 2011 ஆம் ஆண்டிலும் பார்க்க சற்று குறைவாகவே உள்ளது. நாட்டிற்கான மொத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பில் கண்டி மாவட்டத்தின் பங்களிப்பு 8 சதவீதமாக காணப்படுவதுடன் 2011 ஆம் ஆண்டில் மொத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பில் மாவட்டங்களின் பங்களிப்பு அடிப்படையில் அது கொழும்பு, குருணாகல் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களிற்கு அடுத்து நான்காவது இடத்தில் உள்ளது. ஆயினும் 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மாத்தளை, மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் இருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களின் பொருட்டு நாட்டை விட்டு வெளியேறும் நபர்களின் எண்ணிக்கையானது படிப்படியாக அதிகரித்து வருகின்றது. இலங்கையின் மொத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ள நபர்களில் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் பங்களிப்புகள் முறையே 2.3 % மற்றும் 1.7 % ஆகும்.

அட்டவணை 2.13 ஆனது வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் திறன் சார் தேர்ச்சி தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஆனது தொழிலாளர்களின் திறன் உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களை தொழில்முறை

ரீதியானவர்கள், நடுத்தர அளவில் திறன் உடையவர்கள், எழுதுநர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடையவர்கள், திறனுடையவர்கள், அரை திறனுடையவர்கள், மற்றும் பயிற்சி பெறாத தொழிலாளர்கள் என வகைப்படுத்தி உள்ளது. மேலும் பணிப்பெண்கள் மற்றும் பயிற்சி பெறாத தொழிலாளர்கள் ஆகியோர் தனியாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர். இலங்கையின் மொத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பில் சுமார் 1.5 % ஆனது தொழில்முறை ரீதியானவர்களுக்கு சொந்தமானது. வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுள்ள தேர்ச்சி மிக்க தொழிலாளர்களின் பங்களிப்பு மேல் மாகாணத்தில் 3 % ஆக உள்ள அதேநேரம் மத்திய மாகாணத்தில் அதன் பங்களிப்பு 1.4% என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ள தொழில் நிபுணர்களின் பங்களிப்பானது மேல் மாகாணத்திலும் பார்க்க மத்திய மாகாணத்தில் குறைவாக உள்ளதுடன் அதன் பெறுமதி ஆனது நாட்டின் சராசரியிலும் பார்க்க குறைவாக காணப்படுகின்றது. மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டமானது, வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ள நிபுணர்களின் உயர்பங்களிப்பினை (1.6%) கொண்டுள்ள அதேநேரம் மாத்தளை, மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்கள் ஒப்பீட்டளவில் குறைந்தளவான பங்களிப்பினையே வழங்கியுள்ளன. மத்திய மாகாணத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ள நபர்களில் நடுத்தர அளவிலான தொழிலாளர்களின் பங்கு ஆனது நாட்டின் சராசரிக்கு இணையாக காணப்படுகின்ற போதும் அது மேல் மாகாணத்தின் பங்களிப்பிலும் பார்க்க (4%) இரண்டுமடங்கு குறைவாக உள்ளது. மத்திய மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ள தொழிலாளர்களில் நடுத்தர அளவிலான தொழிலாளர்களின் பங்களிப்பில் குறிப்பிடத்தக்களவான வேறுபாடு எதுவும் காணப்படவில்லை. மாகாணத்தின் மொத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பில் சுமார் 4 % ஆனவர்கள் எழுதுநர் மற்றும் அதனுடன் தொடர்புடைய வேலைகள் தொடர்பாக சென்றுள்ளனர், இச்சதவீதமானது மீண்டும் நாட்டின் சராசரிக்கு இணையாக காணப்படுவதோடு மேல் மாகாணத்தின் சராசரியிலும் பார்க்க (6%) குறிப்பிடத்தக்களவு

குறைவான பெறுமதியினையே கொண்டுள்ளது. எழுதுநர் மற்றும் அதனுடன் தொடர்புடைய வெளிநாட்டு வேலைகளில் கண்டி, மாத்தளை, மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களின் பங்களிப்புகள் முறையே 4 %, 3 % மற்றும் 2.6% ஆகும்.

இலங்கையின் ஒட்டுமொத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுக் கொண்டுள்ள நபர்களில் ஏறத்தாழ 26 % ஆனவர்கள் திறன்சார் தொழிலாளர்களாக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொண்டுள்ளனர். இவர்களின் சதவீதமானது மத்திய மாகாணத்தில் 23 % ஆகவும் மேல் மாகாணத்தில் 28 % ஆகவும் காணப்படுகின்றது. அதாவது, மொத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பில் உள்ள திறன்சார் தொழிலாளர்களில் மத்திய மாகாணத்தின் பங்களிப்பு ஆனது குறிப்பாக மேல் மாகாணத்தின் பங்களிப்புடன் ஒப்பிடும்போது, ஒப்பீட்டளவில் குறைவான பெறுமதியினை கொண்டுள்ளது. எவ்வாறாயினும், கண்டி மாவட்டத்தில் மொத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுக் கொண்டுள்ளவர்களில் 25 % ஆனவர்கள் திறன் சார் தொழிலாளர்கள் ஆவர். மொத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு பங்களிப்பில் மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களின் திறன் சார் தொழிலாளர்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பங்களிப்புகள் முறையே 21 %, மற்றும் 18 % ஆகும். மத்திய மாகாணத்தின் அரை திறன்சார் தொழிலாளர்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பங்களிப்பானது மேல் மாகாணம் மற்றும் இலங்கையின் மொத்த சராசரியில் இருந்து பெருமளவான வேறுபாட்டினை கொண்டிருக்கவில்லை.

இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ள மொத்த தொழிலாளர்களில் ஏறத்தாழ 24 % ஆனவர்கள் திறன் சாராத/ பயிற்சி பெறாத தொழிலாளர்களாக வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொண்டுள்ளனர். மத்திய மாகாணம் மற்றும் மேல் மாகாணம் ஆகியனவற்றின் திறன் சாராத/ பயிற்சி பெறாத தொழிலாளர்களின் பங்களிப்புகள் நாட்டின் மொத்த சராசரிப் பெறுமானத்தினை மிகவும் அண்மித்தவையாக காணப்படுகின்றன. நாட்டின் மொத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஏறக்குறைய 41

% ஆனது பணிப்பெண்களிற்கான வேலைவாய்ப்புக்களாக காணப்படுகின்றது. மத்திய மாகாணத்திற்கான மொத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பில் வீட்டுப் பணிப்பெண்களின் பங்களிப்பு 46 % ஆக காணப்படுவதுடன் இது மேல் மாகாணத்தினை விட 3 சதவிகிதம் அதிகம் ஆகவும் காணப்படுகின்றது. நுவரெலியா மாவட்டத்தின் மொத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பில் சுமார் 60% ஆனது பணிப்பெண்களுக்குரியதாக காணப்படுகின்றது. மேலும் மாத்தளை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிற்கான மொத்த வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் பணிப்பெண்களிற்கான வேலைவாய்ப்பின் பங்களிப்பானது முறையே 50 % மற்றும் 42 % ஆகும்.

அட்டவணை 2.13

தொழிலாளர்களின் மட்டங்களின் அடிப்படையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் பரம்பல், 2011

	தொழில் வல்லுநர்கள்	நடுத்தர தொழிலாளர்கள்	எழுதுநர் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிலாளர்கள்	திறன் சார் தொழிலாளர்கள்	அரை திறன் சார் தொழிலாளர்கள்	திறன் சாராத/ பயிற்சி பெறாத தொழிலாளர்கள்	வீட்டுப் பணிப் பெண்கள்	மொத்தம்
கண்டி	1.6	2.3	4.2	24.9	2.4	22.9	41.8	21,435
மாத்தளை	1.1	1.5	3.0	21.4	1.7	21.1	50.2	6,126
நுவரெலியா	0.8	1.7	2.6	18.0	1.1	16.1	59.7	4,592
மத்திய மாகாணம்	1.4	2.1	3.7	23.2	2.0	21.6	45.9	32,153
மேல் மாகாணம்	3.0	4.0	6.1	28.1	2.4	23.4	33.0	67,586
இலங்கை	1.5	2.3	3.8	25.7	1.6	24.1	41.0	262,960

மூலம்: வருடாந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு புள்ளிவிபர அறிக்கை 2011, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

வரைபடம் 2.12

மத்திய மாகாணத்தின் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் பெண்களின் பங்களிப்பு (%)



- 2011

மூலம்: வருடாந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புபுள்ளிவிபர அறிக்கை2011, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

மத்திய மாகாணத்திற்கான மொத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பில் பயிற்சி பெறாத தொழிலாளர்கள் மற்றும் வீட்டுப் பணிப்பெண்கள் ஆகிய இரண்டு தொழில்வாய்ப்புக்களினதும் ஒருங்கிணைந்த பங்களிப்பு ஆனது 68 % ஆக உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இந்த பங்களிப்பானது மேல் மாகாணம் (56 %) மற்றும் முழு நாடு ஆகியனவற்றின் (65 %) பங்களிப்புகளுடன் ஒப்பிடும்போது அதிகரித்து காணப்படுகின்றது. மேலும் மொத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பில் பயிற்சிபெறாத தொழிலாளர்கள் மற்றும் பணிப்பெண்களின் பங்களிப்பானது மத்திய மாகாணத்தின் மாவட்டங்களான நுவரெலியா மாவட்டத்தில் 76 % ஆகவும் மாத்தளை மாவட்டத்தில் 71 % ஆகவும் கண்டி மாவட்டத்தில் 65 % ஆகவும் காணப்படுகின்றது. இந்த புள்ளிவிபரங்கள், மத்திய மாகாணத்தின் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களின் திறன் சார் தேர்ச்சிகள் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளமையை வெளிப்படையாக

காட்டுகின்றன. வரைபடம் 2.13 ஆனது மத்திய மாகாணம், மேல் மாகாணம் மற்றும் இலங்கை ஆகியவற்றின் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் பெண்களின் பங்களிப்பு தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளது. மேல்மாகாணம் மற்றும் நாட்டின் மொத்த சராசரி ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது, மத்திய மாகாணத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களின் ஒவ்வொரு மனிதவள நிலையிலும் பெண்களின் பங்களிப்பு குறைவாகவே காணப்படுகின்றது.

2.5.4. வேலையின்மை மற்றும் தகுதிக்கு குறைவான வேலை

2012 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் கணக்கெடுப்பின் பிரகாரம், இலங்கையின் மொத்த வேலைவாய்ப்பின்மை சதவீதமானது 4 % ஆக காணப்படுகின்ற அதேநேரம் மத்திய மாகாணத்தின் வேலைவாய்ப்பின்மை சதவீதமானது ஏறத்தாழ 5 % ஆக உள்ளது. இந் நிலைமையானது மத்திய மாகாணத்தில் ஒப்பீட்டளவில் உயர்ந்தளவான வேலை வாய்ப்பின்மை நிலைமை காணப்படுவதனை காட்டுகின்றது. மாத்தளை, மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் புள்ளிவிவரங்கள் போதுமான அளவு நம்பகத்தன்மையினை கொண்டிருக்காத போதும் அப்புள்ளிவிபரங்களின் அடிப்படையில், அம்மாவட்டங்களின் வேலையின்மை விகிதங்கள் முறையே 3 % மற்றும் 2 % ஆக இருக்கும் அதேநேரம் கண்டி மாவட்டத்தின் வேலையின்மை சதவீதமானது 7 % ஆக அதிகரித்து காணப்படுகின்றது. மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற ஆண்களின் வேலையின்மை சதவீதத்துடன் (3 %) ஒப்பிடும்போது மாகாணத்தின் பெண்கள் மத்தியில் காணப்படும் வேலையின்மை சதவீதமானது 7 % ஆக அதிகரித்து காணப்படுகின்றது. மத்திய மாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்கள் மற்றும் நாட்டின் மொத்த சராசரி ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது கண்டி மாவட்டத்தில் பெண்கள் மத்தியில் வேலையின்மையானது மிகவும் அதிகரித்து (13%) காணப்படுகின்றது.

மேலும் மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற உண்மையான வேலையின்மை சதவீதமானது இவ் ஆய்வில் வெளிப்படுத்தப்பட்ட வேலையின்மை சதவீதத்திலும் பார்க்க அதிகமாக இருக்கலாம், ஏனெனில் மாகாணத்தின் மொத்த வேலை வாய்ப்பினை பெற்றுக்கொண்டுள்ள தொழிலாளர்களில் ஏறத்தாழ 5.4 % ஆனவர்கள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட வாரத்தில் குறைந்தது ஒரு மணி நேரம்கூட வேலை எதுவும் செய்திருக்கவில்லை (அட்டவணை 2.14 இனைப் பார்க்க). இது மாத்தளை மாவட்டத்தில் 8% இலும் அதிகம் ஆகும். வேலைவாய்ப்புப் பிரிவில் விவாதிக்கப்பட்டுள்ளதற்கு இணங்க, ஒரு வாரத்தில் குறைந்தது 20 மணி நேரம் வேலை எதுவும் செய்யாத தொழிலாளர்களின் எண்ணிக்கையானது மாகாணத்தில் உள்ள மொத்த வேலைவாய்ப்பினை பெற்றுள்ளவர்களின் 9% சதவீதமாக காணப்படுகின்றது. இந்த விகிதங்கள் மேல் மாகாணத்தின் சராசரி மற்றும் நாட்டின் சராசரி ஆகியவற்றிலும் பார்க்க மிக அதிகளவாக காணப்படுகின்றன. இதற்கமைய, தகுதிக்குக் குறைந்த வேலை / ஏறத்தாழ வேலையற்ற நிலைமையானது மத்திய மாகாணத்தில் ஒரு தீவிர பிரச்சினையாக காணப்படுகின்றது.

வரைபடம் 2.13 ஆனது, 2010 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் கணக்கெடுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற வேலையின்மை விகிதம் தொடர்பான வயது ரீதியான பரம்பலை வழங்கியுள்ளது. மத்திய மாகாணத்தில் 15 முதல் 19 வயதிற்கு உட்பட்ட ஏறத்தாழ 37 % ஆன இளைஞர்கள் வேலையற்றவர்களாக காணப்படுகின்றனர். மேலும், 15 தொடக்கம் 19 வரையான வயதிற்கு உட்பட்ட இளைஞர்கள் மத்தியில் காணப்படுகின்ற வேலையின்மை வீதமானது இலங்கை முழுவதற்கும் 20 % ஆகவும் மேல் மாகாணத்தில் 15 % ஆகவும் உள்ளது. அத்துடன் 20 முதல் 24 வயதிற்கு உட்பட்ட இளைஞர்களிடையே காணப்படுகின்ற வேலையின்மை சதவீதமானது நாட்டின் சராசரி (19%) மற்றும் மேல் மாகாணத்தின் சராசரி (13%) ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் மத்திய மாகாணத்தில் மிகவும் உயர்வாக (25%) உள்ளது. 25 முதல் 29

வயதிற்கு உட்பட்ட இளைஞர்கள் மத்தியில் காணப்படுகின்ற வேலையின்மை வீதமானது மத்திய மாகாணத்தில் 10 % ஆக காணப்படுவதோடு இதுமேல் மாகாணத்தின் வேலையின்மை வீதத்திலும் பார்க்க 4 சதவிகிதம் அதிகம் ஆகவும் காணப்படுகின்றது. இவ்வாறாக, மத்திய மாகாணத்தின் இளைஞர்கள் மத்தியில் காணப்படுகின்ற வேலையற்ற நிலைமையானது மேல் மாகாணம் மற்றும் தேசிய சராசரியுடன் ஒப்பிடுகையில் மிகவும் அதிகமாக காணப்படுகின்றது.

அட்டவணை 2.14

தகுதிக்கு குறைந்த வேலை மற்றும் வேலையின்மை, 2012

	குறித்த வாரத்தில் வேலை செய்யாத வேலையிலுள்ள நபர்களின் எண். தொழிலாளர் படை % இல்	தகுதிக்கு குறைவான வேலையினை உடையவர்களின் சதவீதம்(ஒரு வாரத்தில் 20 மணித்தியாலங்களுக்கும் குறைவாக வேலை செய்யும் தொழிலாளர்களின் சதவீதம்)	வேலையற்றவர்களின் சதவீதம் (தொழிலாளர் படையில் வேலையற்றவர்களின் சதவீதம்)	வேலையற்றவர்களின் சதவீதம் (தொழிலாளர் படையில் %)	
				ஆண்கள்	பெண்கள்
கண்டி	4.1	7.7	7.2	3.9	12.9
மாத்தளை	8.1	18.4	2.8*	2.7*	2.9*
நுவரெலியா	0.6	1.9	1.8*	2.1*	1.6*
மத்திய மாகாணம்	5.4	9.3	4.7	3.2	7.3
மேல் மாகாணம்	2.9	6.1	3.8	3.1	4.5
இலங்கை	4.1	8.3	4.0	2.8	6.2

*இவ்வாறு குறியிடப்பட்டுள்ள தரவுகளின் நம்பகத்தன்மை குறைவாக இருப்பதுடன் அவை கவனமாக கையாளப்பட வேண்டி உள்ளன.

மூலம்: வருடாந்திர தொழிலாளர் கணக்காய்வுஅறிக்கை, 2012, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம்2.13
வயது ரீதியாக வேலைவாய்ப்பின்மை வீதம், 2010



மூலம்: தொழிலாளர் கணக்காய்வுவருடாந்த அறிக்கை, 2010, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 2.14 இற்கு அமைய, மத்திய மாகாணத்தில் தரம் 6 முதல் தரம் 10 வரை கல்வி கற்றுள்ள 6 % ஆன இளைஞர்களும் க.பொ.த. (சா / த) வரையும் கல்வி கற்றுள்ள உள்ள 10 % ஆன இளைஞர்களும் க.பொ.த (உ/த) அல்லது அதற்கு மேல் கல்வி கற்றுள்ள 16 % ஆன இளைஞர்களும் வேலை வாய்ப்பற்றவர்களாக காணப்படுகின்றனர். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மட்டத்தின் மூன்று நிலைகளிலும் உள்ள இளைஞர்களின் மத்தியில் காணப்படுகின்ற வேலை வாய்ப்பின்மை வீதம் ஆனது: மேற்கு மாகாணத்தில் 2.6 %, 5.1 % மற்றும் 5.6 % ஆகவும், இலங்கை முழுவதற்கும் 3.6 %, 6.9 % மற்றும் 11.6 % ஆகவும் காணப்படுகின்றது.

அவ்வாறே மத்திய மாகாணம் ஆனது க.பொ.த. (உ / த), க.பொ.த. (சா / த) மற்றும் தரம் 6 முதல் தரம் 10 வரை கல்வி கற்றுள்ளவர்கள் ஆகிய மூன்று கல்வி மட்டங்களிலும் உள்ள நபர்களிடையே மிக அதிகளவான வேலை வாய்ப்பின்மை விகிதத்தைக் கொண்டுள்ளது. இந் நிலைமையானது மத்திய மாகாணத்தில் படித்த இளைஞர்களிடையே வேலை வாய்ப்பின்மை மிக அதிகமாக காணப்படுகின்றமையினை வெளிக்காட்டுகின்றது.

வரைபடம்2.14

கல்வியறிவு மட்டங்களின் அடிப்படையில் வேலைவாய்ப்பின்மை வீதம் (%), 2010



மூலம்: தொழிலாளர் கணக்காய்வுவருடாந்த அறிக்கை, 2010, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2.6 குடும்ப வருமானம், வருமான பகிர்வு மற்றும் வறுமையின் பிரிவுகள்

2.6.1 வீட்டு வருமானம், செலவு மற்றும் சேமிப்பு

அட்டவணை 2.15 இல், மத்திய மாகாணத்தில் உள்ள வீடுகளின் சராசரி (மாதாந்த) வருமானம் மற்றும் சராசரி தலாவருமானம் (மாதாந்த) என்பனவற்றினை மேல் மாகாணம் மற்றும் இலங்கை ஆகியனவற்றின் மேற்குறிப்பிட்ட சராசரி

வருமானங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. மத்திய மாகாணத்தில் ஒரு குடும்பத்தின் மாத வருமானம் ஆனது 2009/10 ஆம் ஆண்டளவில் சராசரியாக சுமார் 32 ஆயிரம் ரூபாய் ஆக இருந்தது. ஆயினும் மேல் மாகாணத்துடன் ஒப்பிடும்போது, மத்திய மாகாணத்தின் சராசரி வருமானம் ஆனது 15 ஆயிரம் ரூபாய் அல்லது 32 % குறைவாக இருந்தது. இலங்கையின் சராசரி வீட்டு வருமானத்துடன் ஒப்பிடும் போது, மத்திய மாகாணத்தின் சராசரி வருமானம் ஆனது நான்கு ஆயிரத்தினால் அல்லது 13 % இனால் குறைவாக காணப்பட்டது. மேலும் கண்டி மாவட்டத்தின் சராசரி வீட்டு வருமானம் ஆனது மத்திய மாகாணத்தின் சராசரியிலும் பார்க்க சற்று அதிகமாக இருந்தது. ஆனால் மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களின் சராசரி வீட்டு வருமானம் மத்திய மாகாணத்தின் சராசரியை விடவும் குறைவாக காணப்பட்டது. மேல் மாகாணத்துடன் ஒப்பிடும் போது, கண்டி, மாத்தளை, மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களின் சராசரி வீட்டு வருமானம் முறையே 30 %, 36 % மற்றும் 34 % களினால் குறைவாக இருந்தது. இலங்கையின் சராசரி வீட்டு வருமானத்துடன் ஒப்பிடும் போது, இந்த மூன்று மாவட்டங்களினதும் அதாவது கண்டி, மாத்தளை, மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களின் வீட்டுவருமானத்தின் சராசரியானது முறையே 9 %, 18 % மற்றும் 15 % குறைவாக இருந்தது. அட்டவணை 2.15 கொடுக்கப்பட்டுள்ளது போன்று, மத்திய மாகாணத்தின் தலா வருமானத்தின் மாதாந்த சராசரி ஆனது இலங்கையின் சராசரி தலா வருமானத்தை விட 12% குறைவாக உள்ளது. இப் பெறுமதியானது மேல் மாகாணத்தின் தலா வருமானத்தின் சராசரியிலும் பார்க்க 31 % இனால் குறைவாகும். கண்டி மாவட்டமானது மத்திய மாகாணத்திலும் பார்க்க அதிகூடிய தலா வருமானத்தினை பதிவு செய்துள்ள அதேநேரம் மாத்தளை மற்றும்நுவரெலியா மாவட்டங்கள் மத்திய மாகாணத்தினை விட குறைந்தளவானதலா வருமானத்தினையேபதிவு செய்துள்ளன. கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களின் சராசரி தலா வருமானம் ஆனது மேல் மாகாணத்தின் சராசரி தலா வருமானத்திலும் பார்க்க முறையே 28 %, 31 % மற்றும் 34 % களினால் குறைவாகவும் நாட்டின் சராசரியிலும் பார்க்க முறையே 9 %, 13 %

மற்றும் 16 % களினால் குறைவாகவும் உள்ளன. இவ்வாறு, மத்திய மாகாணத்தின் குடும்பங்களின் சராசரி வருமானம் ஆனது ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது ஒப்பீட்டளவில் குறைவாக காணப்படுகின்றது.

வீட்டு வருமானம் மற்றும் செலவு தொடர்பான ஆய்வு (2009/10) ஆனது இலங்கையில் மாதாந்த சராசரி வீட்டு செலவீனம் ஆனது 31,331 ரூபாய்கள் என அறிக்கையிட்டுள்ளது. மேல் மாகாணத்தின் மாதாந்திர சராசரி வருமானம் 42,400 ரூபாய்கள் ஆக உள்ள அதேநேரம் மத்திய மாகாணத்தின் மாதாந்திர சராசரி வருமானம் 28,300 ரூபாய்களாகும். அத்துடன் மத்திய மாகாணத்தின் சராசரி வீட்டு செலவீனம் ஆனது நாட்டின் சராசரியிலும் பார்க்க 10 % இனால் குறைவாகவும் மேல் மாகாணத்தின் சராசரியிலும் பார்க்க 33 % இனால் குறைவாகவும் காணப்படுகின்றது. கண்டி மாவட்டத்தின் சராசரி வீட்டு செலவீனம் ஆனது 29,767 ரூபாய்களாக உள்ளதுடன் இது மத்திய மாகாணத்தின் சராசரியை விட அதிகமாகவும், நாட்டின் சராசரியிலும் பார்க்க 10 % இனாலும் மேல் மாகாணத்தின் சராசரியை விட 30 % இனாலும் குறைவாக காணப்படுகின்றது. மாத்தளை மாவட்டத்தின் சராசரி வீட்டு செலவீனம் ஆனது நாட்டின் சராசரியிலும் பார்க்க 15 % குறைவாகவும் மேல் மாகாணத்தின் சராசரியை விட 38 % குறைவாகவும் உள்ளது. இவ்வாறே, நுவரெலியா மாவட்டத்தின் சராசரி வீட்டு செலவீனம் ஆனது நாட்டினதும் மற்றும் மேல் மாகாணத்தினதும் சராசரியிலும் பார்க்க முறையே 14 % மற்றும் 37 % ஆகியவற்றினால் குறைவாக உள்ளது. இந்நிலைமை மீண்டும் மத்திய மாகாணத்தில் உள்ள குடும்பங்களின் ஒப்பீட்டளவில் குறைந்த வருமானத்தினை சுட்டிக்காட்டுகின்றது.

அட்டவணை 2.15

குடும்பங்களின் சராசரி வருமானம், செலவீனம் மற்றும் சேமிப்புக்கள், 2009/10

	வீட்டு வருமானத்தின்	தலா வருமானத்தின் மாத சராசரி	மாதாந்த சராசரி வீட்டு செலவு	மாதாந்த சராசரி வீட்டு

	மாத சராசரி (ரூபா.) (அ)	(ரூபா.) (ஆ)	(ரூபா.) (இ)	சேமிப்பு (ரூபா.) (அ - இ)
கண்டி மாவட்டம்	33,063	8,285	29,767	3,296
மாத்தளை மாவட்டம்	30,013	7,930	26,528	3,485
நுவரெலியா மாவட்டம்	31,029	7,667	26,841	4,188
மத்திய மாகாணம்	31,895	8,040	28,308	3,587
மேல் மாகாணம்	47,118	11,561	42,399	4,719
இலங்கை	36,451	9,104	31,331	5,120

மூலம்: வீட்டு வருமானம் மற்றும் செலவு கணக்காய்வு, 2009/10

சராசரி வீட்டு வருமானம் மற்றும் செலவீனம் ஆகிய இரண்டும் குறைந்தளவான பெறுமதியினை கொண்டிருப்பதன் காரணமாக, மத்திய மாகாணத்தில் வீட்டு சேமிப்பும் ஒப்பீட்டளவில் குறைந்தளவாகவே காணப்படுகின்றது. இலங்கையின் சராசரி வீட்டு சேமிப்பு ஆனது மாதம் ஒன்றிற்கு ஐந்தாயிரம் ரூபாயிலும் சிறிதளவு அதிகமாக உள்ளது. ஆச்சரியப்படத்தக்க வகையில், மத்திய மாகாணம் மற்றும் மேல் மாகாணம் ஆகிய இரண்டினதும் சராசரி சேமிப்பு ஆனது நாட்டின் சராசரி மாதாந்த சேமிப்பிலும் பார்க்க குறைவாகவே உள்ளது. மத்திய மாகாணத்தின் மாவட்டங்களான நுவரெலியா, மாத்தளை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் நுவரெலியா மாவட்டமானது வீட்டு வருமானத்தில் சேமிப்பின் சதவீதத்தின் அடிப்படையில், ஒப்பீட்டளவில் உயர்ந்தளவான சராசரி சேமிப்பு வீதத்தினை (13 %) காட்டுவதுடன் ஏனைய இரு மாவட்டங்களும் முறையே 12 % மற்றும் 10 % ஆன சேமிப்பு வீதங்களினை பதிவு செய்துள்ளன. மத்திய மாகாணம், மேல் மாகாணம் மற்றும் இலங்கை ஆகியனவற்றின் சராசரி சேமிப்பு விகிதங்கள் முறையே 11 %, 10 % மற்றும் 14 % ஆகும். மேலும் மத்திய மாகாணத்தின் வீட்டு சேமிப்பு விகிதம் ஆனது மேல் மாகாணத்தின் வீட்டு சேமிப்பு விகிதத்திலும் பார்க்க சற்று அதிகமாக காணப்பட்ட

போதும் அது நாட்டின் சராசரி சேமிப்பு விகிதத்திலும் பார்க்க குறிப்பிடத்தக்க அளவு குறைவாகவே உள்ளது.

2.6.2 வருமான பகிர்வு மற்றும் வறுமை

அட்டவணை 2.16 ஆனது பல்வேறு வருமான மட்டங்களின் சதவீதங்கள் மற்றும் வீட்டு வருமானத்தின் சராசரிக்கான கினி குணகம் ஆகியனவற்றின் அடிப்படையில் வீட்டு வருமானத்தின் பரம்பல் தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளது. சனத்தொகையில் 20 % ஆன உயர்ந்தளவான வருமானத்தினை உடையவர்கள் (வசதியானவர்கள்), 60 % ஆன நடுத்தர வருமானத்தினை உடையவர்கள் (நடுத்தர வர்க்கத்தினர்) மற்றும் 20 % ஆன குறைந்தளவான வருமானத்தினை உடையவர்கள் (ஏழைகள்) ஆகியோரின் வருமானத்தின் சதவீதங்களின் பரம்பல் தொடர்பான ஒப்பீடு எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முழு இலங்கையிலும் காணப்படுவது போன்றே மத்திய மாகாணத்திலும் வருமான சதவீதத்தின் பரம்பலில் சமனற்ற தன்மையானது தீவிரமாக காணப்படுன்றது. மாகாணத்தின் மொத்த வருமானத்தில் ஏறத்தாழ 53 % ஆனது இலங்கையின் மக்கள் தொகையில் வெறும் 20 % ஆக உள்ள உயர்ந்தளவான வருமானத்தினை உடையவர்கள் (வசதியானவர்கள்) இடையே பகிரப்படுகின்றது. இந்த பங்கானது இலங்கையின் சராசரியினை விட சற்று குறைவாக காணப்படினும், அது குறிப்பிடத்தக்களவான பெறுமதியாகவே உள்ளது. இதற்கு மாறாக, மத்திய மாகாணத்தின் சனத்தொகையில் மிக வறியவர்களாக உள்ள 20 % இனர் மொத்த வருமானத்தில் 4.4 % இனையே பெற்றுக் கொள்கின்றனர். இப் பெறுமதியானது இலங்கையின் சராசரிக்கு சமனாக காணப்படுகின்ற போதும் மேல் மாகாணத்தின் சராசரியினை விட குறைவாகவே உள்ளது. முழு நாட்டினையும் பொறுத்த வரையில் ஏழைகள்/ வறியவர்கள் மிகவும் மோசமான நிலைமையில் காணப்படுவது உண்மை எனினும், நுவரெலியா மாவட்டத்தில் ஓரளவு முன்னேற்றகரமான நிலைமை நிலவுகின்றது, அதாவது நுவரெலியா மாவட்டத்தில் மொத்த வருமானத்தில்

ஏறத்தாழ 6 % ஆனது மொத்த சனத்தொகையில் 20 % ஆக உள்ள வறியவர்கள் மத்தியில் பகிரப்படுவதுடன், மொத்த சனத்தொகையில் 20 % ஆக உள்ள வசதியானவர்கள் மத்தியில் பகிரப்படும் வருமானத்தின் பங்கும் ஒப்பீட்டளவில் குறைவாக காணப்படுகின்றது.. இது கினி குணகம் மூலம் தெளிவாக காட்டப்பட்டுள்ளது: மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்களின் கினி குணகம் ஆனது முறையே 0.50 மற்றும் 0.49 ஆக உள்ள போது நுவரெலியா மாவட்டத்தின் சராசரி வீட்டு வருமானத்திற்கான கினி குணகம் கினி ஆனது 0.45 ஆக காணப்படுகின்றது.

அட்டவணை 2.16

வருமான சமத்துவமின்மை, 2009/10

மாவட்டம் / மாகாணம்	வீட்டு வருமான பகிர்வு சதவீத ரீதியான பரம்பல்			சராசரி வீட்டு வருமானத்தின் கினி குணகம்
	வசதியானவர்கள்20 %	நடுத்தர வர்க்கம்60 %	ஏழைகள் 20%	
கண்டி மாவட்டம்	53.4	42.7	3.9	0.49
மாத்தளை மாவட்டம்	55.0	40.8	4.2	0.50
நுவரெலியா மாவட்டம்	51.3	42.9	5.8	0.45
மத்திய மாகாணம்	53.4	42.2	4.4	0.48
மேல் மாகாணம்	53.3	41.7	5.0	0.47
இலங்கை	54.1	41.4	4.5	0.49

மூலம்: வீட்டு வருமானம் மற்றும் செலவு கணக்காய்வு, 2009/10

அட்டவணை 2.17

வறுமை அளவீடுகள், 2009/10

வறுமை அளவீடுகள், 2009/10	(%)தலை எண்ணிக்கை சுட்டி (%)	(%)ஏழைக் குடும்பங்களின் பங்கு (%)	(%)ஏழ்மை இடைவெளி சுட்டெண்

			(%)
கண்டி மாவட்டம்	10.3	8.3	2.2
மாத்தளை மாவட்டம்	11.4	9.3	2.0
நுவரெலியா மாவட்டம்	7.6	7.1	1.0
மத்திய மாகாணம்	9.7	8.2	1.8
மேல் மாகாணம்	4.2	3.0	0.8
இலங்கை	8.9	7.0	1.7

மூலம்: வீட்டு வருமானம் மற்றும் செலவீன கணக்காய்வு, 2009/10

அட்டவணை 2.17 இல் வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய, வறுமை மட்டம் ஆனது மேல் மாகாணம் மற்றும் இலங்கை ஆகியனவற்றுடன் ஒப்பிடும் போது மத்திய மாகாணத்தில் உயர்ந்ததாகவே உள்ளது. வறுமை தொடர்பான அனைத்து அளவீடுகளும் மத்திய மாகாணத்தில் வறுமையானது உயர் மட்டத்தில் உள்ளமையினை உறுதிப்படுத்துகின்றன. மத்திய மாகாணத்தில் உள்ள, நுவரெலியா மாவட்டத்தில் வறுமை மட்டம் ஓரளவு குறைவாக காணப்படுகின்றது. அதன் வறுமை குறிகாட்டிகள், மத்திய மாகாணம், மேல் மாகாணம் மற்றும் இலங்கை என்பனவற்றின் சராசரியை விட மேம்பட்ட நிலைமைகளை காட்டுகின்றன. எவ்வாறாயினும், அட்டவணை 2.17 இல் வழங்கப்பட்டுள்ள அனைத்து அளவீடுகளும் இலங்கையின் சாதாரண நிலைமையிலும் பார்க்க மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்களில் வறுமை ஆனது ஒரு உயர் மட்டத்தில் காணப்படுவதனை காட்டுகின்றன. இந்த இரண்டு மாவட்டங்களினதும் வறுமையின் அளவானது முழு நாட்டின் வறுமை மட்டத்தினை விட கூடியதாக காணப்படுகின்றது.

2.7 கல்வி

இலங்கை கல்வி முறைமையானது பிரிட்டிஷ் மரபு முறைமையின் அடிப்படையில் நன்கு விருத்தி செய்யப்பட்ட உயர்கல்வி முறைமை உள்ளடங்கலாக ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை ஆகிய கல்வி மட்டங்களை கொண்டுள்ளது. மேற்கத்திய நாடுகளில் நடைபெற்று வருகின்ற முக்கியமாக அமெரிக்கா போன்ற நாடுகளில் நடைபெற்று வருகின்ற நவீன கல்வி மாற்றங்கள்

இலங்கையின் கல்வியின் அனைத்து மட்டங்களிலும் குறிப்பாக பல்கலைக்கழக கல்வியில் தனித்துவமான செல்வாக்கினை செலுத்துகின்றன. இலங்கையானது 'அனைவருக்கும் இலவச கல்வி" என்ற கொள்கையினை பேணிவருகின்ற போதும், தனியார் துறை கல்வி முறைமையானது மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வருகின்றது, இவ்விடயம் அனைத்து அரசியல் மற்றும் சமூக கலந்துரையாடல்களிலும் விவாதிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை ஆனது 4.0 மில்லியனுக்கும் அதிகமான உள்ளது, இது இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 20% ஆகும். தேசிய (342) மற்றும் மாகாண (9,563) பாடசாலைகள் என வகைப்படுத்தப்பட்ட 9,900 இற்கும் அதிகமான பாடசாலைகள் நாடு முழுவதும் பரவலாக காணப்படுகின்றன. இதன் காரணமாக நாட்டில் உயர் கல்வித் தேர்ச்சி காணப்படுகின்ற அதேநேரம் உதாரணமாக உயர்ந்த எழுத்தறிவு வீதம் (94%) காணப்படுகின்ற போதும், பெரும்பாலான பாடசாலைகளில் கல்வியின் நிலை மற்றும் தரம் என்பன அபிவிருத்தி அடைந்த மற்றும் அண்மையில் அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது பொதுவாக குறைந்தளவாகவே காணப்படுகின்றன. மேலும், நிதி வரையறை/ பற்றாக்குறை காரணமாக, அரசாங்கத்தினால் நாட்டின் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் தேசிய பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்குவதற்கு முடியாமல் உள்ளதால் இந் நிலைமையானது ஆர்வமுள்ள இளைஞர்கள் மத்தியில் ஒரு பெரும் அதிருப்தியினை உருவாக்கியுள்ளது. மேலும், பல்கலைக்கழகங்களிற்கான அனுமதியினை பெறுவது பெருமளவு போட்டித்தன்மை வாய்ந்ததாக காணப்படுகின்றது, உதாரணமாக க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்த மாணவர்களில் வெறும் 20 % ஆனவர்கள் மட்டுமே தேசிய பல்கலைக்கழகங்களிற்கான அனுமதியினை பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. அத்துடன் அவ்வாறான தேசிய பல்கலைக்கழகங்கள் 15 மட்டுமே காணப்படுகின்றன. இந்த பிரிவானது க.பொ.த. (உ / த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் (அண்ணளவாக 350,000) ஏறத்தாழ 7 % (வருடாந்த மாயவர் உள்வாங்கல்கள் 22,000) ஆகும். இதன் விளைவாக, இலங்கை

தற்போது சுமார் 100,000 மாணவர்களை உயர்கல்வி நிறுவகங்களில் உள்வாங்கியுள்ள அதேநேரம் அவுஸ்திரேலியா அதே அளவான மொத்த மாணவர் எண்ணிக்கையினை கொண்டுள்ளது. அத்துடன் இலங்கையில் 350,000 வெளிநாட்டு மாணவர்கள் உட்பட 1.2 மில்லியனுக்கும் அதிகமான மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். இலங்கையின் தற்போதைய நிலவரப்படி பாடசாலைக் கல்வி மற்றும் உயர்கல்வி உட்பட மூன்றாம் நிலைக்கல்வி ஆகியனவற்றிற்கு கொள்கை வகுப்பாளர்கள், நிர்வாகிகள், வணிக தலைவர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரின் அதிகரித்த கவனம் அவசியமாக உள்ளது.

2.7.1 எழுத்தறிவு வீதம்

கல்வியறிவு ஆனது மனித வள மேம்பாடு மற்றும் மக்களின் நல்வாழ்வு என்பவற்றுக்கான முக்கியமான குறிகாட்டி என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். உலகமானது கல்வியறிவினை அளவிடுவதற்கு மேலதிகமாக ஒரு படி முன்னேறி உள்ளது, உதாரணமாக கணனி அறிவினை குறிப்பிடலாம். கல்வியறிவு தொடர்பாக பல்வேறு வரையறைகள் காணப்படுகின்ற போதும், தற்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணப்படி, ஒருவரினால் ஒரு விடயத்தினை வாசித்து, புரிந்து கொள்ளவும் எழுதவும் முடியுமாயின் அவர் கல்வி அறிவு உள்ளவராக கருதப்படுவார்.

ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இலவச கல்வித் திட்டத்தின் காரணமாக இலங்கையானது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கிடையில் உயர்ந்த எழுத்தறிவு விகிதத்தை (2012 ஆம் ஆண்டில் 94%) பேணி வருகின்றது. இந்த சாதகமான நிலைமை ஆனது, மிதமான உயர்ந்த ஆயுள் எதிர்பார்ப்பு (73 ஆண்டுகள்), குறைந்த குழந்தைகள் இறப்பு விகிதம் (09.47), மிதமான உயர் மனித வளர்ச்சிச் சுட்டெண் (0.69), மற்றும் ஏனையவை போன்ற விடயங்கள் தொடர்பாக பிற நாடுகளிடம் இலங்கை மீதான ஒரு நேர்மறையான அங்கீகாரத்தனை

ஏற்படுத்தியுள்ளது. அது, எவ்வாறாயினும், இலங்கையானது கல்வி அறிவில் முழுமையடைந்த நாடாக மாறுவதற்கு, அதன் கணினி அறிவு மற்றும் தகவல் தொழில்நுட்பம், மக்களால் வாசிக்கப்படும் புத்தகங்களின் எண்ணிக்கை, தொலைக்காட்சியில் அவர்கள் பார்க்கும் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை, வெகுஜன ஊடகங்களின் தரம் என்பன தொடர்பாக குறிப்பிடத்தக்க முழுமையான தேர்ச்சியினை அடைய வேண்டி உள்ளது. கடந்த காலத்தில் இலங்கையின் சமூக-பண்பாட்டு காரணிகளின் தாக்கம் காரணமாக ஆண்களின் எழுத்தறிவு வீதம் ஆனது (95%) பெண்களின் எழுத்தறிவு வீதத்திலும் (93%) பார்க்க சற்று அதிகமாக காணப்பட்டது. அண்மைய தரவுகளின் படி, ஆண்கள் மற்றும் பெண்களின் எழுத்தறிவு வீதங்களுக்கிடைய குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வு எதுவும் காணப்படவில்லை. மேலும், தேசிய பல்கலைக்கழகங்களில் மாணவர் உள்வாங்கல்களின் போது பொறியியல் பீடம் தவிர்ந்த ஏனைய அனைத்துத் துறைகளிலும் பெண்களின் மேலாதிக்கம் அதிகமாக காணப்படுகின்றது. இதே போக்கு அண்மைய காலப்பகுதியில் தொழிற் பயிற்சி உட்பட, ஆரம்ப, இடைநிலை மற்றும் மூன்றாம்நிலை கல்வி மட்டங்களிலும் நிலவுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அட்டவணை 2.18 ஆனது மேல் மாகாணம் மற்றும் இலங்கை என்பவற்றுடனான மத்திய மாகாணத்தின் எழுத்தறிவு வீதம் தொடர்பான முக்கிய அம்சங்களினை காட்டுகிறது.

அட்டவணை 2.18

மாவட்ட மற்றும் பால் ரீதியில் கல்வியறிவு வீதம், 2010

மாகாணம்	மாவட்டம்	எழுத்தறிவு வீதம்		
		ஆண்	பெண்	மொத்தம்
மேல் மாகாணம்	கொழும்பு	95.1	94.2	94.6
	கம்பஹா	95.3	94.3	94.8
	களுத்துறை	92.3	91.5	91.7
மத்தியமாகாணம்	கண்டி	93.5	92.7	92.9
	மாத்தளை	89.5	87.5	88.0
	நுவரெலியா	70.5	68.5	69.0

இலங்கை		**93.2**	**90.8**	**91.9**

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012

2.7.2 பாடசாலைகள் மற்றும் மாணவர்களின் உள்வாங்கல்கள்

இவ் ஆய்வின் சமூக-பொருளாதார சூழல் தொடர்பான விபரங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, மத்திய மாகாணம் ஆனது இலங்கையில் அதிகளவான பல்வேறுபட்ட பிரதேசங்களை உள்ளடக்கி உள்ளது. மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள மூன்று மாவட்டங்களும் அதாவது; கண்டி, மாத்தளை, மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்கள் பிரதானமாக கிராமப்புறங்களாக காணப்படுவதுடன் அவற்றின் பெருமளவான நிலப்பகுதி தேயிலைப் பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்படுகின்றது. மேலும், இன ரீதியான தகவல்கள், இப்பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையான (இந்திய) தமிழ் மக்கள் செறிந்து காணப்படுவதுடன் கணிசமானளவு முஸ்லீம் சமூகத்தினையும் பெரும்பான்மையான சிங்கள மக்கள் மத்தியில் கொண்டுள்ளது என்பதை காட்டுகின்றன. இந்த பகுதியின் தரைத்தோற்றமானது மலைப்பாங்கானதாக காணப்படுவதுடன் பெரும்பாலும் நாட்டில் உள்ள அனைத்து ஆறுகளும் இங்கேயே தோற்றம் பெறுகின்றன. மேலும் சமூக-பொருளாதார தகவல்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அனைத்து காரணிகளும் இந்த மாகாணத்தின் பாடசாலைக் கல்வியில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன.

அட்டவணை 2.19

அரச பாடசாலைகளின் எண்ணிக்கை - 2012

மாகாணம்	மாவட்டம்	தொழிற்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை	மூடப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை	மொத்தம்

மேல் மாகாணம்	கொழும்பு	402	01	403
	கம்பஹா	531	10	441
	களுத்துறை	404	19	423
மொத்தம்		**1,337**	**30**	**1,367**
மத்தியமாகாணம்	கண்டி	643	14	657
	மாத்தளை	316	01	317
	நுவரெலியா	538	02	540
மொத்தம்		**1,497**	**17**	**1,514**
இலங்கை		**9,905**	**213**	**10,118**

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012

அட்டவணை 2.19 ஆனது மத்திய மாகாணத்தில் 1,497 பாடசாலைகள் காணப்படுகின்ற அதேநேரம் கண்டி மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான பாடசாலைகள் உதாரணமாக 643 பாடசாலைகள் அமைந்துள்ளமையினையும் காட்டுகின்றது. மேலும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதற்கு இணங்க மத்திய மாகாணத்தில், மேல் மாகாணத்திலும் பார்க்க அதிக எண்ணிக்கையான பாடசாலைகள் காணப்படுகின்ற போதும் அவை அளவில் சிறியவையாக காணப்படுகின்றன.

அட்டவணை 2.20 இல், தொழிற்பாட்டு தரங்களின் அடிப்படையில் அதாவது "1 AB", "1 C", வகை 2 மற்றும் வகை 3 என்றவாறு அனைத்து பாடசாலைகளும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய இலங்கையில் வகை 2 மற்றும் வகை 3 இற்குரிய பாடசாலைகள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றமையானது, பெரும்பாலான பாடசாலைகள் சிறியவையாகவும் இரண்டாம் நிலைக்கல்விக்கான தரம் குறைந்த வசதிகளை உடையவையாகவும் குறைந்தளவான வளர்ச்சியினை கொண்டவையாகவும் காணப்படுவதனை காட்டுகின்றது. மேல் மாகாணம் ஆனது அதிக எண்ணிக்கையிலான "1 AB" பாடசாலைகளை கொண்டிருப்பதுடன் இவை கணிசமானளவு முழுமையான வசதிகளை கொண்ட பாடசாலைகளாக

கருதப்படுகின்றன. மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் "1 AB" பாடசாலைகள் 53 காணப்படும் அதேநேரம், நுவரெலியா மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் முறையே 31 மற்றும் 18 "1 AB" பாடசாலைகளே காணப்படுகின்றன. இந்நிலைமையானது கல்வி வசதியில் மாவட்டங்களிடையே காணப்படுகின்ற சமனற்ற தன்மையினை காட்டுவதுடன் கல்வி வசதிகள் மற்றும் உ / த வகுப்புகளின் அனைத்து பாடங்களிற்குமான சாத்தியத்தன்மையில் வேறுபாடு இருப்பதனையும் குறிப்பிடுகின்றது. இந்த தகவலின் அடிப்படையில், கண்டி மாவட்டமானது உயர்தர வகுப்புக்களை உடைய அதிக எண்ணிக்கையிலான பாடசாலைகளை கொண்டிருப்பதுடன் அதற்கு அடுத்ததாக மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டம் காணப்படுகின்றது.

அட்டவணை 2.20

தொழிற்பாட்டு தரங்களின் அடிப்படையில் அரச பாடசாலைகள், 2012

மாகாணம்	மாவட்டம்	1AB	1C	வகை 2	வகை 3	மொத்தம்
மேல் மாகாணம்	கொழும்பு	68	84	167	83	402
	கம்பஹா	53	113	219	146	531
	களுத்துறை	41	73	177	113	404
மொத்தம்		**162**	**270**	**563**	**342**	**1,337**
மத்தியமாகாணம்	கண்டி	53	170	237	183	643
	மாத்தளை	18	69	108	121	316
	நுவரெலியா	31	89	163	255	538
மொத்தம்		**102**	**328**	**508**	**559**	**1,497**
இலங்கை		**753**	**2,013**	**3,869**	**3,270**	**9,905**

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012

குறிப்பு:

1AB: உயர் தரத்தில் விஞ்ஞான பிரிவு உட்பட அனைத்து பிரிவுகளையும் கொண்டுள்ள பாடசாலைகள்

1C: உயர் தரத்தில் கலை மற்றும்/ வர்த்தக பிரிவுகளை கொண்டுள்ள ஆனால் விஞ்ஞான பிரிவினை கொண்டிராத பாடசாலைகள்

வகை 2: 11 ஆம் தரம் வரை மட்டும் வகுப்புக்களை கொண்ட பாடசாலைகள்

வகை 3: 8 ஆம் தரம் வரை மட்டும் வகுப்புக்களை கொண்ட பாடசாலைகள்

அட்டவணை 2. 21 ல் காட்டப்பட்டுள்ளவாறு, இலங்கையில் உள்ள பாடசாலைகளில் பெரும்பாலானவை மாகாண பாடசாலைகள் ஆக உள்ளன, அதாவது இலங்கையில் 9,563 மாகாண பாடசாலைகளும் 342 தேசிய பாடசாலைகளும் உள்ளன. அத்துடன் இலங்கையின் தேசிய பாடசாலைகள் கல்வி அமைச்சு மூலம் நேரடியாக நிதியுதவியினை பெற்றுக்கொள்வதுடன் அதே அமைச்சினூடாக நிர்வகிக்கப்படுகின்ற தரம் மிக்க பாடசாலைகளாக கருதப்படும் அதேநேரம் மாகாண பாடசாலைகள் அந்தந்த மாகாண சபைகள் மூலம் நிதியுதவி வழங்கப்பட்டும் மேற்பார்வை செய்யப்பட்டும் வருகின்றன. மேலும் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையான தேசிய பாடசாலைகள் அதாவது 35 பாடசாலைகள் காணப்படுவதுடன் அதற்கு அடுத்து மத்திய மாகாணத்தின் ஏனைய இரு மாவட்டங்களான மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் முறையே 12 மற்றும் 07 தேசிய பாடசாலைகள் காணப்படுகின்றன. மேலும், கண்டி மாவட்டமானது நாட்டின் ஏனைய மிக வளர்ச்சியடைந்த மாவட்டங்களுக்கு இணையாக காணப்படுகின்றது. உதாரணமாக கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையான தேசிய பாடசாலைகளை கொண்டுள்ளது. இந் நிலைமை ஆனது, மத்திய மாகாணத்தின் மற்றைய இரண்டு மாவட்டங்களிலும் பார்க்க கண்டி மாவட்டத்தில் பாடசாலைக் கல்வியின் நிலை சிறப்பாக உள்ளமையினை காட்டுகிறது.

அட்டவணை2.21

தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளின் எண்ணிக்கை - 2012

மாகாணம்	மாவட்டம்	தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை	மாகாண பாடசாலைகளின் எண்ணிக்கை	மொத்தம்
மேல் மாகாணம்	கொழும்பு	36	366	402
	கம்பஹா	17	514	531
	களுத்துறை	18	386	404
மொத்தம்		**71**	**1,266**	**1,337**
மத்தியமாகாணம்	கண்டி	35	608	643
	மாத்தளை	12	304	316
	நுவரெலியா	07	531	538
மொத்தம்		**54**	**1,443**	**1,497**
இலங்கை		**342**	**9,563**	**9,905**

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012

அட்டவணை 2.22

இன அடிப்படையில் அரச பாடசாலைகளின் எண்ணிக்கை, 2012

மாகாணம்	மாவட்டம்	சிங்களம்	தமிழ்	முஸ்லீம்	மொத்தம்
மேல் மாகாணம்	கொழும்பு	352	31	19	402
	கம்பஹா	507	04	20	531
	களுத்துறை	346	38	20	404
மொத்தம்		**1,205**	**73**	**59**	**1,337**
மத்தியமாகாணம்	கண்டி	462	105	76	643
	மாத்தளை	259	35	22	316
	நுவரெலியா	231	298	09	538
மொத்தம்		**952**	**438**	**107**	**1,497**
இலங்கை		**6,826**	**2,223**	**856**	**9,905**

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012

அட்டவணை 2.22 ஆனது இலங்கைத் தீவில் இன ரீதியாக பெரும்பாலான பாடசாலைகள் சிங்கள பாடசாலைகளாகவும் அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த இடங்களில் தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளும் காணப்படுகின்றமையினை காட்டுகின்றது. இலங்கைத் தமிழர்களை பெரும்பான்மையாக கொண்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களிலும் இதே நிலைமையே காணப்படுகின்றது. எவ்வாறாயினும், பெருமளவு நகரமயமாக்கப்பட்ட மேல் மாகாணத்திலும் பார்க்க மத்திய மாகாணம் ஆனது அதிகளவான இனப் பல்வகைமையினை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். நுவரெலியா மாவட்டத்தில் (இந்திய) தமிழ் மக்கள் செறிந்து வாழ்வதன் காரணமாக அதிக எண்ணிக்கையிலான தமிழ் பாடசாலைகள், அதாவது 298 தமிழ் பாடசாலைகள், அங்கு செறிந்து காணப்படுகின்றன. கண்டி மாவட்டத்திலும் கணிசமான எண்ணிக்கையிலான முஸ்லீம் பாடசாலைகள், ஏறத்தாழ 76 பாடசாலைகள் காணப்படுகின்றமையானது இப்பிரதேசத்தில் முஸ்லீம் சமூகத்தினர் செறிந்து காணப்படுகின்றமையினை காட்டுகின்றது.

அட்டவணை 2.23 குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, இலங்கையில் உள்ள பாடசாலைகளில் பெரும்பாலானவை கிராமப்புற பகுதிகளில் அமைந்துள்ளன. இந் நிலைமை இலங்கையில் 80 % ஆக காணப்படுகின்ற கிராமப்புற மக்கள் தொகையின் ஆதிக்கத்தினை ஒத்து காணப்படுகின்றது. இதற்கு மாறாக மேல் மாகாணம் ஆனது பரந்தளவில் நகர்ப்புற பகுதிகளை அதாவது, 281 மாநகர சபைகளையும் 142 நகரசபைகளையும் கொண்டுள்ள அதேநேரம், அப்பகுதிகளிலேயே கணிசமான எண்ணிக்கையான பாடசாலைகள் அமைந்துள்ளன. எனினும் மத்திய மாகாணம் பெரும்பான்மையாக ஒரு கிராமப்புற அமைப்பினை கொண்டிருப்பதுடன் 90 % க்கும் அதிகமான பாடசாலைகள் கிராமப்புற பகுதிகளிலேயே அமைந்துள்ளன. எவ்வாறாயினும் கண்டி மாவட்டமானது, மாறுபட்ட அமைப்பினை காட்டும் அதேநேரம் கண்டி மாநகர சபை பகுதியில் 41 பாடசாலைகள் அமைந்துள்ளன.

அட்டவணை 2.23

உள்ளூராட்சி பிரிவுகளின் அடிப்படையில் பாடசாலைகளின் எண்ணிக்கை, 2012

மாகாணம்	மாவட்டம்	நகரம்		கிராமம்	மொத்தம்
		மாநகர சபை	நகர சபை	பிரதேச சபை	
மேல் மாகாணம்	கொழும்பு	235	63	104	402
	கம்பஹா	46	35	450	531
	களுத்துறை	00	44	360	404
மொத்தம்		**281**	**142**	**914**	**1,337**
மத்தியமாகாணம்	கண்டி	41	34	568	643
	மாத்தளை	18	01	297	316
	நுவரெலியா	16	20	502	538
மொத்தம்		**75**	**55**	**1,367**	**1,497**
இலங்கை		**621**	**450**	**8,834**	**9,905**

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012

அட்டவணை 2.24 ஆனது நுவரெலியா மாவட்டத்தில் பெருந்தோட்டத் துறை பாடசாலைகளின் குறிப்பிடத்தக்களவான ஆதிக்கம் நிலவுகின்றமையினை காட்டுகின்றது, அதாவது நுவரெலியா மாவட்டத்தில் காணப்படுகின்ற பெருந்தோட்டத்துறை பாடசாலைகளின் எண்ணிக்கை 297 ஆக உள்ளதுடன் இவ் எண்ணிக்கை ஆனது பெருந்தோட்டத் துறை அல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கையிலும் பார்க்க அதிகம் ஆகவும் காணப்படுகின்றது. கண்டி மாவட்டத்திலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான பெருந்தோட்டத்துறை பாடசாலைகள் காணப்படுகின்றன, அவற்றின் எண்ணிக்கை 107 ஆகும். இதற்கிணங்க,

மத்திய மாகாணம் ஆனது இலங்கையில் உள்ள பெருந்தோட்டத் துறை பாடசாலைகளில் 50 % இலும் அதிகமான பாடசாலைகளை கொண்டிருப்பதை இனங்காணக்கூடியதாக உள்ளது, இதற்கான காரணம், மத்திய மாகாணம் பிரதானமான தேயிலை பெருந்தோட்டத் துறைக்கான பிரதேசமாக காணப்படுகின்றமை ஆகும்.

அட்டவணை 2.25 இல் காட்டப்பட்டுள்ளவாறு, இலங்கையில் சிங்கள மொழி மூலமான பாடசாலைகள் பெரும்பான்மையாகவும் அவற்றிற்கு அடுத்ததாக தமிழ் மொழி மூலமான பாடசாலைகளும் காணப்படுகின்றன. ஆயினும் நுவரெலியா மாவட்டத்தில் இதற்கு நேர்மாறாக தமிழ் மொழி மூலமான பாடசாலைகள் அதிகளவில் காணப்படுகின்றன, இவற்றின் எண்ணிக்கை 305 ஆகும். கண்டி மாவட்டமும் தமிழ் மொழி மூலமான பாடசாலைகளுக்கு பிரசித்தி பெற்றது, அதாவது 170 தமிழ் மொழி மூலமான பாடசாலைகளை கொண்டிருப்பதுடன் இவ் எண்ணிக்கையானது மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டம் மற்றும் மேல் மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தமிழ் மொழி மூலமான பாடசாலைகளின் எண்ணிக்கையிலும் அதிகமாகும். இந் நிலைமையானது மத்திய மாகாணத்தில், முக்கியமாக நுவரெலியா மாவட்டத்தில் இலங்கையில் உள்ள பெரும் எண்ணிக்கையான இந்திய தமிழ் சமூகத்தினர் வசித்து வருகின்றமையினை எடுத்துக்காட்டுகின்றது.

அட்டவணை2.24

பெருந்தோட்ட பிரிவுகளிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை, 2012

மாகாணம்	மாவட்டம்	பெருந்தோட்டத்துறை அல்லாத பாடசாலைகள்	பெருந்தோட்டத்துறை பாடசாலைகள்	மொத்தம்
மேல் மாகாணம்	கொழும்பு	397	05	402
	கம்பஹா	531	00	531
	களுத்துறை	366	38	404
மொத்தம்		**1,294**	**43**	**1,337**
மத்தியமாகாணம்	கண்டி	536	107	643
	மாத்தளை	281	35	316
	நுவரெலியா	241	297	538
மொத்தம்		**1,058**	**439**	**1,497**
இலங்கை		**9,079**	**826**	**9,905**

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012

அட்டவணை 2.25

மொழி மூலங்களின் அடிப்படையில் அரச பாடசாலைகளின் எண்ணிக்கை - 2012

மாகாணம்	மாவட்டம்	சிங்களம்	தமிழ்	சிங்களம் மற்றும் தமிழ்	சிங்களம் மற்றும் ஆங்கிலம்	தமிழ் மற்றும் ஆங்கிலம்	சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்	மொத்தம்
மேல் மாகாணம்	கொழும்பு	284	35	13	58	05	07	402
	கம்பஹா	466	21	00	39	02	03	531
	களுத்துறை	322	50	02	22	05	03	404
மொத்த		**1,072**	**106**	**15**	**119**	**12**	**13**	**1,337**

மாகாணம்	மாவட்டம்	சிங்களம்	தமிழ்	சிங்களம் மற்றும் தமிழ்	சிங்களம் மற்றும் ஆங்கிலம்	தமிழ் மற்றும் ஆங்கிலம்	சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்	மொத்தம்
ம்								
மத்திய மாகாணம்	கண்டி	414	170	06	33	09	11	643
	மாத்தளை	252	52	00	07	05	00	316
	நுவரெலியா	215	305	05	09	03	01	538
மொத்தம்		**881**	**527**	**11**	**49**	**17**	**12**	**1,497**
இலங்கை		**6,368**	**2,914**	**39**	**403**	**152**	**29**	**9,905**

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012

அட்டவணை 2.26 இல் காட்டப்பட்டுள்ளவாறு இலங்கையின் பாடசாலை கல்வி முறையில் கலவன் பாடசாலைகள் அதிகளவு செல்வாக்கு செலுத்துகின்றன. ஆயினும் கொழும்பு, கண்டி, மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் பாடசாலைகளை நிறுவுவதில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப பகுதியிலும் நாட்டில் செல்வாக்கு செலுத்திய காலனித்துவ மற்றும் மிஷினரிகளின் ஆதிக்கம் காரணமாக ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனியான பாடசாலைகளே அதிகளவில் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் இலங்கையில் ஏறத்தாழ 336 தனி பாலின பாடசாலைகள் காணப்படுவதுடன் அவற்றில் பெரும்பாலானவை மேல் மாகாணத்தில் அமைந்துள்ளன. மேலும், இலங்கையில் காணப்பட்ட காலனித்துவ செல்வாக்கு காரணமாக முறையே கொழும்பு மாநகர சபை மற்றும் கண்டி மாநகர சபை

ஆகியனவற்றில் அதிக எண்ணிக்கையிலான ஒற்றை இன பாடசாலைகளை அமைந்துள்ளன.

அட்டவணை 2.26

பால் ரீதியாக அரச பாடசாலைகளின் எண்ணிக்கை- 2012

மாகாணம்	மாவட்டம்	ஆண்கள் பாடசாலைகள்	பெண்கள் பாடசாலைகள்	கலவன் பாடசாலைகள்	உயர்தரம் வரை ஆண்கள் / ஆரம்பக் கல்வி பெண்கள்	உயர்தரம் வரை பெண்கள் / ஆரம்பக் கல்வி ஆண்கள்	மொத்தம்
மேல் மாகாணம்	கொழும்பு	38	56	308	00	00	402
	கம்பஹா	11	20	500	00	00	431
	களுத்துறை	06	12	384	00	02	404
மொத்தம்		**55**	**88**	**1,192**	**00**	**02**	**1,337**
மத்திய மாகாணம்	கண்டி	15	22	603	00	03	643
	மாத்தளை	01	03	309	02	01	316
	நுவரெலியா	02	05	530	01	00	538
மொத்தம்		**18**	**30**	**1,442**	**3**	**4**	**1,497**
இலங்கை		**130**	**206**	**9,521**	**12**	**36**	**9,905**

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012

அட்டவணை 2.27 ஆனது இலங்கையில் உள்ள பாடசாலைகளின் உண்மை நிலைமையினை காட்டுகிறது. அதற்கிணங்க, இலங்கையில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளின் சிரம நிலை மட்டம் 60 % ஆகும். மத்திய மாகாணமும் தேசிய சராசரிக்குச் சமனான வறுமை மட்டத்தினையே கொண்டுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள பெரும்பாலான பாடசாலைகள் அதாவது 80 % ஆன பாடசாலைகள் கற்றல் நடவடிக்கைக்கு உகந்தவையாக காணப்படாததுடன் அம்மாவட்டத்திற்கு அடுத்த நிலைகளில் கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்கள் உள்ளன. மறுபுறம், மேல் மாகாணத்தில் காணப்படுகின்ற 70 % இற்கும் அதிகமான பாடசாலைகள் கற்றல் நடவடிக்கைகளுக்கு அவசியமான அனைத்து வசதிகளையும் கொண்டவையாக திகழ்கின்றன.

அட்டவணை2.27

கஷ்ட நிலைமை அடிப்படையிலான பாடசாலைகளின் வகைப்படுத்தல் - 2012

மாகாணம்	மாவட்டம்	மிகவும் வசதியான பாடசாலைகள்	வசதியான பாடசாலைகள்	வசதியற்ற பாடசாலைகள்	கஷ்ட பிரதேச பாடசாலைகள்	மிகவும் கஷ்ட பிரதேச பாடசாலைகள்	மொத்தம்
மேல் மாகாணம்	கொழும்பு	190	130	79	03	00	402
	கம்பஹா	141	236	146	08	00	431
	களுத்துறை	76	130	142	50	06	404
மொத்தம்		**407**	**496**	**367**	**61**	**06**	**1,337**
மத்திய மாகாணம்	கண்டி	85	181	248	89	40	643
	மாத்தளை	61	59	106	74	16	316

	நுவரெலியா	20	62	219	172	65	538
மொத்தம்		**166**	**302**	**573**	**335**	**121**	**1,497**
இலங்கை		**1,202**	**2,405**	**2,892**	**2,000**	**1,406**	**9,**905

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012

அட்டவணை 2.28 இல் காட்டப்பட்டுள்ளவாறு, இலங்கையில் 4.0 மில்லியனுக்கும் அதிகமான மாணவர்கள் அரச பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர். பாடசாலைக் கல்வியில் ஆண்கள் மற்றும் பெண்களின் பங்களிப்பு, ஏறத்தாழ ஒரே மாதிரியாக உள்ளது, அதாவது பங்களிப்பின் சதவீதங்கள் முறையே 49 % மற்றும் 51 % ஆக உள்ளது. இலங்கையில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 25 % ஆன மாணவர்களை மேல் மாகாணம் கொண்டிருப்பதுடன், மத்திய மாகாணமானது 13 % ஆன மாணவர்களை பங்களித்துள்ளது. இந்த புள்ளிவிவரங்கள் ஒவ்வொரு மாவட்டங்களினதும் ஏனைய மக்கட்தொகை தரவுகளுடன் அதாவது, மொத்த மக்கள் தொகை, ஆண்கள் மற்றும் பெண்கள், வயது அமைப்பு போன்றவற்றுடன் ஒப்பிடக்கூடிவையாக உள்ளன.

அட்டவணை2.28

அரச பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை (தரம் 1-13) - 2012

மாகாணம்	மாவட்டம்	ஆண்கள்	பெண்கள்	மொத்த எண்ணிக்கை
மேல் மாகாணம்	கொழும்பு	187,409	181,604	369,013
	கம்பஹா	171,503	179,666	351,169
	களுத்துறை	108,260	109,898	218,158
மொத்தம்		**467,172**	**471,168**	**938,340**

மத்திய மாகாணம்	**கண்டி**	131,707	137,851	269,558
	மாத்தளை	48,210	49,110	97,320
	நுவரெலியா	79,191	80,088	159,279
மொத்தம்		**259,108**	**267,049**	**526,157**
இலங்கை		**1,985,283**	**2,018,803**	**4,004,086**

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012

2.7.3 ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் கல்வித் தகைமைகள்

அட்டவணை 2.29 இல் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, பெரும்பாலான பாடசாலைகள், அதாவது 45 % ஆன பாடசாலைகள் 10 முதல் 25 வரையான எண்ணிக்கையிலான ஆசிரியர்களை கொண்டிருக்கும் அதேநேரம், 205 இற்கும் குறைவான பாடசாலைகள் 100 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களை கொண்டுள்ளன. இந்த புள்ளிவிவரங்கள், பெரும்பாலான பாடசாலைகள் மிக மிக சிறியவையாகவும் குறைந்த மனித வளங்களை கொண்டவையாகவும் காணப்படுகின்றமையினை காட்டுகின்றது. மத்திய மாகாணமானது வெகுசில 100 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் வேலை செய்கின்ற பெரிய பாடசாலைகளை கொண்டிருக்கும் அதேநேரம், அவற்றில் 20 பாடசாலைகள் கண்டி மாவட்டத்திலேயே அமைந்துள்ளன.

அட்டவணை 2.30 ஆனது அரச பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் கல்வித் தகுதி தொடர்பான விடயங்களை காட்டுகிறது. இலங்கையில் அரச பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 2 33 333 ஆகும். அவர்களில் பெரும்பாலான ஆசிரியர்கள் அடிப்படை தகைமையான க.பொ.த. (உ / த) இனை கொண்டிருப்பதுடன், அவரகளிற்கு அடுத்ததாக பட்டதாரிகள் காணப்படுகின்றனர். மேலும் இலங்கையில் உள்ள ஆசிரியர்களில் சுமார் 4,000 பேர்

முதுமாணி பட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட தகைமைகளை கொண்டவர்களாக காணப்படுகின்றனர். மத்திய மாகாணத்தின் ஆசிரியர் புள்ளிவிபரம் ஆனது இலங்கையின் சராசரிக்கு இணையாக காணப்படும் அதேநேரம், கண்டி மாவட்டம் அதிக எண்ணிக்கையிலான பட்டதாரி ஆசிரியர்களை கொண்டுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து அடுத்து வரும் இடங்களில் மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்கள் காணப்படுகின்றன.

அட்டவணை2.29

ஆசிரியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பாடசாலைகள்- 2012

மாகாணம்	மாவட்டம்	இரண்டாம் நிலை	ஒப்பந்த அடிப்படை	01	02	03-09	10-25	26-50	51-100	100 மற்றும் அதற்கு மேல்	மொத்த எண்ணிக்கை
மேல் மாகாணம்	கொழும்பு	00	00	00	00	43	166	84	72	37	402
	கம்பஹா	01	00	01	01	79	252	117	63	17	531
	களுத்துறை	05	00	02	05	94	181	62	41	14	404
மொத்தம்		**06**	**00**	**03**	**06**	**216**	**599**	**263**	**176**	**68**	**1,337**
Central மத்திய மாகாணம்	கண்டி	01	00	02	09	154	274	135	48	20	643
	மாத்தளை	00	00	02	09	89	151	43	18	04	316
	நுவரெலியா	00	00	02	02	237	189	85	23	00	538
மொத்தம்		**01**	**00**	**06**	**20**	**480**	**614**	**263**	**89**	**24**	**1,497**

இலங்கை		**13**	**01**	**71**	**141**	**2,733**	**4,411**	**1,654**	**676**	**205**	**9,905**

மூலம்: இலங்கை கல்வி தகவல், கல்வி அமைச்சு, 2012

அட்டவணை2.30

கல்வித் தராதரங்களின் அடிப்படையில் அரச பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள், 2012

மாகாணம்	மாவட்டம்	க. பொ. த (சா / த) இலும் குறைந்த	க. பொ. த சா / த	க. பொ. த உ / த	இளநிலை பட்டதாரிகள்	முதுநிலை பட்டதாரிகள்	எம். பில்	பி.எச்.டி	மொத்தம்
Western மேல் மாகாணம்	கொழும்பு	01	900	6,298	8,755	490	19	03	16,466
	கம்பஹா	01	881	6,677	7,664	418	14	00	15,655
	களுத்துறை	01	644	4,508	5,063	188	04	00	10,408
மொத்தம்		**03**	**2,425**	**17,483**	**21,482**	**1,096**	**37**	**03**	**42,529**
மத்திய மாகாணம்	கண்டி	00	744	8,321	6,812	422	27	02	16,328
	மாத்தளை	00	317	3,254	2,477	101	02	00	6,151
	நுவரெலியா	00	513	6,166	2,378	89	04	06	9,156
மொத்தம்		**00**	**1,574**	**17,741**	**11,667**	**612**	**33**	**08**	**31,635**
இலங்கை		**17**	**10,999**	**114,747**	**93,706**	**3,675**	**160**	**29**	**223,333**

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012

அட்டவணை 2.31 ஆனது இளமாணி பட்டதாரிகள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், பயிற்சி பெறாத ஆசிரியர்கள் ஆகிய பிரிவுகளின் கீழ் ஆசிரியர்களின் தகைமைகளை வகைப்படுத்தி உள்ளது. இலங்கையில் அடிப்படை கல்வி தகுதியாக க.பொ.த (சா / த) மற்றும் க.பொ.த (உ / த) இனை உடைய 128,152 எண்ணிக்கையான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை சுமார் 86,751 ஆக உள்ளதுடன் இது மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கையில் 35 % ஆகவும் உள்ளது. மத்திய மாகாணத்தில் 10,724 பட்டதாரி ஆசிரியர்கள் காணப்படுவதுடன் இவர்களில் 6000 இற்கும் மேற்பட்டவர்கள் கண்டி மாவட்டத்தில் பணிபுரிகின்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

அட்டவணை2.31

தராதரங்களின் அடிப்படையில் அரச பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள், 2012

மாகாணம்	மாவட்டம்	பட்டதாரிகள்	பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்	பயிற்சி அற்ற ஆசிரியர்கள்	ஆசிரியர் பயிலுநர்கள்	மொத்தம்
மேல் மாகாணம்	கொழும்பு	8,374	7,941	147	04	16,466
	கம்பஹா	7,400	8,139	99	17	15,655
	களுத்துறை	4,798	5,418	165	27	10,408
மொத்தம்		**20,572**	**21,498**	**411**	**48**	**42,529**
மத்திய மாகாணம்	கண்டி	6,344	9,449	529	06	16,328
	மாத்தளை	2,353	3,570	225	03	6,151
	நுவரெலியா	2,027	5,704	1,411	14	9,156
மொத்தம்		**10,724**	**18,723**	**2,165**	**23**	**31,635**

இலங்கை		**86,751**	**128,152**	**5,833**	**2,597**	**223,333**

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012

அட்டவணை 2.32 இற்கமைய, மத்திய மாகாணத்தின் "ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு இடையிலான விகிதம்" ஆனது இலங்கையின் "ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு இடையிலான விகிதம்" இன் சராசரிக்கு இணையாக காணப்படுவதுடன், அது மேல் மாகாணத்தில் காணப்படுகின்ற அதிகரித்த மாணவர் தொகை காரணமாக குறைந்த பெறுமதியினையும் கொண்டுள்ளது. அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அனைத்து மாவட்டங்களின் மத்தியிலும் மாத்தளை மாவட்டமானது சிறந்த "ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு இடையிலான விகிதத்தினை கொண்டுள்ளது, அதாவது மாத்தளை மாவட்டத்தில் ஒரு ஆசிரியருக்கு 16 மாணவர்கள் என்ற விகிதம் காணப்படுகின்றது.

அட்டவணை2.32

ஆசிரியர்கள் மற்றும் மாவட்டங்களின் அடிப்படையில் மொத்த மாணவர் ஆசிரியர் விகிதம், 2012

மாகாணம்	**மாவட்டம்**	**மாணவர் / பட்டதாரி ஆசிரியர் விகிதம்**	**மாணவர் / பயிற்சி பெற்ற ஆசிரியர் விகிதம்**	**மாணவர் / பயிற்சி பெறாத ஆசிரியர் விகிதம்**	**ஒட்டுமொத்த மாணவர் / ஆசிரியர் விகிதம்**
மேல் மாகாணம்	கொழும்பு	44	46	2,444	22
	கம்பஹா	47	43	3,027	22
	களுத்துறை	45	40	1,136	21
மொத்தம்		**46**	**44**	**2,044**	**22**
மத்திய மாகாணம்	கண்டி	42	29	504	17
	மாத்தளை	41	27	427	16
	நுவரெலியா	79	28	112	17
மொத்தம்		**49**	**28**	**112**	**17**

இலங்கை		**46**	**31**	**475**	**18**

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012

2.7.4 மாணவர் தொகை மற்றும் உயர் கல்வி

அட்டவணை 2.33 ஆனது மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பாடசாலைகளின் அளவு தொடர்பான விபரங்களை காட்டுகிறது. இலங்கையில் 5,000 க்கும் மேற்பட்ட மாணவர்களை கொண்ட மிகப் பெரிய பாடசாலைகள் என்ற பிரிவின் கீழ் 11 பாடசாலைகள் மட்டுமே காணப்படுகின்றன. கொழும்பு மாவட்டத்தில் இவ்வாறான 05 பெரிய பாடசாலைகள் காணப்படுவதுடன் கண்டி மாவட்டத்தில் 01 பாடசாலை மட்டுமே இந்த வகையின் காணப்படுகின்றது. இலங்கையில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் 201 முதல் 500 வரையான மாணவர்களை கொண்ட பாடசாலை வகையாக காணப்படும் அதேநேரம் 7500 இலும் அதிக எண்ணிக்கையான பாடசாலைகள் 1,000 இற்கும் குறைந்தளவு எண்ணிக்கையான மாணவர்களை கொண்ட பாடசாலைகளாக உள்ளன. மத்திய மாகாணம் ஆனது தேசிய சராசரியினை ஒத்து காணப்படும் அதேநேரம் மேற்கு மாகாணம் ஆனது தேசிய மட்டத்திலான பாடசாலைக்கல்வியில் மிகவும் அபிவிருத்தியடைந்த பிரதேசமாக காணப்படுவதுடன் இலங்கை தீவில் உள்ள பாடசாலைகளில் அதிக எண்ணிக்கையான பாடசாலைகளை தன்னகத்தே கொண்டுள்ள மாவட்டமாகவும் காணப்படுகின்றது. கண்டி மாவட்டத்தில், முக்கியமாக கண்டி நகரப்பகுதியில் பெரிய பாடசாலைகள் என்ற வகையில் அடங்கும் 2500 இற்கும் அதிகமான மாணவர்களை கொண்ட 15 பாடசாலைகள் காணப்படுகின்றன.

அட்டவணை2.33

மாணவர் தொகையின் அடிப்படையில் பாடசாலைகளை வகைப்படுத்தல், 2012

மாகாணம்	மாவட்டம்	01-50	51-100	101-200	201-500	501-1000	1001-1500	1501-2000	2001-2500	2501-3000	3001-3500	3501-5000	5000 இற்கு மேற்பட்ட	மொத்தம்
மேல் மாகாணம்	கொழும்பு	15	22	64	110	73	41	25	12	14	11	10	05	402
	கம்பஹா	26	44	93	153	109	45	25	14	09	03	10	00	531
	களுத்துறை	51	64	77	96	51	29	11	10	04	03	08	00	404
மொத்தம்		**92**	**130**	**234**	**359**	**233**	**115**	**61**	**36**	**27**	**17**	**28**	**05**	**1,337**
மத்திய மாகாணம்	கண்டி	102	101	120	165	89	35	07	09	07	02	05	01	643
	மாத்தளை	77	48	63	74	34	09	06	02	02	01	00	00	316
	நுவரெலியா	77	113	113	113	76	15	09	01	00	01	00	00	530
மொத்தம்		**256**	**262**	**296**	**372**	**199**	**59**	**22**	**12**	**09**	**04**	**05**	**01**	**1,497**
இலங்கை		**1,652**	**1,537**	**1,996**	**2,457**	**1,287**	**451**	**211**	**120**	**77**	**43**	**63**	**11**	**9,905**

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012

அட்டவணை 2.34 ஆனது இலங்கையில் தேசிய கல்வியின் உண்மை நிலைமையினை பாடசாலைகளின் வகுப்புக்களின் தரங்களின் அடிப்படையில் வழங்கியுள்ளது. மிக அதிக எண்ணிக்கையிலான பாடசாலைகள் தரம் 01 முதல் தரம் 11 வரையான வகுப்புக்களை மட்டும் கொண்டவையாக காணப்படுவதுடன், மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற பெரும்பாலான பாடசாலைகள் தரம் 01 முதல் தரம் 05

வரையான வகுப்புக்களை கொண்ட பாசாலைகளாக காணப்படுகின்மையானது, மத்திய மாகாணத்தின் கல்வி மட்டம் தேசிய கல்வி மட்டத்திற்கு இணையாக அல்லது அதனை விட குறைவாக உள்ளமையினை காட்டுகின்றது. நுவரெலியா மாவட்டமானது அதன் அமைவிடம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனக்குறைவு போன்ற காரணங்களால் கடந்த 06 தசாப்தங்களாக மிகவும் மோசமாக பாதிப்படைந்துள்ளது. இலங்கையில் அதிகளவான தரங்களை கொண்ட பாடசாலைகளின் சதவீதமானது அதாவது, தரம் 01 முதல் தரம் 13 வரையான வகுப்புக்களை கொண்ட பாடசாலைகளின் சதவீதம் ஆனது 25 % ஆக காணப்படுவதுடன், கண்டி மாவட்டமானது அதிக எண்ணிக்கையிலான அதாவது 180 இவ்வாறான பாடசாலைகளை கொண்டுள்ளது. மேலும் இந்த வகைப்படுத்தலின் கீழ் பாடசாலைக்கல்வியின் அடைவுநிலை மட்டம் மற்றும் தரங்களின் அளவு ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்பு சம்பந்தமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை2.34

வகுப்பு மட்டங்களின் அடிப்படையில் பாடசாலைகளின் எண்ணிக்கை, 2012

மாகாணம்	மாவட்டம்	தரம் 01 - 05	தரம் 01 - 08	தரம் 01 - 11	தரம் 01 - 13	தரம் 06 - 11	தரம் 06- 13	மொத்தம்
மேல் மாகாணம்	கொழும்பு	79	03	165	133	3	19	402
	கம்பஹா	143	03	213	119	06	47	531
	களுத்துறை	101	11	177	103	01	11	404
மொத்தம்		**323**	**17**	**555**	**355**	**10**	**77**	**1,337**
மத்திய மாகாணம்	கண்டி	164	19	236	180	01	43	643
	மாத்தளை	113	08	108	65	00	22	316
	நுவரெலியா	240	15	161	93	02	27	538
மொத்தம்		**517**	**42**	**505**	**338**	**03**	**92**	**1,497**
இலங்கை		**2,991**	**271**	**3,853**	**2,330**	**24**	**436**	**9,905**

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012

அட்டவணையில் 2.35 இல் காட்டப்பட்டுள்ளது போன்று இலங்கையில் உள்ள பாடசாலைகளில் பெரும்பான்மையானவை விஞ்ஞான பிரிவில் வகுப்புகளை கொண்டிராத பாடசாலைகளாக காணப்படுகின்றன. இந்த நிலைமை ஆனது கொள்கை வகுப்பாளர்கள் தேசிய கல்வியின் கட்டமைப்பு தொடர்பாக நியாயமான கவனம் செலுத்த வேண்டி உள்ளமையின் அவசியத்தினை அடையாளம் காட்டியுள்ளது. வழமையாக, ஒரு நாடு சமநிலையான சமூக பொருளாதார அபிவிருத்தி மட்டத்தினை அடைய விரும்புமாயின், பாடசாலை கல்வி கட்டமைப்பில் அது உயர் தரத்தில் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் கலை ஆகிய பாடநெறிகளுடன் கூடிய ஒரு சரியான சேர்க்கையை பேண வேண்டியது அவசியமாகும். மத்திய மாகாணம் ஆனது மேல் மாகாணத்திலும் பார்க்க குறைந்த எண்ணிக்கையான உயர் தரத்தில் விஞ்ஞான பிரிவினை கொண்ட பாடசாலைகளை கொண்டுள்ளதுடன், மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டமானது அதன் ஏனைய இரு மாவட்டங்களான மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களை விட முன்னிலையில் உள்ளது.

அட்டவணை2.35

க. பொ. த (உ/ த) விஞ்ஞான பிரிவினை கொண்டுள்ள அரச பாடசாலைகளின் எண்ணிக்கை, 2012

மாகாணம்	மாவட்டம்	உயிரியல் விஞ்ஞானம்	பௌதீக விஞ்ஞானம்	உயிரியல் மற்றும் பௌதீகவியல்	விஞ்ஞான பிரிவு அற்றவை	மொத்தம்
nமேல் மாகாணம்	கொழும்பு	00	00	68	334	402
	கம்பஹா	01	00	52	478	531
	களுத்துறை	01	00	40	363	404
மொத்தம்		**02**	**00**	**160**	**1,175**	**1,337**
மத்திய மாகா	கண்டி	09	00	44	590	643
	மாத்த	03	00	15	298	316

ணம்	ளை					
	நுவரெலியா	02	01	28	507	538
மொத்தம்		**14**	**01**	**87**	**1,395**	**1,497**
இலங்கை		**42**	**07**	**704**	**9,152**	**9,905**

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012

அட்டவணை 2.36 ஆனது, இலங்கையில் பாடசாலை கல்வி முறையின் சமீபத்திய போக்குகள், முக்கியமாக பாடசாலைக் கல்வி முறையில் தனியார் பாடசாலைகளின் தாக்கம் தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளது. இலங்கையில் சர்வதேச பாடசாலைகள் என பிரபலமாக அறியப்படுகின்ற தனியார் பாடசாலைகளால் 1,25,000 இற்கும் அதிகமான மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளமை முக்கியமாக கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். இம் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் அதாவது 85 % ஆனவர்கள் மேல் மாகாணத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், கண்டி மாவட்டத்தில் கண்டி நகரத்தின் செல்வாக்கு காரணமாக 10,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தனியார் துறை பாடசாலைகளில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அட்டவணை2.36

தனியார் பாடசாலைகள் மற்றும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை, 2012

மாகாணம்	**மாவட்டம்**	**மாணவர்கள்**			**ஆசிரியர்கள்**		
		ஆண்கள்	**பெண்கள்**	**மொத்தம்**	**ஆண்கள்**	**பெண்கள்**	**மொத்தம்**
மேல் மாகாணம்	கொழும்பு	33,011	30,343	**63,354**	584	2,587	**3,171**
	கம்பஹா	10,242	11,368	**21,610**	213	738	951
	களுத்துறை	3,361	4,559	**7,920**	46	265	311
மொத்த		**46,614**	**46,270**	**92,884**	**843**	**3,590**	**4,433**

ம்							
மத்திய மாகாணம்	கண்டி	6,144	4,078	**10,222**	114	456	**570**
	மாத்தளை	85	886	**971**	04	49	**53**
	நுவரெலியா	915	715	**1,630**	06	58	**64**
மொத்தம்		**7,144**	**5,679**	**12,273**	**124**	**563**	**687**
இலங்கை		**63,666**	**62,003**	**125,669**	**1,282**	**4,832**	**6,114**

மூலம்: இலங்கை கல்வி தகவல்கள், கல்வி அமைச்சு, 2012 (பாடசாலை மாணவர் தொகை கணக்கெடுப்பு (தனியார் பாடசாலைகள் - 2012)

அட்டவணை2.37

க. பொ. த (சா/ த) பரீட்சையில் பாடசாலை பரீட்சார்த்திகளின் தேர்ச்சி

மாவட்டம் மற்றும் மாகாணம்	**தேர்விற்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை**			**க.பொ.த (உ / த) இற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை**		
	2009	**2010**	**2011**	**2009**	**2010**	**2011**
கொழும்பு	30,012	29,132	29,925	20,094	20,979	21,432
கம்பஹா	25,023	24,753	25,431	13,976	15,634	15,877
களுத்துறை	13,878	13,933	14,258	7,918	9,028	9,028
மேல் மாகாணம்	**68,913**	**68,821**	**69,614**	**41,988**	**45,641**	**46,337**
கண்டி	20,321	19,747	19,328	10,821	11,865	11,827
மாத்தளை	6,777	6,656	6,348	3,099	3,698	3,688
நுவரெலியா	9,664	9,638	9,589	3,895	4,802	4,794
மத்திய மாகாணம்	**36,762**	**36,041**	**35,265**	**17,815**	**20,365**	**20,309**
இலங்கை	**272,200**	**271,644**	**270,032**	**142,938**	**164,527**	**164,191**

மூலம்: தொழிலாளர் சந்தை தகவல் திரட்டு -தொகுதி 1/2012 மற்றும் கல்வித் திணைக்களம்

அட்டவணை 2.37 இல் சித்தரிக்கப்பட்டுள்ளது போன்று, க.பொ.த சா / த பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் க.பொ.த உ / த இற்கு தகுதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை என்பனவற்றிற்கு இடையேயான தொடர்பு அல்லது மூன்றாம் நிலை கல்வியின் நிலைமை ஆனது இலங்கையின் அபிவிருத்தி சமநிலைக்கு சாதகமாக காணப்படவில்லை. முதலாவதாக, தேசிய ரீதியாக அங்கு மக்கள் தொகை வளர்ச்சி வீதத்தின் தேக்க நிலையின் விளைவாக க.பொ.த சா/ த இற்கு தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கையானது குறைந்து செல்லும் போக்கினை காட்டுகின்றது. இரண்டாவதாக, தகுதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையில், குறிப்பாக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை. தகுதி பெறுபவர்களின் எண்ணிக்கை சராசரியாக 60 % ஆக காணப்படுவதுடன் ஏனைய 40 % ஆனவர்கள் வேறு கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டி, அல்லது முறைசார் கல்வி நடவடிக்கைகளில் இருந்து விலக வேண்டி உள்ளது. இந்த சதவீதம் மற்றும் உயர் கல்வி பயிலும் மாணவர்கள் ஆகியோர், இலங்கையானது நாட்டின் பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை அறிமுகம் செய்யும் போது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியவர்களாக உள்ளனர்.

அட்டவணை 2.38 ஆனது க.பொ.த உ / தரத்திற்கு தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களில் தேசிய பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை என்பவற்றிற்கு இடையிலான தொடர்பினை விபரித்துள்ளது. மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையும் விகிதத்தில் காணப்படும் சிறியளவான முன்னேற்றம் ஆனது, மாணவர்களின் கல்வியின் அடைதல் மட்டம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளமையினை காட்டுகிறது; இன்னும், உயர் கல்வி பயிலும் மாணவர்கள், குறிப்பாக தேசிய பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி பயிலும் மாணவர்களின் எதிர்காலம் ஆனது இலங்கையில் பல தசாப்தங்களாக ஒரு பாரிய பிரச்சனையாக உள்ளது. நாட்டில் சராசரியாக, க.பொ.த உயர் தரத்தில் சித்தியடையும்

மாணவர்களின் சதவீதம் ஏறத்தாழ 60 % ஆக காணப்படுவதோடு எஞ்சிய 40% ஆனவர்கள் ஏனைய கல்வி முறைகளுக்கு அல்லது தொழிலாளர் படைக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

அட்டவணை2.38

க. பொ. த (உ/ த) பரீட்சையில் பாடசாலை பரீட்சார்த்திகளின் தேர்ச்சி

மாவட்டம்	தேர்விற்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை		பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை	
	2009	2010	2009	2010
கொழும்பு	22,108	24,125	12,766	14,061
கம்பஹா	15,750	17,410	8,847	10,037
களுத்துறை	9,415	10,286	5,761	6,570
மேல் மாகாணம்	**47,273**	**51,821**	**27,374**	**30,668**
கண்டி	13,627	14,968	8,037	8,862
மாத்தளை	3,977	4,247	2,372	2,472
நுவரெலியா	4,816	5,332	2,994	3,217
மத்திய மாகாணம்	**22,420**	**24,547**	**13,403**	**14,561**
இலங்கை	**177,640**	**195,043**	**108,725**	**120,281**

மூலம்: தொழிலாளர் சந்தை தகவல் திரட்டு -தொகுதி 1/2012 மற்றும் கல்வித் திணைக்களம்

அட்டவணை 2.39 ஆனது 2003/04 முதல் 2010/11 வரையான காலப்பகுதியில் மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களில் இருந்து தேசிய பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளது. 2010/11 ஆம் கல்வியாண்டில் மிக அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்களின் எண்ணிக்கை 22000 ஆகும், அத்துடன் இப்பெறுமதியானது 2003/04 மற்றும் 2010/11 காலப்பகுதியில் கிட்டத்தட்ட 100% ஆக அதிகரித்திருந்தது. மாணவர்களின் ஆண்டு ரீதியான உட்சேர்க்கையில் மேல் மாகாணம் ஆனது அதிகளவான பங்களிப்பினை

வழங்கியுள்ளதுடன், மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டமானது அதன் அதிகரித்த சனத்தொகை காரணமாக ஆண்டு ரீதியான மாணவர் உள்வாங்கல்களில் அதிகளவு செல்வாக்கு செலுத்துகின்ற மாவட்டமாக காணப்படுகின்றது. மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தின் கல்வி அடைவு மட்டமானது மத்திய மாகாணத்தில் மிக உயர்வாக காணப்படுவதுடன் ஏனைய மாவட்டங்களான மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்கள் கல்வியின் அடைவு மட்டத்தில் மிக குறைந்தளவான பங்களிப்பினையே வழங்கி உள்ளன. எனினும், இலங்கையினால், மேல் மாகாணத்தில் உள்ள (2011 இல் 30,000) தகுதி பெற்ற அனைத்து மாணவர்களையும் (2011 ஆம் ஆண்டில் 30000 மாணவர்கள்) நாட்டின் அனைத்து தேசிய பல்கலைக்கழகங்களிற்கும் உள்வாங்க முடியாமல் உள்ளது. இதன் விளைவாக, பல்கலைக்கழக நுழைவு தொடர்பாக குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்ற மாணவர்களில் வெறும் 20 % இனை விட குறைவான மாணவர்களே உண்மையில் தேசிய பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படுகின்றனர் என்பதாகும். இந்த நிலைமை ஆனது குறிப்பாக இந்த நாட்டில் உள்ள கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் அதாவது தனியார் துறை மற்றும் அரச துறைகளில் பணிபுரிபவர்கள், பயிற்சி நிறுவனங்கள் ஆகியோரினால் கவனத்திற் கொள்ள வேண்டிய பிரதானமான விடயமாக உள்ளது.

அட்டவணை2.39

மாகாண மற்றும் மாவட்ட ரீதியிலான பல்கலைக்கழக அனுமதி, 2003/ 04 - 2010/ 11

மாவட்டம் மற்றும் மாகாணம்	2003/04	2004/05	2005/06	2006/07	2007/08	2008/09	2009/10	2010/11
கொழும்பு	2,238	2,350	2,694	2,496	2,749	2,874	2,861	2,874
கம்பஹா	877	980	1,124	1,075	1,462	1,454	1,627	1,618
களுத்துறை	592	644	832	714	946	902	1,024	1,025

மேல் மாகாணம்	**3,707**	**3,974**	**4,650**	**4,285**	**5,157**	**5,230**	**5,512**	**5,517**
கண்டி	877	916	1,170	1,121	1,291	1,341	1,290	1,311
மாத்தளை	196	206	294	284	306	320	357	322
நுவரெலியா	286	343	380	351	411	446	464	490
மத்திய மாகாணம்	**1,359**	**1,465**	**1,844**	**1,756**	**2,008**	**2,107**	**2,111**	**2,123**
இலங்கை	**13,396**	**14,520**	**17,299**	**17,196**	**20,069**	**20,846**	**21,547**	**22,016**

மூலம்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2012

2.8 சுருக்கம்

இந்த அத்தியாயம் ஆனது மத்திய மாகாணத்தின் சமூக-பொருளாதார கட்டமைப்புடன் நாட்டின் சராசரி மற்றும் ஏனைய மாகாணங்களான மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணங்களின் சராசரியுடனான ஒப்பீடு ஒன்றினை வழங்கியுள்ளது. மேலும் இவ் அத்தியாயத்தில் மாகாணத்தின் நிர்வாக கட்டமைப்பு, புவியியல் மற்றும் காலநிலை, மக்கள் தொகை மற்றும் மக்கள் தொகை பண்புகள், பொருளாதார கட்டமைப்பு மற்றும் முக்கிய பொருளாதார துறைகள், தொழிலாளர் படை, வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை நிலைமைகள், வருவாய்ப் பங்கீடு மற்றும் வறுமை மற்றும் பாடசாலை முறைமை மற்றும் கல்வியின் அடைதல் மட்டம் போன்ற விடயங்கள் தொடர்பான தரவுகள் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் மத்திய மாகாணத்தின் சமூக-பொருளாதார விடயங்களை விரிவாக்குவதற்கான பெருமளவான வாய்ப்புக்கள்,வேகமாக வளர்ந்து வரும் மாகாணங்களான மேற்கு மற்றும் தெற்கு மாகாணங்களுடன் ஒப்பிடும் போது, நிச்சயமாக காணப்படுகின்றமையானது கண்டறியப்பட்டுள்ளது. இந்த அத்தியாயத்தில் சேகரிக்கப்பட்டுள்ள மற்றும் விவாதிக்கப்பட்டுள்ள தகவல்கள் இந்த அறிக்கையின் 3 ஆம் மற்றும் 4 ஆம் அத்தியாயங்களில் மாகாணத்தின் பொருளாதார துறைகள் மற்றும் தொழிலாளர் சந்தை தேவைகள் தொடர்பான ஆய்வுகளுக்கு உதவக்கூடியவையாக இருக்கும்.

அத்தியாயம் 03

மத்திய மாகாணத்திலுள்ள கைத்தொழிற் துறைகளின் துறைசார் அறிக்கைகள்

3.0 கண்ணோட்டம்

இவ் அத்தியாயத்தில், மத்திய மாகாணத்தின் பொருளாதார செயற்பாடுகள் தொடர்பான துறைசார் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ் ஆய்வில் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வின் போது பின்வரும் பிரதான துறைகள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

1. கட்டுமானத் துறை
2. இலகு பொறியியல் துறை
3. தன்னியக்க இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல் துறை
4. வீட்டு மின்சார உபகரணங்கள் திருத்துதல் சேவைகள்
5. தகவல் மற்றும் தொடர்பாடல் கைத்தொழிற் துறை
6. அச்சிடுதல் மற்றும் பிரசுரித்தல் கைத்தொழிற் துறை
7. புடைவை மற்றும் ஆடைகள்
8. ஹோட்டல் மற்றும் சுற்றுலா, மற்றும்
9. குடிசைக் கைத்தொழிற் துறை

மேலே தரப்பட்டுள்ள துறைகள் தொடர்பான அறிக்கைகள் பல்வேறுபட்ட தேசிய மற்றும் மாகாண தரவு மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட துணையான தரவுகள் மற்றும் 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் முதல் டிசெம்பர் மாதம் வரையான

காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்கெடுப்புகள் என்பனவற்றினை பயன்டுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறைசார் அறிக்கைகளிலும் பயன்படுத்தப்பட்ட தரவு மூலங்கள் அந்தந்த துறைசார் அறிக்கைகளில் தரப்பட்டுள்ளன. இத்துறைசார் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வின் முடிவுகள் மற்றும் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் 2014 ஆம் ஆண்டு மே மாதம் உரிய நிபுணர்கள் மற்றும் வல்லுநர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற செயலமர்வின் போது செல்லுபடியாக்கப்பட்டுள்ளது.

3.1 கட்டுமான கைத்தொழிற் துறைக்கான துறைசார் அறிக்கை

3.1.1 பின்னணி

தற்பொழுது, கட்டுமானத் துறையானது இலங்கையின் பொருளாதாரத்தில் மிகவும் வேகமாக வளர்ச்சியடைந்துவரும் துறைகளில் ஒன்றாக விளங்குகின்றது. சமீபத்திய ஆண்டுகளில் கட்டுமானத் துறை செயற்பாடுகள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) ஏறத்தாழ 8% ஆன பங்களிப்பினை வழங்கியுள்ளன. 2011 ஆம் ஆண்டில் கட்டுமான கைத்தொழிற் துறையானது 12% ஆன வளர்ச்சி வீதத்தினை கொண்டிருந்தது (அட்டவணை 3.1 மற்றும் அட்டவணை 3.2 இனை பார்க்கவும்). அட்டவணை 3.1 இல் காட்டப்பட்டுள்ளதற்கு இணங்க, மேல் மாகாணமானது நாட்டின் மொத்த கட்டுமானத் துறையில் 35% பங்களிப்பினை செய்துள்ளதுடன் தென் மாகாணமானது ஏறத்தாழ 24% பங்களிப்பினையும் செய்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் கட்டுமானத் துறையானது 2009 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆண்டு வரையான காலப்பகுதியில் துரிதமாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் நாட்டின் மொத்த கட்டுமானத் துறையில் 14% பங்களிப்பினையும் மேற்கொண்டுள்ளது.

அட்டவணை 3.1

கட்டுமான கைத்தொழிற்துறை நிறுவகங்களின் செயல்திறன் - மத்திய மாகாணம் மற்றும் இலங்கை

(1996 ஆம் ஆண்டிற்குரிய நிலையான விலைகளில் பங்களிப்புகளின் பெறுமதிகள் ரூபா மில்லியன்களில்)

அமைப்பு	விடயம்	2008	2009	2010	2011
இலங்கை	கட்டுமானத் துறையின் பங்களிப்பு	109,667	115,975	124,938	139,869
	மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)	1,478,606	1,531,125	1,653,616	1,790,427
	மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) கட்டுமானத் துறையின் பங்களிப்பு % ஆக	7.42	7.57	7.56	7.81
	கட்டுமானத் துறையின் வளர்ச்சி வீதம்	6.47	5.75	7.73	11.95
	மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சி வீதம்	5.94	3.55	8.00	8.27
மத்திய மாகாணம்	மாகாண கட்டுமானத் துறையின் பங்களிப்பு	6,088	6,439	7,041	8,235
	மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)	144,344	146,526	166,050	176,241
	மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) கட்டுமானத் துறையின் பங்களிப்பு % ஆக	4.22	4.36	4.24	4.67
	கட்டுமானத் துறையின் வளர்ச்சி வீதம்	6.46	5.75	8.63	16.95
	மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சி வீதம்	7.65	2.20	12.56	6.14

மூலம்: மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம், 2008 - 2013

அட்டவணை 3.2

கட்டுமானத் துறையில் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) பங்களிப்பு மற்றும் வளர்ச்சி வீதம்

மாகாணம்	கட்டுமான கைத்தொழிற்துறையின் மொத்த பங்களிப்பு சதவீதத்தில்		வளர்ச்சி வீதம் (%)	
	2010	2011	2010	2011
மேல் மாகாணம்	37.1	34.7	8.1	4.7
தென் மாகாணம்	23.1	23.5	17.3	13.8
கிழக்கு மாகாணம்	12.7	13.0	-10.7	14.6
வடமேல் மாகாணம்	6.4	6.5	-18.7	13.9
மத்திய மாகாணம்	5.6	5.9	8.6	17.0
வட மாகாணம்	4.0	5.2	51.0	44.6
வட மத்திய மாகாணம்	5.3	5.0	2.3	5.7
ஊவா மாகாணம்	3.6	3.6	-6.0	10.9
சப்பிரகமுவா மாகாணம்	2.2	2.7	13.9	37.9
இலங்கை	**100.0**	**100.0**	**8.1**	**12.0**

மூலம்: மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம், 2008 - 2013

மத்திய மாகாணத்தின் கட்டுமானத் துறையானது மொத்த கட்டுமானத் துறையின் பங்களிப்பில் ஆறு (6) சதவீதமான பங்களிப்பினை மேற்கொண்டுள்ளதுடன் இம் மாகாணமானது மேல் மாகாணம், தென் மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் வடமேல் மாகாணம் ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக ஐந்தாவது இடத்தினை வகிக்கின்றது. மத்திய மாகாணத்தின் கட்டுமானத் துறையானது அண்மைய ஆண்டுகளில் அற்புதமான வளர்ச்சி வீதத்தினை பதிவுசெய்துள்ளது. அது 2010 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 9 % ஆகவும் 2011 ஆம் ஆண்டில் 17 % ஆகவும் வளர்ச்சியடைந்துள்ளது. 2011 ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தின் கட்டுமானத் துறையின் வளர்ச்சியானது அனைத்து மாகாணங்களுடனும் ஒப்பிடும்போது வடமாகாணத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது அதிகூடிய நிலையில் காணப்பட்டது. கட்டுமானத் துறையானது அடுத்துவரும் ஆண்டுகளில் ஒன்பது சதவீதமான (9%) வளர்சியினை அடைய முயற்சிக்குமாயின் அதற்கு ஒரு மில்லியன்

எண்ணிக்கையான தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் தேவைப்படுவர் (ICRA அறிக்கை 2011).

மாகாணத்தின் கட்டுமானத் துறையின் அண்மைக்கால பங்களிப்பின் அடிப்படையில், மத்திய மாகாணத்தின் கட்டுமானத் துறையானது சராசரியாக 10% ஆன வருடாந்த வளர்ச்சியினை எய்தும் என நாம் அனுமானிக்கின்றோம். 2011 ஆம் ஆண்டில் இக் கைத்தொழிற் துறையின் 10 % ஆன சராசரி வளர்ச்சியின் உண்மையான பெறுமதியான ரூபா. 8,235 மில்லியன் ஆனது 2013 ஆம் ஆண்டில் மாகாண கட்டுமானத் துறையின் பங்களிப்பாக ரூபா 9,964 மில்லியனாகவும் 2018 ஆம் ஆண்டில் 16,048 மில்லியனாகவும் அதிகரிக்கும்.

அட்டவணை 3.3
மத்திய மாகாணத்தில் நிலையான விலைகளில் கட்டுமானத் துறையின் எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பு

ஆண்டு	1996 ஆம் ஆண்டில் நிலையான விலைகளில் எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பு (2011 ஆம் ஆண்டில் 10% இன் உண்மையான பெறுமதியான ரூபா 8,235 மில்லியன் இலிருந்து)
2012	9,059
2013	9,964
2014	10,961
2015	12,057
2016	13,263
2017	14,589
2018	16,048

மூலம்: வளர்ச்சி கணிப்புகள்

3.1.2 பதிவுசெய்யப்பட்டுள்ள கட்டுமான கம்பனிகள்

இப்பகுதியின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள கட்டுமான கம்பனிகளின் எண்ணிக்கை மற்றும் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மத்திய மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை தொர்பான

கணிப்பீடு ஆகியன தரப்பட்டுள்ளன. கட்டுமான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகமானது (ICTAD) கட்டுமான நிறுவகங்களை 10 முதலீட்டு நிதி வரம்புகளின் கீழ் வகைப்படுத்தியுள்ளது (அட்டவணை 3.4 இனை பர்க்கவும்). இந்நிறுவகங்களை முதலீட்டு நிதித்தொகையின் அடிப்படையில் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய நிறுவகங்கள் என வகைப்படுத்த முடியும்.

2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் கண்டி மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட கட்டுமான கம்பனிகள் தொடர்பான விபரங்கள் அட்டவணை 3.4 இல் தரப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளின் மொத்த எண்ணிக்கையானது 109 ஆக காணப்பட்டு அது 2013 ஆம் ஆண்டளவில் 167 ஆக அதாவது 26% ஆன சராசரி வளர்ச்சியினை அடைந்துள்ளது. 2013 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பானது முன்னைய ஆண்டிற்கான எண்ணிக்கையின் 50% ஆன அதிகரிப்பாகும். பதிவுசெய்யப்பட்டுள்ள 167 கம்பனிகளுள் 32% ஆனவை சிறிய அளவிலான நிறுவகங்களாகவும் 64% ஆனவை நடுத்தர அளவிலான நிறுவகங்களாகவும் 4% ஆனவை பெரிய அளவிலான நிறுவகங்களாகவும் காணப்படுகின்றன. அண்ணளவாக 92% ஆன கம்பனிகள் ரூபா 50 மில்லியனை விடவும் குறைந்த முதலீட்டினை கொண்டுள்ளன. 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பதிவுசெய்த மற்றும் பதிவுசெய்யவுள்ள கம்பனிகளின் எதிர்பார்க்கப்படுகின்ற எண்ணிக்கையானது அட்டவணை 3.5 இல் தரப்பட்டுள்ளது. 10% ஆன சராசரி வளர்ச்சி வீதத்துடன், கண்டி மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்டுள்ள கட்டுமான கம்பனிகளின் எண்ணிக்கையானது 2014 ஆம் ஆண்டில் 183 ஆகவும் 2016 ஆம் ஆண்டில் 221 ஆகவும் 2018 ஆம் ஆண்டில் 268 ஆகவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அட்டவணை 3.4

கட்டுமான கம்பனிகளின் வகைப்படுத்தல்கள்

தொ/ இல	வகை	நிதி வரம்பு (ரூபா மில்லியன்)	வகை*
1	C1	600 இலும் பார்க்க அதிகமானது	**Large**
2	C2	300 இனை விடவும் அதிகமானது ஆனால் 600 இலும் பார்க்க குறைவானது/ அதற்கு சமனானது	
3	C3	150 இனை விடவும் அதிகமானது ஆனால் 300 இலும் பார்க்க குறைவானது/ அதற்கு சமனானது	
4	C4	50 இனை விடவும் அதிகமானது ஆனால் 150 இலும் பார்க்க குறைவானது/ அதற்கு சமனானது	**Medium**
5	C5	25 இனை விடவும் அதிகமானது ஆனால் 50 இலும் பார்க்க குறைவானது/ அதற்கு சமனானது	
6	C6	10 இனை விடவும் அதிகமானது ஆனால் 25 இலும் பார்க்க குறைவானது/ அதற்கு சமனானது	
7	C7	05 இனை விடவும் அதிகமானது ஆனால் 10 இலும் பார்க்க குறைவானது/ அதற்கு சமனானது	
8	C8	02 இனை விடவும் அதிகமானது ஆனால் 05 இலும் பார்க்க குறைவானது/ அதற்கு சமனானது	**Small**
9	C9	01 இனை விடவும் அதிகமானது ஆனால் 02 இலும் பார்க்க குறைவானது/ அதற்கு சமனானது	
10	C10	01 இலும் பார்க்க குறைவானது/ அதற்கு சமனானது	

குறிப்பு: *நிதி வரம்பின் அடிப்படையில் வகைப்படுத்தல்

மூலம்: கட்டுமான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவக (ICTAD) தரவுத் தளம், 2014

அட்டவணை 3.5

கண்டி மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்டுள்ள கட்டுமான கம்பனிகள்

தரம்	பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை				பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை தொடர்பான கணிப்பீடு				
	2011	2012	2013		2014	2015	2016	2017	2018
	எண்.	எண்.	எண்.	%	எண்.	எண்.	எண்.	எண்.	எண்.
C1	0	0	0	0.0	0	0	0	0	0
C2	1	0	1	0.6	1	1	1	1	2
C3	6	2	5	3.0	5	6	7	7	8
C4	3	5	6	3.6	7	7	8	9	10
C5	9	6	13	7.8	14	16	17	19	21
C6	13	8	12	7.2	13	14	16	17	19
C7	39	45	76	45.5	83	91	101	111	122
C8	27	32	36	21.6	39	43	48	52	58
C9	5	11	13	7.8	14	16	17	19	21
C10	6	2	5	3.0	5	6	7	7	8
மொத்தம்	**109**	**111**	**167**	**100.0**	**183**	**201**	**221**	**243**	**268**

மூலம்: 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை 2014, கட்டுமான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தில் (ICTAD) இருந்து.

மாத்தளை மாவட்டத்தில் உள்ள பதிவுசெய்யப்பட்டுள்ள கட்டுமான கம்பனிகள் தொடர்பான விபரங்கள் அட்டவணை 3.6 இல் தரப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளின் மொத்த எண்ணிக்கையானது 17 ஆக காணப்பட்டு அது 2013 ஆம் ஆண்டளவில் 38 ஆக அதாவது 50 % ஆன சராசரி வளர்ச்சியினை அடைந்துள்ளது. பதிவுசெய்யப்பட்டுள்ள 38 கம்பனிகளுள் 29 % ஆனவை சிறிய அளவிலான நிறுவகங்களாகவும் 69 % ஆனவை நடுத்தர அளவிலான நிறுவகங்களாகவும் 02 % ஆனவை பெரிய அளவிலான நிறுவகங்களாகவும் காணப்படுகின்றன. அண்ணளவாக 97 % ஆன கம்பனிகள் ரூபா 50 மில்லியனை விடவும் குறைந்த முதலீட்டினை கொண்டுள்ளன. 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகளின் எதிர்பார்க்கப்படுகின்ற எண்ணிக்கையானது அட்டவணை 3.4 இல் தரப்பட்டுள்ளது. 10

% ஆன சராசரி வளர்ச்சி வீதத்துடன், மாத்தளை மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்டுள்ள கட்டுமான கம்பனிகளின் எண்ணிக்கையானது 2014 ஆம் ஆண்டில் 42 ஆகவும் 2016 ஆம் ஆண்டில் 51 ஆகவும் 2018 ஆம் ஆண்டில் 62 ஆகவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அட்டவணை 3.6

மாத்தளை மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்டுள்ள கட்டுமான கம்பனிகள்

தரம்	பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை				பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை தொடர்பான கணிப்பீடு				
	2011	2012	2013		2014	2015	2016	2017	2018
	எண்	எண்	எண்	%	எண்	எண்	எண்	எண்	எண்
C1	0	0	0	0.0	0	0	0	0	0
C2	0	0	0	0.0	0	0	0	0	0
C3	0	1	1	2.6	1	1	1	1	2
C4	0	0	0	0.0	0	0	0	0	0
C5	1	3	6	15.8	7	7	8	9	10
C6	3	1	2	5.3	2	2	3	3	3
C7	8	10	18	47.4	20	22	24	27	29
C8	5	6	9	23.7	10	11	12	13	15
C9	0	2	2	5.3	2	2	3	3	3
C10	0	0	0	0.0	0	0	0	0	0
மொத்தம்	**17**	**23**	**38**	**100.0**	**42**	**46**	**51**	**56**	**62**

மூலம்: 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை 2014, கட்டுமான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தில் (ICTAD) இருந்து.

அட்டவணை 3.7

நுவரெலியா மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்டுள்ள கட்டுமான கம்பனிகள்

தரம்	பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை				பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை தொடர்பான கணிப்பீடு				
	2011	2012	2013		2014	2015	2016	2017	2018
	எண்	எண்	எண்	%	எண்	எண்	எண்	எண்	எண்
C1	0	0	0	0.0	0	0	0	0	0
C2	0	0	0	0.0	0	0	0	0	0
C3	0	0	0	0.0	0	0	0	0	0
C4	0	1	1	5.0	1	1	1	1	2

C5	1	1	1	5.0	1	1	1	1	2
C6	1	1	3	15.0	3	4	4	5	5
C7	8	7	10	50.0	11	12	13	15	16
C8	3	4	1	5.0	1	1	1	1	2
C9	1	0	4	20.0	5	5	6	6	6
C10	0	0	0	0.0	0	0	0	0	0
மொத்தம்	**14**	**14**	**20**	**100.0**	**22**	**24**	**26**	**29**	**33**

மூலம்: 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை 2014, கட்டுமான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தில் (ICTAD) இருந்து.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்டுள்ள கட்டுமான கம்பனிகள் தொடர்பான விபரங்கள் அட்டவணை 3.7 இல் தரப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளின் மொத்த எண்ணிக்கையானது 14 ஆக காணப்பட்டு அது 2013 ஆம் ஆண்டளவில் 20 ஆக அதாவது 42% ஆன சராசரி வளர்ச்சியினை அடைந்துள்ளது. பதிவுசெய்யப்பட்டுள்ள 20 கம்பனிகளுள் 25% ஆனவை சிறிய அளவிலான நிறுவகங்களாகவும் 75% ஆனவை நடுத்தர அளவிலான நிறுவகங்களாகவும் காணப்படுகின்றன. அண்ணளவாக 95% ஆன கம்பனிகள் ரூபா 50 மில்லியனை விடவும் குறைந்த முதலீட்டினை கொண்டுள்ளன. 10% ஆன சராசரி வளர்ச்சி வீதத்துடன், நுவரெலியா மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்டுள்ள கட்டுமான கம்பனிகளின் எண்ணிக்கையானது 2014 ஆம் ஆண்டில் 22 ஆகவும் 2016 ஆம் ஆண்டில் 26 ஆகவும் 2018 ஆம் ஆண்டில் 33 ஆகவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

3.1.3 கட்டுமானத் துறைசார் வேலைவாய்ப்பு தொடர்பான கணிப்பீடு

(i) முறை 1

நாம் எதிர்கால தொழில்வாய்ப்பு தொடர்பான மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு பதிவுசெய்யப்பட்ட கட்டுமான நிறுவகங்களின் ஒவ்வொரு வகையிலும் காணப்படுகின்ற கைவினைஞர்களின் சராசரி எண்ணிக்கை மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற கம்பனிகளின் எண்ணிக்கை என்பனவற்றினை

பயன்படுத்துகின்றோம். கைவினைஞர்களின் சராசரி எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு வகையிலும் பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், நாம் கண்டி, மாத்தளை, நுவரெலியா மற்றும் மத்திய மாகாணம் ஆகியவற்றிலுள்ள பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளிலுள்ள கைவினைஞர்களின் சராசரி எண்ணிக்கையினை கணக்கீடு செய்துள்ளோம். மாதிரிக் கணக்கெடுப்பின் அடிப்படையில், ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் 20 பதிவுசெய்யப்படாத கட்டுமான கம்பனிகள் காணப்படுவதுடன் ஒரு கம்பனியில் சராசரியாக 10 நபர்கள் தொழில்புரிகின்றனர் என எடுகோள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ஒரு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சுயதொழில் புரிகின்ற கைவினைஞர்களின் சராசரி எண்ணிக்கையானது 150 எனவும் அனுமானிக்கப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கட்டுமான கைத்தொழிற்துறை தொடர்பான கணக்கெடுப்பின் மூலம், கட்டுமான கைத்தொழிற்துறைக்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) திட்டமானது நிபுணத்துவ துறைகளின் அடிப்படையில் கட்டுமான தொழிலாளர்களின் பிரிவுகளை அடையாளப்படுத்தியுள்ளது. அதற்கிணங்க, மொத்த கட்டுமான ஊழியர்களில் ஏறத்தாழ 73.5% ஆனோர் கைவினைஞர்களாகவும், 10% ஆனோர் தொழில்நுட்பவியலாளர்களாகவும், 8% ஆனோர் எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஊழியர்களாகவும், 5% ஆனோர் இயந்திர இயக்குநர்களாகவும், 3.5% ஆனோர் தொழில்சார் நிபுணர்களாகவும் உள்ளனர். அட்டவணை 3.8 இல் தரப்பட்டுள்ள கட்டுமானத் துறைசார் தொழில்வாய்ப்புகளின் மொத்த எண்ணிக்கையானது கைவினைஞர்களின் எண்ணிக்கை தொடர்பான கணிப்பீடு மற்றும் அவர்களின் சதவீத பரம்பல் என்பனவற்றினை பயன்படுத்தி கணிப்பிடப்பட்டுள்ளது.

மொத்த கட்டுமானத்துறை தொழில்வாய்ப்புகள் தொடர்பான கணிப்பீடு மற்றும் ஆண்டுக்கான கைவினைஞர்களின் எண்ணிகை என்பன கீழே தரப்படுகின்றது. 2013

ஆம் ஆண்டில் கண்டி மாவட்டத்தில் கட்டுமானத்துறைக்கான தொழில்வாய்ப்புகள் 16,134 ஆகும். இதில் கைவினைஞர்களாக 11,285 நபர்களும் அலுமினிய சட்டகம் புனைபவர்களாக 780 நபர்களும் உள்ளனர். 2013 ஆம் ஆண்டில் மாத்தளை மாவட்டத்தில் கட்டுமானத்துறைக்கான தொழில்வாய்ப்புகள் 6,906 ஆகும். இதில் கைவினைஞர்களாக 4,715 நபர்களும் அலுமினிய சட்டகம் புனைபவர்களாக 491 நபர்களும் உள்ளனர். 2013 ஆம் ஆண்டில் நுவரெலியா மாவட்டத்தில் கட்டுமானத்துறைக்கான தொழில்வாய்ப்புகள் 3,368 ஆகும். இதில் கைவினைஞர்களாக 2,200 நபர்களும் அலுமினிய சட்டகம் புனைபவர்களாக 375 நபர்களும் உள்ளனர். 2013 ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தில் கட்டுமானத்துறைக்கான தொழில்வாய்ப்புகள் 26,408 ஆகும். இதில் கைவினைஞர்களாக 18,200 நபர்களும் அலுமினிய சட்டகம் புனைபவர்களாக 1,646 நபர்களும் உள்ளனர்.

அட்டவணை 3.8

மத்திய மாகாணத்திலுள்ள கட்டுமான கைவினைஞர்களின் எண்ணிக்கை தொடர்பான கணிப்பீடு

வகை	ஓர் அலகிற்கான கட்டுமான கைவினைஞர்களின் எண்ணிக்கை	கண்டி		மாத்தளை		நுவரெலியா		மத்திய மாகாணம்	
		அலகுகளின் எண்ணிக்கை	கைவினைஞர்	அலகுகளின் எண்ணிக்கை	கைவினைஞர்	அலகுகளின் எண்ணிக்கை	கைவினைஞர்	அலகுகளின் எண்ணிக்கை	கைவினைஞர்
C2	150	1	150	0	0	0	0	1	150
C3	50	5	250	1	50	0	0	6	300
C4,C5,C6,C7	25	107	2675	26	650	15	375	148	3700
C8, C9, C10	15	54	810	11	165	5	75	70	1050
பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகள்		167	3885	38	865	20	450	225	5200
பதிவுசெய்யப்படாத கம்பனிகள் (பிரதேச செயலாளர் பிரிவு		440	4400	220	2200	100	1000	760	7600

ஒன்றில் 10 நபர்கள் தொழில்புரிகின்ற சராசரி கம்பனிகளின் எண்ணிக்கை 20)									
சுயதொழில்புரிகின்ற கைவினைஞர் (ஒரு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சுயதொழில்புரிகின்ற கைவினைஞர்களின் சராசரி எண்ணிக்கையானது 150 ஆகும்)		20	3000	11	1650	5	750	36	5400
அலுமினிய சட்டகம் புனைபவர் அல்லாத கைவினைஞர்கள் தொடர்பான கணிப்பீடு			**11285**		**4715**		**2200**		**18200**
அலுமினிய சட்டகம் புனைபவர் அல்லாத கட்டுமான கைத்தொழிற்துறை வேலைவாய்ப்புகள்			**15354**		**6415**		**2993**		**24762**
அலுமினிய சட்டகம் புனைதல்	> 5 தொழிலாளர்கள்	22	110	13	65	7	35	42	210
	3-5 தொழிலாளர்கள்	85	340	45	180	36	144	166	664
	<2 தொழிலாளர்கள்	165	330	123	246	98	196	386	772
அலுமினிய சட்டகம் புனைபவர்			**780**		**491**		**375**		**1646**
அலுமினிய சட்டகம் புனைபவர் உட்பட மொத்த கட்டுமான கைத்தொழிற்துறை வேலைவாய்ப்புகள்			**16134**		**6906**		**3368**		**26408**

குறிப்பு: * கட்டுமானத்துறை வேலைவாய்ப்பானது மொத்த கைவினைஞர்கள் தொடர்பான கணிப்பீடு மற்றும் கட்டுமானத்துறை வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் ஒப்பீட்டளவிலான பரம்பல் (73.5%) என்பவற்றின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டுள்ளது.
மூலம்: தற்போதைய ஆய்வின் அடிப்படையிலான கணிப்பீடு

(ii) முறை 2

நாம் கட்டுமானத்துறையில் நிலவுகின்ற தொழிலாளர்களுக்கான தேவைகளை கணிப்பீடு செய்வதற்கு உண்மையான விளைவுகள் தொடர்பான தரவுகள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட மொத்த வேலைவாய்ப்பு எண்ணிக்கைகள் ஆகியனவற்றினை பயன்படுத்தியுள்ளோம். இதற்காக, நாம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) பெறுமதிகள் தொடர்பான தரவுகள் மற்றும் 2012 ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட துறைசார் வேலைவாய்ப்புகள் என்பவற்றினை பயன்படுத்தி தொழிலாளர் கணக்கெடுப்பின் அடிப்படையில் 2011 ஆம் ஆண்டிற்கான கட்டுமானத்துறையின் விளைவிற்கும் (நிலையான விலைகளில்) கட்டுமானத்துறையிலுள்ள வேலைவாய்ப்பிற்கும் இடையிலான விகிதத்தினை கணக்கிட்டுள்ளோம்.

$$\text{விளைவு - வேலைவாய்ப்பு விகிதம்} = \frac{\text{விளைவு}}{\text{வேலைவாய்ப்பு}}$$

2011 ஆம் ஆண்டில் கட்டுமானத்துறையின் விளைவிற்கும் வேலைவாய்ப்பிற்கும் இடையிலான விகிதமானது 0.357 ஆகும். நாம் இனிவரும் கணக்கீடுகளில் விளைவு - வேலைவாய்ப்பு விகிதமாக 0.36 இனை பயன்படுத்துகின்றோம். கட்டுமானத்துறை விளைவுகளின் 10% சராசரி வளர்ச்சியுடன், 2013 ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தில் கட்டுமானத்துறை வேலைவாய்ப்புகள் ஏறத்தாழ 27,679 ஆக காணப்படும் என மதிப்பிட்டுள்ளோம். இந்த எண்ணிக்கையானது முறை 1 இனை பயன்படுத்தி கணக்கிடப்பட்ட எண்ணிக்கையுடன் மிக அதிகளவில் வேறுபடவில்லை.

(iii) முறை 1 மற்றும் முறை 2 ஆகியவற்றினை பயன்படுத்தி கணிப்பிடப்பட்ட கட்டுமானத்துறை வேலைவாய்ப்புகள்

நாம் மேலே கூறப்பட்டுள்ள இரண்டு முறைகளையும் பயன்படுத்தி மாகாணத்திலுள்ள கட்டுமான வேலைவாய்ப்பினை கணிப்பிட்டுள்ளோம். இரண்டு கணிப்பீட்டு முறைகளிலிருந்தும் பெறப்பட்ட கட்டுமான வேலைவாய்ப்புகளுக்கு இடையில் குறிப்பிடத்தக்களவான வேறுபாடுகள் காணப்படவில்லை. இரண்டு முறைகளின் மூலமும் கணக்கிடப்பட்ட கட்டுமான வேலைவாய்ப்புகளிற்கு இடையில் ஒத்த வருடாந்த அதிகரிப்பானது காணப்படுவது மிகவும் சுவாரசியமான ஓர் விடயமாகும்.

அட்டவணை 3.9
மத்திய மாகாணத்தின் கட்டுமானத்துறை வேலைவாய்ப்புகள் தொடர்பான கணிப்பீடு, 2013 - 2018

ஆண்டு	முறை 1		முறை 2	
	மொத்த வேலைவாய்ப்பு	வருடாந்த அதிகரிப்பு	மொத்த வேலைவாய்ப்பு	வருடாந்த அதிகரிப்பு
2013	26,408		27,679	
2014	29,049	2,641	30,447	2,768
2015	31,954	2,904	33,491	3,045
2016	35,149	3,195	36,840	3,349
2017	38,664	3,515	40,524	3,684
2018	42,530	3,866	44,577	4,052
வருடாந்த சராசரி அதிகரிப்பு		**3,224**		**3,380**

மூலம்: கணிப்பீடுகள்

மொத்த கட்டுமான வேலைவாய்ப்புகளின் சராசரி வருடாந்த அதிகரிப்பானது முறை 1 இன் மூலமாக 3,224 நபர்களாகவும் முறை 2 இன் மூலமாக 3,380 நபர்களாகவும் காணப்படுகின்றது. இந்த இரண்டு முறைகளிலும் கணிப்பிடப்பட்ட கட்டுமான வேலைவாய்ப்புகளின் சராசரி வருடாந்த அதிகரிப்பிற்கு இடையிலான வேறுபாடானது 156 ஆக காணப்படுகின்றது. இதன் மூலம், எம்மால் கணிக்கப்பட்ட தரவுகள் ஒப்பிடப்படக்கூடியவை என வெளிப்படுவதுடன் இதனால் அவற்றின் நம்பகத்தன்மையானது மிகவும் கூடுதாக காணப்படுகின்றது. இந்த இரண்டு

முறைகளிலும் கணிப்பிடப்பட்ட கட்டுமான வேலைவாய்ப்புகளின் வருடாந்த அதிகரிப்பிற்கு இடையில் பெரிய வேறுபாடானது காணப்படாமையினால், நாம் பகுப்பாய்விற்கான நியமப் புள்ளியாக (**benchmark**) முறை 1 இலிருந்து பெறப்பட்ட கணிப்பீடுகளை பயன்படுத்துகின்றோம்.

3.1.4 மாவட்ட மற்றும் தொழில் அடிப்படையில் கட்டுமான வேலைவாய்ப்பு தொடர்பான கணிப்பீடு

நாம் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மாவட்ட அடிப்படையில் கட்டுமான வேலைவாய்ப்பினை கணிப்பிடுவதற்கு முறை 1 இனை பயன்படுத்தியுள்ளோம். 2014 ஆம் ஆண்டில் கண்டி மாவட்டத்தில் கட்டுமானத்துறைக்கான மொத்த தொழில்வாய்ப்புகள் 16,134 ஆகும். இது 2018 ஆம் ஆண்டில் 25,979 நபர்களாக அதிகரிக்கும். 2018 ஆம் ஆண்டிற்கான 25,979 நபர்களில், 19,095 நபர்கள் கைவினைஞர்களாகவும், 2,598 நபர்கள் தொழில்நுட்பவியலாளர்களாகவும், 2,078 நபர்கள் எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஊழியர்களாகவும், 1,299 நபர்கள் இயந்திர இயக்குநர்களாகவும், 909 நபர்கள் தொழில்சார் நிபுணர்களாகவும் இருப்பர். தொழில்களின் அடிப்படையில் மேலதிகமாக தேவைப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கைகள் அட்டவணை 3.10 இல் தரப்பட்டுள்ளது. கண்டி மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான அடுத்த ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கு கட்டுமான கைத்தொழிற்துறையிற்கு வருடாந்தம் சராசரியாக, 1,448 கைவினைஞர்களும், 197 தொழில்நுட்பவியலாளர்களும், 158 எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஊழியர்களும் 98 இயந்திர இயக்குநர்களும், 69 தொழில்சார் நிபுணர்களும் தேவைப்படுகின்றனர்.

அட்டவணை 3.10

கண்டி மாவட்டத்தில் கட்டுமான வேலைவாய்ப்பு தொடர்பான கணிப்பீடு, 2013 - 2018

ஆண்டு	தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை						மேலதிக தொழிலாளர்கள்				
	தொழில்சார் நிபுணர்கள்	எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஊழியர்கள்	தொழில்நுட்பவியலாளர் தரம்	கைவினைஞர்கள்	இயந்திர இயக்குநர்கள்	மொத்தம்	தொழில்சார் நிபுணர்கள்	எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஊழியர்கள்	தொழில்நுட்பவியலாளர் தரம்	கைவினைஞர்கள்	இயந்திர இயக்குநர்கள்
	(3.5)	(8.0)	(10.0)	(73.5)	(5.0)	(100.0)					
2013	565	1290	1613	11859	807	16134					
2014	621	1420	1774	13042	887	17744	56	129	161	1183	81
2015	683	1562	1952	14346	976	19519	62	142	178	1305	89
2016	751	1718	2147	15780	1074	21470	68	156	195	1434	98
2017	827	1889	2362	17358	1181	23617	75	172	215	1578	107
2018	909	2078	2598	19095	1299	25979	83	189	236	1736	118
வருடாந்த சராசரி தேவைகள் (நபர்களின் எண்ணிக்கை)							**69**	**158**	**197**	**1448**	**98**

குறிப்பு: அடைப்புக் குறிக்குள் உள்ள எண்ணிக்கைகள் தொழில் வகைகளின் சதவீத பரம்பலை குறித்துநிற்கின்றது.

மூலம்: தற்போதைய ஆய்வின் அடிப்படையிலான கணிப்பீடு

அட்டவணை 3.11

மாத்தளை மாவட்டத்தில் கட்டுமான வேலைவாய்ப்பு தொடர்பான கணிப்பீடு, 2013 - 2018

ஆண்டு	தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை						மேலதிக தொழிலாளர்கள்				
	தொழில்சார் நிபுணர்கள்	எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஊழியர்கள்	தொழில்நுட்பவியலாளர் தரம்	கைவினைஞர்கள்	இயந்திர இயக்குநர்கள்	மொத்தம்	தொழில்சார் நிபுணர்கள்	எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஊழியர்கள்	தொழில்நுட்பவியலாளர் தரம்	கைவினைஞர்கள்	இயந்திர இயக்குநர்கள்
	(3.5)	(8.0)	(10.0)	(73.5)	(5.0)	(100.0)					
2013	242	552	691	5076	345	6906					
2014	266	608	760	5584	380	7597	24	55	69	508	35
2015	292	668	836	6142	418	8356	27	61	76	558	38
2016	322	735	919	6756	460	9192	29	67	84	614	42
2017	354	809	1011	7432	506	10111	32	74	92	675	46
2018	389	890	1112	8175	556	11122	35	81	101	743	51
வருடாந்த சராசரி தேவைகள் (நபர்களின் எண்ணிக்கை)							**30**	**67**	**84**	**620**	**42**

குறிப்பு: அடைப்புக் குறிக்குள் உள்ள எண்ணிக்கைகள் தொழில் வகைகளின் சதவீத பரம்பலை குறித்துநிற்கின்றது.

மூலம்: தற்போதைய ஆய்வின் அடிப்படையிலான கணிப்பீடு

2014 ஆம் ஆண்டில் மாத்தளை மாவட்டத்தில் கட்டுமானத்துறைக்கான மொத்த தொழில்வாய்ப்புகள் 6,906 ஆகும். இது 2018 ஆம் ஆண்டில் 11,122 நபர்களாக அதிகரிக்கும். 2018 ஆம் ஆண்டிற்கான 11,122 நபர்களில், 8,175 நபர்கள் கைவினைஞர்களாகவும், 1,112 நபர்கள் தொழில்நுட்பவியலாளர்களாகவும், 890 நபர்கள் எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஊழியர்களாகவும், 556 நபர்கள் இயந்திர இயக்குநர்களாகவும், 389 நபர்கள் தொழில்சார் நிபுணர்களாகவும் இருப்பர். அட்டவணை 3.12 இன் நிழற்றப்பட்ட பகுதிகள் தொழில்களின் அடிப்படையில் லேதிகமாக தேவைப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கையினை காட்டுகின்றது.

மாத்தளை மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு கட்டுமான கைத்தொழிற்துறையிற்கு வருடாந்தம் 620 கைவினைஞர்களும், 84 தொழில்நுட்பவியலாளர்களும், 67 எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஊழியர்களும் 42 இயந்திர இயக்குநர்களும், 30 தொழில்சார் நிபுணர்களும் தேவைப்படுகின்றனர்.

அட்டவணை 3.12

நுவரெலியா மாவட்டத்தில் கட்டுமான வேலைவாய்ப்பு தொடர்பான கணிப்பீடு, 2013 - 2018

ஆண்டு	தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை						மேலதிக தொழிலாளர்கள்				
	தொழில்சார் நிபுணர்கள்	எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஊழியர்கள்	தொழில்நுட்பவியலாளர் தரம்	கைவினைஞர்கள்	இயந்திர இயக்குநர்கள்	மொத்தம்	தொழில்சார் நிபுணர்கள்	எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஊழியர்கள்	தொழில்நுட்பவியலாளர் தரம்	கைவினைஞர்கள்	இயந்திர இயக்குநர்கள்
	(3.5)	(8.0)	(10.0)	(73.5)	(5.0)	(100.0)					
2013	118	269	337	2475	168	3368					
2014	130	296	371	2723	185	3705	12	27	34	248	17
2015	143	326	408	2995	204	4075	13	30	37	272	19
2016	157	359	448	3295	224	4483	14	33	41	300	20
2017	173	394	493	3624	247	4931	16	36	45	329	22
2018	190	434	542	3987	271	5424	17	39	49	362	25
வருடாந்த சராசரி தேவைகள் (நபர்களின் எண்ணிக்கை)							**14**	**33**	**41**	**302**	**21**

குறிப்பு: அடைப்புக் குறிக்குள் உள்ள எண்ணிக்கைகள் தொழில் வகைகளின் சதவீத பரம்பலை குறித்துநிற்கின்றது.
மூலம்: தற்போதைய ஆய்வின் அடிப்படையிலான கணிப்பீடு

2014 ஆம் ஆண்டில் நுவரெலியா மாவட்டத்தில் கட்டுமானத்துறைக்கான மொத்த தொழில்வாய்ப்புகள் 3,368 ஆகும். இது 2018 ஆம் ஆண்டில் 5,424 நபர்களாக அதிகரிக்கும். 2018 ஆம் ஆண்டிற்கான 5,424 நபர்களில், 3,987 நபர்கள் கைவினைஞர்களாகவும், 542 நபர்கள் தொழில்நுட்பவியலாளர்களாகவும், 434 நபர்கள்

எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஊழியர்களாகவும், 271 நபர்கள் இயந்திர இயக்குநர்களாகவும், 190 நபர்கள் தொழில்சார் நிபுணர்களாகவும் இருப்பர். அட்டவணை 4.12 இல் தொழில்களின் அடிப்படையில் லேதிகமாக தேவைப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கையானது தரப்பட்டுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு கட்டுமான கைத்தொழிற்துறையிற்கு வருடாந்தம் 302 கைவினைஞர்களும், 41 தொழில்நுட்பவியலாளர்களும், 33 எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஊழியர்களும் 21 இயந்திர இயக்குநர்களும், 14 தொழில்சார் நிபுணர்களும் தேவைப்படுகின்றனர்.

அட்டவணை 3.13

கட்டுமான வேலைவாய்ப்புக்கான சராசரி வருடாந்த தேவைப்பாடுகள், 2014 - 2018

தொழில் வகை	கண்டி	மாத்தளை	நுவரெலியா	மத்திய மாகாணம்
தொழில்சார் நிபுணர்கள்	69	30	14	**113**
எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஊழியர்கள்	158	67	33	**258**
தொழில்நுட்பவியலாளர்கள் தரம்	197	84	41	**322**
கைவினைஞர்கள்	1,448	620	302	**2,370**
இயந்திர இயக்குநர்களும்	98	42	21	**161**
மொத்தம்	**1,970**	**843**	**411**	**3,224**

மூலம்: கள தரவுசேகரிப்பு, 2013

கண்டி, மாத்தளை, நுவரெலியா மற்றும் மத்திய மாகாணம் ஆகியவற்றுக்கான கட்டுமான தொழிலாளர்களுக்கான சராசரி வருடாந்த மேலதிக தேவைகள் அட்டவணை 3.13 இல் தரப்பட்டுள்ளன. மத்திய மாகாணத்தின் கட்டுமானத்துறையிற்கு அடுத்த ஐந்து வருட காலப்பகுதிக்கு சராசரியாக 113 தொழில்சார் நிபுணர்களும், 258 எழுதுவினைஞர் உடன் தொடர்புபட்ட ஊழியர்களும், 322 தொழில்நுட்பவியலாளர் தர ஊழியர்களும், 2,370 கைவினைஞர்களும் மற்றும் 161 இயந்திர இயக்குநர்களும் தேவைப்படுகின்றனர்

3.1.5 மாவட்ட மற்றும் திறன்களின் அடிப்படையில் கட்டுமான வேலைவாய்ப்பு தொடர்பான மதிப்பீடு

கைவினைஞர் தொழிற்பிரிவினுள் உள்ளடங்குகின்ற ஊழியர்களின் வகைகள்

நாம் மத்திய மாகாணத்தின் மாவட்டங்களில் கைவினைஞர் தொழிலினை தனித்தனியான பிரத்தியேக தொழில் வகைகளாக பிரிப்பதற்கு மாதிரி கணக்கெடுப்பு தகவல்களையும் மற்றும் கட்டுமான கைத்தொழிற்துறைக்கான 2006 ஆம் ஆண்டிற்குரிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) திட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட கட்டுமான கைவினைஞர்களின் ஒப்பீட்டளவிலான பரம்பலினையும் பயன்படுத்தியுள்ளோம். கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கான பிரத்தியேகமான தொழில் வகைகளில் ஈடுபடுகின்ற மேலதிகமான தொழிலாளர்கள் தொடர்பான விபரங்கள் அட்டவணைகள் 3.14 - 3.16 களில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.14
கைவினைஞர் தொழில் வகைகளுக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - கண்டி

தொழில் வகை	மொத்த கைவினைஞர்களின் சதவீதம்	2014	2015	2016	2017	2018	வருடாந்த சராசரி தேவைகள்
மேசன் மற்றும் சாந்து பூசுபவர்	34.0	403	444	488	537	590	**492**
தச்சு வேலையாளர்	17.0	202	222	244	268	295	**246**
பலகை அடிப்பவர்	14.0	166	183	201	221	243	**203**
மின்னியலாளர்	7.5	89	98	108	118	130	**109**
குழாய்ப்பணியாளர் மற்றும் குழாய் பொருத்துநர்	7.0	83	91	100	110	122	**101**
அலுமினிய சட்டகம்	6.5	77	85	93	103	113	**94**

புனைபவர்							
ரைல்ஸ் பதிப்பவர்	5.0	59	65	72	79	87	**72**
கம்பி வளைப்பவர் மற்றும் உருக்கு சட்டகம் பொருத்துநர்	5.0	59	65	72	79	87	**72**
வர்ணம் தீட்டுபவர்	4.0	47	52	57	63	69	**58**
மொத்தம்	**100**	**1,186**	**1,305**	**1,434**	**1,578**	**1,736**	**1,448**

மூலம்: கள தரவு சேகரிப்பு 2013

அட்டவணை 3.15

கைவினைஞர் தொழில் வகைகளுக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - மாத்தளை

தொழில் வகை	மொத்த கைவினைஞர்களின் சதவீதம்	2014	2015	2016	2017	2018	வருடாந்த சராசரி தேவைகள்
மேசன் மற்றும் சாந்து பூசுபவர்	34.0	173	190	209	230	253	**211**
தச்சு வேலையாளர்	17.0	86	95	104	115	126	**105**
பலகை அடிப்பவர்	14.0	71	78	86	95	104	**87**
மின்னியலாளர்	7.5	38	42	46	51	56	**46**
குழாய்ப் பணியாளர் மற்றும் குழாய் பொருத்துநர்	7.0	36	39	43	47	52	**43**
அலுமினிய சட்டகம் புனைபவர்	6.5	33	36	40	44	48	**40**
ரைல் பதிப்பவர்	5.0	25	28	31	34	37	**31**
கம்பி வளைப்பவர் மற்றும் உருக்கு சட்டகம் பொருத்துநர்	5.0	25	28	31	34	37	**31**
வர்ணம் தீட்டுபவர்	4.0	20	22	25	27	30	**25**
மொத்தம்	**100**	**508**	**558**	**614**	**675**	**743**	**620**

மூலம்: கள தரவு சேகரிப்பு 2013

அட்டவணை 3.15
கைவினைஞர் தொழில் வகைகளுக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - நுவரெலியா

தொழில் வகை	மொத்த கைவினைஞர்களின் சதவீதம்	2014	2015	2016	2017	2018	வருடாந்த சராசரி தேவைகள்
மேசன் மற்றும் சாந்து பூசுபவர்	34.0	84	92	102	112	123	**103**
தச்சு வேலையாளர்	17.0	42	46	51	56	62	**51**
பலகை அடிப்பவர்	14.0	35	38	42	46	51	**42**
மின்னியலாளர்	7.5	19	20	23	25	27	**23**
குழாய்ப்பணியாளர் மற்றும் குழாய் பொருத்துநர்	7.0	17	19	21	23	25	**21**
அலுமினிய சட்டகம் புனைபவர்	6.5	16	18	20	21	24	**20**
ரைல் பதிப்பவர்	5.0	12	14	15	16	18	**15**
கம்பி வளைப்பவர் மற்றும் உருக்கு சட்டகம் பொருத்துநர்	5.0	12	14	15	16	18	**15**
வர்ணம் தீட்டுபவர்	4.0	10	11	12	13	14	**12**
மொத்தம்	**100**	**248**	**272**	**300**	**329**	**362**	**302**

மூலம்: கள தரவு சேகரிப்பு 2013

கைவினைஞர் தொழில் வகைகளிற்கு வருடாந்தம் சராசரியாக தேவைப்படுகின்ற தொழிலாளர்கள் தொடர்பான சாரம்சமானது அட்டவணை 3.17 இல் தரப்பட்டுள்ளது. அதற்கிணங்க, மத்திய மாகாணத்தில் வருடாந்தம் 806 மேசன் மற்றும் சாந்து பூசுபவர்கள், 402 தச்சு வேலையாளர்கள், 332 கொங்கிறீட் வேலையாளர்கள், 178 மின்னியலாளர்கள், 165 குழாய்ப்பணியாளர் மற்றும் குழாய் பொருத்துநர்கள், 154

அலுமினிய சட்டகம் புனைபவர்கள், 118 ரைல் பதிப்பவர்கள், 118 கம்பி வளைப்பவர் மற்றும் உருக்கு சட்டகம் பொருத்துநர்கள், 95 வர்ணம் தீட்டுபவர்கள் ஆகியோருக்கான தேவைகள் காணப்படும்.

அட்டவணை 3.17

கைவினைஞர் துறையிலுள்ள மேலதிக வேலைவாய்ப்புகள் (வருடாந்த சராசரி), 2014 - 2018

தொழில் வகை	கண்டி	மாத்தளை	நுவரெலியா	மத்திய மாகாணம்
மேசன் மற்றும் சாந்து பூசுபவர்	492	211	103	**806**
தச்சு வேலையாளர்	246	105	51	**402**
பலகை அடிப்பவர்	203	87	42	**332**
மின்னியலாளர்	109	46	23	**178**
குழாய்ப்பணியாளர் மற்றும் குழாய் பொருத்துநர்	101	43	21	**165**
அலுமினிய சட்டகம் புனைபவர்	94	40	20	**154**
ரைல் பதிப்பவர்	72	31	15	**118**
கம்பி வளைப்பவர் மற்றும் உருக்கு சட்டகம் பொருத்துநர்	72	31	15	**118**
வர்ணம் தீட்டுபவர்	58	25	12	**95**
மொத்தம்	**1,448**	**620**	**302**	**2,370**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

இயந்திர இயக்குநர் தொழில் வகையிலுள்ள ஊழியர்களின் பிரிவுகள்

நாம் மத்திய மாகாணத்தின் மாவட்டங்களில் கைவினைஞர் தொழிலினை தனித்தனியான பிரத்தியேக தொழில்களாக பிரிப்பதற்கு கட்டுமான கைத்தொழிற்துறைக்கான 2006 ஆம் ஆண்டிற்குரிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) திட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட கட்டுமானத்துறையில் உள்ள இயந்திர இயக்குநர்களின் ஒப்பீட்டளவிலான பரம்பலினை பயன்படுத்தியுள்ளோம். இயந்திர இயக்குநர் தொழில் வகையிலுள்ள பிரத்தியேகமான தொழில்களிற்கான மேலதிக

தொழிலாளர்கள் தொடர்பான விபரங்கள் அட்டவணை 3.18 - 3.21 களில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.18

இயந்திர இயக்குநர்களுக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - கண்டி மாவட்டம்

தொழில் வகை	மொத்த இயந்திர இயக்குநர்களின் சதவீதம்	2014	2015	2016	2017	2018	வருடாந்த சராசரி தேவைகள்
கனரக இயந்திர இயக்குநர்	42.0	34	37	41	45	50	41
கட்டுமான இயந்திர திருத்துநர்	34.0	28	30	33	36	40	34
இலகு இயந்திர இயக்குநர்	24.0	19	21	24	26	28	24
மொத்தம்	**100.0**	**81**	**89**	**98**	**107**	**118**	**99**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

மத்திய மாகாணத்தில் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வருடாந்தம் 68 கனரக இயந்திர இயக்குநர்கள், 55 கட்டுமான இயந்திர திருத்துநர்கள் மற்றும் 39 இலகு இயந்திர இயக்குநர்கள் ஆகியோருக்கான தேவைகள் காணப்படும்.

அட்டவணை 3.19

இயந்திர இயக்குநர்களுக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - மாத்தளை மாவட்டம்

தொழில் வகை	மொத்த இயந்திர இயக்குநர்களின் சதவீதம்	2014	2015	2016	2017	2018	வருடாந்த சராசரி தேவைகள்
கனரக இயந்திர இயக்குநர்	42.0	15	16	18	19	21	18
கட்டுமான	34.0	12	13	14	16	17	14

இயந்திர திருத்துநர்							
இலகு இயந்திர இயக்குநர்	24.0	8	9	10	11	12	10
மொத்தம்	**100.0**	**35**	**38**	**42**	**46**	**51**	**42**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

அட்டவணை 3.20

இயந்திர இயக்குநர்களுக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - நுவரெலியா மாவட்டம்

தொழில் வகை	மொத்த இயந்திர இயக்குநர்களின் சதவீதம்	2014	2015	2016	2017	2018	வருடாந்த சராசரி தேவைகள்
கனரக இயந்திர இயக்குநர்	42.0	7	8	8	9	11	9
கட்டுமான இயந்திர திருத்துநர்	34.0	6	6	7	7	9	7
இலகு இயந்திர இயக்குநர்	24.0	4	5	5	5	6	5
மொத்தம்	**100.0**	**17**	**19**	**20**	**22**	**25**	**21**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

அட்டவணை 3.21

இயந்திர இயக்குநர் துறையிலுள்ள மேலதிக வேலைவாய்ப்புகள் (வருடாந்த சராசரி), 2014 - 2018

தொழில் வகை	கண்டி	மாத்தளை	நுவரெலியா	மத்திய மாகாணம்
கனரக இயந்திர இயக்குநர்	41	18	9	68
கட்டுமான இயந்திர திருத்துநர்	34	14	7	55
இலகு இயந்திர இயக்குநர்	24	10	5	39
மொத்தம்	**99**	**42**	**21**	**162**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

தொழில்நுட்ப தரத்திலான ஊழியர்களின் பிரிவுகள்

நாம் மத்திய மாகாணத்தின் மாவட்டங்களில் தொழில்நுட்ப தரத்திலான ஊழியர்களை தனித்தனியான பிரத்தியேக தொழில்களாக பிரிப்பதற்கு கட்டுமான கைத்தொழிற்துறைக்கான 2006 ஆம் ஆண்டிற்குரிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) திட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட கட்டுமானத்துறையில் உள்ள தொழில்நுட்ப தரத்திலான தொழில் வகையின் ஒப்பீட்டளவிலான பரம்பலினை பயன்படுத்தியுள்ளோம். கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களிற்கான பிரத்தியேகமான தொழில்வகைகளுக்கான மேலதிக தொழிலாளர்கள் அட்டவணைகள் 3.22 - 3.25 களில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.22
தொழில்நுட்ப நிலையில் உள்ளோருக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - கண்டி மாவட்டம்

தொழில் வகை	மொத்த தொழில்நுட்ப தரத்திலுள்ள ஊழியர்களின் சதவீதம்	2014	2015	2016	2017	2018	வருடாந்த சராசரி தேவைகள்
தொழில்நுட்ப உத்தியோகத்தர்	37.0	60	66	72	80	87	73
சிவில் வேலை மேற்பார்வையாளர்	28.1	45	50	55	60	66	55
இயந்திர பொருத்துர்	12.1	19	22	24	26	29	24
மேற்பார்வையாளர்	8.9	14	16	17	19	21	18
மின்னியல் தொழில்நுட்பவியலாளர்	8.9	14	16	17	19	21	18
வரைபடக் கலைஞர்	2.8	5	5	5	6	7	6
நிலச் சீரமைப்பாளர்	2.1	3	4	4	5	5	4
மொத்தம்	**100.0**	**161**	**178**	**195**	**215**	**236**	**197**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

அட்டவணை 3.23

தொழில்நுட்ப நிலையில் உள்ளோருக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - மாத்தளை மாவட்டம்

தொழில் வகை	மொத்த தொழில்நுட்ப தரத்திலுள்ள ஊழியர்களின் சதவீதம்	2014	2015	2016	2017	2018	வருடாந்த சராசரி தேவைகள்
தொழில்நுட்ப உத்தியோகத்தர்	37.0	26	28	31	34	37	31
சிவில் வேலை மேற்பார்வையாளர்	28.1	19	21	24	26	28	24
இயந்திர பொருத்துர்	12.1	8	9	10	11	12	10
மேற்பார்வையாளர்	8.9	6	7	7	8	9	8
மின்னியல் தொழில்நுட்பவியலாளர்	8.9	6	7	7	8	9	8
வரைபடக் கலைஞர்	2.8	2	2	2	3	3	2
நிலச் சீரமைப்பாளர்	2.1	1	2	2	2	2	2
மொத்தம்	**100.0**	**69**	**76**	**84**	**92**	**101**	**84**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

அட்டவணை 3.24

தொழில்நுட்ப நிலையில் உள்ளோருக்கான மேலதிக வேலைவாய்ப்புகளின் பிரிவுகள் - நுவரெலியா

தொழில் வகை	மொத்த தொழில்நுட்ப தரத்திலுள்ள ஊழியர்களின் சதவீதம்	2014	2015	2016	2017	2018	வருடாந்த சராசரி தேவைகள்
தொழில்நுட்ப உத்தியோகத்தர்	37.0	13	14	15	17	18	15
சிவில் வேலை மேற்பார்வையாளர்	28.1	10	10	12	13	14	12
இயந்திர பொருத்துர்	12.1	4	4	5	5	6	5
மேற்பார்வையாளர்	8.9	3	3	4	4	4	4
மின்னியல் தொழில்நுட்பவியலாளர்	8.9	3	3	4	4	4	4

வரைபடக் கலைஞர்	2.8	1	1	1	1	1	1
நிலச் சீரமைப்பாளர்	2.1	1	1	1	1	1	1
மொத்தம்	**100.0**	**34**	**37**	**41**	**45**	**49**	**41**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

அட்டவணை 3.25

தொழில்நுட்ப பிரிவிலுள்ள மேலதிக வேலைவாய்ப்புகள் (வருடாந்த சராசரி), 2014 - 2018

தொழில் வகை	கண்டி	மாத்தளை	நுவரெலியா	மத்திய மாகாணம்
தொழில்நுட்ப உத்தியோகத்தர்	73	31	15	119
சிவில் வேலை மேற்பார்வையாளர்	55	24	12	91
இயந்திர பொருத்துர்	24	10	5	39
மேற்பார்வையாளர்	18	8	4	30
மின்னியல் தொழில்நுட்பவியலாளர்	18	8	4	30
வரைபடக் கலைஞர்	6	2	1	9
நிலச் சீரமைப்பாளர்	4	2	1	7
மொத்தம்	**197**	**84**	**41**	**322**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

அட்டவணை 3.26

எதிர்கால வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்

தொழில் வகை	2011 ஆம் ஆண்டில் இலங்கையின் தொழிலாளர்களுக்கு வெளிநாட்டுக்களில் நிலவிய கேள்விகள் மற்றும் வழங்கல்கள் என்பவற்றுக்கு இடையிலான பொருத்தப்பாடின்மை			வெளிநாட்டு கேள்விகளுக்கு வழங்கல்கள் மேற்கொள்ளப்படாதவைகளில் 5% இனை மத்திய மாகாணம் வழங்குமாயின், அவற்றுக்கான பயிற்சி தேவைகள்
	வேலைக்கான கோரிக்கைகள்	வெளிநாடுகளிற்கு வழங்கப்பட்டவைகள்	வழங்கல்கள் றேகொள்ளப்படாதவைகள்	
கைவினைஞர்				
மேசன் மற்றும் சாந்து பூசுபவர்	5925	1199	4726	236
தச்சு வேலையாளர்	3961	925	3036	152

பலகை அடிப்பவர்	1429	171	1258	63
மின்னியலாளர்	6557	1290	5267	263
குழாய்ப்பணியாளர் மற்றும் குழாய் பொருத்துநர்	5417	888	4529	226
அலுமினிய சட்டகம் புனைபவர்	789	233	556	28
ரைல் பதிப்பவர்	998	337	661	33
கம்பி வளைப்பவர் மற்றும் உருக்கு சட்டகம் பொருத்துநர்	820	129	691	35
வர்ணம் தீட்டுபவர்	2610	422	2188	109
இயந்திர இயக்குநர்				
கனரக இயந்திர இயக்குநர்	3984	1483	2501	125
கட்டுமான இயந்திர திருத்துநர்	327	28	299	15
இலகு இயந்திர இயக்குநர்	1421	384	1037	52
தொழில்நுட்ப தர ஊழியர்கள்				
தொழில்நுட்ப உத்தியோகத்தர்	1026	859	170	9
சிவில் வேலை மேற்பார்வையாளர்	313	131	182	9
இயந்திர பொருத்துர்	2153	1350	803	40
மேற்பார்வையாளர்	1340	1025	315	16
மின்னியல் தொழில்நுட்பவியலாளர்	1899	1009	890	45
வரைபடக் கலைஞர்	472	183	289	14
நிலச் சீரமைப்பாளர்	8		8	0

மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், 2011, 2012

அட்டவணை 3.27

மத்திய மாகாணத்தில் கட்டுமான துறையிலுள்ள மொத்த பயிற்சி தேவைப்பாடுகள் (வருடாந்த சராசரி தேவைகள்), 2014 -2018

தொழில் வகை	உள்ளூர் கேள்விகள் தொடர்பான மதிப்பீடு	வெளிநாட்டு கேள்விகள் தொடர்பான மதிப்பீடு	மொத்த கேள்விகள் தொடர்பான மதிப்பீடு

	2,370	**1,145**	**3,515**
கைவினைஞர்	806	236	**1,042**
மேசன் மற்றும் சாந்து பூசுபவர்	402	152	**554**
தச்சு வேலையாளர்	332	63	**395**
பலகை அடிப்பவர்	178	263	**441**
மின்னியலாளர்	165	226	**391**
குழாய்ப்பணியாளர் மற்றும் குழாய் பொருத்துநர்	154	28	**182**
அலுமினிய சட்டகம் புனைபவர்	118	33	**151**
ரைல் பதிப்பவர்	118	35	**153**
கம்பி வளைப்பவர் மற்றும் உருக்கு சட்டகம் பொருத்துநர்	95	109	**204**
வர்ணம் தீட்டுபவர்			
	162	192	**354**
இயந்திர இயக்குநர்	68	125	**193**
கனரக இயந்திர இயக்குநர்	55	15	**70**
கட்டுமான இயந்திர திருத்துநர்	39	52	**91**
இலகு இயந்திர இயக்குநர்			
	322	**133**	**455**
தொழில்நுட்ப தர ஊழியர்கள்	119	9	**128**
தொழில்நுட்ப உத்தியோகத்தர்	91	9	**100**
சிவில் வேலை மேற்பார்வையாளர்	39	40	**79**
இயந்திர பொருத்துர்	30	16	**46**
மேற்பார்வையாளர்	30	45	**75**
மின்னியல் தொழில்நுட்பவியலாளர்	9	14	**23**
வரைபடக் கலைஞர்	7	0	**7**
எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஊழியர்கள்	**258**		**258**
தொழில்சார் வல்லுநர்கள்	**113**		**113**
மொத்தம்	**3,224**	**1,470**	**4,694**

மூலம்: கள தரவு சேகரிப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு, 2013

3.1.6. கட்டுமான தொழிலாளர்களுக்கு வெளிநாட்டில் நிலவுகின்ற கேள்விகள்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தரவுத் தளத்தின் அடிப்படையில், எம்மால் வெளிநாட்டிற்கு வழங்கப்படாத கட்டுமான தொழிலாளர்களின் எண்ணிக்கையானது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பதிவுசெய்யப்பட்டுள்ள தொழிலுக்கான கோரிக்கைகள் மற்றும் ஒரு குறிப்பிட்ட தொழிலுக்காக வழங்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடானது வழங்கப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கையாகும். அவ்வாறே, நாம் வெளிநாடுகளிற்கு அனுப்புவதற்காக வழங்கப்படாத தொழிலாளர்களில் 5 % இனருக்கு மத்திய மாகாணத்தினால் பயிற்சிகளை வழங்கமுடியுமென நாம் கருதுகின்றோம். ஒவ்வொரு தொழில் வகைகளின் கீழும் மத்திய மட்டம், திறன் மற்றும் பகுதி - திறன் மட்டம் ஆகியவற்றுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான பயிற்சி தேவைகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. வெளிநாட்டு வேலைகளுக்கான பயிற்சித் தேவைகள் அட்டவணையின் இறுதி நிரலில் தரப்பட்டுள்ளது. மத்திய மாகாணமானது, அட்டவணை 3.26 இன் இறுதி நிரலில் ஒவ்வொரு தொழில் வகைகளின் கீழும் தரப்பட்டுள்ள எண்ணிக்கையான தொழிலாளர்களுக்கு வருடாந்தம் வெளிநாட்டு தொழிற்சந்தைகளுக்குரிய பயிற்சிகளை வழங்கி அதன் மூலம் பயிற்சி பெற்ற தொழிலாளர்களை வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளுக்காக அனுப்பிவைப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

3.1.7. கட்டுமான துறையிற்கான வருடாந்த பயிற்சி தேவைகள்

இப்பகுதியில், நாம் வருடாந்த சராசரி கேள்விகளின் அடிப்படையில் மத்திய மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களிற்குமான திறனுடைய கட்டுமான தொழிலாளர்களுக்கான கேள்விகளை சுருக்கமாக வழங்கியுள்ளோம். 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிக்கான மொத்த

தொழிலாளர்களுக்குரிய பயிற்சி தேவைப்பாடுகள் அட்டவணை 3.27 இல் தரப்பட்டுள்ளன. உள்ளூர் கேள்விகளுக்கான மதிப்பீட்டினையும் வெளிநாட்டு கேள்விகளுக்கான மதிப்பீட்டினையும் ஒன்றுசேர்ப்பதன் மூலம் மொத்த கேள்வியானது பெறப்படுகின்றது.

3.2 இலகு பொறியியல் துறை

3.2.1 பின்னணி

இத்துறையில் காய்ச்சி இணைத்தல் வேலைகள், இரும்பு மற்றும் உருக்கு புனைதல், லேத் இயந்திர வேலைகள், உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல், விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல், கட்டுமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல், பித்தளை மற்றும் ஏனைய உலோகங்கள் தொடர்பான கைவேலைகள் என்பன உள்ளடங்குகின்றன. இத்துறையில் பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகள் அல்லது அமைப்புகள் தொடர்பான தகவல்கள் மிகக் குறைவாக காணப்படுவதானது தகவல் சேகரிப்பினை மிகவும் தீவிரமாக பாதித்துள்ளது. பிரதேச செயலாளர் (DS) பிரிவுகளில் பதிவுசெய்யப்பட்டுள்ள அமைப்புகள் தொடர்பான பட்டியலானது மிகவும் குறைந்தளவான தகவல்களை கொண்டுள்ளது: அவற்றின் செயற்பாட்டு அளவு அதாவது சிறியது, நடுத்தரமானது அல்லது பெரியது, முதலீடு, தொழில்புரியும் ஊழியர்களின் எண்ணிக்கை, வேறு போன்றன தொடர்பான தகவல்கள் காணப்படவில்லை. பிரதேச செயலகங்களில் (DS) ஒவ்வொரு தொழில் வகையின் கீழும் பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகளிடையில் ஐந்து (05) தொழிலாளர்களை விடவும் கூடுதலான, மூன்று (03) தொடக்கம் ஐந்து (05) வரையான தொழிலாளர்களைக் கொண்டுள்ள மற்றும் இரண்டு (02) தொழிலாளர்களைக் கொண்டுள்ள நிறுவகங்களின் எண்ணிக்கையினை அடையாளம் காண்பதற்காக மாதிரிக் கணக்கெடுப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. மாதிரிக் கணக்கெடுப்பின் மூலம் தெரியப்படுத்தப்பட்ட நிறுவகங்களின் சதவீத பரம்பலின்

அடிப்படையில் அனைத்து நிறுவகங்களும், ஐந்து (05) தொழிலாளர்களை விடவும் கூடுதலான தொழிலாளர்களை கொண்டுள்ளவை, மூன்று (03) தொடக்கம் ஐந்து (05) வரையான தொழிலாளர்களைக் கொண்டுள்ளவை மற்றும் இரண்டு (02) தொழிலாளர்களைக் கொண்டுள்ள நிறுவகங்கள் என்றவாறு முதலில் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியிலும் பின்னர் மாவட்ட ரீதியிலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. வேலைவாய்ப்பு எண்ணிக்கைகளின் அடிப்படையில் நிறுவகங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்கள் அட்டவணை 3.28 இல் தரப்பட்டுள்ளது. பின்வரும் முறையினை பயன்படுத்தி தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கையானது கணக்கிடப்பட்டுள்ளது: ஐந்திற்கும் (05) கூடுதலான தொழில்வாய்ப்புகள் காணப்படுமாயின் நிறுவகங்களின் எண்ணிக்கையினை ஐந்தினால் (05) பெருக்குதல், மூன்று (03) தொடக்கம் ஐந்து (05) வரையான தொழில்வாய்ப்புகள் காணப்படுமாயின் நிறுவகங்களின் எண்ணிக்கையினை நான்கினால் (04) பெருக்குதல், இரண்டு தொழில்வாய்ப்புகள் காணப்படுமாயின் நிறுவகங்களின் எண்ணிக்கையினை இரண்டினால் (02) பெருக்குதல்.

3.2.2 நிறுவகங்கள் மற்றும் வேலைவாய்ப்பு எண்ணிக்கைகள்

மத்திய மாகாணத்திலுள்ள இலகு பொறியியல் நிறுவகங்களின் எண்ணிக்கை தொடர்பான மதிப்பீடு மற்றும் அவற்றிலுள்ள மொத்த வேலைவாய்ப்பு என்பன தொடர்பான தகவல்கள் அட்டவணை 3.28 இல தரப்பட்டுள்ளது. கண்டி மாவட்டத்தில் செயற்பட்டுவரும் இலகு பொறியியல் நிறுவகங்களின் மொத்த எண்ணிக்கை 529 ஆகும். 2013 ஆம் ஆண்டில் கண்டி மாவட்டத்திலுள்ள கணிக்கப்பட்ட இலகு பொறியியல் துறைசார் வேலைவாய்ப்புகளின் மொத்த எண்ணிக்கை 1360 ஆகும். இத்தொழிலாளர்கள் 529 வேலைத் தளங்களில் வெவ்வேறான செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர். பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்ற தொழிலாளர்களின் பரம்பல் பின்வருமாறு: 20% ஆனோர் காய்ச்சி இணைக்கும் கடைகளிலும், 19% ஆனோர் இரும்பு மற்றும் உருக்கு புனைதல் வேலைத்

தளங்களிலும், 19% ஆனோர் பித்தளை மற்றும் ஏனைய உலோகங்கள் தொடர்பான வேலைத் தளங்களிலும், 15% ஆனோர் விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்க்கும் இடங்களிலும், 12% ஆனோர் கட்டுமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்க்கும் வேலைத் தளங்களிலும், 9% ஆனோர் உற்பத்தி இயந்திர மற்றும் உபகரணங்கள் பழுதுபார்க்கும் வேலைத் தளங்களிலும், 7% ஆனோர் லேத் இயந்திர வேலைத்தளங்களிலும் தொழில்புரிந்து வருகின்றனர்.

மாத்தளை மாவட்டத்தில் செயற்பட்டுவரும் இலகு பொறியியல் நிறுவகங்களின் மொத்த எண்ணிக்கை 433 ஆகும். 2013 ஆம் ஆண்டில் மாத்தளை மாவட்டத்திலுள்ள கணிக்கப்பட்ட இலகு பொறியியல் துறைசார் வேலைவாய்ப்பின் மொத்த எண்ணிக்கை 1308 ஆகும். பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்ற தொழிலாளர்களின் பரம்பல் பின்வருமாறு: 24% ஆனோர் காய்ச்சி இணைக்கும் கடைகளிலும், 22% ஆனோர் இரும்பு மற்றும் உருக்கு புனைதல் வேலைத் தளங்களிலும், 19% ஆனோர் விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்க்கும் இடங்களிலும், 10% ஆனோர் பித்தளை மற்றும் ஏனைய உலோகங்கள் தொடர்பான வேலைத் தளங்களிலும், 9% ஆனோர் உற்பத்தி இயந்திர மற்றும் உபகரணங்கள் பழுதுபார்க்கும் வேலைத் தளங்களிலும், 8% ஆனோர் கட்டுமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்க்கும் வேலைத் தளங்களிலும், 6% ஆனோர் லேத் இயந்திர வேலைத்தளங்களிலும் தொழில்புரிந்து வருகின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் செயற்பட்டுவரும் இலகு பொறியியல் நிறுவகங்களின் மொத்த எண்ணிக்கை 333 ஆகும். 2013 ஆம் ஆண்டில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள கணிக்கப்பட்ட இலகு பொறியியல் துறைசார் வேலைவாய்ப்பின் மொத்த எண்ணிக்கை 816 ஆகும். பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்ற தொழிலாளர்களின் பரம்பல் பின்வருமாறு: 24% ஆனோர் காய்ச்சி இணைக்கும் கடைகளிலும், 24% ஆனோர் விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்க்கும் இடங்களிலும், 23% ஆனோர் இரும்பு மற்றும் உருக்கு புனைதல்

வேலைத் தளங்களிலும், 09% ஆனோர் உற்பத்தி இயந்திர மற்றும் உபகரணங்கள் பழுதுபார்க்கும் வேலைத் தளங்களிலும், 08% ஆனோர் கட்டுமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்க்கும் வேலைத் தளங்களிலும், 06% ஆனோர் பித்தளை மற்றும் ஏனைய உலோகங்கள் தொடர்பான வேலைத் தளங்களிலும், 5% ஆனோர் லேத் இயந்திர வேலைத்தளங்களிலும் தொழில்புரிந்து வருகின்றனர்.

அட்டவணை 3.28

இலகு பொறியியல் துறைசார் நிறுவகங்கள் மற்றும் வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை - 2013

தொ. இல	தொழில் வகை	நிறுவகங்களின் எண்ணிக்கை				தொழிலாளர்களின் எண்ணிக்கை
		>5 தொழிலாளர்கள்	3 தொடக்கம் 5 தொழிலாளர்கள்	2 தொழிலாளர்கள்	மொத்தம்	
Kandy கண்டி						
1	காய்ச்சி இணைத்தல் வேலை	6	31	61	98	276
2	இரும்பு வேலை மற்றும் உருக்கு புனைதல்	8	16	77	101	261
3	லேத் இயந்திர வேலை		12	21	33	94
4	உற்பத்தி இயந்திர மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல்		13	32	45	116
5	விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல்			102	102	204
6	கட்டுமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல்	4	18	33	55	158
7	பித்தளை மற்றும் ஏனைய உலோகங்கள் தொடர்பான வேலைகள்		28	70	98	252
	மொத்தம்	**18**	**120**	**391**	**529**	**1,360**
மாத்தளை						
1	காய்ச்சி இணைத்தல் வேலை		32	63	95	**254**
2	இரும்பு வேலை மற்றும் உருக்கு புனைதல்		24	68	92	**232**
3	லேத் இயந்திர வேலை		8	16	24	**64**
4	உற்பத்தி இயந்திர மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல்		6	36	42	**96**
5	விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல்			97	97	196
6	கட்டுமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல்		6	32	38	**88**

7	பித்தளை மற்றும் ஏனைய உலோகங்கள் தொடர்பான வேலைகள்		9	36	45	**108**
	மொத்தம்		**85**	**348**	**433**	**1,038**
நுவரெலியா						
1	காய்ச்சி இணைத்தல் வேலை		24	51	75	198
2	இரும்பு வேலை மற்றும் உருக்கு புனைதல்		28	36	64	184
3	லேத் இயந்திர வேலை		5	12	17	44
4	உற்பத்தி இயந்திர மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல்		6	26	32	76
5	விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல்			98	98	198
6	கட்டுமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல்		6	22	28	68
7	பித்தளை மற்றும் ஏனைய உலோகங்கள் தொடர்பான வேலைகள்		5	14	19	48
	மொத்தம்		**74**	**259**	**333**	**816**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

3.2.3. தொழில் அடிப்படையில் வேலைவாய்ப்பு தொடர்பான மதிப்பீடு

இலகு பொறியியல் துறையில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட தொழில் வகைளிலுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையானது மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வேலைவாய்ப்புகளிலிருந்து கணிக்கப்பட்டுள்ளது. இத்துறையிலுள்ள காய்ச்சி இணைப்பவர்களின் எண்ணிக்கையானது பின்வரும் சமன்பாட்டினை பயன்படுத்தி கணிக்கப்பட்டுள்ளது:

காய்ச்சி இணைப்பவர்களின் எண்ணிக்கையானது காய்ச்சி இணைக்கும் கடைகளிலுள்ள தொழிலாளர்கள் மற்றும் 10% ஆன தன்னியக்க இயந்திர திருத்துநர்கள் மற்றும் ஏனைய பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் மற்றும் 80% ஆன கட்டுமான இயந்திர மற்றும் உகரணங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் ஆகியவற்றின் கூட்டுத்தொகையாகும்.

இத்துறையிலுள்ள இயந்திர பொறிவலர்களின் எண்ணிக்கையானது பின்வரும் சமன்பாட்டினை பயன்படுத்தி கணிக்கப்பட்டுள்ளது:

இயந்திர பொறிவலர்களின் எண்ணிக்கையானது உற்பத்தி இயந்திரங்கள் பழுதுபார்க்கும் இடங்களிலுள்ள தொழிலாளர்கள் மற்றும் 10% ஆன கட்டுமான இயந்திரங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் ஆகியோரின் கூட்டுத்தொகையாகும்.

இத்துறையிலுள்ள ஏனைய தொழில்களிலுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையானது உரிய கைத்தொழிற்துறை வகைகளிலுள்ள வேலைவாய்ப்புகளின் அடிப்படையில் தரப்பட்டுள்ளது. இயந்திர இயக்குநர்களின் எண்ணிக்கையானது 20% ஆகவுள்ள கற்கள் மற்றும் ஏனைய கனிய சுரங்கங்கள் மற்றும் உடைக்கும் ஆலைகளிலுள்ள மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கையிற்கு சமமாகும்.

அட்டவணை 3.29

இலகு பொறியியல் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கான வருடாந்த சராசரி கேள்விகள் தொடர்பான மதிப்பீடு

தொ. இல.	தொழில்	தொழிலாளர்களின் எண்ணிக்கை - 2013				10% இலும் குறைந்த வளர்ச்சி வீதத்தினையுடைய கைத்தொழில் நிறுவகங்களின் வருடாந்த சராசரி தொழிலாளர் தேவைகள்			
		கண்டி	மாத்தளை	நுவரெலியா	மத்திய மாகாணம்	கண்டி	மாத்தளை	நுவரெலியா	மத்திய மாகாணம்
1	காய்ச்சி இணைத்தல் வேலை	496	375	298	1,169	61	46	37	**144**
2	இரும்பு வேலை மற்றும் உருக்கு புனைதல்	260	232	184	676	32	28	22	**82**
3	லேத் இயந்திர வேலை	94	64	44	206	10	7	5	**22**
4	இயந்தி பொறிவலர்*	132	105	83	320	17	13	10	**40**
5	விவசாய இயந்திரங்கள் பழுதுபார்த்தல்	204	196	198	598	21	20	20	**61**

6	தொழிற்சாலை கைவினைஞர்	252	108	48	408	31	13	6	**50**
7	பார மற்றும் இலகு இயந்திர இயக்குநர்கள்**	572	349	85	1,006	70	43	10	**123**
	மொத்தம்	**2,010**	**1,429**	**940**	**4,383**	**242**	**170**	**110**	**522**

குறிப்பு: *உற்பத்தி மற்றும் கட்டுமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள். **

கற்சுரங்கங்கள் மற்றும் உடைக்கும் ஆலைகளிலுள்ள கனரக இயந்திர இயக்குநர்கள். கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலுள்ள கற்கள் மற்றும் ஏனைய கனிய சுரங்கங்கள் மற்றும் உடைத்தல் ஆலைகளின் மொத்த எண்ணிக்கைகள் முறையே 356, 218 மற்றும் 53 ஆகும். தொழிலாளர்களின் சராசரி எண்ணிக்கையானது எட்டு (08) ஆக காணப்படும் போது (மாதிரிக் கணக்கெடுப்பின் அடிப்படையில்) இத்துறையிலுள்ள மொத்த தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கையானது கண்டி மாவட்டத்தில் 2848 ஆகவும் மாத்தளை மாவட்டத்தில் 1744 ஆகவும் நுவரெலியா மாவட்டத்தில் 424 ஆகவும் காணப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

அட்டணை 3.29 இல் காட்டப்பட்டுள்ளதற்கு இணங்க, மாகாணத்திலுள்ள இலகு பொறியியலுடன் தொடர்படைய தொழில்களின் எண்ணிக்கை 4383 ஆகும். இதன் அடிப்டையில் கண்டி மாவட்டத்தில் 2010 தொழிலாளர்களும் மாத்தளை மாவட்டத்தில் 1429 தொழிலாளர்களும் நுவரெலியா மாவட்டத்தில் 940 தொழிலாளர்களும் என்ற அடிப்படையில் தொழிலாளர்களின் பரம்பலானது காணப்படுகின்றது. மாகாணத்திலுள்ள இலகு பொறியிற் துறையுடன் தொடர்படைய தொழில்களின் பரம்பல் பின்வருமாறு: 1169 காய்ச்சி இணைப்பவர்கள், 1006 பார மற்றும் இலகு இயந்திர இயக்குநர்கள், 676 இரும்பு மற்றும் உருக்கு சட்டகம் புனைபவர்கள், 598 விவசாய இயந்திர இயக்குநர்கள், 408 அடிப்படை மட்ட கைவினைஞர்கள், 320 பொறிவலர்கள் மற்றும் 206 லேத் இயந்திர இயக்குநர்கள்.

3.2.4 தொழிலாளர்களிற்கான வருடாந்த சராசரி தேவைகள்

இலகு பொறியியல் துறைசார் தொழிலாளர்களிற்கான வருடாந்த சராசரி தேவைப்பாடுகள் ஒவ்வொரு தொழிற்துறை வகைகளிலும் 2013 ஆம் ஆண்டிலிருந்து தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 10% ஆன தொழிலாளர் எண்ணிக்கை அதிகரிப்பு ஏற்படுகின்றது என்ற எடுகோளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான ஒவ்வொரு தொழில் வகைளிலும் உள்ள தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கையானது எதிர்வுகூறப்பட்டுள்ளது. எதிர்வுகூறப்பட்டுள்ள தொழில்வாய்ப்புகளில் காணப்படுகின்ற வருடாந்த மாற்றமானது வருடாந்த தொழிலாளர்களுக்கான தேவைகளாக தரப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கான வருடாந்த சராசரி தேவைப்பாடுகள், 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான வருடாந்த தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகளின் எளிய சராசரியினைக் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது. அட்டவணை 3.29 இல் ஒவ்வொரு தொழிற்துறைக்குமான மாவட்ட அடிப்படையிலான வருடாந்த சராசரி தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள் தரப்பட்டுள்ளன.

மத்திய மாகாணத்திற்கு அதன் இலகு பொறியியல்துறைக்காக சராசரியாக 522 தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். இதில் கண்டி மாவட்டத்தில் 242 தொழிலாளர்களும் மாத்தளை மாவட்டத்தில் 170 தொழிலாளர்களும் நுவரெலியா மாவட்டத்தில் 110 தொழிலாளர்களும் தேவைப்படுகின்றனர். இத்துறையில் மாகாணத்திற்கு மேலும் 144 காய்ச்சி இணைப்பவர்கள் தேவைப்படுவதுடன் அவர்களில் கண்டி மாவட்டத்தில் 61 காய்ச்சி இணைப்பவர்களும் மாத்தளை மாவட்டத்தில் 46 காய்ச்சி இணைப்பவர்களும் நுவரெலியா மாவட்டத்தில் 37 காய்ச்சி இணைப்பவர்களும் தேவையாகவுள்ளனர். இரும்பு மற்றும் உருக்கு சட்டகம் புனைபவர் துறையில் மாகாணத்திற்கு வருடாவருடம் மேலதிகமாக 82 தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். மாவட்ட அடிப்படையில் இத்தேவைகள்

பின்வருமாறு: கண்டி மாவட்டத்தில் 32 தொழிலாளர்களும் மாத்தளை மாவட்டத்தில் 28 தொழிலாளர்களும் நுவரெலியா மாவட்டத்தில் 22 தொழிலாளர்களும் தேவைப்படுகின்றனர். மாகாணத்திலுள்ள லேத் இயந்திர தொழிலாளர்களுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த சராசரி தொழிலாளர்களுக்கான மேலதிக தேவைகள் 22 ஆகக் காணப்படுவதுடன் அதில் கண்டி மாவட்டத்தில் 10 தொழிலாளர்களும் மாத்தளை மாவட்டத்தில் 07 தொழிலாளர்களும் நுவரெலியா மாவட்டத்தில் 05 தொழிலாளர்களும் தேவைப்படுகின்றனர். 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியிற்கு மாகாணத்திலுள்ள இலகு பொறியியல் துறையிற்கு வருடாந்தம் சராசரியாக 40 பொறிவலர்களுக்கான மேலதிக தேவைகள் நிலவுகின்றது. இம் மூன்று மாவட்டங்களிலும் 40 பொறிவலர்களது பரம்பலானது பின்வருமாறு காணப்படுகின்றது: கண்டி மாவட்டத்திற்கு 17 பொறிவலர்களும் மாத்தளை மாவட்டத்திற்கு 13 பொறிவலர்களும் நுவரெலியா மாவட்டத்திற்கு 10 பொறிவலர்களும் அவசியமாகவுள்ளனர். அட்டவணை 3.29 இல் தரப்பட்டுள்ளவாறு மாகாணத்தில் சராசரியாக வருடாந்தம் மேலதிகமாக 61 விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் திருத்துநர்கள் தேவைப்படுகின்றனர். இவ் விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் திருத்துநர்கள் இம்மூன்று மாவட்டங்களிலும் அண்ணளவாக சமமான எண்ணிக்கையில் (ஒவ்வொன்றும் ஏறத்தாழ 20 வரையான) பரம்பியுள்ளனர். மாகாணத்தின் உலோக கைவினைஞர் துறையிற்கு வருடாந்தம் மேலதிகமாக 50 அடிப்படை மட்ட கைவினைஞர்கள் தேவைப்படுகின்றனர். பெரும்பான்மையானோரிற்கான தேவைகள் கண்டி மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகளில் காணப்படுகின்றது. மத்திய மாகாணத்தில் இலகு பொறியியல் துறையிற்காக வருடாந்தம் 123 மேலதிக இயந்திர இயக்குநர்கள் தேவைப்படுகின்றனர். இவ் 123 இயந்திர இயக்குநர்களில் கண்டி மாவட்டத்தில் 70 தொழிலாளர்களும் மாத்தளை மாவட்டத்தில் 43 தொழிலாளர்களும் நுவரெலியா மாவட்டத்தில் 10 தொழிலாளர்களும் தேவையாகவுள்ளனர்.

3.2.5 இலகு பொறியியல் துறைசார் தொழிலாளர்களுக்கு வெளிநாடுகளில் நிலவுகின்ற கேள்விகள்

இலங்கையின் வெளிநாட்டு தொழிலாளர் சந்தையின் ஓர் அம்சமாக விளங்குவது நாடானது திறனுடைய தொழிலாளர்களுக்கான முழு வெளிநாட்டு கேள்விகளை ஈடுசெய்ய முடியாத நிலைமையில் காணப்படுவதாகும். கடந்த பல ஆண்டுகளாக, வெளிநாடுகளில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு பாரியளவான கேள்விகள் காணப்பட்டது ஆனால் இலங்கையினால் வெளிநாட்டு தேவையின் ஒரு சிறு பகுதியினை மட்டுமே வழங்க முடிந்துள்ளது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தரவுத் தளத்தின் அடிப்படையில், நாம் வெளிநாட்டு தொழிலாளர் சந்தைக்காக மத்திய மாகாணத்தில் பயிற்சி அளிக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையினை கணக்கிட்டுள்ளோம். கட்டுமான துறைசார் அறிக்கையின் பிரகாரம், நாம் இலகு பொறியியல் துறை தொடர்பாக தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கான வெளிநாட்டு கேள்விகளில் நாட்டினால் வழங்க முடியாமற்போன எண்ணிக்கையினை கணக்கிட்டுள்ளோம். மத்திய மாகாணமானது ஏறத்தாழ 10% ஆன வழங்க முடியாமற்போன வெளிநாட்டு தொழிலாளர் கேள்விகளிகளிற்கான பயிற்சிகளை வழங்குகின்றது என அனுமானித்து, நாம் வெளிநாடுகளிற்கு அனுப்புவதற்காக பயிற்சி அளிக்கப்பட வேண்டியுள்ள நபர்களின் எண்ணிக்கையினை கணக்கிட்டுள்ளாம். இந்த விடயத்தில், வெளிநாட்டு வேலைகளுக்கான கோரிக்கைகள் தொடர்பாக 2011 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கைகள் குறைந்தது அடுத்த ஐந்து ஆண்டுகளுக்காவது காணப்படும் என நாம் கருதுகின்றோம். அட்டவணை 3.30 இல் வெளிநாட்டு தொழிலாளர் சந்தைகளுக்காக பயிற்சியளிக்கப்பட வேண்டிய மேலதிகமான தொழிலாளர்களின் எண்ணிக்கை தொடர்பான மதிப்பீடானது தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3.30

இலகு பொறியியல் தொழிலாளர்களுக்கு வெளிநாட்டில் நிலவுகின்ற கேள்விகள்

தொடர் இல	தொழில்	தொழிலுக்கான கோரிக்கைகள்	வேலைகளுக்காக வெளிநாடுகளிற்கு சென்றுள்ளவர்களின் எண்ணிக்கை	வழங்கமுடியாமற் போன கேள்விகள்	மத்திய மாகாணமானது ஏறத்தாழ 10% ஆன வழங்க முடியாமற்போன கேள்விகளிகளிற்கான வழங்கலை மேற்கொள்ளுமாயின் பயிற்சித் தேவைகள்
1	காய்ச்சி இணைப்பவர்கள்	3,516	755	2761	276
2	இரும்பு மற்றும் உருக்கு சட்டகம் புனைபவர்கள்	3,337	570	2,767	277
3	லேத் இயந்திரம் இயக்குபவர்கள்	267	24	243	24
4	பொறிவலர்கள்	946	152	794	79
5	விவசாய இயந்திர திருத்துநர்கள்				
6	அடிப்டை மட்ட கைவினைஞர்கள்				
5	கனரக இயந்திர இயக்குநர்கள்	3,984	1,483	2,501	250
	மொத்தம்	**12,050**	**2,984**	**9,066**	**906**

மூலம்: 2012 ஆம் ஆடிற்கான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வருடாந்த அறிக்கை அடிப்படையில் சேகரிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3.30 இல் தரப்பட்டுள்ளதற்கு இணங்க, 2011 ஆம் ஆண்டில் இலகு பொறியியல் துறைசார் தொழில்களுக்கான கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை 12,050 ஆகும். இதேவேளை நாட்டின் மூலம் ஏறத்தாழ 25 சதவீதமான தொழிற் கோரிக்கைகளிற்கான வழங்கல்களை மேற்கொள்ள முடிந்துள்ளது. நாட்டில் நிலவும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களுக்கான பற்றாக்குறை காரணமாக அதியுயர் வருமானம் மிக்க வெளிநாட்டு தொழில்களுக்கு மிகக் குறைந்தளவான வழங்கல்களை மட்டும் மேற்கொள்ளமுடிந்துள்ளது. இவ்வாண்டில் 9000 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு தொழில்களுக்கான கோரிக்கைகள் காணப்பட்டன.

2011 ஆம் ஆண்டில், காய்ச்சி இணைப்பவர்களுக்காக 3,516 வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளுக்கான கோரிக்கைகள் காணப்பட்டன. அதேவேளை, நாட்டின் மூலம் 14 சதவீதமான வெளிநாட்டு தொழிற் கோரிக்கைகளிற்கான வழங்கல்களை மட்டுமே மேற்கொள்ளமுடிந்துள்ளது. 2760 இற்கும் மேற்பட்ட காய்ச்சி இணைப்பவர்களை வெளிநாட்டு வேலைகளுக்காக அனுப்பிவைக்க முடியும். மத்திய மாகாணத்தினால் இவ் மேலதிக வெளிநாட்டு கேள்விகளில் 10 சதவீதத்தினருக்கான பயிற்சிகளை வழங்கமுடியுமாயின் மாகாணத்திலுள்ள பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் 276 மேலதிக காய்ச்சி இணைப்பவர்களுக்கான பயிற்சிகளை அளித்தல் வேண்டும். இரும்பு மற்றும் உருக்கு சட்டகம் புனைபவர்களிற்கான வெளிநாட்டு கேள்விகள் 3337 ஆக காணப்பட்டதுடன் இம் மொத்த கேள்விகளில் நாட்டினால் 570 (17%) எண்ணிக்கையான வழங்கல்களை மாத்திம் மேற்கொள்ள முடிந்துள்ளது. மேலும் 2767 எண்ணிக்கையான இரும்பு மற்றும் உருக்கு சட்டகம் புனைபவர்களை வெளிநாடுகளிற்கு அனுப்பிவைக்கமுடியும். மாகாணமானது வழங்கமுடியாமற்போன வெளிநாட்டு கேள்விகளில் 10 சதவீதத்தினருக்கான பயிற்சிகளை வழங்குமாயின், மாகாணத்தில் 277 மேலதிக நபர்களுக்கு இரும்பு மற்றும் உருக்கு சட்டகம் புனைபவர் துறைசார் பயிற்சிகளை வழங்கமுடியும். 2011 ஆம் ஆண்டில், லேத் இயந்திர இயக்குநர்களுக்காக 267 வெளிநாட்டு தொழில்களுக்கான கோரிக்கைகள் காணப்பட்ட அதேவேளை, இவ்வாண்டில் நாட்டின் மூலம் 24 இயக்குநர்களை மட்டுமே அனுப்பமுடிந்துள்ளது. மாகாணத்தினால் வெளிநாட்டு தொழிற் சந்தைகளிற்கு அனுப்பிவைப்பதற்காக மேலும் 24 லேத் இயந்திர இயக்குநர்களுக்கான பயிற்சிகளை வழங்கமுடியும். 2011 ஆம் ஆண்டில் வெளிநாடுகள் இலங்கையிடமிருந்து 946 பொறிவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான கோரிக்கைகளை விடுத்திருந்தன. ஆயினும், நாட்டினால் 152 பொறிவலர்களுக்கான வழங்கல்களை (16%) வெளிநாட்டு தொழிற் சந்தைகளிற்கு வழங்க முடிந்துள்ளது. மத்திய மாகாணத்தினால் வழங்கமுடியாமற்போன வெளிநாட்டு கேள்விகளில் 10 சதவீதத்தினருக்கு பொறிவலர் துறைசார் பயிற்சிகளை வழங்க முடியுமாயின், ஏறத்தாழ 80 மேலதிக

பொறிவலர்களுக்கு வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்டு வருடாந்தம் பயிற்சிகளை வழங்கமுடியும். அட்டவணை 3.30 இல் தரப்பட்டுள்ளதற்கு இணங்க, பார மற்றும் இலகு இயந்திர இயக்குநர்களுக்காக 3,984 வெளிநாட்டு தொழில்களுக்கான கோரிக்கைகள் காணப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டில் இத்தொழிலுக்காக வெளிநாடுகளிற்கு சென்றுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கையானது 1,483 ஆகும். இத்துறையில் ஏறத்தாழ 37 சதவீதமான வெளிநாட்டு கேள்விகளுக்கான வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையானது ஏனைய தொழிற் துறைகளுடன் ஒப்பிடும் போது இது மனதினை ஈர்க்கும் ஓர் விடயமாக காணப்படுகின்றது. எவ்வாறாயினும், வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக இன்னும் 2,500 இற்கும் மேற்பட்ட இயந்திர இயக்குநர்களை அனுப்பிவைக்க முடியும். மத்திய மாகாணத்தினால் வழங்கமுடியாமற்போன வெளிநாட்டு கேள்விகளில் 10 சதவீதத்தினருக்கான பயிற்சிகளை வழங்க முடியுமாயின், ஏறத்தாழ 250 இயந்திர இயக்குநர்களிற்கு வெளிநாட்டு சந்தைகளுக்காக வருடாந்தம் பயிற்சிகளை வழங்கமுடியும்.

3.2.6 இலகு பொறியியல் துறையில் காணப்படுகின்ற மொத்த பயிற்சி தேவைப்பாடுகள்

இப்பகுதியில் மத்திய மாகாணத்திலுள்ள இலகு பொறியியற் துறை தொடர்பான மொத்த பயிற்சி தேவைப்பாடுகள் பற்றிய விடயங்கள் தரப்பட்டுள்ளது. இங்கே தரப்பட்டுள்ள மொத்த பயிற்சி தேவைப்பாடுகள், உள்ளூர் சந்தைகள் மற்றும் வெளிநாட்டு சந்தைகள் ஆகியவற்றிற்கான தேவைகளின் கூட்டுத்தொகையாகும். 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மத்திய மாகாணத்தில் இலகு பொறியியல் துறை தொடர்பாக நிலவிய மொத்த தொழிலாளர்களிற்கான பயிற்சி தேவைகள் அட்டவணை 3.31 இல் தரப்பட்டுள்ளது. மாகாணத்தின் இலகு பொறியியல் துறையிற்கு அடுத்த ஐந்து வருட காலப்பகுதிக்கு தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களுக்கான மேலதிக வருடாந்த தேவைப்பாடுகள் 1,428

ஆகும். இம் மொத்த கேள்விகளில் ஏறத்தாழ 37% ஆனவை உள்ளூர் சந்தைகளிலும் ஏனையவை வெளிநாட்டு சந்தைகளிலும் நிலவுகின்றன.

அட்டவணை 3.31

இலகு பொறியியல் துறையில் காணப்படுகின்ற மொத்த பயிற்சித் தேவைப்பாடுகள் (வருடாந்த சராசரி தேவைப்பாடுகள்) 2014 - 2018

தொடர் இல	தொழில் வகை	மதிப்பீடு செய்யப்பட்ட உள்ளூர் கேள்விகள் (நபர்களின் எண்ணிக்கை)	மதிப்பீடு செய்யப்பட்ட வெளிநாட்டு கேள்விகள் (நபர்களின் எண்ணிக்கை)	மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த கேள்விகள் (நபர்களின் எண்ணிக்கை)
1	காய்ச்சி இணைப்பவர்கள்	144	276	**420**
2	இரும்பு மற்றும் உருக்கு சட்டகம் புனைபவர்கள்	82	277	**359**
3	லேத் இயந்திரம் இயக்குபவர்கள்	22	24	**46**
4	பொறிவலர்கள்	40	79	**119**
5	விவசாய இயந்திர திருத்துநர்கள்	61		**61**
6	அடிப்டை மட்ட கைவினைஞர்கள்	50		**50**
7	கனரக இயந்திர இயக்குநர்கள்	123	250	**373**
	மொத்தம்	**522**	**906**	**1,428**

மூலம்: கள தரவு சேகரிப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு, 2013

பயிற்சி நிறுவகங்கள், 420 காய்ச்சி இணைப்பவர்கள், 359 இரும்பு மற்றும் உருக்கு சட்டகம் புனைபவர்கள், 46 லேத் இயந்திரம் இயக்குபவர்கள், 119 பொறிவலர்கள், 61 விவசாய இயந்திர திருத்துநர்கள், 50 அடிப்படை மட்ட கைவினைஞர்கள், 373 பார மற்றும் இலகு இயந்திர இயக்குநர்கள் ஆகியோருக்கான பயிற்சிகளை வழங்க வேண்டும். காய்ச்சி இணைப்பவர்கள், இரும்பு மற்றும் உருக்கு சட்டகம் புனைபவர்கள், லேத் இயந்திரம் இயக்குபவர்கள், பொறிவலர்கள், விவசாய இயந்திர திருத்துநர்கள், அடிப்படை மட்ட கைவினைஞர்கள், பார மற்றும் இலகு இயந்திர இயக்குநர்கள் ஆகியோருக்கான கேள்விகள் உள்ளூர் சந்தைகள் மற்றும் வெளிநாட்டு

சந்தைகள் ஆகியவற்றில் நிலவுவதுடன் அடிப்படை மட்ட கைவினைஞர்கள், விவசாய இயந்திர திருத்துநர்கள் ஆகியோருக்கான பயிற்சி தேவைகள் உள்ளூர் சந்தைகளில் மட்டும் காணப்படுகின்றன.

3.3 தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு துறை

3.3.1 பின்னணி

தன்னியக்க இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் துறையில் வாகன இயந்திரங்கள் பழுதுபார்த்தல், தன்னியக்க மின்னியல் வேலைகள், தன்னியக்க வளிச்சீராக்கல் வேலைகள், தன்னியக்க வர்ணம் பூசுதல் மற்றும் ஒட்டுவேலை, மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துதல், ரயர் வேலைகள் மற்றும் திருத்துதல், தன்னியக்க பராமரிப்பு நிலையங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி பராமரிப்பு நிலையங்கள் ஆகியன உள்ளடங்குகின்றன. இத்துறைசார் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனிகள்/ அமைப்புகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் எமது தகவல் சேகரிப்பினை வெகுவாக பாதித்துள்ளது. பிரதேச செயலாளர் (DS) பிரிவுகளில் பதிவுசெய்யப்பட்டுள்ள அமைப்புகள் தொடர்பான பட்டியலானது மிகவும் குறைந்தளவான தகவல்களை கொண்டுள்ளது: அவற்றின் செயற்பாட்டு அளவு அதாவது சிறியது, நடுத்தரமானது அல்லது பெரியது, முதலீடு, தொழில்புரியும் ஊழியர்களின் எண்ணிக்கை, வேறு போன்றன தொடர்பான தகவல்கள் காணப்படவில்லை. பிரதேச செயலகங்களில் (DS) ஒவ்வொரு தொழில் வகையின் கீழும் பதிவுசெய்யப்பட்டுள்ள அமைப்புகள்/ கம்பனிகளில் தொழில்புரிகின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அவற்றின் செயற்பாட்டு அளவினை அடையாளம் காண்பதற்கான மாதிரிக் கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டது. மாதிரிக் கணக்கெடுப்பின் மூலம் கண்டறியப்பட்ட சதவீத பரம்பலின் அடிப்படையில் அனைத்து நிறுவகங்களும் ஐந்து (05) தொழிலாளர்களை விடவும் கூடுதலான, மூன்று (03) தொடக்கம் ஐந்து (05) வரையான

தொழிலாளர்களைக் கொண்டுள்ள மற்றும் இரண்டு (02) தொழிலாளர்களைக் கொண்டுள்ள நிறுவகங்கள் என்றவாறு முதலில் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியிலும் பின்னர் மாவட்ட ரீதியிலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. வேலைவாய்ப்பு எண்ணிக்கைகளின் அடிப்படையில் நிறுவகங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்கள் அட்டவணை 3.28 இல் தரப்பட்டுள்ளது. பின்வரும் முறையினை பயன்படுத்தி தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கையானது கணக்கெடுக்கப்பட்டுள்ளது: ஐந்திற்கும் (05) கூடுதலான தொழில்வாய்ப்புகள் காணப்படுமாயின் நிறுவகங்களின் எண்ணிக்கையினை ஐந்தினால் (05) பெருக்குதல், மூன்று (03) தொடக்கம் ஐந்து (05) வரையான தொழில்வாய்ப்புகள் காணப்படுமாயின் நிறுவகங்களின் எண்ணிக்கையினை நான்கினால் (04) பெருக்குதல், இரண்டு தொழில்வாய்ப்புகள் காணப்படுமாயின் நிறுவகங்களின் எண்ணிக்கையினை இரண்டினால் (02) பெருக்குதல்.

3.3.2 நிறுவகங்கள் மற்றும் வேலைவாய்ப்பு எண்ணிக்கைகள்

மத்திய மாகாணத்திலுள்ள தன்னியக்க இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் துறைசார் நிறுவகங்களின் எண்ணிக்கை தொடர்பான மதிப்பீடு மற்றும் அவற்றிலுள்ள மொத்த வேலைவாய்ப்பு என்பன தொடர்பான தகவல்கள் அட்டவணை 3.28 இல தரப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டில் கண்டி மாவட்டத்தில் செயற்பட்டுவந்த தன்னியக்க இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் துறைசார் வியாபார அமைப்புக்களின் மொத்த எண்ணிக்கை 1083 ஆகும். இவ்வாறான 1083 நிறுவகங்களில், 8% ஆன நிறுவகங்கள் ஐந்து (05) தொழிலாளர்களை விடவும் கூடுதலான தொழிலாளர்களை கொண்டுள்ளவையாகவும், 38% ஆன நிறுவகங்கள் மூன்று (03) தொடக்கம் ஐந்து (05) வரையான தொழிலாளர்களைக் கொண்டுள்ளவையாகவும் மற்றும் 54% ஆன நிறுவகங்கள் இரண்டு (02) தொழிலாளர்களைக் கொண்டுள்ளவையாகவும் காணப்படுகின்றன. கண்டி மாவட்டத்திலுள்ள தன்னியக்க இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் துறைசார் வியாபார

அமைப்புக்களின் செயற்பாட்டு அடிப்படையிலான பரம்பல் பின்வருமாறு: 26% ஆனவை வாகன இயந்திரங்கள் மற்றும் ஏனையவை பழுதுபார்த்தல், 22% ஆனவை மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துதல், 8% ஆனவை தன்னியக்க மின்னியல் மற்றும் மின்மோட்டர் முறுக்குதல், 12% ஆனவை தன்னியக்க வர்ணம் பூசுதல் மற்றும் ஒட்டுவேலை வேலைகள், 8% ஆனவை ரயர் வேலைகள் மற்றும் திருத்துதல் சேவைகள், 12% ஆனவை தன்னியக்க பராமரிப்பு நிலையங்கள், 8% ஆனவை மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி பராமரிப்பு நிலையங்கள். 2013 ஆம் ஆண்டில் கண்டி மாவட்டத்திலுள்ள கணிக்கப்பட்ட தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்த்தல் துறைசார் வேலைவாய்ப்புகளின் மொத்த எண்ணிக்கை 3,257 ஆகும். கண்டி மாவட்டத்தில் தன்னியக்க இயந்திரங்கள் துறைசார் பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்ற தொழிலாளர்களின் பரம்பல் பின்வருமாறு: 29% ஆனவர்கள் வாகன இயந்திரங்கள் மற்றும் ஏனையவை பழுதுபார்த்தல் துறைகளிலும், 16% ஆனவர்கள் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துதல் துறைகளிலும், 6% ஆனவர்கள் தன்னியக்க மின்னியல் மற்றும் மின்மோட்டர் முறுக்குதல் துறைகளிலும், 12% ஆனவர்கள் தன்னியக்க வர்ணம் பூசுதல் மற்றும் ஒட்டுவேலை வேலைகள் துறைகளிலும், 6% ஆனவர்கள் ரயர் வேலைகள் மற்றும் திருத்துதல் சேவைகள் துறைகளிலும், 23% ஆனவர்கள் தன்னியக்க பராமரிப்பு நிலையங்களிலும், 7% ஆனவர்கள் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி பராமரிப்பு நிலையங்களிலும் தொழில்புரிகின்றனர்.

2013 ஆம் ஆண்டில் மாத்தளை மாவட்டத்தில் செயற்பட்டுவந்த தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு துறைசார் வியாபார அமைப்புக்களின் மொத்த எண்ணிக்கை 683 ஆகும். இவ்வாறான 683 நிறுவகங்களில், 7% ஆன நிறுவகங்கள் ஐந்து (05) தொழிலாளர்களை விடவும் கூடுதலான தொழிலாளர்களை கொண்டுள்ளவையாகவும், 38% ஆன நிறுவகங்கள் மூன்று (03) தொடக்கம் ஐந்து (05) வரையான தொழிலாளர்களைக் கொண்டுள்ளவையாகவும்

மற்றும் 55% ஆன நிறுவகங்கள் இரண்டு (02) தொழிலாளர்களைக் கொண்டுள்ளவையாகவும் காணப்படுகின்றன. மாத்தளை மாவட்டத்திலுள்ள தன்னியக்க இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் துறைசார் வியாபார அமைப்புக்களின் செயற்பாட்டு அடிப்படையிலான பரம்பல் பின்வருமாறு: 23% ஆனவை வாகன இயந்திரங்கள் மற்றும் ஏனையவை பழுதுபார்த்தல், 16% ஆனவை மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துதல், 5% ஆனவை தன்னியக்க மின்னியல் மற்றும் மின்மோட்டர் முறுக்குதல், 17% ஆனவை தன்னியக்க வர்ணம் பூசுதல் மற்றும் ஒட்டுவேலை வேலைகள், 8% ஆனவை ரயர் வேலைகள் மற்றும் திருத்துதல் சேவைகள், 14% ஆனவை தன்னியக்க பராமரிப்பு நிலையங்கள், 16% ஆனவை மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி பராமரிப்பு நிலையங்கள். 2013 ஆம் ஆண்டில் மாத்தளை மாவட்டத்திலுள்ள கணிக்கப்பட்ட தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்த்தல் துறைசார் வேலைவாய்ப்புகளின் (நபர்கள்) மொத்த எண்ணிக்கை 2,084 ஆகும். மாத்தளை மாவட்டத்தில் தன்னியக்க இயந்திரங்கள் துறைசார் பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்ற தொழிலாளர்களின் பரம்பல் பின்வருமாறு: 25% ஆனவர்கள் வாகன இயந்திரங்கள் மற்றும் ஏனையவை பழுதுபார்த்தல் துறைகளிலும், 14% ஆனவர்கள் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துதல் துறைகளிலும், 7% ஆனவர்கள் தன்னியக்க மின்னியல் மற்றும் மின்மோட்டர் முறுக்குதல் துறைகளிலும், 14% ஆனவர்கள் தன்னியக்க வர்ணம் பூசுதல் மற்றும் ஒட்டுவேலை வேலைகள் துறைகளிலும், 6% ஆனவர்கள் ரயர் வேலைகள் மற்றும் திருத்துதல் சேவைகள் துறைகளிலும், 20% ஆனவர்கள் தன்னியக்க பராமரிப்பு நிலையங்களிலும், 13% ஆனவர்கள் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி பராமரிப்பு நிலையங்களிலும் தொழில்புரிகின்றனர்.

அட்டவணை 3.32
தன்னியக்க இயந்திரத் துறைசார் தொழிற்சாலைகள் மற்றும் வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை - 2013

தொ. இல	தொழில் வகை	நிறுவகங்களின் எண்ணிக்கை				தொழிலாளர்களின் எண்ணிக்கை
		>5 தொழிலாளர்கள்	3 தொடக்கம் 5 தொழிலாளர்கள்	2 தொழிலாளர்கள்	மொத்தம்	
கண்டி மாவட்டம்						
1	வாகன இயந்திரங்கள் மற்றும் ஏனையவை பழுதுபார்த்தல்	32	144	101	277	938
2	மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துதல்		24	210	234	516
3	தன்னியக்க மின்னியல் மற்றும் மின்மோட்டர் முறுக்குதல்		20	65	85	210
4	ஆனவர்கள் தன்னியக்க வர்ணம் பூசுதல் மற்றும் ஒட்டுவேலை வேலைகள்	12	42	76	130	380
5	ரயர் வேலைகள் மற்றும் திருத்துதல் சேவைகள்		19	67	86	210
6	தன்னியக்க பராமரிப்பு நிலையங்கள்	45	135		180	765
7	மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி பராமரிப்பு நிலையங்கள்		28	63	91	238
	மொத்தம்	**89**	**412**	**582**	**1,083**	**3,257**
மாத்தளை மாவட்டம்						
1	வாகன இயந்திரங்கள் மற்றும் ஏனையவை பழுதுபார்த்தல்	13	74	75	160	**511**
2	மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துதல்		43	65	111	**302**
3	தன்னியக்க மின்னியல் மற்றும் மின்மோட்டர் முறுக்குதல்	0	12	52	37	**152**
4	ஆனவர்கள் தன்னியக்க வர்ணம் பூசுதல் மற்றும் ஒட்டுவேலை வேலைகள்	8	32	62	116	**292**
5	ரயர் வேலைகள் மற்றும் திருத்துதல் சேவைகள்		11	44	55	**132**

6	தன்னியக்க பராமரிப்பு நிலையங்கள்	29	68		97	**417**
7	மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி பராமரிப்பு நிலையங்கள்		32	75	107	**278**
	மொத்தம்	**50**	**260**	**373**	**683**	**2,084**
நுவரெலியா மாவட்டம்						
1	வாகன இயந்திரங்கள் மற்றும் ஏனையவை பழுதுபார்த்தல்	18	56	72	146	458
2	மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துதல்		24	58	82	212
3	தன்னியக்க மின்னியல் மற்றும் மின்மோட்டர் முறுக்குதல்		8	45	45	122
4	ஆனவர்கள் தன்னியக்க வர்ணம் பூசுதல் மற்றும் ஒட்டுவேலை வேலைகள்	4	5	22	31	84
5	ரயர் வேலைகள் மற்றும் திருத்துதல் சேவைகள்		34	45	79	226
6	தன்னியக்க பராமரிப்பு நிலையங்கள்	12	36		48	204
7	மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி பராமரிப்பு நிலையங்கள்		6	12	18	48
	மொத்தம்	**34**	**161**	**254**	**449**	**1,354**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

2013 ஆம் ஆண்டில் நுவரெலியா மாவட்டத்தில் செயற்பட்டுவந்த தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு துறைசார் வியாபார அமைப்புக்களின் மொத்த எண்ணிக்கை 449 ஆகும். இவ்வாறான 449 நிறுவகங்களில், 8% ஆன நிறுவகங்கள் ஐந்து (05) தொழிலாளர்களை விடவும் கூடுதலான தொழிலாளர்களை கொண்டுள்ளவையாகவும், 36% ஆன நிறுவகங்கள் மூன்று (03) தொடக்கம் ஐந்து (05) வரையான தொழிலாளர்களைக் கொண்டுள்ளவையாகவும் மற்றும் 56% ஆன நிறுவகங்கள் இரண்டு (02) தொழிலாளர்களைக் கொண்டுள்ளவையாகவும் காணப்படுகின்றன. நுவரெலியா மாவட்டத்திலுள்ள

தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு துறைசார் வியாபார அமைப்புக்களின் செயற்பாட்டு அடிப்படையிலான பரம்பல் பின்வருமாறு: 33% ஆனவை வாகன இயந்திரங்கள் மற்றும் ஏனையவை பழுதுபார்த்தல், 18% ஆனவை மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துதல், 10% ஆனவை தன்னியக்க மின்னியல் மற்றும் மின்மோட்டர் முறுக்குதல், 7% ஆனவை தன்னியக்க வர்ணம் பூசுதல் மற்றும் ஒட்டுவேலை வேலைகள், 18% ஆனவை ரயர் வேலைகள் மற்றும் திருத்துதல் சேவைகள், 11% ஆனவை தன்னியக்க பராமரிப்பு நிலையங்கள், 4% ஆனவை மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி பராமரிப்பு நிலையங்கள். 2013 ஆம் ஆண்டில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள கணிக்கப்பட்ட தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்த்தல் துறைசார் வேலைவாய்ப்புகளின் (நபர்கள்) மொத்த எண்ணிக்கை 1,354 ஆகும். நுவரெலியா மாவட்டத்தில் தன்னியக்க இயந்திரங்கள் துறைசார் பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்ற தொழிலாளர்களின் பரம்பல் பின்வருமாறு: 34% ஆனவர்கள் வாகன இயந்திரங்கள் மற்றும் ஏனையவை பழுதுபார்த்தல் துறைகளிலும், 16% ஆனவர்கள் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துதல் துறைகளிலும், 9% ஆனவர்கள் தன்னியக்க மின்னியல் மற்றும் மின்மோட்டர் முறுக்குதல் துறைகளிலும், 6% ஆனவர்கள் தன்னியக்க வர்ணம் பூசுதல் மற்றும் ஒட்டுவேலை வேலைகள் துறைகளிலும், 17% ஆனவர்கள் ரயர் வேலைகள் மற்றும் திருத்துதல் சேவைகள் துறைகளிலும், 15% ஆனவர்கள் தன்னியக்க பராமரிப்பு நிலையங்களிலும், 4% ஆனவர்கள் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி பராமரிப்பு நிலையங்களிலும் தொழில்புரிகின்றனர்.

3.3.3 தொழில் அடிப்படையில் வேலைவாய்ப்பு தொடர்பான மதிப்பீடு

தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு துறைசார் பல்வேறுபட்ட தொழில்களில் ஈடுபட்டுவருகின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையானது இத்துறையிலுள்ள மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த தொழில்வாய்ப்பு எண்ணிக்கைளின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தன்னியக்க இயந்திரங்கள்

திருத்துநர்களின் எண்ணிக்கையானது வாகன இயந்திரங்கள் மற்றும் ஏனைய திருத்துதல்கள் தொடர்பான வேலைத் தளங்களிலுள்ள மொத்த வேலைவாய்ப்புகளின் 80 சதவீதம் ஆகும். தன்னியக்க மின்னியலாளர்களின் எண்ணிக்கையானது 10% ஆன வாகன இயந்திரங்கள் திருத்தும் தொழிலாளர்கள் + 10% ஆன கட்டுமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் திருத்தும் தொழிலாளர்கள் + மின்மோட்டர் முறுக்கும் கடைகளிலுள்ள தொழிலாளர்கள் ஆகியோரின் கூட்டுத்தொகைக்கு சமனாகும். தன்னியக்க வளிச்சீராக்கி திருத்துநர்கள் மற்றும் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் எண்ணிக்கையானது 10% ஆன வாகன இயந்திரங்கள் மற்றும் ஏனையவை திருத்தும் தொழிலாளர்களுக்கான தொழில்வாய்ப்புகளிற்கு சமமாகும். தன்னியக்க வர்ணம் பூசுபவர்களின் எண்ணிக்கையானது 60% ஆன தன்னியக்க வர்ணம் பூசுபவர்கள் மற்றும் ஒட்டு வேலை தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு சமமாகும். தன்னியக்க ஒட்டு வேலை செய்பவர்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தொழிலாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கையானது 40% ஆன தன்னியக்க வர்ணம் பூசுபவர்கள் மற்றும் ஒட்டு வேலை தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு சமமாகும். பராமரிப்பு நிலையங்களிலுள்ள பகுதித் தேர்ச்சி மிக்க தொழிலாளர்களின் எண்ணிக்கையானது 20% ஆன தன்னியக்க பராமரிப்பு நிலைய தொழிலாளர்கள் + 20% ஆன மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்தும் தொழிலாளர்கள் ஆகியோரின் கூட்டுத்தொகைக்கு சமமாகும். இத்துறைசார் ஏனைய தொழில்களை புரிகின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கைகள் மற்றும் அவை தொடர்பான கைத்தொழிற் துறைகளில் நிலவுகின்ற தொழில்வாய்ப்புகள் ஆகியன தொடர்பான விபரங்கள் தரப்படுகின்றன.

அட்டவணை 3.33

தன்னியக்க இயந்திரத் துறையில் நிலவுகின்ற தொழிலாளர்களுக்கான கேள்விகளின் கணிக்கப்பட்ட ஆண்டு சராசரி பெறுமானம்

தொ. இல.	தொழில்	தொழிலாளர்களின் எண்ணிக்கை - 2013				10% இலும் குறைந்த வளர்ச்சி வீதத்தினையுடைய கைத்தொழில் நிறுவகங்களின் வருடாந்த சராசரி தொழிலாளர் தேவைகள்			
		கண்டி	மாத்தளை	நுவரெலியா	மத்திய மாகாணம்	கண்டி	மாத்தளை	நுவரெலியா	மத்திய மாகாணம்
1	தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்ப்பவர்கள்	751	404	365	1,530	92	50	45	**187**
2	தன்னியக்க மின்னியலாளர்கள் மற்றும் மின்மோட்டர் முறுக்குநர்கள்	320	192	165	677	39	24	20	**73**
3	தன்னியக்க வளிச்சீராக்கி திருத்துநர்கள்	94	51	46	191	12	7	6	**25**
4	ரயர் திருத்துதல் மற்றும் பராமரிப்பு தொழிலாளர்கள்	210	132	226	568	26	16	28	**70**
5	தன்னியக்க வர்ணம் பூசுபவர்கள்	228	185	50	463	28	23	6	**57**
6	தன்னியக்க ஒட்டுவேலை செய்பவர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிலாளர்கள்	152	123	34	309	19	15	4	**38**
7	மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர்கள்	516	308	212	1,036	65	40	32	**137**
8	பராமரிப்பு நிலைய பகுதித் தேர்ச்சி மிக்க தொழிலாளர்கள்	201	117	50	368	25	14	6	**45**
	மொத்தம்	**2,472**	**1,512**	**1,148**	**5,142**	**306**	**189**	**147**	**632**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

அட்டவணை 3.33 இல் தரப்பட்டுள்ளதற்கிணங்க, 2013 ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தின் தன்னியக்க இயந்திரவியல் துறையிற்கான மொத்த தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கையானது 5142 ஆகும். கண்டி மாவட்டத்தின் தன்னியக்க இயந்திரவியல் துறையானது இம் மொத்த வேலைவாய்ப்புகளில் ஏறத்தாழ 48% ஆகும். மாத்தளை மாவட்டத்தின் தன்னியக்க இயந்திரவியல் துறையானது இம் மொத்த வேலைவாய்ப்புகளில் ஏறத்தாழ 30% ஆகும். மீதி 22% ஆனவை நுவரெலியா மாவட்டத்தின் வேலைவாய்ப்புக்களாகும். பல்வேறுபட்ட தொழில் வகைகளுக்கான தன்னியக்க இயந்திரவியல் துறைசார் தொழிலாளர்களின் பரம்பல் பின்வருமாறு: தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்ப்பவர்கள் - 30%, மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர்கள் - 20%, தன்னியக்க மின்னியலாளர்கள் மற்றும் மின்மோட்டர் முறுக்குநர்கள் - 13%, ரயர் திருத்துதல் மற்றும் பராமரிப்பு தொழிலாளர்கள் - 11%, தன்னியக்க வர்ணம் பூசுபவர்கள் - 9%, பராமரிப்பு நிலைய பகுதித் தேர்ச்சி மிக்க தொழிலாளர்கள் - 7%, தன்னியக்க ஒட்டுவேலை செய்பவர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிலாளர்கள் - 6% மற்றும் தன்னியக்க வளிச்சீராக்கி திருத்துநர்கள் - 4%. மேற்கூறப்பட்டுள்ள தொழிற் துறைகளுக்கான தொழிலாளர்களின் மாவட்ட ரீதியிலான பரம்பலிற்கும் மாகாண ரீதியிலான பரம்பலிற்கும் இடையில் அதிகளவான வேறுபாடுகள் காணப்படவில்லை.

3.3.4 வருடாந்த சராசரி தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள்

தன்னியக்க இயந்திரவியல் துறைசார் தொழிலாளர்களிற்கான வருடாந்த சராசரி தேவைப்பாடுகள் ஒவ்வொரு தொழிற்துறை வகைகளிலும் 2013 ஆம் ஆண்டிலிருந்து தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 10% ஆன தொழிலாளர் எண்ணிக்கை அதிகரிப்பு ஏற்படுகின்றது என்ற எடுகோளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான ஒவ்வொரு தொழில் வகைளிலும் உள்ள தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கையானது எதிர்வுகூறப்பட்டுள்ளது. எதிர்வுகூறப்பட்டுள்ள தொழில்வாய்ப்புகளில் காணப்படுகின்ற வருடாந்த மாற்றமானது வருடாந்த தொழிலாளர்களுக்கான தேவைகளாக தரப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கான வருடாந்த சராசரி தேவைப்பாடுகள், 2014 ஆம்

ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான வருடாந்த தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகளின் எளிய சராசரியினைக் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது. அட்டவணை 3.33 இல் ஒவ்வொரு தொழிற்துறைக்குமான மாவட்ட அடிப்படையிலான வருடாந்த சராசரி தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள் தரப்பட்டுள்ளன.

அடுத்த ஐந்து வருட காலப்பகுதிக்கு மத்திய மாகாணத்திற்காக அதன் தன்னியக்க இயந்திரவியல் துறையிற்காக சராசரியாக வருடாந்தம் 632 தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். இதில் ஏறத்தாழ கண்டி மாவட்டத்தில் 306 மேலதிக தொழிலாளர்களும் மாத்தளை மாவட்டத்தில் 189 தொழிலாளர்களும் நுவரெலியா மாவட்டத்தில் 147 தொழிலாளர்களும் தேவைப்படுகின்றனர். மாகாண தன்னியக்க இயந்திரவியல் துறையிற்கு மேலதிகமாக 187 தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்ப்பவர்கள், 137 மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர்கள், 73 தன்னியக்க மின்னியலாளர்கள் மற்றும் மின்மோட்டர் முறுக்குநர்கள், 70 ரயர் திருத்துதல் மற்றும் பராமரிப்பு தொழிலாளர்கள், 57 தன்னியக்க வர்ணம் பூசுபவர்கள், 45 பராமரிப்பு நிலைய பகுதித் தேர்ச்சி மிக்க தொழிலாளர்கள், 38 தன்னியக்க ஒட்டுவேலை செய்பவர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிலாளர்கள் மற்றும் 25 தன்னியக்க வளிச்சீராக்கி திருத்துநர்கள் தேவைப்படுகின்றனர். அனைத்து வகையான தொழில்வகைகளிலும் கண்டி மாவட்டத்திலுள்ள தன்னியக்க இயந்திரவியல் துறை நிறுவகங்களிற்கு ஏனைய இரண்டு மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது அதிகூடிய எண்ணிக்கையான தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர்.

3.3.5 தன்னியக்க இயந்திரவியல் துறைசார் தொழிலாளர்களுக்கு வெளிநாடுகளில் நிலவுகின்ற கேள்விகள்

இப்பகுதியில் நாம் மத்திய மாகாணத்தில் தன்னியக்க இயந்திரவியல் துறைசார் தொழிலாளர்களுக்கான சாத்தியமான வெளிநாட்டு கேள்விகள் தொடர்பான மதிப்பீட்டினை மேற்கொண்டுள்ளோம். தன்னியக்க இயந்திரவியல் துறைசார் வழங்க

முடியாமற்போன தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கான வெளிநாட்டு கேள்விகளை பயன்படுத்தி வெளிநாட்டு சந்தைகளுக்கு அவசியமான தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையினை கணக்கிட்டுள்ளோம். மத்திய மாகாணமானது ஏறத்தாழ 10% ஆன வழங்க முடியாமற்போன வெளிநாட்டு தொழிலாளர் கேள்விகளிகளிற்கான பயிற்சிகளை வழங்குகின்றது என அனுமானித்து, நாம் வெளிநாடுகளிற்கு அனுப்புவதற்காக பயிற்சி அளிக்கப்பட வேண்டியுள்ள நபர்களின் எண்ணிக்கையினை கணக்கிட்டுள்ளாம். இந்த விடயத்தில், வெளிநாட்டு வேலைகளுக்கான கோரிக்கைகள் தொடர்பாக 2011 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கைகள் குறைந்தது அடுத்த ஐந்து ஆண்டுகளுக்காவது காணப்படும் என நாம் கருதுகின்றோம். அட்டவணை 3.34 இல் வெளிநாட்டு தொழிலாளர் சந்தைகளுக்காக பயிற்சியளிக்கப்பட வேண்டிய மேலதிகமான தொழிலாளர்களின் எண்ணிக்கை தொடர்பான மதிப்பீடானது தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3.34 இல் தரப்பட்டுள்ளதற்கு இணங்க, 2011 ஆம் ஆண்டில் தன்னியக்க இயந்திரவியல் துறைசார் தொழில்களுக்கான கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை 4,687 ஆகும். இதேவேளை நாட்டில் நிலவும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களுக்கான பற்றாக்குறை காரணமாக நாட்டின் மூலம் ஏறத்தாழ 13 சதவீதமான தொழிற் கோரிக்கைகளிற்கான வழங்கல்களை மாத்திரமே மேற்கொள்ள முடிந்துள்ளது. இலங்கையிலிருந்து வெளிநாட்டு சந்தைகளிற்கு 4,000 மேலதிக தன்னியக்க இயந்திரவியல் துறையுடன் தொடர்புபட்ட தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களை வெளிநாட்டு சந்தைகளிற்கு அனுப்பமுடியும்.

அட்டவணை 3.34

தன்னியக்க இயந்திரவியல் துறையில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள்

தொடர் இல	தொழில்	தொழிலுக்கான கோரிக்கைகள்	வேலைகளுக்காக வெளிநாடுகளிற்கு சென்றவர்களின்	வழங்கமுடியாமற் போன கேள்விகள்	மத்திய மாகாணமானது ஏறத்தாழ 10% ஆன வழங்க முடியாமற்போன கேள்விகளிகளிற்கான வழங்கலை மேற்கொள்ளுமாயின் பயிற்சித் தேவைகள்
1	தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்ப்பவர்கள்	2,894	262	2,632	263
2	தன்னியக்க மின்னியலாளர்கள் மற்றும் மின்மோட்டர் முறுக்குநர்கள்	1,039	284	755	76
3	தன்னியக்க வளிச்சீராக்கி திருத்துநர்கள்	24	0	24	2
4	ரயர் திருத்துதல் மற்றும் பராமரிப்பு தொழிலாளர்கள்	91	8	83	8
5	தன்னியக்க வர்ணம் பூசுபவர்கள்	433	59	374	37
6	தன்னியக்க ஒட்டுவேலை செய்பவர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிலாளர்கள்	206	10	196	20
7	மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர்கள்				
8	பராமரிப்பு நிலைய பகுதித் தேர்ச்சி மிக்க தொழிலாளர்கள்				
	மொத்தம்	**4,687**	**623**	**4,064**	**406**

மூலம்: 2012 ஆம் ஆண்டிற்கான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வருடாந்த அறிக்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டில், இலங்கையிடம் வெளிநாடுகள் தன்னியக்க இயந்திரங்கள் திருத்துநர் தொழிலுக்காக 2,894 கோரிக்கைகளை விடுத்திருந்தன. அதேவேளை, நாட்டின் மூலம் 262 திருத்துநர்களை மட்டுமே வெளிநாடுகளிற்கு அனுப்பிவைக்க முடிந்துள்ளது. இது திருத்துநர்களுக்கான மொத்த வெளிநாட்டு கேள்விகளின் 9 சதவீதமே ஆகும். தன்னியக்க மின்னியலாளர்களுக்கான மொத்த வெளிநாட்டு கேள்விகள் 1,039 ஆகும். நாட்டின் மூலம் 284 மின்னியலாளர்களை மட்டுமே வெளிநாட்டு சந்தைகளிற்கு அனுப்பிவைக்க முடிந்துள்ளது. தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்ப்பவர்கள், தன்னியக்க மின்னியலாளர்கள், தன்னியக்க வர்ணம் பூசுபவர்கள், தன்னியக்க ஒட்டுவேலை செய்பவர்கள், ரயர் திருத்துதல் மற்றும் பராமரிப்பு தொழிலாளர்கள் மற்றும் தன்னியக்க வளிச்சீராக்கி திருத்துநர்கள் ஆகியவற்றுக்கு வழங்கமுடியாமற்போன வெளிநாட்டு கேள்விகள் முறையே 2,632, 755, 374, 196, 83 மற்றும் 24 ஆகும். மத்திய மாகாணமானது வழங்கமுடியாமற்போன வெளிநாட்டு தொழில்களுக்கான கோரிக்கைகளின் 10 சதவீதத்திற்கான பயிற்சிகளை வழங்குமாயின், பயிற்சி வழங்குநர்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொழில் வகைகள் தொடர்பாக 398 எண்ணிக்கையான தொழிலாளர்களுக்கு பயிற்சி அளித்தல் வேண்டும். அதன் அடிப்படையில், மத்திய மாகாணமானது 263 மேலதிக தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்ப்பவர்கள், 76 மேலதிக தன்னியக்க மின்னியலாளர்கள், 37 மேலதிக தன்னியக்க வர்ணம் பூசுபவர்கள், 20 மேலதிக தன்னியக்க ஒட்டுவேலை செய்பவர்கள், 8 மேலதிக ரயர் திருத்துதல் மற்றும் பராமரிப்பு தொழிலாளர்கள் மற்றும் 2 மேலதிக்க தன்னியக்க வளிச்சீராக்கி திருத்துநர்கள் ஆகியோருக்கு வெளிநாட்டு தொழிற் சந்தைகளுக்கான பயிற்சிகளை அளித்தல் வேண்டும்.

3.3.6 தன்னியக்க இயந்திரவியல் துறையில் காணப்படுகின்ற மொத்த பயிற்சி தேவைப்பாடுகள்

இப்பகுதியில் மத்திய மாகாணத்திலுள்ள தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் துறை தொடர்பான மொத்த பயிற்சி தேவைப்பாடுகள் பற்றிய

விடயங்கள் தரப்பட்டுள்ளது. இங்கே தரப்பட்டுள்ள மொத்த பயிற்சி தேவைப்பாடுகள், உள்ளூர் சந்தைகள் மற்றும் வெளிநாட்டு சந்தைகள் ஆகியவற்றிற்கான தேவைகளின் கூட்டுத்தொகையாகும். 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மத்திய மாகாணத்தில் தன்னியக்க இயந்திரவியல் துறை தொடர்பாக நிலவும் மொத்த தொழிலாளர்களிற்கான பயிற்சி தேவைகள் அட்டவணை 3.35 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3.35

தன்னியக்க இயந்திரவியல் துறையில் நிலவுகின்ற வருடாந்த சராசரி பயிற்சி தேவைப்பாடுகள்

தொடர் இல	தொழில் வகை	மதிப்பீடு செய்யப்பட்ட உள்ளூர் கேள்விகள் (நபர்களின் எண்ணிக்கை)	மதிப்பீடு செய்யப்பட்ட வெளிநாட்டு கேள்விகள் (நபர்களின் எண்ணிக்கை)	மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த கேள்விகள் (நபர்களின் எண்ணிக்கை)
1	தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்ப்பவர்கள்	187	263	**450**
2	தன்னியக்க மின்னியலாளர்கள் மற்றும் மின்மோட்டர் முறுக்குநர்கள்	73	76	**149**
3	தன்னியக்க வளிச்சீராக்கி திருத்துநர்கள்	25	2	**27**
4	ரயர் திருத்துதல் மற்றும் பராமரிப்பு தொழிலாளர்கள்	70	8	**78**
5	தன்னியக்க வர்ணம் பூசுபவர்கள்	57	37	**94**
6	தன்னியக்க ஒட்டுவேலை	38	20	**58**

	செய்பவர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிலாளர்கள்			
7	மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர்கள்	137		**137**
8	பராமரிப்பு நிலைய பகுதித் தேர்ச்சி மிக்க தொழிலாளர்கள்	45		**45**
	மொத்தம்	**632**	**406**	**1,038**

மூலம்: மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகள்

மத்திய மாகாணத்தில் அடுத்த ஐந்து வருட காலப்பகுதிக்கு வருடாந்தம் 1038 மேலதிக தன்னியக்க இயந்திரவியல் துறைசார் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டிய தேவைப்பாடுகள் காணப்படுகின்றது. இத் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கேள்விகளுக்காக பயிற்சியளிக்கப்பட வேண்டிய தேவைப்பாடானது காணப்படுகின்றது. பயிற்சி நிறுவகங்கள் வருடாந்தம் சராசரியாக 450 மேலதிக தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்ப்பவர்கள், 149 மேலதிக தன்னியக்க மின்னியலாளர்கள் மற்றும் மின் மோட்டர் முறுக்குநர்கள், 27 தன்னியக்க வளிச்சீராக்கி திருத்துநர்கள், 78 ரயர் திருத்துதல் மற்றும் பராமரிப்பு தொழிலாளர்கள், 94 தன்னியக்க வர்ணம் பூசுபவர்கள், 58 தன்னியக்க ஒட்டுவேலை செய்பவர்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தொழில்களை புரிபவர்கள், 137 மேலதிக மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர்கள் மற்றும் 45 பராமரிப்பு நிலைய பகுதித் தேர்ச்சி மிக்க தொழிலாளர்கள் ஆகியோருக்கான பயிற்சிகளை வழங்க வேண்டும்.

தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்ப்பவர்கள், தன்னியக்க மின்னியலாளர்கள் மற்றும் மின் மோட்டர் முறுக்குநர்கள், தன்னியக்க வளிச்சீராக்கி திருத்துநர்கள், ரயர்

திருத்துதல் மற்றும் பராமரிப்பு தொழிலாளர்கள், தன்னியக்க வர்ணம் பூசுபவர்கள் தன்னியக்க ஒட்டுவேலை செய்பவர்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தொழில்களை புரிபவர்கள் ஆகியோருக்கு உள்ளூர் சந்தைகள் மற்றும் வெளிநாட்டு சந்தைகள் ஆகியவற்றில் கேள்விகளில் நிலவுவதுடன் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர்கள், பராமரிப்பு நிலைய பகுதித் தேர்ச்சி மிக்க தொழிலாளர்கள் ஆகியோருக்கான பயிற்சி தேவைகள் உள்ளூர் சந்தைகளில் மட்டும் காணப்படுகின்றன.

3.4 வீட்டு மின்சார உபகரணம் பழுதுபார்த்தல் துறை

3.4.1 பின்னணி

வீட்டு மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணம் பழுதுபார்த்தல் சேவைத் துறையில் தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துதல், குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துதல், வீட்டு மின் சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் திருத்துதல் என்பன உள்ளடங்குகின்றன. இத்துறையில் பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகள் அல்லது அமைப்புகள் தொடர்பான தகவல்கள் மிகக் குறைவாக காணப்படுவதானது தகவல் சேகரிப்பினை மிகவும் தீவிரமாக பாதித்துள்ளது. பிரதேச செயலாளர் (DS) பிரிவுகளில் பதிவுசெய்யப்பட்டுள்ள அமைப்புகள் தொடர்பான பட்டியலானது மிகவும் குறைந்தளவான தகவல்களை கொண்டுள்ளது: அவற்றின் செயற்பாட்டு அளவு அதாவது சிறியது, நடுத்தரமானது அல்லது பெரியது, முதலீடு, தொழில்புரியும் ஊழியர்களின் எண்ணிக்கை, வேறு போன்றவை தொடர்பான தகவல்கள் காணப்படவில்லை. பிரதேச செயலகங்களில் (DS) ஒவ்வொரு தொழில் வகையின் கீழும் பதிவுசெய்யப்பட்டுள்ள அமைப்புகள்/ கம்பனிகளிடையில் அவற்றில் தொழில்புரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலான செயற்பாட்டு அளவினை அடையாளம் காண்பதற்காக மாதிரிக் கணக்கெடுப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. மாதிரிக் கணக்கெடுப்பின் மூலம் தெரியப்படுத்தப்பட்ட நிறுவகங்களின் சதவீத பரம்பலின் அடிப்படையில் மொத்த நிறுவகங்களும் மூன்று

(03) தொடக்கம் ஐந்து (05) வரையான தொழிலாளர்களைக் கொண்டுள்ள மற்றும் இரண்டு (02) தொழிலாளர்களைக் கொண்டுள்ள நிறுவகங்கள் என்றவாறு முதலில் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியிலும் பின்னர் மாவட்ட ரீதியிலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. வேலைவாய்ப்பு எண்ணிக்கைகளின் அடிப்படையில் நிறுவகங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்கள் அட்டவணை 3.36 இல் தரப்பட்டுள்ளது. பின்வரும் முறையினை பயன்படுத்தி தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கையானது கணக்கிடப்பட்டுள்ளது: மூன்று (03) தொடக்கம் ஐந்து (05) வரையான தொழில்வாய்ப்புகள் காணப்படுமாயின் நிறுவகங்களின் எண்ணிக்கையினை நான்கினால் (04) பெருக்குதல், இரண்டு தொழில்வாய்ப்புகள் காணப்படுமாயின் நிறுவகங்களின் எண்ணிக்கையினை இரண்டினால் (02) பெருக்குதல்.

3.4.2 நிறுவகங்கள் மற்றும் வேலைவாய்ப்பு எண்ணிக்கைகள்

மத்திய மாகாணத்திலுள்ள மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் நிறுவகங்களின் எண்ணிக்கை தொடர்பான மதிப்பீடு மற்றும் அவற்றிலுள்ள மொத்த வேலைவாய்ப்பு என்பன தொடர்பான தகவல்கள் அட்டவணை 3.36 இல தரப்பட்டுள்ளது. கண்டி மாவட்டத்தில் செயற்பட்டுவரும் இத்துறைசார் வியாபார அமைப்புக்களின் மொத்த எண்ணிக்கை 395 ஆகும். இம் 395 நிறுவகங்களில் 95% ஆன நிறுவகங்களில் இரண்டு தொழிலாளர்களும் 5% ஆன நிறுவகங்களில் மட்டும் இரண்டிற்கும் மேற்பட்ட எண்ணிக்கையான தொழிலாளர்களும் தொழில்புரிகின்றனர். ஆகவே, இத் துறையின் செயற்பாடானது பெரும்பாலும் ஓர் சிறிய அளவிலான வியாபாரமாகவே இடம்பெறுகின்றது. கண்டி மாவட்டத்திலுள்ள மின்சார மற்றும் இலத்திரனியல் சேவைத் துறையின் செயற்பாட்டு ரீதியான பரம்பல் பினவருமாறு: 22% ஆனவை தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துதல், 22% ஆனவை

குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துதல், 56% ஆனவை வீட்டு மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல்.

2013 ஆம் ஆண்டில் மாத்தளை மாவட்டத்தில் காணப்பட்ட மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல் சேவைத் துறை நிறுவகங்களின் மொத்த எண்ணிக்கை 296 ஆகும். இம் 296 நிறுவகங்களில் 3% ஆன நிறுவகங்களில் மட்டும் மூன்று தொடக்கம் ஐந்து வரையான தொழிலாளர்களும் 97% ஆன நிறுவகங்களில் இரண்டு தொழிலாளர்களும் தொழில்புரிகின்றனர். 2013 ஆம் ஆண்டில் மாத்தளை மாவட்டத்திலுள்ள இத்துறைசார் கணிக்கப்பட்ட தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 612 ஆகும். மாத்தளை மாவட்டத்திலுள்ள மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்தும் நிறுவகங்களின் செயற்பாட்டு ரீதியான பரம்பல் பினவருமாறு: 22% ஆனவை தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துதல், 22% ஆனவை குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துதல், 56% ஆனவை வீட்டு மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல். மாத்தளை மாவட்டத்திலுள்ள மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரண திருத்துதல் சேவைத் துறையின் செயற்பாட்டு ரீதியான பரம்பல் பினவருமாறு: 22% ஆனவை தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துதல், 25% ஆனவை குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துதல், 53% ஆனவை வீட்டு மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல்.

அட்டவணை 3.36
மின் உபகரணம் பழுதுபார்த்தல் துறையில் உள்ள கணிக்கப்பட்ட வேலைவாய்ப்புக்கள் - 2013

தொ. இல	தொழில் வகை	நிறுவகங்களின் எண்ணிக்கை				தொழிலாளர்களின் எண்ணிக்கை
		>5 தொழிலாளர்கள்	3 தொடக்கம் 5 தொழிலாளர்கள்	2 தொழிலாளர்கள்	மொத்தம்	
கண்டி மாவட்டம்						
1	தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துதல்			88	88	176
2	குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துதல்		18	69	87	210
3	வீட்டு மின்சார உபயோக பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல்			220	220	440
	மொத்தம்		**18**	**377**	**395**	**826**
மாத்தளை மாவட்டம்						
1	தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துதல்			66	66	**132**
2	குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துதல்		10	55	65	**150**
3	வீட்டு மின்சார உபயோக பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல்			165	165	**330**
	மொத்தம்		**10**	**286**	**296**	**612**
நுவரெலியா மாவட்டம்						
1	தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துதல்			16	16	32
2	குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துதல்			15	15	30
3	வீட்டு மின்சார உபயோக பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல்			89	89	188

	மொத்தம்			**120**	**120**	**250**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

2013 ஆம் ஆண்டில் நுவரெலியா மாவட்டத்தில் காணப்பட்ட மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல் மற்றும் சேவைத் துறை வியாபார நிறுவகங்களின் மொத்த எண்ணிக்கை 120 ஆகும். இத்துறைசார் அனைத்து நிறுவகங்களும் இரண்டு தொழிலாளர்களைக் கொண்ட சிறிய அளவிலான நிறுவகங்களாகவே செயற்படுகின்றன. நுவரெலியா மாவட்டத்திலுள்ள மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்தும் நிறுவகங்களின் செயற்பாட்டு ரீதியான பரம்பல் பினவருமாறு: 13% ஆனவை தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துதல், 13% ஆனவை குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துதல், 74% ஆனவை வீட்டு மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல். 2013 ஆம் ஆண்டில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள இத்துறைசார் கணிக்கப்பட்ட தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 250 ஆகும். நுவரெலியா மாவட்டத்திலுள்ள மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல் சேவைத் துறையின் செயற்பாட்டு ரீதியான பரம்பல் பினவருமாறு: 13% ஆனவை தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துதல், 12% ஆனவை குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துதல், 75% ஆனவை வீட்டு மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல்.

3.4.3 தொழில் அடிப்படையில் வேலைவாய்ப்பு தொடர்பான மதிப்பீடு

மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல் மற்றும் சேவைத் துறைசார் பல்வேறுபட்ட தொழில்களில் ஈடுபட்டுவருகின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையானது இத்துறையிலுள்ள மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த தொழில்வாய்ப்பு எண்ணிக்கைளின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்துறையிலுள்ள ஏனைய தொழில்களிலுள்ள தொழிலாளர்களின்

எண்ணிக்கையானது உரிய கைத்தொழிற்துறை வகைகளிலுள்ள வேலைவாய்ப்புகளின் அடிப்படையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3.37

மின் உபகரணம் பழுதுபார்த்தல் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கான கணிக்கப்பட்ட ஆண்டு சராசரி கேள்விகள்

தொ. இல.	தொழில்	தொழிலாளர்களின் எண்ணிக்கை - 2013				10% இலும் குறைந்த வளர்ச்சி வீதத்தினையுடைய கைத்தொழில் நிறுவகங்களின் வருடாந்த சராசரி தொழிலாளர் தேவைகள்			
		கண்டி	மாத்தளை	நுவரெலியா	மத்திய மாகாணம்	கண்டி	மாத்தளை	நுவரெலியா	மத்திய மாகாணம்
1	தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துதல்	176	132	32	340	21	16	4	**41**
2	குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துதல்	210	150	30	390	26	18	4	**48**
3	வீட்டு மின்சார உபயோக பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல்	440	330	188	824	44	33	19	**96**
	மொத்தம்	**826**	**612**	**250**	**1,554**	**91**	**67**	**27**	**185**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

அட்டவணை 3.37 இல் தரப்பட்டுள்ளதற்கிணங்க, 2013 ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தின் மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துநர் துறையிற்கான மொத்த தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கையானது 1554 ஆகும். இதில் தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்தும் தொழிலாளர்களின் எண்ணிக்கையானது 340 ஆகவும் குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்தும் தொழிலாளர்களின் எண்ணிக்கையானது 390 ஆகவும் வீட்டு மின்சார

உபயோக பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்தல் சேவைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையானது 824 ஆகவும் காணப்படுகின்றது. இத்துறைசார் மொத்த வேலைவாய்ப்புகளில் 54% ஆனவை கண்டி மாவட்டத்திலும் 40% ஆனவை மாத்தளை மாவட்டத்திலும் மற்றும் 16% ஆனவை நுவரெலியா மாவட்டத்திலும் காணப்பட்டன. மாகாணத்திலுள்ள மின்சார மற்றும் இலத்திரனியல் சேவைத் துறையின் செயற்பாட்டு ரீதியான பரம்பல் பின்வருமாறு: தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துநர்கள் 22% ஆகவும் குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துநர்கள் 25% ஆகவும் வீட்டு மின்சார உபயோக பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துநர்கள் 53% ஆகவும் காணப்பட்டன.

3.4.4 வருடாந்த சராசரி தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள்

வீட்டு மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துநர் துறைசார் தொழிலாளர்களிற்கான வருடாந்த சராசரி தேவைப்பாடுகள் ஒவ்வொரு தொழிற்துறை வகைகளிலும் 2013 ஆம் ஆண்டிலிருந்து தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 10% ஆன தொழிலாளர் எண்ணிக்கை அதிகரிப்பு ஏற்படுகின்றது என்ற எடுகோளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான ஒவ்வொரு தொழில் வகைளிலும் உள்ள தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கையானது எதிர்வுகூறப்பட்டுள்ளது. எதிர்வுகூறப்பட்டுள்ள தொழில்வாய்ப்புகளில் காணப்படுகின்ற வருடாந்த மாற்றமானது வருடாந்த தொழிலாளர்களுக்கான தேவைகளாக தரப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கான வருடாந்த சராசரி தேவைப்பாடுகள், 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான வருடாந்த தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகளின் எளிய சராசரியினைக் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது. அட்டவணை 3.37 இல் ஒவ்வொரு தொழிற்துறைக்குமான மாவட்ட அடிப்படையிலான வருடாந்த சராசரி தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள் தரப்பட்டுள்ளன.

அடுத்த ஐந்து வருட காலப்பகுதிக்கு மத்திய மாகாணத்திற்காக அதன் வீட்டு மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல் துறையிற்காக சராசரியாக வருடாந்தம் 185 தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். இதில் ஏறத்தாழ கண்டி மாவட்டத்தில் 91 மேலதிக தொழிலாளர்களும் மாத்தளை மாவட்டத்தில் 67 தொழிலாளர்களும் நுவரெலியா மாவட்டத்தில் 27 தொழிலாளர்களும் தேவைப்படுகின்றனர். மாகாண மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல் துறையிற்கு 41 மேலதிக தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துநர்களும், 48 மேலதிக குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துநர்களும் மற்றும் 96 மேலதிக வீட்டு மின்சார உபயோக பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துநர்களும் தேவைப்படுகின்றனர். தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துநர்களுக்கான மேலதிக தேவைகள் தொடர்பான மாவட்ட ரீதியிலான பரம்பல் பின்வருமாறு: கண்டி - 21, மாத்தளை 16 மற்றும் நுவரெலியா - 4. குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துநர்களுக்கான மேலதிக தேவைகள் தொடர்பான மாவட்ட ரீதியிலான பரம்பல் பின்வருமாறு: கண்டி - 26, மாத்தளை 18 மற்றும் நுவரெலியா - 4. வீட்டு மின்சார உபயோக பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துநர்களுக்கான மேலதிக தேவைகள் தொடர்பான மாவட்ட ரீதியிலான பரம்பல் பின்வருமாறு: கண்டி - 44, மாத்தளை 33 மற்றும் நுவரெலியா - 19.

3.4.5 வீட்டு மின்சார உபகரணம் பழுதுபார்க்கும் தொழிலாளர்களுக்கு வெளிநாடுகளில் நிலவுகின்ற கேள்விகள்

இப்பகுதியில் நாம் மத்திய மாகாணத்தில் மின்சார உபயோக பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் பழுதுபார்த்தல் துறைசார் தொழிலாளர்களுக்கான சாத்தியமான வெளிநாட்டு கேள்விகள் தொடர்பான மதிப்பீட்டினை மேற்கொண்டுள்ளோம். மின்சார உபயோக பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துநர் துறைசார் வழங்க முடியாமற்போன தேர்ச்சி பெற்ற

தொழிலாளர்களுக்கான வெளிநாட்டு கேள்விகளை பயன்படுத்தி வெளிநாட்டு சந்தைகளுக்கு அவசியமான தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையினை கணக்கிட்டுள்ளோம். மத்திய மாகாணமானது ஏறத்தாழ 10% ஆன வழங்க முடியாமற்போன வெளிநாட்டு தொழிலாளர் கேள்விகளிகளிற்கான பயிற்சிகளை வழங்குகின்றது என அனுமானித்து, நாம் வெளிநாடுகளிற்கு அனுப்புவதற்காக பயிற்சி அளிக்கப்பட வேண்டியுள்ள நபர்களின் எண்ணிக்கையினை கணக்கிட்டுள்ளாம். இந்த விடயத்தில், வெளிநாட்டு வேலைகளுக்கான கோரிக்கைகள் தொடர்பாக 2011 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கைகள் குறைந்தது அடுத்த ஐந்து ஆண்டுகளுக்காவது காணப்படும் என நாம் கருதுகின்றோம். அட்டவணை 3.38 இல் வெளிநாட்டு தொழிலாளர் சந்தைகளுக்காக பயிற்சியளிக்கப்பட வேண்டிய மேலதிகமான தொழிலாளர்களின் எண்ணிக்கை தொடர்பான மதிப்பீடானது தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3.38 இல் தரப்பட்டுள்ளதற்கு இணங்க, குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துநர் தொழில்களுக்காக வெளிநாடுகளில் கேள்விகள் காணப்படுவதுடன் 2011 ஆம் ஆண்டில் குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துநர் தொழில்களுக்கான வெளிநாட்டு கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை 2,011 ஆகும். இதேவேளை இக்கேள்விகளில் 294 இற்காக மாத்திரம் வழங்கல்கள் றேகொள்ளப்பட்டுள்ளன. நாட்டின் மூலம் மேலும் 1,717 குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துநர்களை வெளிநாட்டு வேலைகளிற்காக அனுப்பிவைக்க முடியும். மத்திய மாகாணமானது வழங்கமுடியாமற்போன வெளிநாட்டு தொழிற் கோரிக்கைகளில் 10% இற்கான பயிற்சிகளை வழங்குமாயின் மேலும் 172 குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துநர்களை வெளிநாட்டு சந்தைகளிற்கு அனுப்பிவைக்க முடியும்.

அட்டவணை 3.38

மின் உபகரணம் பழுதுபார்த்தல் துறையில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்கான கேள்விகள்

தொடர் இல	தொழில்	தொழிலுக்கான கோரிக்கைகள்	வேலைகளுக்காக வெளிநாடுகளிற்கு சென்றுள்ளவர்களின் எண்ணிக்கை	வழங்கமுடியாமற் போன கேள்விகள்	மத்திய மாகாணமானது ஏறத்தாழ 10% ஆன வழங்க முடியாமற்போன கேள்விகளிகளிற்கான வழங்கலை மேற்கொள்ளுமாயின் பயிற்சித் தேவைகள்
1	தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துநர்கள்				
2	குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துநர்கள்	2,011	294	1,717	172
3	வீட்டு மின்சார உபயோக பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துநர்கள்				
	மொத்தம்	**2,011**	**294**	**1,717**	**172**

மூலம்: 2012 ஆம் ஆண்டிற்கான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வருடாந்த அறிக்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

3.4.6 மின்சார உபகரணம் பழுதுபார்க்கும் துறையில் காணப்படுகின்ற மொத்த பயிற்சி தேவைப்பாடுகள்

இப்பகுதியில் மத்திய மாகாணத்திலுள்ள மின்சார உபயோக பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல் துறை தொடர்பான மொத்த பயிற்சி தேவைப்பாடுகள் பற்றிய விடயங்கள் தரப்பட்டுள்ளது. இங்கே தரப்பட்டுள்ள மொத்த பயிற்சி தேவைப்பாடுகள், உள்ளூர் சந்தைகள் மற்றும் வெளிநாட்டு சந்தைகள்

ஆகியவற்றிற்கான தேவைகளின் கூட்டுத்தொகையாகும். 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மத்திய மாகாணத்தில் மின்சார உபயோக பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துநர் தொழிற்துறை தொடர்பாக நிலவும் மொத்த தொழிலாளர்களிற்கான பயிற்சி தேவைகள் அட்டவணை 3.39 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3.39

மின் உபகரணம் பழுதுபார்த்தல் துறையில் காணப்படுகின்ற மொத்த பயிற்சித் தேவைப்பாடுகள் (வருடாந்த சராசரி தேவைப்பாடுகள்) 2014 - 2018

தொடர் இல	தொழில் வகை	மதிப்பீடு செய்யப்பட்ட உள்ளூர் கேள்விகள் (நபர்களின் எண்ணிக்கை)	மதிப்பீடு செய்யப்பட்ட வெளிநாட்டு கேள்விகள் (நபர்களின் எண்ணிக்கை)	மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த கேள்விகள் (நபர்களின் எண்ணிக்கை)
1	தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துநர்கள்	41		41
2	குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துநர்கள்	48	172	220
3	வீட்டு மின்சார உபயோக பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துநர்கள்	96		96
	மொத்தம்	**185**	**172**	**357**

மூலம்: மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகள்

மத்திய மாகாணமானது அடுத்த ஐந்து வருட காலப்பகுதிக்கு 357 மேலதிக மின்சார உபயோக பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல் துறைசார் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு வருடாந்தம் பயிற்சி அளிக்க வேண்டிய தேவைப்பாடுகள் காணப்படுகின்றது. பயிற்சி நிறுவகங்கள் வருடாந்தம் 41 தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துநர்கள், 220 மற்றும் 96 வீட்டு

மின்சார உபயோக பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துநர்கள் ஆகியோருக்கான பயிற்சிகளை வழங்க வேண்டும். தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி திருத்துநர்கள் மற்றும் வீட்டு மின்சார உபயோக பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துநர்கள் ஆகியோருக்கு உள்ளூர் சந்தைகளில் மட்டும் கேள்விகளில் நிலவுவதுடன் குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி திருத்துநர்கள்களிற்கு உள்ளூர் சந்தைகளிலும் மற்றும் வெளிநாட்டு சந்தைகளிலும் மேலதிகமான கேள்விகள் நிலவுகின்றன.

3.5 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) துறை

3.5.1 பின்னணி

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையானது ஆரம்ப கணிப்பீட்டு நாட்களில் இருந்து முற்றுமுழுதாக மாற்றமடைந்ததுள்ளதுடன் 'அறிவு பொருளாதாரம்' ஆனது தற்பொழுது முன்னர் எப்போதுமே காணப்படமுடியாத அளவிற்கு பரிமாணமடைந்துள்ளதுடன் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் விரைவான சமூக மற்றும் பொருளாதார மாற்றங்களுக்கான உந்துசக்தியாக விளங்குகின்றது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையானது வேகமாக வளர்ந்து வரும் கைத்தொழில்துறையாக காணப்படுவதுடன் அதனால் வேலைவாய்ப்புக்களின் உருவாக்கம், திறன்கள் மற்றும் வருமானம் ஆகியவற்றினை மேம்படுத்துதல் போன்றவற்றிற்கு பெரிதும் பங்களிக்கமுடியும். இந்த கைத்தொழிற் துறையானது தொடர்பாடல், வடிவமைத்தல் மற்றும் அச்சிடுதல் பல்வேறு செயற்பாடுகளுடன் தொடர்புபடுவதன் மூலம் பல அம்சங்கள் மற்றும் வகைப்படுத்தல்கள் என்பனவற்றுடன் கூடிய கைத்தொழில்துறையினை உருவாக்குவதற்கு வழிவகுக்கும். எனினும், இத் துறையின் அபிவிருத்திக்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்துவரும் தொழிலாளர்களின் பன்முகத்தன்மை, தொழில்நுட்ப மாற்ற விகிதத்திற்கு ஏற்றவாறு தற்போதைய மற்றும் எதிர்கால தொழிலாளர்களிற்கு பொருத்தமான பயிற்சிகளை

வழங்கல் என்பன தொடர்பாக ஏனைய துறைகளிலும் பார்க்க மிகவும் சிக்கலானதாக காணப்படுகின்ற பல சவால்களை எதிர்நோக்குகின்றது. இவ் அறிக்கையின் இப்பிரிவில் இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறை தொடர்பான பொதுவான விளக்கமொன்று தரப்பட்டுள்ளதுடன் தற்போதைய மற்றும் எதிர்கால தொழிலாளர் தேவைகள் மற்றும் மத்திய மாகாணத்திலுள்ள தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் பயிற்சிகள் மற்றும் திறன்கள் ஆகியனவற்றினை அடையாளம் காணுவதற்கான விசேட கவனமும் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது மாகாண மட்டத்திற்கான எந்தவொரு முதன்மையான அல்லது துணையான தரவுகளும் காணப்படவில்லை என்றாலும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் புள்ளிவிபரவியலிற்கு அமைவாக தற்போது 60,000 இற்கும் மேற்பட்ட நபர்கள் கொழும்பிலுள்ள தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறைசார் தொழில் நிறுவகங்களில் தொழில்புரிவதுடன் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 20 சதவீதிற்கும் அதிகமான வருடாந்த வளர்ச்சியானது ஏற்பட்டும் வருகின்றது. தொழிலாளர்களின் எண்ணிக்கையானது 10 தொடக்கம் 15 சதவீதமான மிக குறைந்த தேய்வு வீதத்துடன் நிலையானதாக காணப்படுகின்றது. மேலும், இலங்கையில் தற்போது சுமார் 300 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவகங்கள் செயற்பாட்டு வருகின்றன. 2011 ஆம் ஆண்டில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையின் வருடாந்த ஏற்றுமதியானது சுமார் 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். 2015 ஆம் ஆண்டளவில் தகவல் தொழில்நுட்பம்/ பிஸ்னஸ் புரோசஸ் அவுட்சோர்ஸிங் (BPO) நிறுவகங்கள் நாட்டில் 103, 025 நபர்களுக்கான தொழில்வாய்ப்புகளுடன் கூடிய 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஏற்றுமதி வருமானத்தினை ஈட்டுகின்ற முதல்தர கம்பனியாக விளங்கும். இலங்கை மென்பொருள் மற்றும் சேவை நிறுவகங்களின் கூட்டுத்தாபனம் (SLASSCOM; 2014) அதன் சொந்த ஆய்வில் சேகரித்துள்ள தரவுகளின் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டில் அதன் ஏற்றுமதி இலக்காக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டுவதனையும் மற்றும் 80,000 ஊழியர்களுக்கு

வேலைவாய்ப்புக்களை வழங்குவதையும் இலக்காகக் கொண்ட பாதையில் பயணித்து வருகின்றது. 2022 ஆம் ஆண்டில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஏற்றுமதியினை 5.0 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கவுள்ளதுடன் தகுதிவாய்ந்த மக்களை தக்கவைத்துக் கொள்ளவதில் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டிவரும் என்பதனையும் நாம் எதிர்பார்க்கிறோம்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையின் வெற்றியானது அதன் தொழிலாளர்களின் திறன்கள் மற்றும் கைத்தொழிற் துறை நிறுவகங்களின் சவாலான வாய்ப்புகள் மற்றும் பணிகள் ஆகியவற்றினை எதிர்கொள்ளக்கூடிய அவர்களின் தேர்ச்சிகள் என்பவற்றின் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. எனவே இத்துறையானது ஒரு சமூகத்தின் அனைத்து பிரிவினரும் ஈடுபடக்கூடியதான படைப்பாற்றல், நவீனமயப்படுத்தல், முற்றிலும் புதிய தொழில்புரியும் முறைகள், தொடர்பு கொள்ளல் மற்றும் கற்றல் ஆகியனவற்றிற்கு பெரிதும் வாய்ப்பளிக்கின்றது. தொடர்பாடல் துறையானது அதி விரைவானதாகவும் மற்றும் செயல்திறன் மிக்கதாகவும் காணப்படுவதனால் தகவல் தொழில்நுட்ப துறைசார் தொழிலாளர்களின் நிலையற்ற தன்மை காரணமாக பணிகளை பொறுப்பேற்பதற்காக புதிதாக உள்வாங்கப்படுபவர்களுக்கு துரித பயிற்சிகளை அளித்தல் மற்றும் காலத்திற்கு ஒவ்வாத அறிவினை உடைய தகவல் தொழில்நுட்ப துறைசார் தொழிலாளியை வைத்திருக்கும் ஆபத்தினை தவிர்த்தல் போன்றவற்றிற்கான நிறுவகங்களின் தேவைகளை அதிகரிக்கின்றது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையின் தகைமைகள் உருவாகிவரும் தொழிலாளர்களின் கவனத்தினையும் மற்றும் ஆர்வத்தினையும் ஈர்க்கக்கூடிய வகையில் சாத்தியமான அதிகூடுதலான தொழில்வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுவதனை அடிப்படையாகக் கொண்டு மிகவும் பரந்தளவிலான விரைவான தொழில்நுட்பவியல் முன்னேற்றங்களை கொண்டிருக்கக்கூடியதாக விரிவுபடுத்தப்படல் வேண்டும். இவ்வாறான தவிர்க்க முடியாத சமூக மற்றும் பொருளாதார காரணிகளை விளங்கிக்

கொண்டு ஆட்சிக்கு வந்த இலங்கை அரசாங்கங்கள் தொழில்களில் ஈடுபடும் வாய்ப்புகளை அதிகரிக்கும் பொருட்டு இத்துறையினை மேம்படுத்துவதற்கான பல முற்போக்கான முயற்சிகளை எடுத்து வருகின்றன. தகவல்களின் அடிப்படையில், இலங்கையிலுள்ள இளம் தலைமுறையினர் (15 வயது தொடக்கம் 19 வயதிற்கு இடைப்பட்ட) 5 வயது தொடக்கம் 69 வயதிற்கு இடைப்பட்ட அனைத்து வயதினர் மத்தியிலும் அதிகூடிய கணனி கல்வியறிவு வீதத்தினைக் கொண்டிருப்பதுடன் 50 வயதிற்கும் மேற்பட்ட வயதானோர் ஒப்பீட்டளவில் குறைந்த கணனி கல்வியறிவு வீதத்தினைக் கொண்டுமுள்ளனர். மேலும், கல்வியறிவு மற்றும் கணனிக் கல்வியறிவு என்பன மிகவும் தொடர்புடையனவாக காணப்படுவதுடன் உயர்கல்வி அறிவுடையோரிடையில் உயர் கணனி கல்வியறிவு காணப்படுவதுடன் கல்விப் பொது தராதரப் பத்திர (உ / த) மற்றும் அதற்கும் கூடுதலான கல்வியறிவினை கொண்டுள்ளவர்களிடையில் குறிப்பாக 60 சதவீதத்திற்கு கிட்டிய அதியுயர் கணனிக் கல்வியறிவானது காணப்படுகின்றது. ஒப்பீட்டு ரீதியில், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், 2009 கணக்கெடுப்பு முடிவுகளின் படி ஆங்கில மொழி அறிவானது கணனி கல்வியறிவினை மேம்படுத்துவதற்கு பெரிதும் பங்களித்துள்ளது ஏனெனில் ஆங்கில மொழி அறிவுடையவர்கள் நடாளாவிய மட்டத்திலும் பார்க்க சுமார் மூன்று மடங்கான கணனிக் கல்வியறிவினை கொண்டுள்ளனர்.

3.5.2 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறை தொடர்பான மாகாணத்திற்கான தரவுகள்

இவ்வகையான உலகலாவிய சவால்களை ஏற்றுக்கொண்டு, இலங்கை அரசாங்கமானது நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்காக தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதனால் ஏற்படும் நன்மைகளை தொலைநோக்காக கொண்டு இலத்திரனியல் - இலங்கை (e - Sri Lanka) இனை நோக்கிய பயணத்தினை விரைவுபடுத்தியுள்ளது. ஆங்கில மொழி மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல்

தொழில்நுட்ப திட்டங்களை பாரிய முதலீடுகளுடன் ஆரம்பித்து 2009 ஆம் ஆண்டானது ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆண்டாக உத்தியோக பூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டது. மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களமானது பாரிய அளவில் பொதுமக்களின் இலத்திரனியல் - தயார்நிலை (e–readiness) இனை அளவீடு செய்வதற்கு அழைக்கப்பட்டுள்ளது.

'டிஜிட்டல் டிவைட்' ஆனது மக்களிடம் கணனிகள் மற்றும் இணைய தொடர்பு வசதிகள் காணப்படுவதனை அளவீடு செய்வதற்குரிய மற்றுமொரு அளவீட்டு முறையாகும். அத்துடன் தற்பொழுது இடைவெளிகளை குறைப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை, மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களமானது 'டிஜிட்டல் டிவைட்' இன் பயன்பாட்டினை குறைக்கும் முகமாக திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் மூலோபாயங்களை சாத்தியமாக்குவதற்கு கணனி கல்வியறிவு தொடர்பான மூன்று மக்கள் தொகை கணக்கெடுப்புக்களை (முறையே 2004, 2006/ 07 மற்றும் 2009) மேற்கொண்டுள்ளது. மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணனி கல்வியறிவு தொடர்பான கணக்கெடுப்பு முடிவுகளின் பிரகாரம் வீடுகளில் கணனிகளை சொந்தமாக வைத்திருக்கும் தன்மையானது ஒவ்வொரு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட மாகாணங்களிலும் 2004 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் அதிகரித்துக் காணப்படுவதுடன் வடமத்திய மற்றும் சப்பிரகமுவ ஆகிய மாகாணங்களில் அதிகூடிய அதிகரிப்பானது அவதானிக்கப்பட்டுள்ளது.

வரைபடம் 3.1

வீடுகளில் கணனிகளை சொந்தமாக வைத்திருப்பவர்கள் (%), 2009



மூலம்: மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணனி கல்வியறிவு தொடர்பான கணக்கெடுப்பு - 2009

கணக்கெடுப்பு தரவுகளின் படி 2005 ஆம் ஆண்டிலிருந்து கடந்த ஐந்து ஆண்டு காலப்பகுதியில் கணனிகளை கொள்வனவு செய்தல் மற்றும் கணனிகளை வீடுகளில் சொந்தமாக வைத்திருக்கும் தன்மை என்பன அதிகரித்துச் செல்லும் போக்கானது காணப்படுகின்றது. அட்டவணை 3.40 இற்கு இணங்க இலங்கையில் சராசரியாக பத்து வீடுகளில் ஆகக் குறைந்தது ஒரு கணனியாவது காணப்படுகின்றது. 2009 ஆம் ஆண்டில் நகர்புற வீடுகளில் (23.6%) கணனிகள் காணப்படுகின்ற நிலைமையினை நோக்கும் போது அங்கு நான்கு வீடுகளில் ஒரு கணனியாவது காணப்படுவதுடன் இது

கிராமப்புற (9.2%) மற்றும் பெருந் தோட்டப்புற (3.1%) வீடுகளிலும் பார்க்க மிகவும் கூடுதலானதாகும்.

அட்டவணை 3.40 இற்கிணங்க, மேல் மாகாணத்திலுள்ள வீடுகளில் கணனிகளை சொந்தமாக வைத்திருப்போரின் சதவீதமானது நாட்டின் சராசரியிலும் பார்க்க சுமார் இருமடங்கு அதிகமாகும். மத்திய மகாணத்திலுள்ள வீடுகளில் கணனிகளை சொந்தமாக வைத்திருப்போரின் சதவீதமானது 10.4 சதவீதமாகும். அத்துடன் இது நாட்டின் சராசரியிலும் பார்க்க சற்று குறைவானதாகவும் மத்திய மாகாணத்தின் சதவீதத்திலும் ஏறத்தாழ அரைமடங்காகும். எனினும், மாகாண மட்டத்தில் வீடுகளில் கணனிகளை சொந்தமாக வைத்திருப்போரில் மேல் மாகாணம் தவிர்ந்த மற்றைய அனைத்து மாகாணங்களுடனும் ஒப்பிடும் போது மத்திய மாகாணத்தின் முன்னேற்றமானது ஆச்சரியத்தக்கதாகவும் திருப்திகரமானதாகவும் காணப்படுகின்றது. அனைத்து மாகாணங்களிலும் அதாவது நாடு பூராவும் இக்குறித்த காலப்பகுதியில் வீடுகளில் கணனிகளை சொந்தமாக வைத்திருப்போரின் சதவீதமானது அதிகரிக்கும் போக்கில் காணப்படுவது இங்கு அவதானிக்கப்படக்கூடிய விடயமாகும்.

அட்டவணை 3.40

துறை மற்றும் மாகாண ரீதியாக வீடுகளில் கணனிகளை சொந்தமாக வைத்திருப்போர் - 2004, 2006/ 07 மற்றும் 2009

துறை/ மாகாணம்	மேசைக் கணனி (%)			மேசைக் கணனி/ மடிக்கணனி 2009
	2004	2006/07	2009	
இலங்கை	**3.8**	**8.2**	**10.6**	**11.4**
துறை				
நகரம்	10.5	17.8	23.6	26.3
கிராமம்	3.1	6.9	9.2	9.8
பெருந்தோட்டம்	0.3	1.1	3.1	3.3
மாகாணம்				
மேல் மாகாணம்	8.4	16.4	19.0	20.7
மத்திய மாகாணம்	3.3	6.7	9.7	10.4

தென் மாகாணம்	2.2	4.9	6.6	7.2
கிழக்கு மாகாணம்	1.2	3.7	5.8	5.9
வட மேல் மாகாணம்	3.1	4.8	6.9	7.1
வட மத்திய மாகாணம்	1.4	2.7	6.1	6.8
ஊவா மாகாணம்	0.4	2.7	4.6	4.9
சப்பிரகமுவ மாகாணம்	2.0	3.3	7.3	7.5

மூலம்: மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணனி கல்வியறிவு தொடர்பான கணக்கெடுப்பு - 2009

கணனி தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கணனி கல்வியறிவு

ஒர் உடனடியான பார்வையின் போது கணனி தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கணனி கல்வியறிவு ஆகிய இரு பதங்களும் ஒரே அர்த்தத்தினை கொண்டிருப்பது போல தோன்றினாலும் இவ்விரண்டிற்கும் இடையில் குறிப்பித்தக்களவான வேறுபாடு காணப்படுகின்றது. 2009 ஆம் ஆண்டின் மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணனி கல்வியறிவு தொடர்பான கணக்கெடுப்பு முடிவுகளின் பிரகாரம், கணனிகள் விளையாட்டுகளை விளையாடுவது தொடக்கம் சிக்கல் தன்மை மிகுந்த விமான பொறியில்சார் பிரயோகங்கள் வரையான பல்வேறு வகையான பிரயோகங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறான பயன்பாடுகளுள் ஒரு நபர் ஆகக் குறைந்தது ஒன்றினைப் பற்றி அறிந்திருந்தால் அவர் கணனி தொடர்பான விழிப்புணர்வினை உடையவராக கருதப்படுவார். அதேவேளை, ஒருவர் சுயமாக கணனியினை பயன்படுத்துவாராயின் அவர் கணனி கல்வியறிவினை உடையவராக கருதப்படுவார். அட்டவணை 3.41 இல் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் துறைகளிற்கு இடையில் மற்றும் மாகாணங்களிற்கு இடையில் இவ்விரு அளவீடுகளும் காணப்படும் விதம் தொடர்பான புள்ளிவிபரவியல் தரவுகள் தரப்பட்டுள்ளன. 2011/ 12 காலப்பகுதிக்கான சதவீதங்கள் முன்னைய காலப்பகுதிகளில் ஏற்பட்ட வளர்ச்சி வீதங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

அட்டவணை 3.41

துறை மற்றும் மாகாண ரீதியான மக்களின் (5 தொடக்கம் 69 வயது வரையான) கணனி தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கணனி கல்வியறிவு

துறை/ மாகாணம்	கணனி தொடர்பான விழிப்புணர்வு (%)			கணனி கல்வியறிவு(%)		
	2006/07	2009	2011/12*	2006/07	2009	2011/12*
இலங்கை	**37.1**	**43.8**	**51.7**	**16.1**	**20.3**	**25.6**
துறை						
நகரம்	47.4	60.0	75.9	25.1	31.1	38.5
கிராமம்	36.9	43.0	50.1	15.1	19.3	24.7
பெருந்தோட்டம்	10.3	15.8	24.2	4.3	8.4	16.4
மாகாணம்						
மேல் மாகாணம்	47.9	50.7	53.7	23.2	27.7	33.1
மத்திய மாகாணம்	31.0	34.8	39.1	14.8	18.0	21.9
தென் மாகாணம்	43.2	45.0	46.9	15.6	19.8	25.1
கிழக்கு மாகாணம்	31.5	46.6	68.9	11.4	12.9	14.6
வட மேல் மாகாணம்	31.8	42.1	55.7	12.6	16.5	21.6
வட மத்திய மாகாணம்	27.5	40.4	59.4	8.9	14.1	22.3
ஊவா மாகாணம்	22.3	29.3	38.5	9.9	14.7	21.8
சப்பிரகமுவ மாகாணம்	30.2	44.6	65.9	12.3	19.1	29.7

மூலம்: மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணனி கல்வியறிவு தொடர்பான கணக்கெடுப்பு - 2009

* 2011/ 12 காலப்பகுதிக்கான சதவீதங்கள் முன்னைய காலப்பகுதிகளில் ஏற்பட்ட வளர்ச்சி வீதங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

அட்டவணை 3.41 இல் காட்டப்பட்டுள்ளதற்கு இணங்க, அனைத்து மாகாணங்களிலும் இக்குறித்த காலப்பகுதியில் கணனி கல்வியறிவு மற்றும் கணனி தொடர்பான விழிப்புணர்வு ஆகியவற்றின் சதவீதத்தில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மேல் மாகாணத்தின் 50 சதவீதத்திற்கும் கூடுதலான பெறுமதியினை தவிர மற்றைய அனைத்து மாகாணங்களிலும் கணனி கல்வியறிவு மற்றும் கணனி தொடர்பான விழிப்புணர்வு தொடர்பாக இன்னும் குறைந்த சதவீத செயற்பாடே காணப்படுகின்றன. மேலும், மத்திய மாகாணமானது, இவ்விரு அளவீடுகளில் நாட்டின் சராசரியினை

விடவும் குறைவானதாக இருப்பதுடன் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது கணனி தொடர்பான விழிப்புணர்வானது மிகக் குறைந்த மட்டத்தில் பேணப்படுகின்றது (அட்டவணை 3.41). எனவே, மத்திய மாகாணத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் அபிவிருத்தி செயற்பாடுகளின் இந்த ஒப்பீட்டளவிலான மெதுவான முன்னேற்றம் தொடர்பாக உள்ளூர் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் ஆகியோரின் கவனத்தினை ஈர்ப்பது முக்கியமான ஓர் விடயமாக காணப்படுகின்றது. பொதுவாக, கணினி கல்வியறிவு தொடர்பாக மத்திய மாகாணமானது அதே போக்கினை கொண்டிருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. படம் 3.2 ஆனது சப்பிரகமுவ மற்றும் தென் ஆகிய மாகாணங்கள் கணினி கல்வியறிவு தொடர்பாக மத்திய மாகாணத்தினை விடவும் மேலும் ஒரு நல்ல முன்னேற்றகரமான நிலைமையில் உள்ளமையினை காட்டுகிறது. அனைத்து மாகாணங்களிலும் 2006/ 07 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கணனி தொடர்பான விழிப்புணர்வானது அதிகரித்துள்ளன என்பதும் கிழக்கு மாகாணம் மற்றும் சப்பிரகமுவ மாகாணம் ஆகியனவற்றில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் சுமார் 50 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளன என்பதும் தெளிவாகின்றது.

மத்திய மாகாணத்தில் கணனி தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கணனி கல்வியறிவு சதவீதம் ஆகியனவற்றின் குறைந்த முன்னேற்றமானது பெருந் தோட்ட துறையில் பிரதானமாக நுவரெலியா மாவட்டத்தில் அறிக்கையிடப்பட்டுள்ள இவ்விரு குறிகாட்டிகளினதும் மிக குறைந்த சதவீதங்களிற்கு காரணமாக அமைகின்றன. மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், 2009 இன் மாவட்ட ரீதியிலான தரவுகளின் மூலம் கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்கள் ஏனைய முக்கிய மாவட்டங்களான கம்பஹா, களுத்துறை மற்றும் மாத்தறை ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது சம நிலையில் திகழ்வது பிரதிபலிக்கப்படுகின்றது. நுவரெலியா மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் கணனி கல்வியறிவு மற்றும் கணனி

தொடர்பான விழிப்புணர்வு ஆகியனவற்றுக்கு மிகக் குறைந்த சதவீதங்களே அறிக்கையிடப்பட்டுள்ளன. இருப்பினும், 2006/ 07 ஆம் ஆண்டிலிருந்து 2009 வரையிலான காலப்பகுதியில் பெருந்தோட்ட துறையானது கணனி கல்வியறிவு மற்றும் கணனி தொட்பான விழிப்புணர்வு ஆகியன தொடர்பாக 50 % இற்கும் அதிகமான வளர்ச்சியினை காட்டுகின்றது.

வரைபடம் 3.2

மாகாண அடிப்படையில் கணனி கல்வியறிவு தொடர்பான (05- 69 வயதிற்கு இடைப்பட்ட வயதினை உடைய) சனத்தொகை (சதவீதத்தில்) - 2006/ 07 மற்றும் 2009



மூலம்: மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணனி கல்வியறிவு தொடர்பான கணக்கெடுப்பு - 2009

கணனிப் பயிற்சி வழங்கல் மூலங்கள்

மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணனி கல்வியறிவு தொடர்பான கணக்கெடுப்பு (2009) இற்கிணங்க, பெரும்பாலான கணனி கல்வியறிவு உடையவர்கள் தனியார் நிறுவகங்கள் அல்லது பாடசாலை/ பல்கலைக்கழகங்களில் இருந்து பயிற்சிகளை பெற்றுள்ளனர். அரசாங்க பயிற்சி

வழங்கும் நிலையங்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பயிற்சியானது ஒப்பீட்டளவில் குறைவாக (8.4%) காணப்படுகின்ற போதிலும், கிராமப்புற துறை (9.1%) மற்றும் பெருந்தோட்ட துறையினை (11.9%) சேர்ந்த கணனி கல்வியறிவினை உடையவர்களில் கணிசமான பகுதியினர் கணனி பயிற்சிகளை பெற்றுக்கொண்டதன் அடிப்படையில் அரசு பயிற்சி வழங்கும் நிலையங்கள் நகர்ப்புறம் அல்லாத பிரதேசங்களில் வசிப்பவர்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் தேர்ச்சிகளை அதிகரிப்பதற்கு பங்களித்துள்ளன என்பதனை அறியமுடிகின்றது. இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவகமான KPMG ஃபோர்டு, ரோட்ஸ், தார்ன்டன் அன்ட் கம்பனி இனது இறுதி அறிக்கையில் (2007) தரப்பட்டுள்ளதற்கிணங்க, சற்று வித்தியாசமான பரிமாணங்களை கொண்ட மதிப்பீடுகளுடன், பட்டம் அல்லாத சான்றிதழ்களை விருதளிக்கின்ற தனியார் துறை நிறுவகங்கள் உள்ளடங்கலான பெரும்பாலான பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் உரு 3.3 இல் காட்டப்பட்டுள்ளவாறு சான்றிதழ் மற்றும் டிப்ளோமா படிப்புகளுக்கான சான்றிதழ்களை வழங்கிவருகின்றன.

வரைபடம் 3.3
ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பயிற்சி வழங்கும் நிறுவகங்களின் பங்குகள்



மூலம்: இலங்கை தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப நிறுவகமான KPMG ஃபோர்டு, ரோட்ஸ், தார்ன்டன் அன்ட் கம்பனி (2007)

இணையத் தள வசதிகள் மற்றும் மின்னஞ்சலின் பயன்பாடு

மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணனி கல்வியறிவு தொடர்பான கணக்கெடுப்பு 2009 இற்கிணங்க, 5 வயது தொடக்கம் 69 வயது வரையான மக்கள் தொகையில் சுமார் 13% ஆனோர் கடந்த பன்னிரண்டு மாதங்களில் குறைந்தது ஒரு முறையாவது இணைய வசதியினை பயன்படுத்தி உள்ளனர். மாகாணங்கள் இடையில் இணையத் தள வசதியினை பயன்படுத்திய முறையானது மின்னஞ்சலினை பயன்படுத்திய முறையினை பொதுவாக ஒத்ததாக உள்ளது. மேலும், வசதிகள் பொதுவாக கிடைக்கின்ற நகர்ப்புற பிரதேசங்களில் நகர்ப்புற அல்லாத பிரதேசங்களை விடவும் மின்னஞ்சல் மற்றும் இணையத் தள வசதிகள் என்பன கூடுதலாக பயன்படுத்தப்படுகின்றன.

அட்டவணை 3.42 இல் தரப்பட்டுள்ளவாறு வசதி 5 வயது தொடக்கம் 69 வயது வரையான மக்கள் தொகையில் சுமார் 12% ஆனோர் மின்னஞ்சலினை பயன்படுத்துவதோடு அவர்கள் கடந்த 12 மாத காலப் பகுதியினுள் குறைந்தபட்சம் ஒரு முறையாவது மின்னஞ்சல் வசதியினை பயன்படுத்துகின்றனர். மின்னஞ்சலினை பயன்படுத்துவதில் மிகவும் உயர்ந்த நிலையில் மேல் மாகாணமும் (18.5%) அதற்கு அடுத்த படியாக மத்திய மாகாணமும் (12.3%) காணப்படுகிறது. மாகாணங்களிடையில் மிகக் குறைந்த மின்னஞ்சல் பயன்பாடு (5%) வட மேல் மாகாணத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

மத்திய மாகாண மாகாண அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கையாக உருவாகிவரும் தொழிலாளர்களிற்கான கணனி கல்விக்கு உயர் முன்னுரிமையினை அளித்தல் அதன் கல்விக் கொள்கையாகும் (டெய்லி நியூஸ், 2010). புதிய கல்விக் கொள்கையின் ஓர் முக்கிய அம்சம் யாதெனில், ஒவ்வொரு பிள்ளையும்

உலகலாவிய விடயங்களை தேடிக் கொள்வதற்கும் மற்றும் தங்களுடைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவினை திருப்தி செய்துகொள்வதற்கும் தேவையான கணனி கல்வியறிவினை அளித்தலாகும். தற்போது இம் முயற்சியானது பாடசாலை மட்டத்தில் இடம்பெற்று வருவதுடன் மத்திய மாகாணத்திலுள்ள 1,470 எண்ணிக்கையான மொத்த பாடசாலைகளில் 900 பாடசாலைகளுக்கு கணனி வசதிகள் ஏற்கனவே பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. புதிய கல்வி கொள்கையின் மற்றுமொரு அம்சமானது, சிறந்த மற்றும் பரந்தளவிலான வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்களுக்கு அவசியமான வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதற்கு ஏதுவான ஆங்கில கல்வியினை அனைத்து மாணவர்கள்களுக்கும் வழங்குவதாகும்.

அட்டவணை 3.42

துறை மற்றும் மாகாண ரீதியான இணைய வலையமைப்பு மற்றும் மின்னஞ்சல் முறைமையின் (E-mail) பாவனை - 2009

(05 வயது தொடக்கம் 69 வயது வரையான மக்கள் தொகை %)

துறை/ மாகாணம்	இறுதி 12 மாதங்களாக பயன்படுத்தப்பட்டவை (%)	
	இணைய வலையமைப்பு	மின்னஞ்சல்
இலங்கை	**13.1**	**12.0**
துறை		
நகரம்	23.9	22.9
கிராமம்	11.1	9.9
பெருந்தோட்டம்	9.2	8.1
மாகாணம்		
மேல் மாகாணம்	19.2	18.5
மத்திய மாகாணம்	13.2	12.3
தென் மாகாணம்	10.6	8.5
கிழக்கு மாகாணம்	11.4	10.5
வட மேல் மாகாணம்	6.3	5.0
வட மத்திய மாகாணம்	10.4	7.9

ஊவா மாகாணம்	9.4	7.2
சப்பிரகமுவ மாகாணம்	8.1	7.1

மூலம்: மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணனி கல்வியறிவு தொடர்பான கணக்கெடுப்பு - 2009

3.5.3 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறை தொடர்பான பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்புக்கள்

மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் 2009, இற்கு இணங்க மக்கள் தங்களிற்கான கல்வியறிவினை பெற்றுக்கொள்ளல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் தொழில்வாய்ப்புகள் உள்ளடங்கலாக பல்வேறு நோக்கங்களுக்காக கணனிகளை பயன்படுத்துவதற்கான பயிற்சி அளித்தல் என்பன பல வழிகள் மூலம் இடம்பெறுகின்றன. மேலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் பயிற்சிகளை வழங்கும் திட்டங்கள் உண்மையில் பல செயல்பாட்டு கிளைகள் மற்றும் வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்களை உருவாக்கக்கூடிய சாத்தியமான நடவடிக்கைகள் ஆகியவற்றினை கொண்டுள்ளது. அட்டவணை 3.43 காட்டுள்ளவாறு தனியார் துறை மற்றும் பாடசாலைகள்/ பல்கலைக்கழகங்கள் மூலம் வழங்கப்பட்டுவரும் பயிற்சிகள் 80 % சதவீதமான பயிற்சி தேவைகளை பூர்த்திசெய்கின்றன. எனினும், கிராமப்புறங்களில் தனியார் துறையின் ஈடுபாடு ஒப்பீட்டளவில் குறைவாக காணப்படுகின்றது.

அட்டவணை 3.43
கணனி கல்வியறிவுள்ள குடிசனத் தொகை (%)
5 தொடக்கம் 59 வயது வரையானோர் கணனி அறிவினை பெற்றுக்கொள்ளும் மூலங்கள் மற்றும் அவர்களின் வதிவிட துறைகள் - 2009

கணனி அறிவினை பெற்றுக்கொள்ளும் மூலங்கள்	மொத்தம்	வதிவிட துறை (%)		
		நகர் புறம்	கிராமப் புறம்	பெருந்தோட்ட துறை
தனியார் பயிற்சி பாடநெறி	40.1	45.8	38.7	48.2
பாடசாலை/ பல்கலைக்	40.2	36.5	41.3	29.0

கழகம்				
அரச பயிற்சி மையங்கள்	08.4	05.2	09.1	11.9
வேலைவாய்ப்பு நடவடிக்கைகள்	15.5	19.9	14.6	10.6
பணிபுரியும் இடம்	06.9	09.9	06.3	01.7
குடும்ப அங்கத்தவர்கள்	12.5	16.5	11.6	12.7
நண்பர்கள் / உறவினர்கள்	16.3	18.8	15.9	06.0
சுயமாக	14.1	25.6	11.7	03.5
ஏனையவை	02.6	04.8	02.1	03.6

மூலம்: மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணனி கல்வியறிவு தொடர்பான கணக்கெடுப்பு - 2009

அட்டவணை 3.44

கணனி சம்பந்தப்பட்ட துறைகளில் உள்ள சிறிய அளவிலான நிறுவகங்கள் (திருத்துதல்/ பயிற்சி/ மென் பொருள் அபிவிருத்தி/ விற்பனை)

மாவட்டம்	நிறுவகங்கள்/ தொழில்வாய்ப்புகள்	2012	2013	2014	2015	2016	2017	2018
கண்டி	நிறுவகங்களின் எண்ணிக்கை	42	45	49	54	60	65	72
	தொழில்வாய்ப்புகள்	270	312	406	527	685	891	1,158
மாத்தளை	நிறுவகங்களின் எண்ணிக்கை	24	27	28	31	34	37	41
	தொழில்வாய்ப்புகள்	231	277	360	468	609	792	1,029
நுவரெலியா	நிறுவகங்களின் எண்ணிக்கை	32	34	37	41	45	50	55
	தொழில்வாய்ப்புகள்	265	295	384	499	648	843	1,095

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013/ 14

மத்திய மாகாணத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் வேலை வாய்ப்புகள் ஒரு வேகமான வீதத்தில் வளர்ச்சியடைந்து வருகின்றன. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் வேலைவாய்ப்புகள் தொடர்பான தரவுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதிரி தரவு சேகரிப்பு கேள்வித்தாள்கள் மூலம்

சேகரிக்கப்பட்டு அவற்றினைக் கொண்டு நிறுவகங்களின் எண்ணிக்கைகள் மற்றும் அடுத்த சில ஆண்டுகளுக்காக நிறுவகங்களால் எதிர்பார்க்கப்படுகின்ற வேலைவாய்ப்புகள் உள்ளடங்கலான வேலைவாய்ப்புகள் பற்றிய தரவுகள் ஆகியன ஒன்று திரட்டப்பட்டுள்ளன. இந்தப் போக்கானது அட்டவணை 3.44 இன் மூலம் பிரதிபலிக்கப்படுவதுடன் இது கணனி திருத்துதல், பயிற்சி, மென்பொருள் அபிவிருத்தி மற்றும் விற்பனை என்பனவற்றுடன் தொடர்புடைய சிறிய அளவிலான நிறுவகங்கள் எண்ணிக்கையானது அதிகரித்துச் செல்கின்றது என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. 2013 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இந்த நிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்புக்களில் 13% வளர்ச்சியானது ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், சிறிய எண்ணிக்கையான நடுத்தர அளவிலான நிறுவகங்கள் துறைசார் தொழில்நுட்பத்தில் வேகமாக மாறிவரும் நிலைமையினை சமாளிக்க முடியாமை மற்றும் நிறுவகங்களின் குறைந்தளவான அனுபவம், முகாமைத்துவ திறன்கள் மிக்க நிபுணர்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் ஆகியோருக்கான பற்றாக்குறை போன்ற பல காரணங்களால் இதே காலப் பகுதியில், 12% வளர்ச்சியானது ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மாகாணத்திலுள்ள நடுத்தர அளவிலான நிறுவகங்கள் மற்றும் அவற்றின் சாத்தியமான வேலைவாய்ப்பு உருவாக்க திறன் என்பனவற்றின் விரிவாக்கமானது ஒப்பீட்டளவில் குறைவான ஓர் அவத்தையில் காணப்படும். மத்திய மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களான கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் சிறந்த விரிவாக்க வாய்ப்புக்கள் தொடர்பாக நோக்கும் போது அத்தகைய நிறுவகங்களின் குறைவான எண்ணிக்கை காரணமாக ஒரு மிதமான வேலைவாய்ப்பு உருவாக்கத்தினை எதிர்பார்க்க முடியும்.

அட்டவணை 3.45

கணனி சம்பந்தப்பட்ட துறைகளில் உள்ள நடுத்தர அளவிலான நிறுவகங்கள் (திருத்துதல்/ பயிற்சி/ மென் பொருள் அபிவிருத்தி/ விற்பனை)

மாவட்டம்	நிறுவகங்கள்/	2012	2013	2014	2015	2016	2017	2018

	தொழில்வாய்ப்புகள்							
கண்டி	# of Establishments **நிறுவகங்களின் எண்ணிக்கை**	2	3	3	3	4	4	5
	தொழில்வாய்ப்புகள்	75	175	210	252	302	363	435
மாத்தளை	**நிறுவகங்களின் எண்ணிக்கை**	1	1	2	2	3	3	4
	தொழில்வாய்ப்புகள்	65	155	186	223	268	321	386
நுவரெலியா	**நிறுவகங்களின் எண்ணிக்கை**	1	1	2	2	3	3	4
	தொழில்வாய்ப்புகள்	65	165	198	238	285	342	411

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013/ 14

அட்டவணை 3.46 இற்கிணங்க, ஆய்வில் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையின் முக்கிய பிரிவுகளில் நிலவுகின்ற தொழிலாளர்களுக்கான தேவைகள் மதிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் தொழிலாளர்களுக்கான மொத்த தேவைகளின் வெவ்வேறு பிரிவுகளிடையிலான பரம்பல் பின்வரும் முறையில் அமைந்துள்ளன, அவையாவன கணனி மென்பொருள் (20%), கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் (10%), கணனி வரைபடக் கலைஞர் (30%) மற்றும் கணனி இயக்குநர் / பழுதுபார்ப்பவர் (40%).

அட்டவணை 3.47 இல் காட்டப்பட்டுள்ளது போல தொழிலாளர்களின் தேவைகள் நான்கு முக்கிய வகைகளை கொண்டுள்ளதுடன் அவற்றினை நான்கு முக்கிய வேலைவாய்ப்பு பிரிவுகளாக பிரிக்கவும் முடியும் அதாவது வல்லுநர், நடுத்தர, எழுதுவினைஞர் மற்றும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர் என்பனவாகும். ஒவ்வொரு பிரிவிற்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கான சந்தர்ப்பங்கள் காணப்படுவதுடன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளினால் தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் கவரப்படுகின்றனர். LBO இனால் 02 ஆம் திகதி மே மாதம் 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய ஆய்விற்கிணங்க, மென்பொருள் மற்றும் வெளியாட்களிடம் வியாபார செயன்முறையினை ஒப்படைத்தல் ஆகியவற்றிலிருந்தான இலங்கையின் வெளிநாட்டு வருவாயானது

அதிகாரப்பூர்வமான மதிப்பீட்டினை விட அதிகமாக காணப்படுகின்றது, ஆனால் திறமைகளின் பற்றாக்குறைகள் காரணமாக வளர்ச்சியானது பாதிக்கப்படுகின்றது என்பதனை ஓர் நிறுவகமானது மேற்கொண்ட சொந்த ஆய்வில் இருந்து தெரிவித்துள்ளது. தொழிலாளர்களுக்கான கேள்வி மற்றும் வழங்கல் ஆகியவற்றிற்கிடையில் நிலவும் பொருத்தப்பாடற்ற தன்மையானது வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான 2011 ஆம் ஆண்டுக்கான வருடாந்த புள்ளிவிபரவியல் அறிக்கையின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மாகாணத்திலுள்ள தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தேவைகள் ஆகிய இரண்டினையும் ஒன்று சேர்த்து மொத்த தேவையானது மதிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 3.46
கணனி கைத்தொழிற் துறை நிறுவகங்களில் காணப்படுகின்ற மதிப்பீடு செய்யப்பட்ட தொழிலாளர் தேவைப்பாடுகள் (மாகாணத்திற்கான)

ஆண்டு	மென்பொருள்	கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர்	கணனி வரைபடக் கலைஞர்	கணனி இயக்குநர்கள்/ பழுதுபார்ப்பவர்கள்
2012	194	97	291	388
2013	276	138	414	552
2014	349	174	523	697
2015	441	221	662	883
2016	560	280	839	1,119
2017	710	355	1,066	1,421
2018	903	451	1,354	1,806

மூலம்: மதிப்பீடுகள்

அட்டவணை 3.47 இல் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் மத்திய மாகாணத்திற்கு தேவையான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் தொழிலாளர்களிற்கான எதிர்வுகூறலானது தரப்பட்டுள்ளது. மத்திய மாகாணத்தின் தேசிய அளவிலான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையினால் 10 சதவீத செயல்திறன் பங்களிப்பானது வழங்கப்படுகிறது என எதிர்பார்க்கப்படுகிறது. தொழில்வாய்ப்புகளின் உருவாக்கமானது உப வகைகள் உட்பட

அனைத்து தொழில்வாய்ப்பு வகைகளிலும் 12 - 13 சதவீத வருடாந்த வளர்ச்சி ஏற்படுகின்றது என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய மாகாணத்தின் சராசரி வருடாந்த தொழில்வாய்ப்பு தேவைகள் சுமார் 2,452 ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, சராசரியாக இவ் எண்ணிக்கையான பயிற்சியாளர்களுக்கான பயிற்சி வழங்கல்கள் மேற்கொள்ளவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் தொழிலாளர் சந்தைகளின் வளர்ச்சி வீதத்தில் தற்போது நிலவுகின்ற பொருத்தப்பாடற்ற தன்மையானது 2018 ஆம் ஆண்டளவில் மறைந்துவிடும்.

படம் 3.4 மற்றும் 3.5 என்பவற்றில் முறையே ஒவ்வொரு வகையான வேலைவாய்ப்பு தொடர்பான கேள்வி மற்றும் இத்துறைசார் மொத்த வேலைவாய்ப்பின் போக்கு ஆகியன தரப்பட்டுள்ளதுடன் மத்திய மாகாணத்தில் அடுத்துவரும் நான்கு ஆண்டுகளிற்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையில் மேல்நோக்கிய ஓர் தெளிவான போக்கானது காணப்படும். எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்வாய்ப்புகளிற்கு கூடுதலான கேள்விகள் நிலவுவதுடன் இதர வேலைவாய்ப்பு வகைகளிற்கான கேள்விகள் ஒப்பீட்டளவில் ஒரு குறைந்த வேகத்தில் வளர்ச்சியடைந்து வருகின்றன.

அட்டவணை 3.47

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையில் எதிர்வு கூறப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள்

தொழில்வாய்ப்பு பிரிவு/ வகை	2010*	2011*	2012			2013	2014	2015	2016	2017	2018
தொழில்முறை நிலை	Foreign வெளி நாடு	Foreign வெளி நாடு	Foreign வெளி நாடு	Local உள் ளூர்	Total மொத்தம்	Total மொத்தம்	Total மொத்தம்	Total மொத்தம்	Total மொத்தம்	Total மொத்தம்	Total மொத்தம்
ஆராய்ச்சியாளர் இணைய தளம்	1	3	2	37	39	42	47	57	65	67	72
தகவல் தொழில்நுட்ப விற்பனை வல்லுநர்	0	2	1	70	71	74	86	97	110	116	125
தகவல் தொழில்நுட்ப	0	2	1	72	73	78	83	91	98	107	118

முகாமையாளர்											
பொறியாளர் - கணினி தொடர்பானவை	0	2	1	17	18	25	29	32	42	53	67
Other ஏனையவை	3	2	3	98	101	110	120	130	142	153	168
மொத்தம்	**4**	**10**	**7**	**295**	**302**	**329**	**365**	**407**	**457**	**496**	**550**
மத்திய நிலை											
புரோகிராமர் - கணனி	3	3	3	70	73	78	82	89	92	103	114
தகவல் தொழில்நுட்பவியலாளர்	3	0	2	48	50	56	61	66	76	85	98
ஆய்வாளர் - சிஸ்டம்ஸ்	1	1	1	38	39	44	46	51	58	62	81
புரோகிராமர் - சிஸ்டம்ஸ்	0	1	0	22	22	28	32	36	46	53	66
ஏனையவை	0	2	1	78	79	96	105	117	127	138	152
மொத்தம்	**7**	**7**	**7**	**256**	**263**	**302**	**326**	**359**	**399**	**441**	**511**
எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புடையவை											
இயக்குநர் - தரவேற்றம்	18	11	14	184	198	205	226	244	257	298	335
இயக்குநர் - கணனி	1	10	5	133	138	176	187	199	237	264	286
வரைபடக் கலைஞர்	3	5	4	174	178	197	212	238	267	282	326
வரைகலைஞர் - இணையம்	1	0	0	165	165	189	207	232	255	277	312
ஏனையவை	0	0	0	188	188	201	217	241	254	296	332
மொத்தம்	**22**	**26**	**23**	**844**	**867**	**968**	**1049**	**1154**	**1270**	**1417**	**1591**
தேர்ச்சி நிலை											
தொழில்நுட்பவியலாளர் - கணனி	7	4	6	172	178	187	195	203	216	236	282
தொழில்நுட்ப - இணைய வலையமைப்பு	0	2	1	34	35	45	57	66	71	84	98
தொழில்நுட்ப - நிறுவல்	0	2	1	46	47	51	64	72	80	98	116
தொழில்நுட்ப - தகவல் தொழில்நுட்பம்	0	1	0	45	45	51	60	68	74	87	103

ஏனையவை	0	1	1	35	36	38	42	56	58	64	79
மொத்தம்	**7**	**10**	**9**	**332**	**341**	**372**	**418**	**465**	**499**	**569**	**678**

மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த புள்ளிவிபரவியல் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டது.



மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013/ 14



மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013/ 14

3.5.4 தொலைத் தொடர்பாடல் கைத்தொழிற் துறை தொடர்பான பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்புக்கள்

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையின் மற்றைய வகைகளிலும் பார்க்க தொலைத் தொடர்பாடலானது வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்ற ஓர் கைத்தொழிற் துறையாகும். தொலைபேசி இயக்குநர், தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியலாளர் மற்றும் தொலைபேசி தொழில்நுட்பவியலாளர் என்பன தொலைத் தொடர்பு துறையில் மிகவும் அதிகமான கேள்விகள் நிலவுகின்ற தொழில்களாகும். அட்டவணை 3.48 இல் மத்திய மாகாணத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் இவ்வாறான தொழில்களுக்கு உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் காணப்படுகின்ற கேள்விகள் மற்றும் தொழிலாளர்களுக்கான தேவைகள் பற்றிய விபரமானது தரப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் தொழிலாளர்களுக்கான கேள்விகளின் எதிர்வுகூறலானது, மத்திய

மாகாணத்தினால் உருவாக்கப்படும் தொலைத் தொடர்படால் துறைக்கான மொத்த கேள்விகளை ஈடுசெய்வதற்காக பயிற்சி அளிக்கப்பட வேண்டியுள்ள நபர்களின் எண்ணிக்கையாக தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3.48
தொலைத் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையில் எதிர்பார்க்கப்படுகின்ற தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள்

மாவட்டம்	நிறுவகங்கள்/ தொழில்வாய்ப்புகள்	2012	2013	2014	2015	2016	2017	2018
கண்டி	நிறுவகங்களின் எண்ணிக்கை	179	196	216	238	262	288	317
	தொழில்வாய்ப்புகள்	393	433	476	524	575	634	698
மாத்தளை	நிறுவகங்களின் எண்ணிக்கை	88	96	106	117	129	142	156
	Employment தொழில்வாய்ப்புகள்	176	194	213	234	258	283	312
நுவரெலியா	நிறுவகங்களின் எண்ணிக்கை	290	319	351	386	424	467	513
	தொழில்வாய்ப்புகள்	580	638	701	772	849	934	1,027

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013/ 14

3.6 அச்சிடுதல் மற்றும் பிரசுரித்தல் கைத்தொழிற் துறை தொடர்பான நிறுவகங்கள்

3.6.1. பின்னணி

தற்போது, தேசிய ரீதியில் 40,000 இற்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும் சுமார் 4,000 அச்சிடும் நிறுவகங்கள் உள்ளன. இலங்கையிலும் மூன்று அச்சிடுதல் பாடசாலைகள் உள்ளன அவையாவன அச்சிடுதலுக்கான இலங்கை நிறுவகம், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, வரையறுக்கப்பட்ட இலங்கை அச்சிடுதல் மற்றும் கிராபிக்ஸ் நிறுவகம் (INGRIN) என்பனவாகும் இவற்றின் மூலம் பாடசாலைகளை விட்டு வெளியேறியவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. இலங்கையில் உள்ளூர்

அச்சிடுதல் பாடசாலைகள் மூலம் சிறந்த இளம் அச்சுப் பதிப்பவர்கள் உருவாக்கப்படுகின்றனர். இதன் மூலம் ஐரோப்பா மற்றும் உலகின் ஏனைய பகுதிகளிலிருந்து இருந்து வெளிநாடுகளிடம் வழங்கப்படும் அச்சிடுதல் துறைசார் தொழில்களிற்கான வழங்கல்களை மேற்கொள்வதற்காக இலங்கைக்கு ஒரு பெரிய வாய்ப்பானது உருவாக்கப்படுகின்றது.

இலங்கையிலுள்ள அச்சகங்கள் உலகிலுள்ள அனைத்து புகழ்பெற்ற தர அடையாளங்களுடன் கூடிய பல வண்ண அச்சு இயந்திரங்களை பயன்படுத்துவதோடு சமீபத்திய நவீன தொழில்நுட்ப முறைகளை உபயோகிக்கக்கூடியதான உபகரணங்களையும் கொண்டுள்ளது. இலங்கையிலுள்ள அச்சிடுதல் நிறுவகங்கள் மிகவும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஐரோப்பிய நியமங்களுக்கு ஒப்பானதாக கருதப்படும் உற்பத்தி திறன் மட்டங்களில் செயற்பட்டுவருகின்றன. அச்சுப் பொருட்கள் தற்போது பெரும்பாலும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. தற்போதைய சூழ்நிலையில் இலங்கையிலுள்ள உற்பத்தியாளர்கள் சர்வதேச அளவில் அதிக கேள்விகள் காணப்படுகின்ற இயற்கையான சூழலியல் நட்பு மிக்க பல்வேறு வகைப்பட்ட பொருட்களை உள்ளடக்கியதாக தமது உற்பத்திப் பொருட்களின் வகைகளை விரிவுபடுத்தியுள்ளனர். மற்றைய பிரதான ஏற்றுமதி சந்தைகளாக சிங்கப்பூர், இந்தியா, வெனிசுலா, மற்றும் மாலைதீவு ஆகியன காணப்படுகின்றன (மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்/ கைத்தொழிற் துறை நிறுவகங்களிற்கான வருடாந்த கணக்கெடுப்பு - 2010). இலங்கையானது சிறந்த ஆடை மற்றும் தேயிலை ஆகியவற்றினை உற்பத்திசெய்யும் நாடுகளில் ஒன்றாக விளங்குகின்றமையினால் இவ்வாறான பொருட்களிற்கு அவற்றின் சந்தைப்படுத்தல்களுக்காக அதியுயர் தரம் வாய்ந்த அச்சிடுதல்கள் தேவைப்படுகின்றன.

அச்சிடுதல் கைத்தொழிற் துறையிற்கான உதவிச் சேவைகள் ரைப் செற்றிங், வடிவமைத்தல், பேஜ் மேக்கப் சேவைகள் தொடக்கம் பிளேட் மேக்கிங் மற்றும் பிளேட் செற்றிங் ஆகியவற்றுடன் ஆரம்பிக்கின்றன. புத்தக அச்சிடுதலானது இறுதியாக அச்சிடுதலினை முடிவுறுத்தல் மற்றும் பைண்டிங் (சரியான எல்லை அல்லது உறை எல்லை) என்பவற்றுடன் நிறைவுபெறுகின்றது. அதிவேக சரியான பைண்டர்கள், மூன்று கத்திகளைக் கொண்ட சீராக்கிகள் மற்றும் உறை பைண்டிங் ஆகியன தற்போது இலங்கையில் காணப்படுகின்றன. பொதியிடுவதற்கு பயன்படுத்தப்படும் பொருட்களில் நவீன தொழில்நுட்பங்களை கொண்டு அச்சிடுதல் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் விளைவாக, தற்போது இலங்கையிலுள்ள அச்சகங்கள் ஒட்டுமொத்த பொதியிடல் (ரக்குகள், லேபிள்கள், பொதிகள், பைகள், உறைகள்) தொடர்பான எந்த ஓர் வகையான அச்சிடல் சேவையினையும் பொறுப்பேற்பதற்கு தயார் நிலையில் உள்ளன. எனவே, பல்வேறுபட்ட நிபுணத்துவங்கள் மற்றும் திறன்கள் என்பவற்றுடன் கூடிய வெவ்வேறு வகையான பல உப துறைகளை கொண்டுள்ள இத்துறைசார் கைத்தொழில் நிறுவகங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களிற்கு பயிற்சி அளிப்பதற்கான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

3.6.2 நிறுவகங்களின் எண்ணிக்கை, தொழிலாளர்கள் மற்றும் பயிற்சிகள்

மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் கைத்தொழில் நிறுவகங்கள் பற்றிய அறிக்கை தொடர்பான வருடாந்த கணக்கெடுப்பிற்கு இணங்க, தற்போது உள்நாட்டில் 40,000 க்கும் மேற்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும் சுமார் 4,000 அச்சிடும் நிறுவகங்கள் காணப்படுகின்றன (அட்டவணை 3.49 இனை பார்க்கவும்). அட்டவணை 3.49 இல் தரப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் நாடளாவிய ரீதியில் மத்திய மாகாணத்திற்கான சில வெளியீட்டு மற்றும் அச்சிடும் நிறுவகங்கள் தொடர்பான தரவுகள் தரப்பட்டுள்ளன. மத்திய மாகாணமானது 2009/ 10 ஆம் ஆண்டு

காலப் பகுதிகளில் வெளியீடு மற்றும் அச்சிடல் போன்ற செயற்பாடுகளிற்கு ஒப்பீட்டளவில் குறைவான பங்களிப்பினை வழங்கியுள்ளது. இவ்வாறாக, மத்திய மாகாணமானது இக் கைத்தொழிற் துறையிற்கான முக்கியமான ஓர் பங்குதாரராக விளங்கியிருக்கவில்லை என தோன்றுகின்றது. எனினும், மாகாண மட்டங்களிலுள்ள கைத்தொழிற் துறை நிறுவகங்கள் மற்றும் வேலைவாய்ப்புகள் என்பனவற்றின் தற்போதைய நிலைமையினை விளங்கிக் கொள்வது தொடர்பாக நிறுவகங்கள் மற்றும் வேலைவாய்ப்புகள் ஆகியனவற்றின் எண்ணிக்கை பற்றிய மேம்படுத்தப்பட்ட துணையான தரவுகள் கிடைக்கப்பெறவில்லை.

அட்டவணை 3.49

2009/ 10 ஆம் ஆண்டுகளில் அச்சிடல் மற்றும் பிரசுரித்தல் கைத்தொழிற் துறைசார் நிறுவகங்களின் எண்ணிக்கை
(ஐந்து அல்லது அதற்கும் மேற்பட்ட நபர்கள் பணிபுரியும் நிறுவகங்கள்)

நிறுவகங்கள்/ தொழில்வாய்ப்புகள்	2009				2010			
	நாடு		மத்திய மாகாணம்		நாடு		மத்திய மாகாணம்	
	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%
Number of Establishments நிறுவகங்களின் எண்ணிக்கை	522	100	35	6.7	495	100	33	6.67
ஈடுபடும் நபர்களின் எண்ணிக்கை	14,382	100	349	2.43	18,127	100	331	1.83
தொழிலாளர்களின் எண்ணிக்கை	13,915	100	333	2.39	17,550	100	323	1.84

மூலம்: மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், கைத்தொழில் நிறுவகங்கள் தொடர்பான வருடாந்த கணக்கெடுப்பு - 2011

மாகாண மட்டத்திலான துணையான தரவுகள் கிடைக்கப்பெறவில்லை. எனினும், மாகாண ரீதியில் கைத்தொழிற் துறை நிறுவகங்களை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் அவசியமான தொழிலாளர்களிற்கான பயிற்சிகளை அளித்தல்

என்பவற்றுக்காக சிறிய அளவிலான மற்றும் நடுத்தர அளவிலான நிறுவகங்களது பல்வேறு செயல்பாடுகள் மற்றும் அவற்றுடன் தொடர்பான வேலைவாய்ப்புக்கள் ஆகியவற்றினை விளங்கிக் கொள்ளுதல் முக்கியமாகும். **அட்டவணைகள்** 3.50 **மற்றும்** 3.51 **ஆகியவற்றில் மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின்** 2011 **ஆம் ஆண்டுக்கான இரண்டு மட்டத்திலுமுள்ள நிறுவகங்கள் தொடர்பான துணையான தரவுகள் தரப்பட்டுள்ளன**.

25 நபர்களை விடவும் குறைந்த எண்ணிக்கையான நபர்களை கொண்டுள்ள நிறுவகங்கள் பெரும்பாலும் உரிமையாளர்கள் மற்றும் ஊதியம் பெறாத குடும்ப தொழிலாளர்கள் ஆகியோர் மூலம் செய்யப்படுத்தப்படுகின்றன. 25 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான நபர்களை கொண்டுள்ள நிறுவக வகைகளில் இந்த நிகழ்வுக்கு எதிரான நிலைமைகளை அவதானிக்க முடிவதுடன் அவை தொடர்பான விபரங்கள் அட்டவணை 3.50 இல் தரப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், வெளி சார்ந்த எந்தவொரு ஒப்பீடுகளையும் மேற்கொள்வதற்காக இரண்டு வகைகளையும் சார்ந்த மாகாண ரீதியிலான தரவுகள் கிடைக்கப்பெறவில்லை. அச்சிடல் துறைசார் துணையான பிரிவுகளான செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் மற்றும் பருவ வெளியீடுகள் என்பன கைத்தொழிற் துறை நிறுவகங்களிலுள்ள அதிகளவிலான வேலைவாய்ப்புகளிற்கு பங்களிப்பினை வழங்குகின்றன.

அட்டவணை 3.50
அச்சிடல் மற்றும் பிரசுரித்தல் கைத்தொழிற் துறையில் காணப்படுகின்ற வேலைவாய்ப்புக்கள் தொடர்பான வகைப்படுத்தல்கள் - 2010
(25 அல்லது அதற்கும் மேற்பட்ட நபர்கள் பணிபுரியும் நிறுவகங்கள்)

ஸ்தாபனங்கள்	தொழில்புரியும் உரிமையாளர்கள்	கொடுப்பனவு மேற்கொள்ளப்படாத குடும்ப தொழிலாரைகள்	இயக்குநர்கள்	ஏனைய ஊழியர்கள்	மொத்த நபர்கள்
வெளியிடுதல், அச்சிடுதல் மற்றும் பதிவு	2	0	267	95	360

செய்யப்பட்ட ஊடகங்களை மீளவும் உருவாக்குதல்					
புத்தகங்கள், சிற்றேடுகள் மற்றும் இசை புத்தகங்கள் என்பவற்றினை வெளியிடுதல்	2	0	134	42	178
செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் மற்றும் பருவ வெளியிடுகளை வெளியிடுதல்	0	0	21	14	35
ஏனைய வெளியீடுகள்	0	0	108	39	147
அச்சிடுதல் தொடர்பான அச்சிடுதல் மற்றும் சேவை நடவடிக்கைகள்	61	4	7,917	5,596	13,578
செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் மற்றும் பருவ வெளியீடுகள் என்பவற்றினை வெளியிடுதல்	55	4	7,625	5,492	13,176
அச்சிடுதல் தொடர்பான சேவை நடவடிக்கைகள்	6	0	292	104	402

மூலம்: மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், கைத்தொழில் நிறுவகங்கள் தொடர்பான வருடாந்த கணக்கெடுப்பு - 2011

அச்சிடுதல் கைத்தொழிற் துறையிற்கான உதவிச் சேவைகள் ரைப் செற்றிங், வடிவமைத்தல், பேஜ் மேக்கப் சேவைகள் தொடக்கம் பிளேட் மேக்கிங் மற்றும் பிளேட் செற்றிங் ஆகியவற்றுடன் ஆரம்பிக்கின்றன. புத்தக அச்சிடுதலானது இறுதியாக அச்சிடுதலினை முடிவுறுத்தல் மற்றும் பைண்டிங் (சரியான எல்லை அல்லது உறை எல்லை) என்பவற்றுடன் நிறைவுபெறுகின்றது. அதிவேக சரியான பைண்டர்கள், மூன்று கத்திகளைக் கொண்ட சீராக்கிகள் மற்றும் உறை பைண்டிங் ஆகியன தற்போது இலங்கையில் காணப்படுகின்றன. பொதியிடுவதற்கு பயன்படுத்தப்படும் பொருட்களில் நவீன தொழில்நுட்பங்களை கொண்டு அச்சிடுதல் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும், இன்னும் இந்த கைத்தொழிற் துறைசார் நிறுவகங்களில் தேர்ச்சி பெற்ற அல்லது பயிற்சி பெற்ற தொழிலாளர்களிற்கான பற்றாக்குறையானது நிலவுவதனால் இத்துறைசார் எதிர்கால தொழில் தேடுநர்களுக்கான பயிற்சித் திட்டங்களை விரிவுபடுத்த வேண்டிய தேவையானது உணரப்பட்டுள்ளது. அச்சிடல் துறையில் மிகவும் அதிகமான கோரிக்கைகள் காணப்படுகின்ற தொழில்கள் அவையாவன அச்சிடுதல் மேற்பார்வையாளர், இயக்குநர் - அச்சிடுதல் (பத்திரிகை) இயந்திரம், பிறிண்டர் - ஒப் செட், பிறிண்டர் – திரை என்பனவாகும்.

அட்டவணை 3.51

அச்சிடல் மற்றும் பிரசுரித்தல் கைத்தொழிற் துறையில் காணப்படுகின்ற வேலைவாய்ப்புகள் தொடர்பான வகைப்படுத்தல்கள் - 2009

(25 அல்லது அதற்கும் குறைவான நபர்கள் பணிபுரியும் நிறுவகங்கள்)

நிறுவகங்களின் எண்ணிக்கை	தொழில்புரியும் நிர்வாகிகள்	கொடுப்பனவு வழங்கப்படாத தொழிலாளர்கள்	செயற்படுபவை	ஏனைய தொழிலாளர்கள்	மொத்த நபர்கள்
வெளியிடுதல், அச்சிடுதல் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஊடகங்களை	209	184	2,836	692	3,921

மீளவும் உருவாக்குதல்					
புத்தகங்கள், சிற்றேடுகள் மற்றும் இசை புத்தகங்கள் என்பவற்றினை வெளியிடுதல்	0	0	38	2	40
செய்தித்தாள்கள் , சஞ்சிகைகள் மற்றும் பருவ வெளியிடுகளை வெளியிடுதல்	0	0	21	14	35
ஏனைய வெளியீடுகள்	0	0	108	39	147
அச்சிடுதல் தொடர்பான அச்சிடுதல் மற்றும் சேவை நடவடிக்கைகள்	61	13	6,742	3,164	9,979
செய்தித்தாள்கள் , சஞ்சிகைகள் மற்றும் பருவ வெளியீடுகள் என்பவற்றினை வெளியிடுதல்	57	13	6,438	3,066	9,573
அச்சிடுதல் தொடர்பான சேவை நடவடிக்கைகள்	4	0	264	92	360
போட்டோ பிரதிகள், கணனி பிரதி, ஏனையவை	0	0	40	6	46

மூலம்: மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், கைத்தொழில் நிறுவகங்கள் தொடர்பான வருடாந்த கணக்கெடுப்பு - 2011

அட்டவணை 3.52

அச்சிடல் துறையில் தீர்மானிக்கப்பட்ட மாகாண மட்டத்திலான தொழிலாளர் தேவைப்பாடுகள்

நிறுவகத்தின் அளவு	விடயம்	2013	2014	2015	2016	2017	2018
சிறிய அளவிலான நிறுவகங்கள்	நிறுவகங்கள் எண்ணிக்கை	44	48	53	58	64	71
	ஈடுபடும் தொழிலாளர்களின் எண்ணிக்கை	465	511	562	618	680	750
நடுத்தர அளவிலான நிறுவகங்கள்	நிறுவகங்கள் எண்ணிக்கை	8	10	11	13	14	16
	ஈடுபடும் தொழிலாளர்களின் எண்ணிக்கை	35	39	43	47	52	57

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013/ 14

அட்டவணை 3.52 இல் காட்டப்பட்டுள்ள கணக்கெடுப்புத் தரவுகள் மற்றும் எதிர்வுகூறப்பட்டுள்ள மதிப்பீடுகள் ஆகியவற்றிற்கிணங்க, 2013 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மத்திய மாகாணத்தின் வேலைவாய்ப்புக்களில் 10 சதவீத வளர்ச்சியினை எதிர்பார்க்க முடியும். இத்துறைசார் அனேக நிறுவகங்களின் விரிவுபடுத்தல்கள் ஒரு சில நடுத்தர அளவிலான நிறுவகங்களை விட சிறிய அளவிலான நிறுவனங்களிலேயே கூடியளவில் இடம்பெறும். மத்திய மாகாணத்திற்கான சராசரி வருடாந்த தொழிலாளர்களுக்கான தேவையாக 643 தொழிலாளர்கள் காணப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் கண்டி மாவட்டத்தில் காணப்படுகின்ற நிறுவகங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், இதில் சுமார் 50 சதவீதமானது இம் மாவட்டத்திற்கு தேவைப்படுவதுடன் மீதியானது மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களிற்கு சம அளவுகளில் தேவைப்படுகின்றன.

3.7 புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழிற் துறை

3.7.1 பின்னணி

இலங்கையிலுள்ள ஆடைக் கைத்தொழிற் துறையானது இறக்குமதிக்கு பிரதியீடான ஓர் கைத்தொழிற் துறையாக அரசாங்கத்தினால் இத்துறையினை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக 1960 ஆம் ஆண்டில் சிறியளவில் ஆரம்பிக்கப்பட்டது. இக் கைத்தொழிற் துறையானது 1977 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்கப்பட்ட வர்த்தக தாராளமய நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு வகையான சந்தை சார்ந்த பொருளாதார கொள்கை சீர்திருத்தங்கள் என்பனவற்றின் மூலம் நாட்டின் முன்னணி கைத்தொழிற் துறையாக உருவாகியுள்ளது. இக் கொள்கை சீர்திருத்தங்கள் ஆரம்ப நிலையில், வெளிநாட்டு முதலீட்டாளர்கள், குறிப்பாக கிழக்கு ஆசிய ஆடை ஏற்றுமதியாளர்களை ஈர்த்துள்ளது அதன் காரணமாக அந்த ஏற்றுமதியாளர்கள் அவர்களது நன்றாக ஸ்தாபிக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகளை இலங்கைக்கு இடம்மாற்றியுள்ளனர். 2005 ஆம் ஆண்டு வரையில் நடைமுறையிலிருந்த பல் இழை உடன்பாட்டின் (MFA) மூலம் ஸ்தாபிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட சந்தை நிபந்தனையானது முக்கியமான காரணிகளில் ஒன்றாக விளங்கியதோடு அது வர்த்தக தாராளமயத்தின் ஆரம்ப கட்டத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் பின்னர் உள்நாட்டு முதலீட்டினையும் ஈர்த்ததுள்ளது.

பிரதானமாக தேர்ச்சியற்ற, தொலைதூர பிரதேசங்களிலிருந்து குடிபெயர்ந்துள்ள இளவயதினர், மற்றும் பெண் தொழிலாளர்கள் ஆகியோருக்கான கைத்தொழில்துறைசார் வேலைவாய்ப்புகளின் உருவாக்கமானது மிகவும் முக்கியமாகும். விசேடமாக, இது கிராமப்புற பகுதிகளில் வசிக்கின்ற அனேகமான பொருளாதார ரீதியில் நலிவடைந்துள்ள குடும்பங்களின் மிக முக்கிய வருமான மூலமாக உள்ளது. இன்று, இத்தொழிற்துறை நிறுவகங்கள் சுமார் 283,000 நேரடி வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களையும் (அரச முதலீட்டு சபை, 2013) மற்றும் சுமார் அரை மில்லியன் மறைமுக வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்களையும் வழங்குவதுடன் இது கைத்தொழிற் துறையில் தனியாக மிகப்பெரிய தொழில் வழங்குநராக

உருவாகியுள்ளது. பாலின அடிப்படையிலான வேலைவாய்ப்பு அமைப்பின் பிரகாரம் தொழிற் துறைசார் தொழிலாளர்களில் 85 % ஆனோர் பெண் தொழிலாளர்களாகவும் அவர்களில் 60% இற்கு மேற்பட்டோர் 18 வயது தொடக்கம் 25 வயதிற்கு இடைப்பட்ட வயது குழுவினராவர் (ஒக்ஸ்பாம் சமூக உதவி - வெளிநாடு, 2004). பல ஆய்வுகளில், இந்த கைத்தொழிற் துறை மீதான தொழிலாளர்களின் நீண்ட கால நம்பிக்கையானது குறைவாக காணப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 70% ஆன தொழிலாளர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு குறைவான தொழில் அனுபவமே காணப்படுகின்றது. ஐந்து ஆண்டுகள் தொழில் அனுபவத்தினை பெற்றுக் கொள்ளலானது தொழிலாளர்கள் இக் கைத்தொழிற் துறையிலிருந்து விலகிச் செல்வதற்குரிய ஓர் தெளிவான அடையாளமாக உள்ளது ஏனெனில் அதன் பின்னர் தொழிலாளர்கள் பணிக்கொடை மற்றும் ஏனைய நன்மைகளை அனுபவிப்பதற்கான தகுதியினை பெற்றுக்கொள்கின்றனர்.

ஆடைத் தொழிற்சாலைகளின் பூகோள ரீதியிலான பரம்பலிற்கு இணங்க, 1980 ஆம் ஆண்டு தொடக்கம் நாட்டின் ஒன்பது மாகாணங்களிலும் பார்க்க மேல் மாகாணத்தில் இத்தொழிற்சாலைகளின் செறிவானது மிக அதிகமாக உள்ளது என்பதனை காணமுடிகின்றது. வரைபடம் 3.6 இல் மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் ஆடைத் தொழிற்சாலைகளின் பரம்பலானது காட்டப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் மேல் மாகாணத்தில் 54.8% ஆடைத் தொழிற்சாலைகள் காணப்படுகின்றமையானது வெளிப்படுகின்றது. இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற சிறந்த உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கட்டுநாயக்க மற்றும் பியகம ஆகிய இரண்டு சுதந்திர வர்த்தக வலையங்கள் ஆகியன இதற்கான காரணங்களாகும். 1992 ஆம் ஆண்டில், அரசு முதலீட்டு சபை மூலமான குறிப்பிடத்தக்களவான ஊக்குவிப்பு வழங்கல்களின் மூலம் அரசாங்கமானது ஆடை உற்பத்தியாளர்களை மற்றைய பகுதிகளிற்கு நகர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. வழங்கல் பக்கத்திலுள்ள இடர்பாடுகளான மேல் மாகாணத்தில் தொழிற்சாலைகள் அதிகளவில்

செறிந்துள்ளமையின் காரணமாக தொழிற் துறை நிறுவகங்கள் எதிர்நோக்கும் தொழிலாளர்களுக்கான பற்றாக்குறை மற்றும் பகிர்ந்தளித்தலின் பொருட்டு கிராமப்புற மக்களிற்கு தொழில்வாய்ப்புகளை வழங்குதல் ஆகியவற்றினை களைவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டமானது 200 ஆடைத் தொழிற்சாலை திட்டம் என அழைக்கப்படுவதுடன் 1995 ஆம் ஆண்டளவில் அரச முதலீட்டுச் சபையானது இத்திட்டத்தின் கீழ் 163 தொழிற்சாலைகள் அமைத்துள்ளது. 1999 ஆம் ஆண்டில், 72% இற்கும் அதிகமான ஆடைத் தொழிற்சாலைகள் மேல் மாகாணத்தில் காணப்பட்டதுடன் இத்துறைசார் மொத்த தொழிலாளர்களில் 65% ஆனோருக்கு (அதாவது 181,329) வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன (திலகரத்ன, 2006).

வரைபடம் 3.6

மாகாண அடிப்படையில் ஆடைத் தொழிற்சாலைகளின் பரம்பல் (2004)



மூலம்: தொழிலாளர் திணைக்களம் மற்றும் ஒக்ஸ்பாம் (2004)

ஆடைக் கைத்தொழிற் துறைசார் ஆய்வு அறிக்கையின் படி (இலங்கை தொழிலாளர் திணைக்களம் மற்றும் ஒக்ஸ்பாம், 2004), 20% சிறிய அளவிலான, 53% நடுத்தர

அளவிலான மற்றும் 28% பெரிய அளவிலான மற்றும் மிகப் பெரிய அளவிலான 750 ஆடைத் தொழிற்சாலைகள் காணப்பட்டன. எவ்வாறாயினும், நலிவடைந்த உற்பத்தியாளர்களை பாரிய உற்பத்தியாளர்களுடன் இணைத்தல் மற்றும் பன்முக இழை ஏற்பாட்டு (MFA) காலப்பகுதியானது நிறைவடைந்ததன் காரணமாக தொழிற்சாலைகள் மூடப்பட்டமை ஆகிய ஒன்றிணைந்த விளைவுகளின் காரணமாக நாட்டில் பன்முக இழை ஏற்பாட்டு (MFA) காலப்பகுதியின் பின்னர் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் ஒரு பெரும் சரிவு ஏற்பட்டது என்பது சமீபத்தில் வெளிப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டில் காணப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கையானது 735 ஆகும். அத்துடன் இது 2008 ஆம் ஆண்டின் போது 325 ஆக குறைவடைந்துள்ளது. தொழிற்சாலைகளின் எண்ணிக்கையானது குறைவடைந்து இருந்தாலும், பெரியவிலான நிறுவகங்கள் தங்கள் சர்வதேச சந்தை நிலைமைகளை வலுப்படுத்திக் கொண்டுள்ளதன் காரணமாக இலங்கையின் ஏற்றுமதியானது ஒட்டுமொத்த அளவில் வளர்ச்சியடைந்துள்ளது.

இலங்கையிலுள்ள ஆடைத் தொழிற்சாலைகள் அவற்றின் அளவுகளின் அடிப்படையில் பொதுவாக பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:

1. சிறியளவானது - <100 ஊழியர்கள்
2. நடுத்தர அளவானது -101 தொடக்கம் 500 ஊழியர்கள்
3. பெரிய அளவானது - 500> ஊழியர்கள்

3.7.2 ஆடைக் கைத்தொழிற் துறை

மத்திய மாகாணத்திலுள்ள ஆடைத் தொழிற் துறையினை கருத்திற் கொள்ளும் போது, 47 நிறுவகங்கள் மூலம் மொத்தமாக 22,766 நேரடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. மத்திய மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் அமைவிடம் மற்றும் தொழிலாளர்களின் ஈடுபாடு என்பன தொடர்பான பரம்பலானது அட்டவணை 3.54 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3.54

மத்திய மாகாணத்தின் ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்களின் பரம்பல்

மாவட்டம்	ஆடைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை	%	தொழிலாளர்களின் எண்ணிக்கை	%
கண்டி	29	60	14,342	63
மாத்தளை	09	20	5,020	22
நுவரெலியா	09	20	3,404	15
மொத்தம்	**47**	**100**	**22,766**	**100**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013/ 2014

மாகாணத்தில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலைகளிலுள்ள இயந்திரங்களின் அளவானது மற்றைய முக்கியத்துவம் வாய்ந்த காரணியாக காணப்படுகின்றது. இயந்திரங்களின் அளவானது வேலைவாய்ப்புகளில் பெரிதும் செல்வாக்கு செலுத்துகின்றது. தேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகளை வகைப்படுத்தும் நியமங்களின் அடிப்படையில், மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களிலும் காணப்படுகின்ற தொழிற்சாலைகளின் அளவு தொடர்பான நிலைமைகள் அட்டவணை 3.55 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 3.55

மத்திய மாகாணத்தின் ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்களின் அளவறி ரீதியான பரம்பல்

மாவட்டம்	சிறிய	நடுத்தர	பெரிய	மொத்தம்
கண்டி	5	9	15	29
மாத்தளை	3	2	4	09
நுவரெலியா	3	3	3	09
மொத்தம்	**11**	**14**	**22**	**47**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013/ 2014

3.7.3 மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற கைத்தறி ஆடைத் துறை

நாட்டின் கைத்தறி ஆடைத் துறையானது 2500 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றினை கொண்டிருப்பதுடன் இது விஜய மன்னனின் இந் நாட்டிற்கான வருகை பற்றிய வரலாற்றுக் கதையுடன் தொடர்புபட்டுள்ளது. ஆனால், இத்தகைய ஒரு நீண்ட வரலாற்றினைக் கொண்டுள்ள இக் கைத்தொழிற் துறையானது, வெவ்வேறு காலப்பகுதிகளில் நாட்டில் நிலவிய பல ஏற்ற தாழ்வுகளிற்கு முகம் கொடுத்து தற்போதும் நீடித்துநிலைத்து வருகின்ற ஓர் பிரதான வீட்டு கைத்தொழிற் துறையாக விளங்குகின்றது. இந்த அனைத்து ஏற்ற தாழ்வுகளுடன், 1920 ஆம் ஆண்டு நாட்டில் 55 கைத்தறி நெசவு நிலையங்கள் செயற்பட்டுள்ளன என்பது அறிக்கையிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் 60 ஆம் மற்றும் 70 ஆம் தசாப்த காலங்கள் இலங்கையில் உள்ள கைத்தறி தொழிற் துறையின் பொற்காலம் என கருதப்படுகிறது ஏனெனில், இத்தசாப்த காலங்களில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஊக்குவிப்பு மற்றும் தலைமைத்துவம் என்பனவே இந்நிலைமைக்கு காரணமாக அமைந்தது. அதே நேரத்தில், 1977 ஆம் ஆண்டில் அதாவது நாட்டில் திறந்த பொருளாதாரக் கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் 115,000 கைத்தறி நெசவு நிலையங்கள் காணப்பட்டதுடன் இதுவே நாட்டில் அறிக்கையிடப்பட்ட மிகக்கூடுதலான எண்ணிக்கையான இத்துறைசார் நிலையங்களாக காணப்படுகின்றது. 1977 ஆம் ஆண்டிற்கு பின்னர், திறந்த பொருளாதார கொள்கைகளின் விளைவாக ஏற்பட்ட பிரச்சினைகளின் மத்தியில் கைத்தறி தொழிற் துறையானது நாட்டின் சில பகுதிகளில் மட்டும் செறிவடைந்துள்ளன அவையாவன முக்கியமாக மேல், வடமேல், மத்திய, தெற்கு மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்கள் என்பனவாகும்.

மத்திய மாகாணமானது கைத்தறி நெசவு தொழிற் துறையில் முக்கிய மாகாணங்களில் ஒன்றாக உருவாகியுள்ளது. ஆயினும், இத் தொழிற் துறைசார் மாகாணத்தில் செயற்பட்டுவரும் நெசவு நிலையங்களின் எண்ணிக்கையில் குறைவடைந்துவரும் போக்கானது காணப்படுகின்றது. ஆய்வுக் குழு நடத்திய

ஆய்வின் அடிப்படையில், மத்திய மாகாணத்திலுள்ள மாவட்டங்களில் பின்வரும் நெசவு நிலையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அட்டவணை 3.56
மத்திய மாகாணத்தின் கைத்தறி ஆடைத் துறை தொடர்பான நிறுவகங்களின் எண்ணிக்கை

நிறுவகத்தின் வகை	**கண்டி**	**மாத்தளை**	**நுவரெலியா**
ஆடைத் துறை (விசைத்தறி)	07	05	
ஆடைத் துறை (கைத்தறி)	01		
ஆடை செயலாக்கம்	02	03	
பற்றிக் (பெரிய) > 10 ஊழியர்கள்	03	04	
பற்றிக் (சிறிய) <10 ஊழியர்கள்	67	28	14

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013/ 2014

மாகாணத்திலுள்ள கைத்தறி உற்பத்திகளை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்;

- தனியார் - நிறுவகங்கள், தனிப்பட்ட தொழில் முனைவோர், சுய வேலையாளர்கள்
- அரசாங்கம் -- மாகாண சபைகள் மூலம் நிர்வகிக்கப்படும் உற்பத்தி மையங்கள்
- கூட்டுறவு சங்கங்கள்

3.7.4 ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் கைத்தறித் துறை ஆகியவற்றிலுள்ள தொழிலாளர்கள் தொடர்பான விபரங்கள்

ஆடைத் தொழிற்சாலை வேலைவாய்ப்புகள்

பொதுவாக, மத்திய மாகாணத்திலுள்ள ஆடைத் கைத்தொழிற் துறையில் இரண்டு வகையான தொழிலாளர் வகைகளை அடையாளம் கண்டுகொள்ள முடியும். முதலாவது வகை, தேர்ச்சி பெறாத தொழிலாளர் குழு ஆகும். தேசிய ரீதியாக இத்

தொழிலாளர் குழுவினை கருத்திற்கொள்ளும் போது, சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் இக் கைத்தொழிற் துறையில் 85% ஆன பெண் தொழிலாளர்களாக உள்ளதாகவும் தொழிற்சாலைகளில் அவர்கள் குறைந்த தர மட்டங்களில் பணியாற்றுவதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானவர்கள் நாட்டின் தொலைதூரப் பகுதிகளிலிருந்து குடிபெயர்ந்துள்ள தொழிலாளர்களாகவும் திருமணமாகாத இள வயதினராகவும் உள்ளனர். மத்திய மாகாணத்தில் தேர்ச்சி பெறாத தொழிலாளர்களின் எண்ணிக்கையானது தொடர்ச்சியாக மாற்றமடையாமல் உள்ளது. இப் பெண் தொழிலாளர்கள் பெரும்பாலும் குறைந்த கல்வித் தகைமைகள் மற்றும் தேர்ச்சி பெறாதவர்களாகவும் உள்ளனர். மத்திய மாகாணத்திலுள்ள தொழிற் துறைசார் நிர்வாகிகளுடன் மேற்கொள்ளப்பட்ட நேர்முகத்தேர்வுகளின் அடிப்படையில் அவர்கள் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பெரும்பாலும் திருமணமாகாத இளம் தொழிலாளர்களையே விரும்புகின்றனர். இவ் விருப்பானது திருமணமான ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது கர்ப்ப காலம், அவர்கள் குழந்தைகளின் பராமரிப்பில் ஈடுபடல் போன்ற காரணங்களினால் அடிப்படையாக ஏற்படுகின்றது. இரண்டாவது வகை, தேர்ச்சி பெற்ற தொழிலாளர் குழுவினை கருத்திற்கொள்ளும் போது அவர்கள் பெரும்பாலும் தொழிற்சாலைகளில் நிர்வாக பதவிகளை அல்லது தொழில்நுட்பம் சார்ந்த பதவிகளை வகிக்கின்றனர். அவர்கள் நிறுவகங்களிலுள்ள மொத்த தொழிலாளர்களில் 5% இற்கும் குறைவான பிரதிநிதித்துவத்தினை கொண்டுள்ளனர்.

பல் இழை உடன்பாட்டின் பின்னரான காலப்பகுதியில் இத்துறைசார் ஊழியர்களின் மற்றைய முக்கியத்துவம் வாய்ந்த காரணியாக, நாட்டில் சுமார் 130 ஆடைத் தொழிற்சாலைகள் நிரந்தரமாக மூடப்பட்டுள்ளதுடன், பிரதானமாக சிறிய அளவிலான ஆடைத் தொழிற்சாலைகளில் இருந்து தொழிலாளர்களின் இடப்பெயர்ச்சியானது அவதானிக்கப்பட்டுள்ளது. மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள ஆடைத்

தொழிற்சாலைகள் இவ்விதமான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதுடன் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தொழிற் துறையில் குறைந்துவரும் போக்கு காணப்படுகின்றது. எனினும், விட்டுவிலகிய தொழிலாளர்கள், உலக சந்தை ஊடாக திறந்த வாய்ப்புக்களை கொண்டுள்ள பெரிய மற்றும் மிகப் பெரிய தொழிற்சாலைகளினால் உள்வாங்கப்பட்டுள்ளனர். ஆனாலும், எல்லா நிலைமைகளினதும் பின்னர், பின்வரும் அட்டவணை 3.57 மத்திய மாகாணத்தில் ஆடைத் தொழிற்சாலைகளில் காணப்படுகின்ற வேலைகளின் வகைகள் தொடர்பாக விளக்கப்பட்டுள்ளது. இந்த அட்டவணை ஆனது தொழிற்சாலைகளில் காணப்படுகின்ற பிரதானமான தொழில் வகைகள் தொடர்பான தகவல்களை மட்டும் வழங்கி உள்ளதுடன், இத்தொழில்களின் பெயர்கள் மற்றும் வகைகள் என்பன தொழிற்சலைக்கு தொழிற்சாலை வேறுபடலாம். மத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து தொழிற்சாலைகளிலும் உள்ள அனைத்து வேலைகளும் முகாமைத்துவ மற்றும் முகாமைத்துவ தரம் அல்லாத தொழில்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதே நேரம், கைத்தொழிற்துறையில் தொழில் வகைளை முகாமைத்துவ மற்றும் முகாமைத்துவ தரம் அல்லாத தொழில்கள் என இரண்டு பிரிவுகளாக பிரிப்பது மிகவும் கடினமாக ஒரு விடயமாகும். ஆயினும், பணியிடத்திற்கான ஊழியர்களின் வருகையின் அடிப்படையில் இவ் வகைப்படுத்தல் ஆனது சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அட்டவணை 3.57

மாகாணத்தில் காணப்படுகின்ற ஆடைத் தொழிற்சாலைகளிலுள்ள தொழில்களின் வகைகள் மற்றும் தொழிற் பிரிவுகள்

முகாமைத்துவ பதவிகள் அல்லாதவை	முகாமைத்துவ பதவிகள்
இயந்திர இயக்குநர்கள்	இணக்க அதிகாரி
உதவியாளர்கள்	தகவல் தொழில்நுட்ப நிறைவேற்று அதிகாரிகள்
பரிசோதகர்கள்	பராமரிப்பு நிறைவேற்று அதிகாரிகள்
இஸ்திரி போடுபவர்கள்	உற்பத்தி முகாமையாளர்
எழுதுவினைஞர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரங்கள்	வெட்டுதல் நிறைவேற்று அதிகாரிகள்

மாதிரிகளை உருவாக்குபவர்	வடிவமைப்பு அதிகாரிகள்
வெட்டுபவர்கள்	தர முகாமையாளர்
தொழில்நுட்பவியலாளர்கள்	மனிதவள முகாமையாளர்
கணனி இயக்குநர்கள்	

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013/ 2014

அட்டவணை 3.58 இல் மத்திய மாகாணத்திலுள்ள ஆடைத் தொழிற் துறை ஊழியர்கள் தொடர்பான விபரங்கள் வயது மற்றும் பாலின அடிப்படையில் தரப்பட்டுள்ளது. இங்கு பெண் ஊழியர்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர் என்பது தெளிவாவதுடன் இத்துறைசார் ஒட்டுமொத்த தொழிலாளர்களில் சுமார் 80% ஆகவும் உள்ளனர். முக்கியமாக, 19 வயது தொடக்கம் 29 வயதுக்கு இடைப்பட்ட வயதுடைய தொழிலாளர்கள் மாகாணத்தின் ஆடைத் தொழிற் துறையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அட்டவணை 3.58

வயது மற்றும் பால் ரீதியாக மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற ஆடைத் தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை

வயது வகுப்பு	தொழிலாளர்களின் எண்ணிக்கை					
	பெண்கள்	%	**ஆண்கள்**	%	**மொத்தம்**	%
18 >	52	81.25	12	18.75	64	0.28
19-22 வருடங்கள்	7,270	87.34	1,054	12.66	8,324	36.56
23-25 வருடங்கள்	5,669	84.95	1,004	15.05	6,673	29.32
26-29 வருடங்கள்	3,765	79.35	980	20.65	4,745	20.84
30 <	2,204	74.46	756	25.54	2,960	13.00
மொத்தம்	**18,960**	**83.28**	**3,806**	**16.72**	**22,766**	**100.00**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013/ 2014

பன்முக இழை உடன்படிக்கைக்கான காலப்பகுதி நிறைவுபெற்றதன் பின்னர் பெரும்பாலான ஆடைத் தொழிற் துறைசார் தொழிற்சாலைகளில் பிரதானமாக பின்வரும் வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் உருவாக்கப்பட்டன அவையாவன:

இயந்திரம் இயக்குநர்கள், உதவியாளர்கள் மற்றும் பரிசோதகர்கள் என்பனவாகும். இத் தொழிற் பிரிவுகள் ஆடைத் தொழிற் துறையில் உள்ள தொழில் வகைகளின் மொத்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 90% ஆகும். கீழ்வரும் அட்டவணை 3.59 இல் அனைத்து ஊழியர்களும் நிர்வாகம் மற்றும் நிர்வாகம் அல்லாத என்றவாறு இரண்டு வகைகளாகப் வகுக்கப்பட்டிருப்பது தெளிவாக காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 3.59

ஆடைத் தொழிற்சாலைகளிலுள்ள தொழில் வகைகள் மற்றும் தொழிலாளர்கள்

முகாமைத்துவ பதவிகள் அல்லாதவை	தொழிலாளர்களின் எண்ணிக்கை	முகாமைத்துவ பதவிகள்	தொழிலாளர்களின் எண்ணிக்கை
இயந்திர இயக்குநர்கள்	13,068	இணக்க அதிகாரி	12
உதவியாளர்கள்	4,880	தகவல் தொழில்நுட்ப நிறைவேற்று அதிகாரிகள்	176
பரிசோதகர்கள்	2,097	பராமரிப்பு நிறைவேற்று அதிகாரிகள்	98
இஸ்திரி போடுபவர்கள்	943	உற்பத்தி முகாமையாளர்	22
எழுதுவினைஞர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரங்கள்	574	வெட்டுதல் நிறைவேற்று அதிகாரிகள்	23
மாதிரிகளை உருவாக்குபவர்	210	வடிவமைப்பு அதிகாரிகள்	12
வெட்டுபவர்கள்	82	முகாமையாளர்	25
தொழில்நுட்பவியலாளர்கள்	358	மனிதவள முகாமையாளர்	97
கணனி இயக்குநர்கள்	89		
மொத்தம்	**22,301**		**465**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013/ 2014

மேலே உள்ள அட்டவணை 3.59 இன் பிரகாரம், மிகவும் அதிக எண்ணிக்கையான முகாமைத்துவம் அல்லாத நிலையிலுள்ள ஊழியர்கள் இயந்திர இயக்குநர் தொழில் புரிவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. மிகவும் குறைந்த எண்ணிக்கையான ஊழியர்கள் வெட்டுபவர் தொழில் புரிவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. முகாமைத்துவம் அல்லாத பதவிகளுடன் ஒப்பிடும் போது, மத்திய மாகாணத்தில் ஆடைக் கைத்தொழிற் துறையில் முகாமைத்துவ பதவிகள் ஒப்பீட்டளவில் மிகக் குறைவாகவே உள்ளன. மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற முகாமைத்துவ பதவிகளின் மொத்த எண்ணிக்கையானது 465 ஆகும். இது எட்டு தொழிற் பிரிவுகளை கொண்டள்ளது. தகவல் தொழில்நுட்ப துறையானது மிகவும் அதிக எண்ணிக்கையான ஊழியர்கள் தொழில் புரிகின்ற துறையாக காணப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இணக்க மற்றும் வடிவமைப்பு அலுவலர்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையான ஊழியர்கள் தொழில் புரிகின்ற துறையாக காணப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது

கைத்தறி துறைசார் தொழில்வாய்ப்புகள்

மத்திய மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் செயற்பாட்டிலுள்ள இயந்திரங்கள் எண்ணிக்கை மற்றும் தற்போது தொழிற்சாலைகளில் தொழில்புரிகின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை என்பன குறித்த எந்தவொரு நம்பகரமான தரவுகளும் காணப்படவில்லை. இவ் ஆய்வு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்கெடுப்பின் மூலம் பெறப்பட்ட தரவுகள் அட்டவணை 3.60 இல் காட்டப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்திலுள்ள கைத்தறி தொழிற்துறையானது அதிகூடுதலான தொழிலாளர்கள் ஈடுபடும், ஏற்றுமதி சார்ந்த மற்றும் ஒரு கிராமப்புற அடிப்படையிலான தொழில் என அறியப்படுகிறது. கடந்த பல ஆண்டுகளாக இத்துறைசார் வருவாய் மற்றும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை என்பன குறைவடைந்துள்ள போதிலும், இத்துறையிலுள்ள குறைந்த விலையுள்ள பொருட்களின் உற்பத்தியாளர்கள் சந்தைப்படுத்தப்படக்கூடிய உயர் தர இறுதி

பொருட்களின் உற்பத்தியாளர்களாக பெரிய அளவிற்கு மாற்றமடைவார்களாயின், இத்துறைசார் குறிப்பிடத்தக்களவான சாத்தியமான தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் மற்றும் பாரிய ஏற்றுமதி வருமானத்தினை ஈட்டுவதற்குமான சந்தர்ப்பங்கள் உருவாகும். மத்திய மாகாணத்தில் ஊழியர்களுக்கு முறையான பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதன் மூலமும் மற்றும் கவர்ச்சிகரமான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலமும் இக்கைத்தொழிற் துறையினை அபிவிருத்தி செய்யமுடியும்.

அட்டவணை 3.60
மத்திய மாகாணத்தில் உள்ள கைத்தறி ஆடைத்துறையில் காணப்படுகின்ற வேலைவாய்ப்புகள், 2013

நிறுவகத்தின் வகை	கண்டி	தொழிலாளர்கள்	மாத்தளை	தொழிலாளர்கள்	நுவரெலியா	தொழிலாளர்கள்	மொத்த தொழிலாளர்கள்
ஆடைக் கைத்தொழில் (விசைத்தறி)	7	123	5	101	na	na	224
ஆடைக் கைத்தொழில்(கைத்தறி)	1	7	na	na	na	na	7
ஆடை செயலாக்கம்	2	9	3	12	na	na	21
பற்றிக் (பெரிய) > 10 ஊழியர்கள்	3	56	4	109	na	na	265
பற்றிக் (சிறிய) <10 ஊழியர்கள்	67	256	28	68	14	140	464
மொத்தம்	**80**	**451**	**40**	**290**	**14**	**140**	**981**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013/ 2014

3.7.5 ஆடைக் கைத்தொழிற் துறையில் எதிர்காலத்தில் காணப்படக்கூடிய தொழிலாளர்களுக்கான தேவைகள்

மத்திய மாகாணத்தில் உள்ள ஆடைக் கைத்தொழிற்துறையினை கருத்திற்கொள்ளும் போது, எதிர்வரும் நாட்களில் தொழிற்சாலைகளை இயக்குவது தொடர்பான ஓர்

முக்கிய காரணியாக தொழிற்சாலைகளிலுள்ள முகாமைத்துவம் அல்லாத பதவிகள் காணப்படும். பல்வேறுபட்ட சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார காரணிகளின் காரணமாக மிகவும் குறைந்தளவு எண்ணிக்கையான ஊழியர்களே ஆடைத் தொழிற்சாலைகளில் தொழில்புரிவதற்கு விரும்புகின்றனர். ஆயினும், ஆடைத் துறையின் வளர்ச்சி வீதத்தினை கருத்திற்கொள்ளும் போது, நிறுவகங்களை பிரச்சினைகள் இல்லாமல் பேணுவதற்கு எதிர்காலத்தில் அவசியமான ஆடைத் துறைசார் முகாமைத்துவம் அல்லாத தொழிலாளர்கள் தொடர்பான தேவைகள் அட்டவணை 4.61 இல் தெளிவாக காட்டப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்தில் முகாமைத்துவம் அல்லாத மற்றும் முகாமைத்துவ பணியாளர்கள் தொடர்பான தேவைகள், கருத்திற் கொள்ளப்படுகின்ற ஆண்டுகளில் இக்கைத்தொழிற் துறையில் 2% நிலையான வளர்ச்சி வீதம் காணப்படும் என்ற எடுகோளுடன் நேர்கோட்டு மாதிரியினைக் கொண்டு எதிர்வுகூறப்படுகின்றது. எதிர்வரும் ஆண்டுகளிற்கான எண்ணிக்கைகளை எதிர்வுகூறம் போது, மற்றைய அனைத்து பெரிய மாறிகளும் மாறிலிகளாக கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, 2018 ஆம் ஆண்டிற்காக தேவைப்படும் முகாமைத்துவம் அல்லாத பிரிவின் கீழான ஊழியர்களில் அதிக எண்ணிக்கையானோர் இயந்திர இயக்குநர்களாவர் (14,145) என அறிக்கையிடப்பட்டுள்ளது. முகாமைத்துவம் தொடர்பான தொழிலாளர்களிற்கான தேவைகள் அட்டவணை 3.62 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3.61
ஆடைத்துறையில் காணப்படுகின்ற முகாமைத்துவம் அல்லாத தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள்

முகாமைத்துவ பதவிகள் அல்லாதவை	தொழிலாளர்களின் எண்ணிக்கை				
இயந்திர இயக்குநர்கள்	2014	2015	2016	2017	2018
உதவியாளர்கள்	13,068	13,329	13,596	13,868	14,145

பரிசோதகர்கள்	4,880	4,978	5,077	5,179	5,282
இஸ்திரி போடுபவர்கள்	2,097	2,139	2,182	2,225	2,270
எழுதுவினைஞர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரங்கள்	943	962	981	1,001	1,021
மாதிரிகளை உருவாக்குபவர்	574	586	597	609	621
வெட்டுபவர்கள்	210	214	219	223	227
தொழில்நுட்பவியலாளர்கள்	82	84	85	87	89
கணனி இயக்குநர்கள்	358	365	373	380	388
மொத்தம்	89	91	93	95	97
	22,301	**22,747**	**23,202**	**23,666**	**2,4139**

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013/ 2014

அட்டவணை 3.62

ஆடைத்துறையில் காணப்படுகின்ற முகாமைத்துவம் சார்ந்த தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள்

முகாமைத்துவ பதவிகள்	தொழிலாளர்களின் எண்ணிக்கை				
	2014	**2015**	**2016**	**2017**	**2018**
இணக்க அதிகாரி	12	12	13	13	13
தகவல் தொழில்நுட்ப நிறைவேற்று அதிகாரிகள்	176	180	183	187	191
பராமரிப்பு நிறைவேற்று அதிகாரிகள்	98	100	102	104	106
உற்பத்தி முகாமையாளர்	22	22	23	23	24
வெட்டுதல் நிறைவேற்று அதிகாரிகள்	23	24	24	24	25

வடிவமைப்பு அதிகாரிகள்	12	12	13	13	13
தர முகாமையாளர்	25	26	26	27	27
மனிதவள முகாமையாளர்	97	99	101	103	105
மொத்தம்	465	474	484	494	503

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013/ 2014

மாகாணத்திற்கான இத்துறைசார் உண்மையான தொழிலாளர்கள் தொடர்பான தேவைகளை மதிப்பீடு செய்யும் போது வெளிநாடுகளில் காணப்படுகின்ற தேவைகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். மத்திய மாகாணத்தில் முகாமைத்துவ மற்றும் முகாமைத்துவம் அல்லாத தொழிலாளர்களிற்கான சாத்தியமான உண்மையான கேள்விகள் தொடர்பான மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு ஆடைத் துறைசார் வெளிநாட்டு கேள்விகள் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன. வெளிநாட்டு சந்தைகளில் நிலவும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் தொடர்பான தேவைகளை கணிப்பதற்காக இத்துறையுடன் தொடர்பான வெளிநாட்டு கேள்விகளிற்கு வழங்கல்களை மேற்கொள்ள முடியாமற்போன தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையானது பயன்படுத்தப்பட்டுள்ளது. மாகாணத்தில் தொழிலாளர்களுக்கான உண்மையான தேவைகள், வெளிநாட்டு தொழிலாளர்களுக்கான கேள்விகளில் வழங்கல்களை மேற்கொள்ள முடியாமற்போன கேள்விகளில் சுமார் 10% இற்கான பயிற்சிகள் மத்திய மாகாணத்தினால் வழங்கப்படுகின்றது என்ற எடுகோளுடன் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பான கணிப்பீடுகள், 2011 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட வெளிநாட்டு தொழிற் கோரிக்கைகளின் எண்ணிக்கையானது குறைந்தது அடுத்த ஐந்து ஆண்டுகளிற்கு காணப்படும் என்ற எடுகோளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வெளிநாட்டு தொழிலாளர் சந்தைகளுக்கு பயிற்சியளிக்கப்பட வேண்டிய கூடுதல் தொழிலாளர்கள் தொடர்பான மதிப்பீடானது அட்டவணை 3.63 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3.63

ஆடைத்துறையில் காணப்படுகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்கள் (2011 ஆம் ஆண்டிற்கான)

தொடர் இல	தொழில்	தொழிலுக்கான கோரிக்கைகள்	தொழிலுக்காக அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை	வழங்கல் மேற்கொள்ளப்படாத கேள்விகள்	மத்திய மாகாணமானது 10% ஆன வழங்கமுடியாமற் போன கேள்விகளுக்கான வழங்கல்களை மேற்கொள்ளுமாயின், பயிற்சி தேவைகள்
1	இயந்திர இயக்குநர்கள்	12,167	1,075	11,092	1,109
2	பாரமேற்றுபவர்	20	0	20	2
3	மேற்பார்வையாளர் - நிறைவு பகுதி	5	1	4	1
4	மேற்பார்வையாளர்	266	7	259	26
5	இயந்திர திருத்துநர்	61	7	54	5
6	மாதிரிகளை உருவாக்குபவர்	49	2	47	5
7	தரம் பிரிப்பவர்	50	43	7	1
8	உதவியாளர்கள்	753	137	616	62
	மொத்தம்	**13,371**	**1,272**	**12,099**	**1,211**

மூலம்: 2012 ஆம் ஆண்டிற்கான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வருடாந்த அறிக்கையின் அடிப்படையில் தரப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்திற்கான ஆடைத் துறைசார் தொழிலாளர்கள் தொடர்பான தேவைகளை எதிர்வுகூறப்பட்டுள்ளமைக்கு மேலதிகமாக, துறைசார் சில குறிப்பிட்ட அம்சங்கள்/ பண்பு ரீதியிலான தரவுகள் என்பனவும் இவ் ஆய்வின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளன. முகாமையாளர்கள் மற்றும் முகாமைத்துவம் அல்லாத தொழிலாளர்கள் ஆகியோருக்கு ஒரே போதியளவான பயிற்சி வழங்கலானது மத்திய மாகாணத்தில் உள்ள ஆடைத் துறைசார் உற்பத்தித்திறன் மற்றும் போட்டித்தன்மை ஆகியவற்றினை பாதிக்கும் ஒரு முக்கிய காரணியாக உள்ளது. பயிற்சி வழங்கலின் முக்கியத்துவம் மற்றும் உற்பத்தித் திறன் மற்றும்

பேண்தகைமை ஆகியவற்றினை மேம்படுத்துவதில் அதன் பங்கு என்பன தொடர்பாக தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் உரிமையாளர்களால் பல்வேறு வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. பெரும்பாலான ஊழியர்களுக்கு ஆட்சேர்ப்பின் போது பயிற்சி வழங்கல் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், இவ் அடிப்படை பயிற்சி அளிப்பானது அவர்கள் தங்களது கடமைகள் மற்றும் பணிகளை திறமையாகவும் வினைத்திறனாகவும் முன்னெடுப்பதற்கு போதுமானதாக காணப்படவில்லை. எனவே, மத்திய மாகாணத்தில் உள்ள ஆடைக் கைத்தொழிற் துறைசார் தொழிற்சாலைகளில் பணிபுரியும் முகாமைத்துவ மற்றும் முகாமைத்துவம் அல்லாத ஊழியர்களின் செயல்திறனை முன்னேற்றும் பொருட்டு இத்துறைசார் உள்ளகப் பயிற்சிகளை விட வெளிவாரி பயிற்சிகளே உண்மையாக தேவைப்படுகின்றன.

3.8 மத்திய மாகாணத்தின் ஹோட்டல் மற்றும் சுற்றுலா துறை

3.8.1 பின்னணி

துறைசார் அறிக்கையின் ஓர் அறிமுகமாக, பின்வரும் மேற்கோளானது மஹிந்த சிந்தனை கொள்கை ஆவணத்தில் இருந்து எடுக்கப்படுகின்றது: "நான் சுற்றுலா கைத்தொழிற் துறையின் ஓர் துரித அபிவிருத்தி திட்டத்தை அறிமுகப்படுத்துவேன். நான் 2016 ஆம் ஆண்டாகும் போது வருடாந்தம் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் உள்கட்டமைப்பு மற்றும் ஏனைய தேவைகள் என்பனவற்றினை நிறைவேற்றவதற்கான ஒரு திட்டத்தினை ஆரம்பிப்பேன் (**மஹிந்த சிந்தனை, 201, பக்கம் - 94**). இலங்கையின் ஒரு முக்கிய பொருளாதார வளர்ச்சித் துறையாக சுற்றுலா கைத்தொழிற் துறையினை விரிவுபடுத்துதல் அரசாங்கத்தின் தூரநோக்காக காணப்படுகின்றது.

இந்த துறை அறிக்கையானது, முக்கியமாக இத்துறைசார் வேலைவாய்ப்புகளின் பிரதான மூலகங்கள், அதாவது முக்கிய சுற்றுலா ஸ்தலங்கள், ஹோட்டல்கள் மற்றும் கிடைக்கப்பெறும் வசதிகள் மற்றும் சமூக பொருளாதார விவகாரங்களில் அதன்

தாக்கம் ஆகியன தொடர்பான விசேட ஆய்களுடன் கூடிய மத்திய மாகாண சுற்றுலா துறையின் செயற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது. இவ் அத்தியாயத்தில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றது. இறுதியாக, இந்த அத்தியாயத்தில், சுற்றுலா துறைசார் எதிர்கால கேள்விகள் தொடர்பான எதிர்வுகூறல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் மூலம், இத்துறைசார் மனிதவள தேவைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன அவையாவன முதன்மையான தொழில்சார் வேலைவாய்ப்புகள், பரிசாரகர் மற்றும் உணவு பரிமாறுபவர் போன்ற வீட்டு பணியாளர்கள், சமையற்காரர் மற்றும் உணவு தயாரிப்பவர் போன்ற சமையல் வல்லுநர்கள், மதுபானம் பரிமாறுபவர் போன்ற உணவு மற்றும் பானங்கள் வழங்குபவர், வரவேற்பாளர் மற்றும் மேற்பார்வை மட்ட முகாமையாளர்கள், ஏனையவை போன்ற முன்னணி அலுவலக நடவடிக்கைகள் என்பனவாகும்.

3.8.2 இலங்கைக்கான சுற்றுலா பயணிகளின் வருகை

அட்டவணை 3.64 இற்கிணங்க, இலங்கைக்கான பெரும்பாலான சுற்றுலா பயணிகளின் வருகையானது மகிழ்ச்சியினை அனுபவிப்பதற்காகும். இது 2009 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே 80% மற்றும் 74% ஆகும். அத்துடன் அதற்கு அடுத்தபடியாக வியாபார நோக்கங்களுக்கான வருகைகள் முறையே 8.6% மற்றும் 9% ஆகும் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதன் மூலம் மக்கள் பிரதானமாக மகிழ்ச்சியினை அனுபவிப்பதற்காகவே பயணங்களினை மேற்கொள்கின்றனர். எனவே, தற்போது காணப்படும் சுற்றுலா ஸ்தலங்களை மேம்படுத்துதல் மற்றும் அதிகூடிய திருப்தியினை ஏற்படுத்தக்கூடிய புதிய இடங்களை அடையாளம் காணுதல் ஆகியன மிகவும் அத்தியவசியமாக உள்ளது. மேலும், அனைத்து வெளிநாட்டவர்களும் இலங்கைக்கு வருகைதந்த பின்னர், கொழும்பிலும் அதன் சுற்றுப் புறத்திலும் உள்ள ஒரு சில கவர்ச்சிகரமான இடங்களை சுற்றிப் பார்க்கவே விரும்புகின்றனர். எனவே, இலங்கைக்கு சுற்றுலா பயணிகள் வருகைதருவதற்கான பிரதான நோக்கங்களை

கருத்திற்கொள்ளாது, பொதுவாக அனைத்து சுற்றுலா பயணிகளையும் வரவேற்கக்கூடியவாறான விருந்தோம்பல் உள்கட்டமைப்புகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில் பராமரித்தல் மிகவும் அவசியமாக காணப்படுகின்றது.

அட்டவணை 3.64

இலங்கைக்கு வருகைதருவதற்கான நோக்கங்கள்

இல	விஜயத்தின் நோக்கம்	2009 %	2012 %
1	மகிழ்ச்சி	80.00	74.40
2	வணிகம்	08.60	09.00
3	நண்பர்கள் மற்றும் உறவினர்களை சந்தித்தல்	05.20	11.70
4	மாநாடு மற்றும் கூட்டங்கள்	01.40	02.20
5	மத மற்றும் கலாச்சார விடயங்கள்	02.00	02.20
6	பிற	02.80	00.50
	மொத்த	**100.00**	**100.00**

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் (SLTDA) வருடாந்த புள்ளிவிபரவியல் அறிக்கைகள் 2009 மற்றும் 2012

2012 ஆம் ஆண்டில் இருந்து இலங்கையினால் ஒரு மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலா பயணிகளை ஈர்க்க முடிந்ததுள்ளதுடன் அட்டவணைகள் 3.65 மற்றும் 3.66 ஆகியவற்றில் காணப்படுவது போல 2013 ஆம் ஆண்டில் இலங்கைக்கு உலகம் முழுவதிலும் இருந்து 1.2 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்து சாதனை படைத்துள்ளனர். அட்டவணை 3.65 இல் தரப்பட்டுள்ளதற்கிணங்க, 2013 ஆம் ஆண்டில் இலங்கைக்கு சுற்றுலா பயணிகள் வருகைதரும் பிரதான நாடாக இந்தியா (16.4%) விளங்குவதுடன் அதற்கு அடுத்தபடியாக ஐக்கிய இராட்சியம் (10.8%) உள்ளது. 2009 ஆம் ஆண்டு வரை, இலங்கைக்கான சுற்றுலா பயணிகள் வருகைதரும் பிரதான நாடாக இங்கிலாந்து விளங்கியது.

இத்துறையினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, ரஷ்யா, சீனா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் போன்ற சில பாரம்பரியம் அல்லாத சுற்றுலா நாடுகளினை அடையாளம் காணுதல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இலங்கையில் கடந்த 30 வருட காலமாக இடம்பெற்றவந்த உள்நாட்டு பிரச்சினைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளமையினால் அது உலகம் முழுவதிலும் இருந்து அதிக எண்ணிக்கையான சுற்றுலா பயணிகளின் வருகையினை ஈர்க்கும். சுற்றுலாத் துறை தொடர்பான சில புகழ்பெற்ற இதழ்கள், சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகள் ஆகியவற்றின் தரப்படுத்தலில் இலங்கையானது பாதுகாப்பு மற்றும் அமைவிடம் என்பனவற்றில் முதலாம் இடத்தினை வகிக்கின்றது. எனவே, எதிர்வரும் காலங்களில் கூடுதலான சுற்றுலா பயணிகளின் வருகையின் பொருட்டு சுற்றுலா துறை தொடர்பான அரச மற்றும் தனியார் துறை அனைத்து நிறுவகங்கள் கவனத்தினை செலுத்தவேண்டியது மிக முக்கியமாகும். 2015 ஆம் ஆண்டில் இலங்கையானது 1.5 மில்லியன் எண்ணிக்கையான சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதற்கு திட்டமிட்டால், நாட்டில் பௌதிகம் தொடக்கம் சமுதாயம் வரையிலான அனைத்து உள்கட்டுமான வசதிகளையும் அபிவிருத்தி செய்ய வேண்டி ஏற்படும். அவற்றின் மத்தியில், தெரிந்த மற்றும் தெரியாத சுற்றுலாத்தலங்களை இலகுவாக அணுகுவது தொடர்பாக மிகக் கூடுதலான கவனத்தினை செலுத்துதல் வேண்டும். ***வசதிகளை மேம்பாடுத்தும் செயற்பாட்டின் போது பல்வேறுபட்ட சுற்றுலா பயணிகளின் விருப்பங்களை நன்கு கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.*** உதாரணமாக, சில சுற்றுலா பயணிகள் பாரம்பரிய ஹோட்டல்கள் மற்றும் இடங்களை விரும்புவதுடன் மற்றைய பிரிவினர் இயற்கையான சுற்றுலா ஸ்தலங்களை விரும்புகின்றனர். தற்போது, சுற்றுலா பயணிகளின் புதிய பிரிவினர் வேளாண்மையுடன் தொடர்புபட்ட சுற்றுலா ஸ்தலங்களை விரும்புவதுடன் சிலர் சாகச நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் விரும்புகின்றனர். அதிர்ஷ்டவசமாக, இலங்கையில் அனைத்து அம்சங்களும் அபரிமிதமாக காணப்படுவதுடன் சுற்றுலா தொடர்பான வேலைத்திட்டங்களை

திட்டமிட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த வேண்டியது சம்பந்தப்பட்ட சுற்றுலா முகவர் நிறுவகங்களின் கடமையாகும்.

அட்டவணை 3.65

2013 ஆம் ஆண்டில் பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தரும் சுற்றுலாப் பிரயாணிகள்

இல	சொந்த நாடு	சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை	%
வட அமெரிக்கா		65,616	
1	கனடா	30,926	2.4
2	அமெரிக்கா	34,690	2.7
லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன்		3,166	
மேற்கு ஐரோப்பா		421,037	
3	ஆஸ்திரியா	11,300	0.9
4	பெல்ஜியம்	9,138	0.7
5	டென்மார்க்	9,845	0.8
6	பிரான்ஸ்	64,388	5.1
7	ஜேர்மனி	85,470	6.7
8	நெதர்லாந்து	22,281	1.8
9	இத்தாலி	17,982	1.4
10	நோர்வே	8,573	0.7
11	ஸ்பெயின்	8,183	0.6
12	ஸ்வீடன்	12,597	1.0
13	சுவிச்சர்லாந்து	19,141	1.5
14	இங்கிலாந்து	**137,416**	**10.8**
15	ஏனையவை	14,723	1.2
கிழக்கு ஐரோப்பா		125,695	
16	ரஷ்யா	51,235	4.0
17	உக்ரைன்	38,607	3.0
18	செக் குடியரசு	8,881	0.7
19	போலந்து	9,688	0.8
20	ஏனையவை	17,284	1.4
ஆப்பிரிக்கா		8,081	
21	தென் ஆப்ரிக்கா	3,366	0.3
22	ஏனையவை	4,715	0.4

இல	சொந்த நாடு	சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை	%
மத்திய கிழக்கு		80,509	
23	சவூதி அரேபியா	23,753	1.9
24	ஐக்கிய அரபு எமிரேட்ஸ்	8,471	0.7
24	இஸ்ரேல்	8,545	0.7
26	குவைத்	7,427	0.6
27	ஓமான்	7,634	0.6
28	ஏனையவை	24,679	1.9
கிழக்கு ஆசியா		183,097	
29	ஹாங்காங் மற்றும் மகாவ் உட்பட சீனா குடியரசு	54,288	4.3
30	இந்தோனேஷியா	17,295	1.4
31	ஜப்பான்	31,505	2.5
32	மலேஷியா	19,181	1.5
33	பிலிப்பைன்ஸ்	14,616	1.2
34	சிங்கப்பூர்	15,546	1.2
35	தென் கொரியா	12,207	1.0
36	ஏனையவை	8,851	0.7
தெற்கு ஆசியா		326,556	
37	இந்தியா	**208,795**	**16.4**
38	மாலை தீவு	79,474	6.3
39	பாக்கிஸ்தான்	25,336	2.0
40	பங்களாதேஷ்	10,037	0.8
41	ஏனையவை	2,914	0.2
ஆஸ்திரேலாசியா		60,836	
42	ஆவுஸ்ரேலியா	54,252	4.3
43	நியூசிலாந்து	6,174	0.5
44	ஏனையவை	410	0.0
மொத்தம்		**1,274,593**	**100.0**

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, 2013 (2013 ஆம் ஆண்டிற்கான மேற்படி சுற்றுலா பயணிகளின் வருகை தொடர்பான புள்ளிவிபரவியல் மதிப்பீடுகள் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் எல்லைக் கட்டுப்பாட்டு முறைமையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளை செல்லுபடியாக்கியதன்

பின்னர் தயாரிக்கப்பட்டுள்ளது)

அட்டவணை 3.66

பிரதேச ரீதியிலான சுற்றுலா பிரயாணிகளின் வருகை, 2013

இல	சொந்த நாடு	சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை	%
1	வட அமெரிக்கா	65,616	05.2
2	லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன்	3,166	00.2
3	மேற்கு ஐரோப்பா	421,037	33.2
4	கிழக்கு ஐரோப்பா	125,695	09.9
5	மத்திய கிழக்கு	80,509	06.4
6	கிழக்கு ஆசியா	183,097	14.5
7	தெற்கு ஆசியா	326,556	25.8
8	ஆஸ்திரேலாசியா	60,836	04.8
	மொத்தம்	**1,274,593**	**100.0**

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, 2013

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் வருகை மேற்கொண்ட சுற்றுலா பயணிகள் நாட்டில் தங்கியிருந்த காலப்பகுதி தொடர்பான விபரங்கள் அட்டவணை 3.67 இல் தரப்பட்டுள்ளது. அதன்படி, கிட்டத்தட்ட 90% ஆன சுற்றுலா பயணிகள் 01 இரவு 14 இரவுகள் வரையில் தங்கியிருந்துள்ளதுடன் 10% இற்கும் குறைவான சுற்றுலா பயணிகள் இரண்டு வாரங்களுக்கும் அதிகமான காலம் தங்கியிருந்துள்ளனர். இந்த தகவல் மூலம் பெரும்பாலான சுற்றுலா பயணிகள் இலங்கையில் குறுகிய காலத்திற்கு தங்குகின்றனர் என்ற விடயமானது வெளிப்படுகின்றது.

அட்டவணை 3.67

தங்கியிருந்த கால அளவு, 2012

இல	காலம்	2011 %	2012 %
1	01 – 03 இரவுகள்	26.1	25.9
2	04 – 07 இரவுகள்	32.1	33.4
3	08 – 14 இரவுகள்	31.1	30.8
4	15 – 21 இரவுகள்	07.9	07.5
5	22 – 30 இரவுகள்	01.2	01.0
6	31 இரவுகள் மற்றும் மேலதிகமானவை	01.4	01.4
		100.0	**100.0**

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, 2013

அட்டவணை 3.68

2012 ஆம் ஆண்டிற்கான தரப்படுத்தப்பட்டுள்ள நிறுவகங்களின் தங்குமிட கொள்ளளவு (அறைகள்) மற்றும் அவற்றின் பரம்பல்)

இல.	ரிசார்ட் பகுதி	அறைகளின் எண்ணிக்கை 2012	அறைகளின் எண்ணிக்கை 2016	2016 ஆம் ஆண்டில் பற்றாக்குறையின் அளவு
1	கொழும்பு நகரம்	3,054	8,000	4,946
2	கிரேரர் கொழும்பு	2,856	9,500	6,644
3	தென் கடலோரம்	5,660	13,400	7,740
4	கிழக்கு கடற்கரை	296	7,000	6,704
5	மலைநாடு	743	2,000	1,257
6	பண்டைய நகரங்கள்	2,901	7,200	4,299
7	வட பகுதி	-	2,700	2,700
அனைத்து பகுதிகள்		**15,510**	**49,800**	**34,390**

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, 2013

அட்டவணை 3.69

மத்திய மாகாணத்தில் சுற்றுலாப் பிரயாணிகள் அடிக்கடி வருகை தரும் இடங்கள்

இல.	கண்டி	மாத்தளை	நுவரெலியா
1	தலதா மாளிகை	தம்புள்ளை கோயில்	உலக முடிவு (ஓட்டன் சமவெளி)
2	பேராதனை ரோயல் தாவரவியல் பூங்கா	ரிவேட்சன் மலைகள்	ஹக்கல தாவரவியல் பூங்கா
4	பின்னவல யானைகள் சரணாலயம்	அலுவிகார கோயில்	கிரிகோரி ஏரி
5	ஹுனாஸ் நீர்வீழ்ச்சி போன்ற பார்க்கக்கூடிய இடங்கள்	நக்கிள்ஸ் தேசிய மரபுரிமைகள் காட்டுப்புற பகுதி	விக்டோரியா பார்க்
6	கலாச்சார காட்சிகள் பிரதானமாக எசல பெரகர	கலாபுர	யிலை பெருந்தோட்டங்கள் மற்றும் பார்க்கக்கூடிய இடங்கள்
7	தேயிலை அருங்காட்சியகம்	சிகிரியா, தம்புள்ளை	பண்டாரவளை
8	எம்பேக்க தேவாலயம்	பிட்டவெல பத்தனை (மினி உலக முடிவிடம்)	ஹோட்டல் தேயிலை தொழிற்சாலை
9	கடலதெனியா கோயில்	அ:க்கண கோவில் மற்றும் சிலை	பீதுருதாலகால (மவுண்ட் பெட்ரோ)
10	தெகல்தொருவ குகை கோவில்	மின்னேரியா பார்க்	பெட்ரோ எஸ்டேட்
11	லங்காதிலக்கே கோவில்	பிதுரங்கல கோவில்	விக்டோரியா கோல்ஃப் கிளப்
12	கட்டான தேயிலை பெருந் தோட்டம்	களு தியா தடாகம்	சிவனொளிபாத மலை
13	நகர் வருகை	பொலன்னறுவை	நீர் வீழ்ச்சிகள்
14	லூல்கொண்டுர பெருந் தோட்டம்	வஸ்கமுவ தேசிய பூங்கா	
15	கண்டி சந்தை		
16	தேசிய (கண்டி) அருங்காட்சியகம்		

17	உடவட்டேகல பறவைகள் சரணாலயம்		
18	திகண இலுள்ள விக்டோரியா கோல்ஃப் கிளப்		
19	பேராதனை பல்கலைக்கழகம்		

மூலம்: சுற்றுலா பயணிகளிற்கான வழிகாட்டி கைந்நூல், இலங்கை சுற்றுலா சபை மற்றும் கள தரவு சேகரிப்பு, ஆகஸ்ட் - ஒக்டோபர் 2013

3.8.3 மத்திய மாகாணத்திலுள்ள பிரதான சுற்றுலா ஸ்தலங்கள்

ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகைதரும் முக்கிய சுற்றுலா ஸ்தலங்கள் அல்லது இடங்கள் தொடர்பான விபரங்கள் அட்டவணை 3.69 இல் காட்டப்பட்டுள்ளது. மத்திய மாகாணமானது அதன் அமைவிடம் கொண்டுள்ள நன்மைகள் காரணமாக நாட்டின் அதிக பல்வகைத் தன்மை மற்றும் கவர்ச்சிகரம் மிக்க இடமாக கருதப்படுகிறது. இந்த பகுதியானது தீவின் மையப் பகுதியில் அமைந்துள்ளதுடன் மிக உயர்ந்த சிகரமான பீதுருதாலகால மற்றும் பல வெவ்வேறான மற்றைய மலைகளை கொண்டுள்ளது. மலைப் பிரதேசங்களில் குளிரான காலநிலையும் பெரும்பாலான பகுதிகளில் மிதமான காலநிலையும் நிலவுவதுடன் நுவரெலியா மாவட்டத்தின் சில மேற்கு பகுதிகளில் அதிகூடிய வருடாந்த மழைவீழ்ச்சியானது காணப்படுகின்றது. ***மத்திய மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் சொந்தமான இயற்கை வளங்கள் மற்றும் சிறப்புக்களினால் அதன் ஆடம்பரமானது பராமரிக்கப்படுகின்றது. இப்பிரதேசதமானது நாட்டின் அதிசிறந்த சுற்றுலா ஸ்தலங்களை கொண்டுள்ளது அவையாவன கண்டியிலுள்ள தலதா மாளிகை மற்றும் பேராதனையிலுள்ள ரோயல் தாவரவியல் பூங்கா என்பனவாகும்.***

3.8.4 மத்திய மாகாணத்திலுள்ள ஹோட்டல்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய தகவல்கள்

அட்டவணை 4.70 இல் இலங்கை மற்றும் மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற விடுதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஏனைய நிறுவகங்களின் எண்ணிக்கைகள் பற்றிய விபரம் தரப்பட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்க்கின்ற முக்கிய அம்சங்களாக மத்திய மாகாணத்தில் மிகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையிலான சுற்றுலா உள்கட்டமைப்புக்கள் பேணப்பட்டுவருகின்றன. எனினும், மத்திய மாகாணத்தில் அனைத்து வசதிகளும் கிடைக்கப்பெறும் நிலைமையினை நோக்கும் போது அதாவது விடுதிகளின் எண்ணிக்கை, வகைப்படுத்தப்பட்ட அல்லது வகைப்படுத்தப்படாத, உணவகங்கள், விருந்தினர் வீடுகள், பயண முகவர்கள், ஏனையவை இவற்றில் கண்டி மாவட்டமானது முன்னிலை வகிக்கின்றது. எனினும், 30 வருட நீண்டகால உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து நாட்டில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்ட பின்னர் இத்துறைசார் போதிய வசதிகள் ஏற்படுத்தப்படாமையானது இலங்கையினால் எதிர்நோக்கப்படும் பிரச்சினையாக உள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. மத்திய மாகாணம் இதற்கு விதிவிலக்கல்ல.

அட்டவணை 3.70

மத்திய மாகாணத்தில் சுற்றுலா துறையின் பங்களிப்பு தொடர்பான சாராம்சம்

சுற்றுலா துறை நிறுவகத்தின் பெயர்	இலங்கையிலுள்ள மொத்த நிறுவகங்களின் எண்ணிக்கை	Province மத்திய மாகாணத்திலுள்ள மொத்த நிறுவகங்களின் எண்ணிக்கை	%	ஒவ்வொரு மாவட்டத்தினதும் பங்களிப்பு					
				கண்டி	%	நுவரெலியா	%	Matale மாத்தளை	%
வகைப்படுத்தப்பட்ட ஹோட்டல்கள்	**109**	**26**	24	**13**	50	**7**	27	**6**	23
ஐந்து நட்சத்திரம்	13	**3**	23	**2**	67	**0**	00	**1**	33
நான்கு நட்சத்திரம்	13	**4**	31	**1**	25	**2**	50	**1**	25
ள்று நட்சத்திரம்	13	**5**	38	**2**	40	**2**	40	**1**	20
இரண்டு நட்சத்திரம்	39	**7**	18	**5**	71	**1**	14	**1**	15
ஒரு நட்சத்திரம்	31	**7**	23	**3**	43	**2**	29	**2**	28
வகைப்படுத்தப்படாத விடுதிகள்	**140**	**25**	18	**12**	48	**8**	32	**5**	20
பூட்டிக் ஹோட்டல்	**19**	**3**	16	**1**	33	**0**	00	**2**	77
பூட்டிக் வில்லாக்கள்	**25**	**8**	32	**4**	50	**4**	50	**0**	00
பிபி அலகுகள்	**92**	**22**	24	**15**	68	**7**	32	**0**	00
விருந்தினர் வீடுகள்	**292**	**79**	27	**42**	53	**18**	23	**19**	24
பாரம்பரிய வீடுகள்	**48**	**13**	27	**7**	54	**5**	38	**1**	08

சுற்றுலா துறை நிறுவகத்தின் பெயர்	இலங்கையிலுள்ள மொத்த நிறுவகங்களின் எண்ணிக்கை	Province மத்திய மாகாணத்திலுள்ள மொத்த நிறுவகங்களின் எண்ணிக்கை	%	ஒவ்வொரு மாவட்டத்தினதும் பங்களிப்பு					
				கண்டி	%	நுவரெலியா	%	Matale மாத்தளை	%
உணவகம்	**368**	**34**	09	**23**	68	**6**	18	**5**	14
பயண முகவர்	**487**	**10**	02	**10**	100	**0**	00	**0**	00
சுற்றுலா கடைகள்	**144**	**37**	26	**26**	70	**2**	05	**9**	25

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கள தரவு சேகரிப்பு ஆகஸ்ட் - ஒக்ரோபர் 2013

அட்டவணை 3.71 இல் இலங்கை மற்றும் மத்திய மாகாணத்தில் உள்ள ஒட்டுமொத்த அறைகளின் கொள்ளளவு பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள மொத்த அறைகளின் கொள்ளளவு 16.7% ஆனது மத்திய மாகாணத்தில் உள்ளது. இருந்த பொழுதிலும், அட்டவணையிலுள்ள தரவுகளுடன் அனைத்து மாகாணங்களும் சேர்க்கப்படவில்லை ஆயினும் அது மிக அதிகளவான கொள்ளவினையுடைய மேல் மாகாணத்திற்குரியதாகும்.

அட்டவணை 3.71

மத்திய மாகாணத்தில் உள்ள அறைகளின் கொள்ளளவு தொடர்பான பகுப்பாய்வு

பாகுபாடு	மொத்த எண்ணிக்கை - இலங்கை	மத்திய மாகாணம்	மத்திய மாகாணத்தின் சதவீத பங்களிப்பு	கண்டி	மாத்தளை	நுவரெலியா
வகைப்படுத்தப்பட்ட ஹோட்டல்கள்	9,289	1,722	**18.5**	794	527	401
வகைப்படுத்தப்படாத ஹோட்டல்கள்	5,352	837	**15.6**	514	88	235
பூட்டிக் ஹோட்டல்	344	61	**17.7**	10	51	N/A

பூட்டிக் வில்லாக்கள்	161	51	**31.7**	30	N/A	21
பிபி அலகுகள்	265	78	**29.4**	44	N/A	34
விருந்தினர் வீடுகள்	5,521	733	**13.2**	397	156	180
பாரம்பரிய வீடுகள்	252	60	**23.8**	31	3	26
மொத்தம்	**21,184**	**3,549**	**16.7**	**1,320**	**825**	**897**

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த புள்ளிவிபரவியல் அறிக்கை 2009 மற்றும் 2013

அட்டவணை 3.72 இல் இலங்கை சுற்றுலா சபையினால் அடையாளம் காணப்பட்ட முக்கிய சுற்றுலா பயணிகள் பகுதிகளிற்கான ஒட்டுமொத்த தங்கியிருப்பு வீதம் தரப்பட்டுள்ளது. இலங்கையில் 30 ஆண்டு காலமாக இடம்பெற்று வந்த யுத்த நிலைமை காரணமாக சமீபத்தில் முழுமையான தங்கியிருப்பு வீதத்தினை எட்ட முடியவில்லை. எனவே, இலங்கையிலுள்ள குறிப்பாக பொது மற்றும் அடையாளம் காணப்பட்ட சுற்றுலா தலங்களிற்கு சுற்றுலா பயணிகளின் வருகையில் ஏற்படும் எந்தவொரு படிப்படியான அதிகரிப்பினையும் கையாளக்கூடிய நிலைமையானது உள்ளது என்பது வெளிப்படுகின்றது. ஆயினும், சுற்றுலா பயணிகளின் பாரிய எண்ணிக்கையில் வருகைதரும் போது இதுவரை காணப்படுகின்ற கொள்ளளவானது போதுமானதாக இருக்காது என்பது கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். எனவே, இவ்வாறாக ***சுற்றுலா பயணிகள் வருகைதரும் இடங்களில் புதிய விடுதிகள் மற்றும் வசதிகள் என்பன ஏற்படுத்தப்படல் வேண்டும் என இதன் மூலம் பரிந்துரைக்கப்படுகின்றது*** உதாரணமாக, கிழக்கு கடற்கரை பிரதேசம். மத்திய மாகாணத்தின் குடியிருப்பு வீதமானது, உதாரணமாக 2009 ஆம் ஆண்டில் 42.2% ஆக காணப்படுவதானது இப்பிரதேசம் இன்றைய தேவைகளிற்கு தயாராக உள்ளது என்பதை குறித்துநிற்கின்றது. எனினும், ***இந்த ஆய்வின் மூலம், புதிதாக விடுதிகள்/ அறைகளை அமைப்பதற்கும் அது மட்டுமல்லாமல் தற்போது காணப்படும்***

வசதிகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும் சமமான முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

அட்டவணை 3.72

சுற்றுலா ஸ்தலங்களின் அடிப்படையில் தங்கியிருப்பு வீதம்

பிரதேசம்	**2005**	**2006**	**2007**	**2008**	**2009**
கொழும்பு நகரம்	76.3	64.3	63.9	57.1	57.8
கிரேற்றர் கொழும்பு	44.8	48.0	49.3	52.6	53.7
தென் கடலோரம்	31.8	41.2	47.6	46.1	49.6
கிழக்கு கடற்கரை	29.7	16.9	18.0	21.6	37.8
மலைநாடு	***36.6***	***39.9***	***41.2***	***34.2***	***42.2***
பண்டைய நகரங்கள்	***39.5***	***43.3***	***40.3***	***35.2***	***44.4***
அனைத்து பிரதேசங்கள்	**45.4**	**47.8**	**46.2**	**43.9**	**48.4**

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த புள்ளிவிபரவியல் அறிக்கை 2009

அட்டவணை 3.73 இல் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள நட்சத்திர தரப்படுத்தப்பட்ட விடுதிகள் மற்றும் அறைகளின் எண்ணிக்கை, ஊழியர்களின் எண்ணிக்கை, குடியிருப்பு வீதம், சுற்றுலா பயணிகள் எங்கிருந்து வருகைதந்துள்ளனர், ஏனையவை போன்றன தொடர்பான முக்கிய தகவல்கள் என்பனவும் தரப்பட்டுள்ளது. இப் பிரதேசத்தில் மூன்று (03) ஐந்து நட்சத்திர விடுதிகள் மட்டுமே காணப்படுவதுடன் அறைகளின் எண்ணிக்கை மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை என்பவற்றினை கருத்திற்கொள்ளுமிடத்தில் மிகப் பெரிய ஹோட்டலாக மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள ஹெரிட்டன்ஸ் கண்டலாமா ஹோட்டல் விளங்குகின்றது. ஏனைய ஐந்து நட்சத்திர ஹோட்டல்களாக கண்டி நகர எல்லைக்குள் அமைந்துள்ள மகாவலி ரீச் மற்றும் ஏர்ல் ரீஜென்சி ஆகிய ஹோட்டல்கள் காணப்படுகின்றன. கள ஆய்வானது மேற்கொள்ளப்பட்ட நேரத்தில் அனைத்து ஹோட்டல்களிலும் கிட்டத்தட்ட 50% இற்கும் மேற்பட்ட குடியிருப்பு வீதம் காணப்பட்டன. இது போன்ற ஹெரிட்டன்ஸ் கண்டலாமா மற்றும் ஏர்ல் ரீஜென்சி போன்ற முன்னணி ஆகிய

ஹோட்டல்களில் அதிகூடிய குடியிருப்பு வீதமாக 70% காணப்படுவது ஓர் முக்கிய அறிகுறியாகும். ஏனைய விடுதிகள் தற்போது சுற்றுலா பயணிகள் வருகைதரும் நிலைமையில் அவர்களின் தெரிவுகளுக்கு ஏற்றவாறாக விளங்கும் என எதிர்பார்க்க முடிகின்றது.

கணக்கெடுப்பின் மூலம் அறியப்பட்டுள்ளதற்கிணங்க, இப்பிராந்தியத்தில் உள்ள முன்னணி ஹோட்டல்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளால் சமமான முறையில் பயன்படுத்தப்படுவதுடன் சுற்றுலா பயணிகள் வருகைதரும் முக்கியமான நாடுகளாக இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, ரஷ்யா, மத்திய கிழக்கு, ஜப்பான், இந்தியா, மற்றும் நெதர்லாந்து ஆகியன உள்ளன.

அட்டவணை 3.73

மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள நட்சத்திர தரம் வாய்ந்த ஹோட்டல்கள்

இல	பெயர்	அறைகளின் எண்ணிக்கை	தொழிலாளர்களின் எண்ணிக்கை	பூர்த்திசெய்துள்ள வீதம்	சுற்றுலா பயணிகளின் வருடாந்த வருகை		பிரதான நாடுகள்
					இலங்கை	வெளி நாடு	
ஐந்து நட்சத்திர விடுதிகள்							
கண்டி							
1	மகாவலி ரீச்	112	220	47%	50%	50%	ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ்
2	ஏர்ல் ரீஜென்சி	104	214	70%	30%	70%	இத்தாலி, பிரான்ஸ்
மாத்தளை							
1	ஹெரிட்டன்ஸ் கண்டலம	152	398	70%	50%	50%	இங்கிலாந்து, இத்தாலி, மத்திய கிழக்கு
நான்கு நட்சத்திர விடுதிகள்							
கண்டி							
1	அமயா ஹில்ஸ்	100	220	69%	30%	70%	இத்தாலி, ரஷ்யா, இங்கிலாந்து,

							மத்திய கிழக்கு
நுவரெலியா							
1	ஹெரிட்டன்ஸ் தேயிலை தொழிற்சாலை	54	116	55%	30%	70%	இங்கிலாந்து, இந்தியா, ஜேர்மனி
2	கிராண்ட் ஹோட்டல்	154	280	70%	32%	68%	இங்கிலாந்து, ரஷ்யா, மத்திய கிழக்கு
மூன்று நட்சத்திர விடுதிகள்							
நுவரெலியா							
1	கால்வே லாட்ஜ்	52	87	72%	N/A	N/A	ரஷ்யா, இந்தியா, ஜப்பான்
இரண்டு நட்சத்திர விடுதிகள்							
கண்டி							
1	ரொப்பாஷ்	73	119	50%	40%	60%	ரஷ்யா, இந்தியா, ஜப்பான்
2	ஹோட்டல் கில் ரொப்	73	100	57%	25%	75%	பிரான்ஸ், ஜேர்மனி, ஒல்லாந்து
3	கஸாமாரா	35	54	60%	25%		
4	டேவன்	27	42	N/A	N/A	N/A	ஜேர்மனி, ஒல்லாந்து
ஒரு நட்சத்திர விடுதிகள்							
கண்டி							
1	சினானி	27	30	60%	N/A	N/A	பிரான்ஸ், ஜேர்மனி, ஒல்லாந்து
2	செரினி கார்டன்	33	60	60%	25%	75%	பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா
3	ரண்டோலி ரிசார்ட்ஸ்	27	58	40%	40%	50%	ஜேர்மனி, ஒல்லாந்து, இங்கிலாந்து

நுவரெலியா							
1	வின்ட்சர்	49	30	42%	30%	70%	இந்தியா, அவுஸ்ரேலியா , இங்கிலாந்து
Matale மாத்தளை							
1	சிகிரியா கிராமம்	120	170	31%	40%	60%	இங்கிலாந்து, இத்தாலி, ஜப்பான்

மூலம்: கள தரவு சேகரிப்பு, ஆகஸ்ட் - ஒக்ரோபர் 2013

சுற்றுலா துறையின் தற்போதைய போக்குகளை அடையாளம் காணும்பொருட்டு கண்டி மாநகரில் அமைந்துள்ள தெரிவுசெய்யப்பட்டுள்ள இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரண கடைகள் என்பன தொடர்பான முக்கியமான தகவல்கள் அட்டவணை 3.74 இல் காட்டப்பட்டுள்ளது. இங்கு அனைத்து கடைகளும் 10 - 95% ஆன ஆரோக்கியமான வருமான வளர்ச்சி வீதத்தினை கொண்டுள்ளன என்பது ஓர் ஆச்சரியமான விடயமாகும். அட்டவணை 3.74 இல் காட்டப்பட்டுள்ளவாறு, அனைத்து கடைகளும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளால் பயன்படுத்தப்படுகின்றன. கடை உரிமையாளர்கள்/ முகாமையாளர்களின் கருத்துக்களின் படி, ரூபி மற்றும் சபையர் போன்ற இரத்தினக் கல் வகைகளிற்கு ஓர் உயர்ந்த கேள்வி நிலவுகின்றது. பெரும்பாலான இரத்தினக் கற்கள் இரத்தினபுரி மற்றும் எஹெலியகொட ஆகிய இடங்களில் இருந்து கொண்டுவரப்படுகின்றன. விலையுயர்ந்த பொருட்களிற்கான சிறந்த வாங்குநர்கள் பிரதானமாக ஐரோப்பியர்கள் எனவும் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

அட்டவணை 3.74

கண்டி மாநகரத்தில் காணப்படுகின்ற கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண கடைகள்

இல	பெயர்	ணிக முதலீடு (ரூபா மில்லியன்)	உரிமையின் தன்மை	ஊழியர்களின் எண்ணிக்கை	வருமான வளர்ச்சி விகிதம்	மாதாந்த சராசரி சுற்றுலா பயணிகள்		வருடாந்த சராசரி சுற்றுலா பயணிகள்	முக்கிய நாடுகள்
						அதி கூடிய	அதி குறைந்த		
1	ஹேமச்சந்திரா (கண்டி) லிமிடெட்	50 க்கும் மேற்பட்ட	தனியார்	60	40%	1,000	600	10,000	பிரான்ஸ்
2	லக்மினி	50 க்கும் மேற்பட்ட	தனியார்	60	60%	3,000	1,500		
3	பிரசன்னா மாணிக்ககற்கள்	50 க்கும் மேற்பட்ட	தனியார்	50		700	500	5,000	இங்கிலாந்து, ரஷ்யா
4	புதிய சில்க் கார்டன்	20 க்கும் மேற்பட்ட	தனியார்	55	10%	7,000	5,500	60,000	பிரான்ஸ், ஜேர்மனி
5	கலை சங்கம்	50 க்கும் மேற்பட்ட	அரச அனுசரணை	9	50%	1,000	300	5,000	ஐரோப்பா, ஆராபியா
6	லக்சல	காணப்படவில்லை	அரச அனுசரணை	12	95%	3,000	1,000	25,000	ஆவுஸ்ரேலியா, ஜேர்ம

									னி
7	டாஸ்வன் ஸ் லிமிடெட்	காணப் படவி ல்லை	தனி யார்	4	30%	2,000	1,500	20,000	ஐரோப் பா, பிரான் ஸ்
8	ஷாம் மாணிக்க கற்கள்	50 க்கும் மேற்ப ட்ட	தனி யார்	62	40%	850	550	6,000	ஜேர்ம னி
9	பிரேமதாச	50 க்கும் மேற்ப ட்ட	தனி யார்	55	55%	1,000	550	11,000	இங்கி லாந்து, ரஷ்யா, இந்தி யா
10	ஆயிஷா யுவல்லரி	50 க்கும் மேற்ப ட்ட	தனி யார்	50	60%	3,000	1,500	30,000	இங்கி லாந்து, ஜேர்ம னி

மூலம்: கள தரவு சேகரிப்பு ஆகஸ்ட் - ஒக்ரோபர் 2013

அட்டவணை 3.75 இல் இலங்கையிலுள்ள தாவரவியல் பூங்காக்களிற்கு சுற்றுலா பயணிகள் வருகைதருதல் தொடர்பான முக்கிய தகவல்கள் தரப்பட்டுள்ளது. அடையாளம் காணப்பட்டுள்ளதற்கிணங்க, கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள பேராதனை தாவரவியல் பூங்கா ஆனது சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) மற்றும் வருவாய் வசூல் போன்ற அனைத்து அம்சங்களிலும் ஹக்கல மற்றும் கம்பஹா ஆகிய இரண்டினையும் விஞ்சியுள்ளது. 2008 ஆம் ஆண்டில் இலங்கையிலுள்ள தாவரவியல் பூங்காக்களின் மொத்த வருவாய் ஆனது ரூபா 112 மில்லியன் என்பதோடு இவ்வருவாயில் 83% ஆனது தனியாக பேராதனை தாவரவியல் பூங்காவின் மூலம் வசூலிக்கப்பட்டுள்ளது. பேராதனை தாவரவியல் பூங்காவினால் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் ஈர்க்கப்படுவதற்கான காரணம் யாதெனில் இலங்கைக்கு வருகைதரும் 25% இற்கும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இந்த அற்புதமான இடத்திற்கு விஜயம்

செய்வதனாலேயாகும். *தரிப்பிட பகுதியில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தியானது பொதுமக்களின் பாராட்டுதல்களை பெற்றுள்ளதோடு,* தாவரவியல் பூங்காவினுள் காணப்படும் பொது வசதிகளான கழிவறைகள், உணவு விடுதிகள் முதலியன உலகின் எப்பாகத்திலும் இவற்றுடன் ஒப்பிடக்கூடியவாறான பூங்காக்களிலும் பார்க்க குறைவான தரத்திலேயே உள்ளது. எனவே, இந்த இடம் வெளிநாட்டு அத்துடன் உள்ளூர் சுற்றுலா பயணிகளின் முதலாம் நிலையிலுள்ள ஒரு இலக்கு என்பதனால் பேராதனை தாவரவியல் பூங்காவினை விழிப்புடனும் மற்றும் அக்கறையுடனும் கவனித்தல் வேண்டும் என பரிந்துரை செய்யப்படுகின்றது.

அட்டவணை 3.75

தாவரவியற் பூங்காக்களுக்கான சுற்றுலாப்பயணிகளின் வருகைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானங்கள்

தாவரவியல் பூங்கா	வெளிநாட்டு நுழைவுச் சீட்டுகள்		உள்ளூர் நுழைவுச் சீட்டுகள்		மொத்த வருமானம் (ரூபா)	மொத்த வருமானத்தின் பங்கு (%)
	வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை	வருமானம் (ரூபா)	இலங்கை சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை	வருமானம் (ரூபா)		
பேராதனை	117,427	68,838,300	997,997	23,728,385	92,566,685	**83**
ஹக்கல	5,871	3,353,400	508,913	11,691,615	15,045,015	**13**
ஹம்பகா	127	75,000	197,443	4,600,170	4,675,170	**04**
மொத்தம்	**123,425**	**72,266,700**	**1,704,353**	**40,020,170**	**112,286,870**	**100**

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2009

அட்டவணை 3.76 இல் மத்திய மாகாணத்தில் காணப்படும் முக்கிய நீர்வீழ்ச்சிகள் தொடர்பான தகவல்கள் தரப்பட்டுள்ளதுடன் ஏறத்தாழ அனைத்து நீர்வீழ்ச்சிகளும் நுவரெலியா மாவட்டத்திலேயே அமைந்துள்ளன. இவ்விடங்களின் பிரபல்யத்தினை அடையாளம் காண்பதற்கு வழியேதும் இல்லை எனினும், தரவரிசைப்படுத்தலானது சுற்றுலா சபையின் நிபுணர்களது பதிப்பினை அடிப்படையாக கொண்டுள்ளது.

இலங்கையானது அதன் இயற்கை அழகு தொடர்பாக பெருமையடைய முடிவதுடன் மலைநாட்டில் உள்ள நீர்வீழ்ச்சிகள் மூலம் இது மேலும் மெருகூட்டப்படுகின்றது. பெரும்பாலான நீர்வீழ்ச்சிகள் மழை மற்றும் காடுகள் போன்ற இயற்கையின் கொடையின் காரணமாக ஆண்டு முழுவதும் பாய்கின்றன. இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள இவ்வாறான அற்புதமான பரிசுகளிலிருந்து அவற்றினை பாதிப்பு ஏற்படுத்தாமலும் மற்றும் அவற்றிற்கு தீங்கு விளைவிக்காமலும் ஏராளமானவற்றினை பெற்றுக் கொள்ள முடியும். பெருந்தொகை பணத்தினை செலவுசெய்து, தலவாக்கலைக்கு அருகில் அமைந்துள்ள டேவன் நீர்வீழ்ச்சி மற்றும் சென்ட் கிளேர்ஸ் நீர்வீழ்ச்சி ஆகியவற்றினை பின்னணியாக கொண்டு சமீபத்தில் நிர்மாணிக்கப்பட்ட 'எம்லெஸ்னா ரீ போட்ரெஸ்' (Mlesna Tea Fortress) இனைப்பற்றி இவ் அறிக்கையில் குறிப்பிடுவது மிகையாகும்.

அட்டவணை 3.76

மத்திய மாகாணத்திலுள்ள மிகவும் பிரபல்யமான நீர்வீழ்ச்சிகள்

நிலை	நீர்வீழ்ச்சியின் பெயர்	உயரம்	அமைவிடம்	மாவட்டம்
1	ரம்பொட நீர்வீழ்ச்சி	109 மீற்றர் (358 அடி)	ரம்பொட	நுவரெலியா
2	லக்ஸபானா நீர்வீழ்ச்சி	129 மீற்றர் (423 அடி)	ஹட்டன்	நுவரெலியா
3	ஹுனாஸ் நீர்வீழ்ச்சி	60 மீற்றர் (197 அடி)	வத்தேகம	கண்டி
4	சென்ட் கிளேர்ஸ் நீர்வீழ்ச்சி	80 மீற்றர் (262 அடி)	ஹட்டன்	நுவரெலியா
5	லவ்வேர்ஸ் லீப்	30 மீற்றர் (98 அடி)	பேதுருதாலகால	நுவரெலியா
6	குருந்து ஓயா நீர்வீழ்ச்சி	206 மீற்றர் (676 அடி)		
7	டேவன் நீர்வீழ்ச்சி	97 மீற்றர் (318 அடி)	தலவாக்கலை	நுவரெலியா
8	அஹுபினி எல்ல	10 மீற்றர் (33 அடி)		

9	பேக்கர்ஸ் நீர்வீழ்ச்சி	20 மீற்றர் (66 அடி)	ஹோட்டன் சமவெளி	நுவரெலியா
10	கரண்டி எல்ல	100 மீற்றர் (328 அடி)	ரம்பொட	நுவரெலியா
11	ரத்னா நீர்வீழ்ச்சி	101 (331 அடி)	ஹசலக	கண்டி
12	தூவிலி எல்ல	40 மீற்றர் (131 அடி)		நுவரெலியா
13	பூனா நீர்வீழ்ச்சி	100 மீற்றர் (328 அடி)		நுவரெலியா
14	நானுஓயா நீர்வீழ்ச்சி	60 மீற்றர் (197 அடி)		நுவரெலியா
15	எல்ஜின் நீர்வீழ்ச்சி	25 மீற்றர் (82 அடி)	அம்பேவல	நுவரெலியா
16	கிளைன் நீர்வீழ்ச்சி	10 மீற்றர் (33 அடி)		நுவரெலியா

மூலம்: சுற்றுலா சஞ்சிகை மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் அறிக்கை.

3.8.5. சுற்றுலா கைத்தொழிற் துறையில் காணப்படுகின்ற வேலைவாய்ப்புக்கள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 'மஹிந்த சிந்தனை 2010' மற்றும் 'சுற்றுலா அபிவிருத்தி மூலோபாயம் 2010 - 2016' ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி, இலங்கை அரசு 2016 ஆம் ஆண்டளவில் 2.5 மில்லியன் எண்ணிக்கையான சுற்றுலா பயணிகள் வருகைதருவர் என இலக்கினை நிர்ணயம் செய்தது. இந்த இலக்கினை அடையும் பொருட்டு தேவையான மனிதவளங்கள் தொடர்பாக கவனத்தினையும் மற்றும் அக்கறையினையும் செலுத்த வேண்டியுள்ளது. இத்துறைசார் கைத்தொழில் நிறுவகங்கள் தற்போது சுமார் 150,000 பேரிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளை வழங்குவதுடன் 2016 ஆம் ஆண்டளவில் இவ் வேலைவாய்ப்புகள் மூன்று தொடக்கம் நான்கு மடங்கினால் அதாவது 500,000 ஆக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டளவில் சுற்றுலா

துறையானது நாட்டிற்கு அந்நிய செலாவணியினை ஈட்டித்தரும் மூன்றாவது மிகப் பெரிய துறையாக விளங்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுகளினுள் 350,000 கூடுதல் தொழிலாளர்களை உருவாக்குவதானது அரச மற்றும் தனியார் துறை பயிற்சி வழங்கும் நிறுவகங்களின் தற்போதைய கொள்ளளவுகளின் அடிப்படையில் ஓர் கடினமான பணி போல தோன்றுகின்றது. மனித வளமானது எந்தவொரு தொழிலினதும் அடிப்படை வளமாக காணப்படுகின்றது. இலங்கை சுற்றுலாத் துறையின் உயிரோட்டம் அதன் மக்கள் தான். சுற்றுலா துறைக்கு சேவையாற்றுகின்ற மக்கள் நாட்டின் மிகவும் கவர்ச்சிகரமான மற்றும் முக்கிய சக்தியாக உள்ளனர். இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையானது (SLTDA) போக்குவரத்து மற்றும் சுற்றுலா துறைசார் மனித வள மேம்பாட்டிற்கு அர்ப்பணித்து வருகின்றது என்பதை மனதில் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

தற்போது இத்துறைசார் தொழில்முறை முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டு பணிகளை புரிவதற்கு ஏற்றவாறு சாத்தியமான தனிநபர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களில் CIMA மற்றும் CIM போன்ற நிறுவகங்களை ஒத்த சுற்றுலா துறை நிறுவகத்தினை அமைத்தல், அரச மற்றும் தனியார் துறைகள் முகாமைத்துவ பதவிகளிற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான தகைமைகளை தீர்மானிப்பதில் இணைந்து பணியாற்றுதல், மற்றும் போக்குவரத்து, சுற்றுலா பிரயாணம் மற்றும் MICE முகாமைத்துவ பிரிவுகள் ஆகியவற்றிற்கு போக்குவரத்து மற்றும் சுற்றுலா தொடர்பான பயிற்சிகளை அளித்தல் ஆகியன உள்ளடங்குகின்றன.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் அடையாளம் காணப்பட்டுள்ள சுற்றுலா துறை தொடர்பான மனிதவள தேவைப்பாடுகளாவன:

1. உணவு மற்றும் பானங்கள்
2. தொழில்முறை சமையல்

3. வீட்டு பணி , மற்றும்
4. முன்னணி அலுவலக நடைமுறைகள்.

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகமானது இவ்வாறான விடயங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளது. வருடாந்த வெளியீடாக இத்துறைசார் நிறுவகங்களுக்கு சுமார் 1500 பட்டதாரிகள் தேவைப்படுவதுடன் இத்துறைசார் திறன்களை மேம்படுத்துவதற்கு ஊக்குவிப்பு தொகைகள் வழங்கப்படும். இத்துறைசார் சேவைகளை புரிதவதற்கு தேவையான மனித வளத்தினை உருவாக்குதல்: சுற்றுலா வழிகாட்டிகள், வீட்டில் தங்க வைப்பவர்கள், ஏனைய முறையான மற்றும் முறைசாரா சேவை வழங்குநர்கள் ஆகியோருக்கு தேவையான பயிற்சிகளை வழங்குதல். இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகமானது இவ்வாறான தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு குறுகிய கால பாடநெறிகளை நடாத்தியும் வருகிறது.

சுற்றுலா துறைசார் நேரடி தொழில்வாய்ப்புகள்

2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுற்றுலா துறை தொடர்பான வேலைவாய்ப்பு உருவாக்கமானது 32% இனால் அதிகரித்துள்ளது. அட்டவணை 3.77 இல் காட்டப்பட்டுள்ளது போல ஆகவும் 2008 ஆம் ஆண்டில் நேரடியான வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டோரின் எண்ணிக்கையானது 57,786 ஆகவும் 2012 ஆம் ஆண்டின் இறுதியில் சுற்றுலா துறைசார் நேரடியான வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டோரின் எண்ணிக்கையானது 67,862 ஆகவும் கணக்கிடப்பட்டுள்ளது. சுற்றுலா துறைசார் அதிக எண்ணிக்கையான அமைப்புக்களாக ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் காணப்படுவதுடன் அவற்றினை தொடர்ந்து பயண முகவர்கள் மற்றும் சுற்றுலா இயக்குநர்கள் காணப்படுகின்றனர். இத்துறைசார் அதிகூடிய எண்ணிக்கையான ஊழியர்களாக முறையே தொழில்நுட்பவியலாளர்கள், எழுதுவினைஞர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் உள்ளதுடன் அதனைத்

தொடர்ந்து தொழிலாளர்கள் மற்றும் இயக்குநர்கள் மற்றும் முகாமைத்துவ, விஞ்ஞான மற்றும் வல்லுநர்கள் உள்ளனர்.

அட்டவணை 3.78 மற்றும் அட்டவணை 3.79 ஆகியவற்றில் 2012 ஆம் ஆண்டிற்கான சுற்றுலாத் துறைசார் நேரடி வேலைவாய்ப்பு சதவீத பெறுமானங்கள் தரப்பட்டுள்ளன. அதற்கிணங்க, ஹோட்டல் மற்றும் உணவகங்கள் அதிக எண்ணிக்கையான அலகுகளை (66%) கொண்டுள்ளதுடன் அவற்றில் 70% நேரடி பணியாளர்கள் தொழில்புரிவதுடன் பயண முகவர்கள் மற்றும் சுற்றுலா இயக்குநர்கள் சுற்றுலா துறைசார் 9% நேரடி பணியாளர்களை கொண்டுள்ளன.

அட்டவணை 3.77

சுற்றுலா கைத்தொழிற் துறையில் காணப்படுகின்ற நேரடி வேலைவாய்ப்புக்கள் - 2008 மற்றும் 2012

நிறுவக வகைகள்	நிறுவகங்களின் எண்ணிக்கைகள்		முகாமைத்துவ, விஞ்ஞான மற்றும் தொழில் வல்லுநர்		தொழில்நுட்ப, எழுதுவினைஞர் மற்றும் மேற்பார்வை		சாதாரண மற்றும் செயலாற்றல் மிக்க		**மொத்தம்**	
	2008	**2012**	**2008**	**2012**	**2008**	**2012**	**2008**	**2012**	**2008**	**2012**
ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள்	1246	1306	4895	6037	17202	22707	9529	19017	31626	47761
பயண முகவர்கள், சுற்றுலா நடத்துநர்கள்	495	533	2027	2232	4201	3543	872	634	6725	6409
விமானங்கள்	20	29	770	814	3,480	3,591	994	1225	5,251	5,630
பொழுதுபோக்கு வழங்கும் ஏஜன்சிகள்	15	48	33	121	147	234	79	197	259	552

சுற்றுலா கடைகள்	144	52	230	117	1005	763	250	132	1485	1012
வழிகாட்டிகள்	-	-	-	-	3460	3896	-	-	3460	3896
தேசிய சுற்றுலா நிறுவகம்	4	4	87	133	121	148	105	129	313	410
அரச துறை	18	18	650	655	691	690	846	847	2187	2192
மொத்தம்	**1942**	**1990**	**8692**	**10109**	**26479**	**35572**	**12675**	**22181**	**51306**	**67862**

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த புள்ளிவிபரவியல் அறிக்கை 2009 மற்றும் 2012

அட்டவணை 3.78

சுற்றுலா துறையின் உப பிரிவுகளில் உள்ள நேரடி வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள்

(%) - 2012

நிறுவக வகைகள்	**நிறுவகங்களின் சதவீதம்**	**நேரடி தொழில்வாய்ப்புகளின் சதவீதம்**			
		முகாமைத்துவ, விஞ்ஞான மற்றும் தொழில் வல்லுநர்	தொழில்நுட்ப, எழுதுவினைஞர் மற்றும் மேற்பார்வை	சாதாரண மற்றும் செயலாற்றல் மிக்க	**நேரடி தொழில்வாய்ப்புகளின் மொத்த சதவீதம்**
ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள்	65.62	59.71	63.83	85.73	70.37
பயண முகவர்கள், சுற்றுலா நடத்துநர்கள்	26.78	22.07	09.96	02.85	09.44
விமானங்கள்	01.45	08.05	10.09	05.52	08.29

பொழுதுபோக்கு வழங்கும் ஏஜன்சிகள்	02.41	01.19	00.65	00.88	00.81
சுற்றுலா கடைகள்	07.23	02.27	02.14	00.59	01.49
வழிகாட்டிகள்	00.00	00.00	10.95	00.00	05.74
தேசிய சுற்றுலா நிறுவகம்	00.20	01.31	00.41	00.58	00.60
அரச துறை	00.90	06.47	01.93	03.81	03.23
மொத்தம்	**100.00**	**100.00**	**100.00**	**100.00**	**100.00**

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த புள்ளிவிபரவியல் அறிக்கை 2012

அட்டவணை 3.79 இல் தரப்பட்டுள்ளது போல, தொழில்நுட்பவியலாளர், எழுதுவினைஞர் மற்றும் மேற்பார்வையாளர் பிரிவுசார் ஊழியர்கள் 52% ஆக காணப்படுவதுடன் தொழிலாளர்கள் மற்றும் இயக்குநர்கள் 33% ஆகவும் உள்ளனர். முகாமைத்துவ, விஞ்ஞான மற்றும் வல்லுநர் பிரிவுசார் ஊழியர்கள் மிகவும் குறைவாகவும் (15%) மற்றும் சுற்றுலா துறைசார் முகாமைத்துவ மற்றும் முகாமைத்துவம் அல்லாத ஊழியர்கள் இடையேயான விகிதம் 15:85 ஆகவும் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 3.79

சுற்றுலா துறையின் பிரதானமான வேலைவாய்ப்பு வகைகளிலுள்ள நேரடி வேலைவாய்ப்புகள் - 2012

இல	நேரடி வேலைவாயப்பு வகை	எண்ணிக்கை	%
1	முகாமைத்துவ, விஞ்ஞான மற்றும் தொழில் வல்லுநர்	10,109	14.89
2	தொழில்நுட்ப, எழுதுவினைஞர் மற்றும் மேற்பார்வை	35,572	52.41
3	சாதாரண மற்றும் செயலாற்றல் மிக்க	22,181	32.68
மொத்தம்		**67,862**	**100.00**

மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த புள்ளிவிபரவியல் அறிக்கை 2012 மற்றும் 2013

அட்டவணை 3.80 இல் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டு தொழில்வாய்ப்புகள் தொடர்பான தேவை மற்றும் வழங்கல் (கோரிக்கை மற்றும் அனுப்பப்பட்டவை) பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன. இந்த சூழ்நிலையானது இலங்கையினால், வெளிநாட்டு சுற்றுலா துறைசார் வேலைவாய்ப்புகளிற்கு பிரதானமாக மத்திய கிழக்கு நாடுகளில் காணப்பட்ட கேள்விகளுக்கான வழங்கல்களை மேற்கொள்ள முடியவில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது. கேள்வி - வழங்கல் பகுப்பாய்வின் மூலம் இலங்கையானது 30 ஆண்டுகால உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட சுற்றுலா துறைசார் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து தொழிற் பிரிவுகள், எழுதுவினைஞர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவை, தேர்ச்சி பெற்ற, பகுதி தேர்ச்சி பெற்ற, மற்றும் தேர்ச்சியற்ற போன்றவற்றிற்கான கேள்விகள் மற்றும் வழங்கல்கள் ஆகியவற்றுக்கிடையில் காணப்படும் பொருத்தப்படாடின்மையானது பயிற்சி வழங்குநர்கள் அதிகூடுதலான மாணவர்களை உள்ளீர்ப்பு செய்வதற்கும் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை எதிர்பார்த்துள்ள இளைஞர்கள் அவற்றில் ஈடுபடுவதற்குமான சிறந்த சந்தர்ப்பங்கள் காணப்படுவதனை எடுத்துக்காட்டுகின்றது. கேள்விக்கும் வழங்கலுக்கும் இடையேயான பொருத்தப்பாடின்மையானது கிட்டத்தட்ட 100:15 ஆகும்.

அட்டவணை 3.80

சுற்றுலா துறையில் காணப்படுகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கான கேள்விகள் மற்றும் சந்தர்ப்பங்கள் - 2010 - 2011

இல	தொழில் பிரிவு	2010		இடைவெளி	2011		இடைவெளி
		கேள்வி (கோரிக்கை)	வழங்கல் (அனுப்பப்பட்டவை)		கேள்வி (கோரிக்கை)	வழங்கல் (அனுப்பப்பட்டவை)	
1	**எழுதுவினைஞர் மற்றும் சம்பந்தப்பட்டவை**	**2,781**	**327** (12%)	**2454** (88%)	**2,259**	**299** (13%)	**1,960** (87%)
	செஃப் - டெமி	342	26	316	142	17	125
	செஃப் - நிறைவேற்று	65	04	61	34	03	31
	செஃப் - தலைமை	38	07	31	83	06	77
	செஃப் - பேஸ்ட்ரி	199	15	184	90	08	82
	செஃப் - சோஸ்	97	07	90	86	11	75
	செஃப் - கொமிஸ்	39	08	31	95	23	72
	கொமிஸ் - 1 வது	790	83	707	384	58	326
	கொமிஸ் - 2 வது	249	45	204	208	56	152
	கொமிஸ் - 3 வது	215	53	162	227	41	186
	கொமிஸ் - குக்	57	10	47	116	17	99
	தலைமை மதுபான சாலை பரிமாறுபவர்	52	01	50	25	01	24
	மேற்பார்வையாளர் - உணவகம்	102	04	98	59	03	56
	மேற்பார்வையாளர்-ஹவுஸ் கீப்பிங்	238	27	211	394	29	365
	மேற்பார்வையாளர் - மதுபான	21	01	20	06	00	06

இல	தொழில் பிரிவு	2010		இடைவெளி	2011		இடைவெளி
		கேள்வி (கோரிக்கை)	வழங்கல் (அனுப்பபட்டவை)		கேள்வி (கோரிக்கை)	வழங்கல் (அனுப்பபட்டவை)	
	சாலை						
	மேற்பார்வையாளர் - உணவு விநியோகம்/ உணவு மற்றும் குளிர்பானம்	315	43	272	262	22	242
	மேற்பார்வையாளர் - பரிசாரகர்	58	06	52	48	04	44
2	**தேர்ச்சி சார் தொழிலாளர்கள்**	**3,907**	**769** (20%)	**3,138** (80%)	**1,846**	**270** (15%)	**1,576** (85%)
	மதுபான சாலை பரிமாறுபவர்	396	37	359	249	19	230
	செஃப்	807	109	698	368	61	307
	செஃப் டி பாட்டி	46	00	46	278	30	248
	மதுபானம் பரிமாறுபவர்	85	06	79	129	22	107
	குக் - தலைமை	355	20	335	90	01	89
	பரிசாரகர் - ஹோட்டல்	1,290	326	924	474	120	354
	குக் - ஹோட்டல்	305	108	197	230	05	225
	குக் -பேஸ்ட்ரி	100	19	81	28	12	16
	உயிர் காவலர்	569	144	425	00	00	00
3	**பகுதி தேர்ச்சிமிக்க தொழிலாளர்கள்**	**1,884**	**324** (17%)	**1,560** (83%)	**1,830**	**285** (16%)	**1,545** (84%)
	உதவி குக்	734	125	609	594	106	488

இல	தொழில் பிரிவு	2010		இடைவெளி	2011		இடைவெளி
		கேள்வி (கோரிக்கை)	வழங்கல் (அனுப்பபட்டவை)		கேள்வி (கோரிக்கை)	வழங்கல் (அனுப்பபட்டவை)	
	பணியாளர் - அறை	236	43	193	524	91	433
	பணியாளர் - குழாம்	68	01	67	116	13	103
	அறை உதவியாளர்	530	115	415	442	57	385
	பரிசாரகர் - தலைமை	316	40	276	154	18	136
4	**தேர்ச்சியற்ற தொழிலாளர்கள்**	**5,352**	**872** (16%)	**4,480** (84%)	**5,105**	**890** (17%)	**4,215** (83%)
	மதுபான சாலை பணியாளர்	19	01	18	14	02	12
	மணி அடிப்பவர்	104	12	92	144	19	125
	உணவு பரிமாறுபவர்	400	98	302	439	142	297
	வீட்டுப் பராமரிப்பு பணிப்பெண்	297	50	247	220	57	163
	வீட்டு பணியாளர்	431	51	380	433	49	384
	உணவு பரிமாறுபவர் - மதுபான சாலை	87	14	73	35	08	27
	உணவு பரிமாறுபவர் - பொது	3,365	611	2,754	3,104	598	3,006
	பெண் உணவு பரிமாறுபவர்	649	35	614	716	17	699

இல	தொழில் பிரிவு	2010		இடைவெளி	2011		இடைவெளி
		கேள்வி (கோரிக்கை)	வழங்கல் (அனுப்பபட்டவை)		கேள்வி (கோரிக்கை)	வழங்கல் (அனுப்பபட்டவை)	
	மொத்தம்	**13,924**	**2,292** (17%)	**11,632** (83%)	**11,040**	**1,744** (16%)	**9,296** (84%)

மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக வருடாந்த அறிக்கைகள் 2011 மற்றும் 2012

சுற்றுலா துறைசார் மறைமுக வேலைவாயப்புகள்

2012 ஆம் ஆண்டில் மொத்த இத்துறைசார் மறைமுக வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கையானது 95,007 ஆக காணப்பட்டது என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு 2012 ஆம் ஆண்டில் சுற்றுலா துறைசார் மொத்த நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கையானது 162,869 ஆகும். இது 2011 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட எண்ணிக்கையான 138,685 இன் 17.4% படிப்படியான அதிகரிப்பாகும். மீளாய்வு வருடத்தில் வருகைதந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கைக்கும் நேரடி மற்றும் மறைமுக தொழில்களின் உருவாக்கத்திற்கும் இடையிலான விகிதமானது ஒவ்வொரு ஆறு (06) சுற்றுலா பயணிகளின் வருகைக்கும் ஒரு தொழில் என்ற அடிப்படையில் காணப்பட்டது. இந் நிகழ்வானது, சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்படும் அதிகரிப்பிற்கு ஏற்றவாறு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புக்கள் படிப்படியாக அதிகரிப்பதுடன் தொடர்ந்தும் செல்கின்றது. உதாரணமாக, தற்போது வருகைதரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையினை கருத்திற்கொள்ளும் போது, அதாவது இது 2013 ஆம் ஆண்டில் 1.2 மில்லியன் ஆக காணப்படுவதுடன், நேரடி

மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கையானது 200,000 ஆகவும் உள்ளது.

சுற்றுலா துறைசார் மொத்த தொழில்வாய்ப்புகள்

இலங்கை அரசு **'மஹிந்த சிந்தனை'** அடிப்படையிலான அதன் கொள்கை அறிக்கைகளில் 2016 ஆம் ஆண்டளவில் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகைதருவர் என்ற ஓர் இலக்கினை நிர்ணயித்துள்ளது. சுற்றுலாத் துறையானது நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் சுமார் 150,000 பேருக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகிறது. 2016 ஆம் ஆண்டளவில் எதிர்பார்க்கப்படும் நபர்களின் எண்ணிக்கை சுமார் 625,000 ஆகும். இரண்டு ஆண்டுகளுக்குள் 500,000 கூடுதல் மனிதவளத்தினை உருவாக்குதல் ஒரு கடினமான பணியாக தோன்றுகின்றது. எனினும், அரசு மற்றும் அனைத்து பயிற்சி நிறுவகங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியன ஒன்றிணைந்து இத்தேவைப்பாடுகளில் அனேகமானவற்றினை ஓர் சாத்தியமான தேசிய வேலைத்திட்டத்தின் மூலம் பூர்த்திசெய்யுமாயின் 2016 ஆம் ஆண்டளவில் மூன்றாவது மிகப் பெரிய அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் துறையாக சுற்றுலா துறையானது உருவாகும்.

3.8.6 சுற்றுலா துறையில் எதிர்காலத்தில் காணப்படக்கூடிய தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள்

இந்த பிரிவில் ஒவ்வொரு தொழிற் பிரிவின் கீழும் தேவைப்படும் பணியார்களின் எண்ணிக்கைகள் கணக்கிடப்படுகின்றது அவையாவன பிரதானமாக அ) முகாமைத்துவ, விஞ்ஞான மற்றும் தொழில்முறை; ஆ) தொழில்நுட்ப, எழுதுவினைஞர் தொடர்பானவை மற்றும் மேற்பார்வை; மற்றும் இ) தொழிலாளர் மற்றும் இயக்குநர்கள் என்பனவாகும்.

2012 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுற்றுலா துறையில் உண்மையாக உருவாக்கப்பட்டுள்ள தொழில்களின் எண்ணிக்கையினை அடையாளம் காண்பதற்கு ஓர் பூர்வாங்க ஆய்வானது (ஆகஸ்ட் - அக்டோபர் 2013) நடத்தப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்பது தெரியவருவதுடன், இதுவரை அவை தொடர்பான உண்மையான புள்ளிவிபரங்களை அறிந்துகொள்ள இயலவில்லை. எனினும், கிடைக்கப்பெறும் உரிய புள்ளிவிவரங்களின் அடிப்படையில், இக்காலப்பகுதியில் 1,000 - 2,000 நேரடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதனை கணக்கிடக் கூடியதாக உள்ளது.

கிடைக்கப்பெற்றுள்ள தரவுகள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் மத்திய மாகாணத்தின் சுற்றுலா துறைசார் நேரடி வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கையானது அடையாளம் காணப்பட்டுள்ளது அதன்படி 67,862 / 6 = 11,310 ஆகும். **இலங்கை** சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் ஆராய்ச்சி மற்றும் புள்ளியியல் பிரிவினது எதிர்வுகூறலிற்கு இணங்க, 2016 ஆம் ஆண்டில் இலங்கையில் 2.5 மில்லியன் சுற்றுலா பயணிகளுக்கான தங்குமிட வசதிகள் அதாவது 49,800 அறைகள் தேவைப்படுவதுடன் 2016 ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தின் பங்கு 8,000 ஆகும். அதன்படி, 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் லேதிகமாக 5,000 எண்ணிக்கையான அறைகள் அமைக்கப்படல் வேண்டும். அதாவது இது மத்திய மாகாணத்தில் ஆண்டுதோறும் சராசரியாக 1,250 அறைகள் அமைக்கப்படல் வேண்டும் என்பதை குறிக்கின்றது. தற்போதைய கைத்தொழிற் துறை நியமங்களிற்கு இணங்க, ஒவ்வொரு புதிய அறையும் இரண்டு கூடுதல் வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை உருவாக்கும் அதற்கிணங்க 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் **அனைத்து தொழில் மட்டங்களிலும் வருடாந்தம் சராசரியாக 2,500**

பேர் வீதம் ஒட்டுமொத்தமாக மனிதவள தேவையானது 10,000 ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

எதிர்வுகூறல் முறை

சுற்றுலா துறையிலுள்ள கூடுதல் வேலைவாய்ப்புக்களின் எண்ணிக்கை தொடர்பான மதிப்பீடு = 2,500

முகாமைத்துவம் அல்லாத பிரிவிற்கான மனிதவள தேவைகள் (100 - 15) = 2,124

தொழில் ஒன்றுக்கான மனிதவள தேவைகள் = 2,124/ 78

மனிதவள தேவை காரணி = 27

அட்டவணை 3.81 இல் மத்திய மாகாணத்திலுள்ள முகாமைத்துவம் அல்லாத மட்டதிலுள்ள தொழில்களுக்கான மேலதிக மனிதவள தேவைகள் தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் ஒரு பொதுவான சுற்றுலா விடுதிக்கான பிரதான தொழிற் பிரிவுகளிடையிலான சாத்தியமான வேலைவாய்ப்பு விகிதங்கள் என்பன தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.81
சுற்றுலா துறையில் காணப்படுகின்ற வருடாந்த தொழிலாளர்களுக்கான கேள்விகள் தொடர்பான மதிப்பீடு

இல.	முகாமைத்தவ மட்டம் அல்லாத புகழ்பெற்ற தொழில்கள்	தொழில்வாய்ப்பு விகிதம்	வருடாந்த மேலதிக மனித வள தேவைகள்
1	முன் அலுவலகம்/ வரவேற்பாளர்	5	135
2	சமையல்காரர்	1	27
3	செஃப் டி பாட்டி	6	162
4	குக்	10	270
5	சமையலறை உதவியாளர்	6	162
6	பரிசாரகர்	7	189

இல.	முகாமைத்தவ மட்டம் அல்லாத புகழ்பெற்ற தொழில்கள்	தொழில்வாய்ப்பு விகிதம்	வருடாந்த மேலதிக மனித வள தேவைகள்
7	வெயிட்டர்	5	135
8	மதுபான சாலை பரிமாறுபவர்	2	54
9	களஞ்சிய தொழிலாளி	3	81
10	அறை உதவியாளர்	10	270
11	குழாம் பணியாள்	1	27
12	திருத்துநர்	3	81
13	மின்னியலாளர்	4	108
14	தோட்ட பணியாளர்	2	54
15	பாதுகாப்பு ஊழியர்கள்	4	108
16	காசாளர்	1	27
17	உயிர்க் காவலர்	2	54
18	இரவு கணக்காய்வாளர்	1	27
19	மத்திய நிலை ஊழியர்கள்	3	81
20	சலவை நிலைய பணியாளர்	3	81
மொத்தம்		**78**	**2,295**

மூலம்: நிபுணர்களின் கருத்துக்கள் மற்றும் கள தரவு சேகரிப்பு 2013 ஆகியவற்றின் அடிப்படையிலான கணிப்பீடுகள்

அட்டவணை 3.82

மத்திய மாகாணத்தின் சுற்றுலா துறையில் காணப்படுகின்ற தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள் 2014 - 2018

தொழில் ரீதியான மட்டம்	2014	2015	2016	2017	2018
முகாமைத்தவ மட்டம்	344	380	417	459	505
முகாமைத்துவம் அல்லாத மட்டம்	1,951	2,145	2,361	2,597	2,857
மொத்தம்	**2,295**	**2,525**	**2,778**	**3,056**	**3,362**

மூலம்: மதிப்பீடுகள்

சுற்றுலா துறையில் காணப்படுகின்ற தொழிலாளர்களுக்கான தேவைப்பாடுகள் தொடர்பான மதிப்பீடு 2014 - 2018

மேலேயுள்ள பகுப்பாய்வின் மூலமான அனைத்து உண்மைகள் மற்றும் எண்ணிக்கைகளை கருத்திற்கொண்டு, மத்திய மாகாணத்தின் சுற்றுலா துறையிற்கான மனிதவள தேவைகள் தொடர்பான எதிர்வுகூறலினை அட்டவணை 3.81 இல் வழங்க முடிந்துள்ளது. முகமைத்துவ மற்றும் முகமைத்துவம் அல்லாத தொழில்களுக்கு இடையிலான விகிதம் 15:85 என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் வளர்ச்சி வீதமானது 10% என கணக்கிடப்பட்டும் உள்ளது. அதன்படி, 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்குதியில் மத்திய மாகாணத்திற்கான மேலதிக தொழிற் தேவைகள் பற்றிய முன்னறிவிப்பானது அட்டவணை 3.82 இல் தரப்பட்டுள்ளது.

3.9 குடிசை கைத்தொழிற் துறை

3.9.1 பின்னணி

குடிசை மற்றும் சிறு கைத்தொழில் நிறுவகங்கள் ஓர் உப துறை நிறுவகங்களாக மொத்த தேசிய உற்பத்தி அத்துடன் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகியவற்றிற்கு கணிசமான பங்களிப்புக்களை வழங்குகின்றது. 2011 ஆம் ஆண்டில் இத்துறையானது 7% வளர்ச்சியினை கொண்டிருந்தது. குறைந்த ஆரம்ப மூலதனம், நவீனமயப்படுத்தாமை, வீடுகளில் மேற்கொள்ளல், எளிய கருவிகள் மற்றும் உபகரணங்கள், உள்ளூரில் கிடைக்கும் திறன்கள் ஆகியன இந்த துறையின் முக்கிய இயல்புகளாக விளங்குகின்றன. இருப்பினும், இத் துறையானது குடும்ப பொருளாதாரத்திலும் அத்துடன் குறிப்பாக பொருளாதார ரீதியில் பின்தங்கிய குடும்பங்களைக் கொண்ட பிரதேசங்களின் அபிவிருத்தியிலும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் தேசிய அருங்கலைகள் பேரவையானது (NCC) பன் புல் மற்றும் நாணற் புல், மரம் செதுக்குதல், மரம் சார்ந்த பொருட்கள், பித்தளை மற்றும் வெள்ளி சார்ந்த கைவினைப் பொருட்கள், நகை, மூங்கில் மற்றும் பிரம்பு சார்ந்த பொருட்கள், பரிசுப் பொருட்கள்/ அலங்கார பொருட்கள், கித்துல் சார்ந்த பொருட்கள், பனை சார்ந்த பொருட்கள், தென்னை சார்ந்த

பொருட்கள், தோல் மற்றும் காலணி, களிமண் சார்ந்த பொருட்கள், உணவு பதப்படுத்துதல், மென்மையான பொம்மைகள், அழகுக் கலை, இறப்பர் சார்ந்த பொருட்கள், ஆடை தயாரித்தல், சில்லறை விற்பனை கடைகள், இரசாயனம் சார்ந்த பொருட்கள், காகிதம் சார்ந்த பொருட்கள், கல் செதுக்குதல், இலத்திரனியல் ஆகியனவற்றை உள்ளடக்கியதாக நாட்டில் 19 கைத்தொழிற் குழுக்களை அடையாளம் கண்டுள்ளது. இவ் அத்தியாயத்தில், நாம் மேலே கூறப்பட்டுள்ள பாகுபாட்டின் அடிப்படையில் மாகாணத்திலுள்ள குடிசை மற்றும் சிறு கைத்தொழில் நிறுவகங்கள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளோம்.

மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குடிசை கைத்தொழிற் துறையின் பங்களிப்பு தொடர்பான விபரங்கள் அட்டவணை 3.83 இல் காட்டப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆண்டு வரையான காலப்பகுதியில் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குடிசை கைத்தொழிற் துறையின் பங்களிப்பானது தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்துள்ளது என்பதனை காணக்கூடியதாகவுள்ளது. மேல் மற்றும் வடமேல் ஆகிய மாகாணங்களில் இத்துறையின் பங்களிப்பானது மற்றைய அனைத்து மாகாணங்களையும் விட மிக அதிகமாக காணப்படுகின்றது. இந்த புள்ளிவிவரங்கள் மாகாணத்திலுள்ள குடிசை மற்றும் சிறு கைத்தொழிற் துறையின் பொருளாதார முக்கியத்துவத்தினை புரிந்து கொள்ள உதவும்.

அட்டவணை 3.83

மாகாணத்திற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குடிசைக் கைத்தொழிற் துறையின் பங்களிப்பு (2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை)

(ரூபா. மில்லியன்)

ஆண்டு	மாகாணம்								
	மேல் மாகாணம்	மத்திய மாகாணம்	தென் மாகாணம்	வடமாகாணம்	கிழக்கு மாகாணம்	வட மேல் மாகாணம்	வட மத்திய மாகாணம்	ஊவா மாகாணம்	ப்பிரகமுவ மாகாணம்
2006	9,521	3,220	2,265	690	2,544	6,785	4,232	972	672
2007	10,732	3,459	2,599	606	2,599	8,466	4,484	1,131	811
2008	11,751	3,989	2,806	665	2,909	9,123	4,624	1,179	1,612
2009	12,407	4,209	3,296	818	3,097	10,983	4,924	1,254	1,187

2010	13,996	4,508	3,616	1,066	3,476	12,054	5,392	1,408	1,373
2011	16,242	5,177	4,505	1,413	3,590	13,410	6,191	1,816	1,594

மூலம்: மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி (2006 தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையானது)

3.9.2 மாகாணத்திலுள்ள குடிசை கைத்தொழிற் துறை தொடர்பான விபரங்கள்

மாகாணத்தில் உள்ள குடிசை மற்றும் சிறு கைத்தொழிற் துறை நிறுவகங்கள் தொடர்பான தரவுகள் அட்டவணை 3.84 இல் காட்டப்பட்டுள்ளது. அட்டவணையில் தரப்பட்டுள்ள தரவுகள் பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் மற்றும் ஏனைய அரச அமைப்புகளிடமிருந்தும் சேகரிக்ப்பட்டுள்ளன. அட்டவணையின் பிரகாரம், அடையாளம் காணப்பட்டுள்ள 23 குடிசை மற்றும் சிறு கைத்தொழிற் துறைசார் நிறுவகங்கள் அல்லது உற்பத்தி அலகுகளின் மொத்த எண்ணிக்கையானது 4,389 ஆகும். அதிகூடிய எண்ணிக்கையான உற்பத்தி அலகுகளில் 885 உணவு பொருட்கள் மற்றும் உணவு பதனிடல் அலகுகள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து மரம் செதுக்குதல் மற்றும் தச்சு வேலை (313), வாசனைத் திரவியங்கள் பதனிடுதல் மற்றும் பொதிசெய்தல் (308) மற்றும் நகைகள் தயாரித்தல் (302) தொடர்பான அலகுகள் காணப்படுகின்றன. கண்டி மாவட்டத்தில் அதிகூடிய எண்ணிக்கையான உற்பத்தி அலகுகள் (1,819) காணப்படுவதுடன் அதற்கு அடுத்தபடியாக மாத்தளை (855) மற்றும் நுவரெலியா (815) மாவட்டங்கள் காணப்படுகின்றன.

அட்டவணை 3.84

மத்திய மாகாணத்தில் உள்ள குடிசை கைத்தொழில் மற்றும் ஏனைய சிறிய அளவிலான கைத்தொழில்கள்

தொடர் இல	குடிசைக் கைத்தொழிற் துறை நிறுவகங்கள்	கண்டி	மாத்தளை	நுவரெலியா	மொத்தம்
1	வாசனைத் திரவியங்கள் பதனிடுதல் மற்றும் பொதியிடல்	160	78	70	308
2	பாற் பொருட்கள்	22	36	15	73
3	உணவு பொருட்கள் மற்றும் பதனிடுதல்	401	254	230	885

4	சிகை அலங்காரம்/ அழகுக் கலை	120	57	35	212
5	சாம்பிராணி தயாரித்தல்	21	12	40	73
6	தேயிலை பொதியிடல்	62	23	90	175
7	காளான் வளர்ப்பு மற்றும் பொதியிடல்	120	67	50	237
8	அரைக்கும் ஆலைகள்	62	45	25	132
9	மரம் செதுக்குதல் மற்றும் தச்சு வேலை	192	93	28	313
10	தோல் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள்	33	07	03	43
11	புகைப்படம் எடுத்தல் மற்றும் ஸ்டுடியோ	22	15	12	49
12	மர மற்றும் பழமரச் செய்கை	64	33	35	132
13	கோழி பண்ணை மற்றும் விலங்கு வேளாண்மை	90	08	08	106
14	சவர்க்காரம் மற்றும் சலவைத் தூள்	07	04	03	14
15	தீ குச்சிகள் மற்றும் பட்டாசுகள்	21	05	-	26
16	பீங்கான் தொழில்	03	02	-	05
17	தனியார் சுகாதார பராமரிப்பு மையம்	22	12	08	42
18	அணிகலன்கள்	256	30	16	302
19	களிமண் சார்ந்த பொருட்கள்	45	20	12	77
20	கொல்லர்	36	22	10	68
21	அலங்கார மலர்	60	32	125	217
	மொத்தம்	**1,819**	**855**	**815**	**4,389**

மூலம்: பிரதேச செயலாளர் பிரிவுகளின் தரவுத் தளங்கள் மற்றும் கள தரவு சேகரிப்பு, 2013

அட்டவணைகள் 3.85, 3.86 மற்றும் 3.87 ஆகியனவற்றில் மாகாணத்திலுள்ள ஒவ்வொரு உப துறையிற்குமான மாவட்ட ரீதியில் மதிப்பீடு செய்யப்பட்ட தொழிலாளர்கள் தொடர்பான விபரங்கள் தரப்பட்டுள்ளன. இங்கே, மதிப்பீடு செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையானது வருடாந்தம் கைத்தொழிற் துறையில் 5%

வளர்ச்சி வீதமானது ஏற்படுகின்றது என அனுமானித்து கணக்கிடப்படுகின்றது என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும். 2018 ஆம் ஆண்டிளவில், வாசனை திரவியங்கள் பதனிடுதல் மற்றும் பொதிசெய்தலிற்கு மதிப்பீடு செய்யப்பட்ட தொழிலாளர்களில் அதிகூடிய எண்ணிக்கையானோர் தேவைப்படுவதுடன் இதற்கு அடுத்தபடியாக நகை பொருட்கள், மரம் செதுக்குதல் மற்றும் தச்சுத் தொழில் ஆகிய துறைகள் காணப்படுகின்றன. இந்த நிலைமையானது கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களிற்கு பொதுவானதாக உள்ளது. நுவரெலியா மாவட்டத்தில், உணவு உற்பத்தி மற்றும் பதனிடுதலிற்கு மதிப்பீடு செய்யப்பட்ட தொழிலாளர்களில் அதிகூடிய எண்ணிக்கையானோர் தேவைப்படுவதுடன் அதனைத் தொடர்ந்து தேயிலை பொதிசெய்தல் மற்றும் அலங்கார மலர் உற்பத்தி என்பன காணப்படுகின்றன.

அட்டவணை 3.85

கண்டி மாவட்டத்தில் காணப்படுகின்ற குடிசைக் கைத்தொழிற்துறை நிறுவகங்களில் உள்ள தொழிலாளர்கள் தொடர்பான மதிப்பீடு

குடிசைக் கைத்தொழிற் துறை நிறுவகங்கள்	நிறுவகங்களின் எண்ணிக்கை	உற்பத்தி அலகு ஒன்றுக்கான	மொத்த தொழிலாளர்களி	தொழிலாளர்கள் தொடர்பான மதிப்பீடு குறிப்பு: மேலதிக என்பது மேலதிகமானவை									
				2014	மேலதிக	2015	மேலதிக	2016	மேலதிக	2017	மேலதிக	2018	மேலதிக
வாசனைத் திரவியங்கள் பதனிடுதல் மற்றும் பொதியிடல்	160	2	320	336	16	354	18	371	17	389	18	408	19
பாற் பொருட்கள்	22	3	66	69	3	71	2	75	4	79	4	83	4
உணவு பொருட்கள் மற்றும் பதனிடுதல்	401	2	802	842	40	884	42	928	44	974	46	1023	48
சிகை	120	2	240	252	12	265	13	278	13	292	14	307	15

அலங்காரம்/ அழகுக் கலை													
சாம்பிராணி தயாரித்தல்	21	2	42	44	2	46	2	48	2	50	2	52	2
தேயிலை பொதியிடல்	62	2	124	130	6	136	6	143	7	150	7	157	7
காளான் வளர்ப்பு மற்றும் பொதியிடல்	120	2	240	252	12	265	13	278	13	292	14	307	15
அரைக்கும் ஆலைகள்	62	2	124	130	6	137	7	144	7	151	7	159	8
மரம் செதுக்குதல் மற்றும் தச்சு வேலை	192	3	576	605	29	635	30	667	32	700	33	735	35
தோல் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள்	33	3	99	104	5	109	5	114	5	120	6	126	6
புகைப்படம் எடுத்தல் மற்றும் ஸ்டூடியோ	22	2	44	46	2	48	2	50	2	52	2	55	3
மர மற்றும் பழமரச் செய்கை	64	2	128	134	6	141	7	148	7	155	7	163	8
கோழி பண்ணை மற்றும் விலங்கு வேளாண்மை	90	2	180	189	9	198	9	208	10	218	10	229	11
சவர்க்காரம் மற்றும் சலவைத் தூள்	07	2	14	15	1	16	1	17	1	18	1	19	1
தீ குச்சிகள் மற்றும்	21	2	42	44	2	46	2	48	2	50	2	52	2

பட்டாசுகள்													
பீங்கான் தொழில்	03	3	9	9	0	10	1	10	0	11	1	12	1
தனியார் சுகாதார பராமரிப்பு மையம்	22	4	88	92	4	97	5	102	5	107	5	112	5
அணிகலன்கள்	256	3	768	806	38	846	40	888	42	932	44	979	47
களிமண் சார்ந்த பொருட்கள்	45	2	90	94	4	99	5	104	5	109	5	114	5
கொல்லர்	36	2	72	76	4	80	4	84		88	4	92	4
அலங்கார மலர்	60	2	120	126	6	132	6	139	7	146	7	153	7

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

அட்டவணை 3.86

மாத்தளை மாவட்டத்தில் காணப்படுகின்ற குடிசைக் கைத்தொழிற்துறை நிறுவகங்களில் உள்ள தொழிலாளர்கள் தொடர்பான மதிப்பீடு

குடிசைக் கைத்தொழிற் துறை நிறுவகங்கள்	நிறுவகங்களின் எண்ணிக்கை	உற்பத்தி அலகு ஒன்றுக்கான தொழிலாளர்களின் எண்ணிக்கை	மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை (2013)	தொழிலாளர்கள் தொடர்பான மதிப்பீடு									
				2014	மேலதிகமானவை	2015	மேலதிகமானவை	2016	மேலதிகமானவை	2017	மேலதிகமானவை	2018	மேலதிகமானவை
வாசனைத் திரவியங்கள் பதனிடுதல் மற்றும் பொதியிடல்	78	2	156	164	8	172	8	181	9	190	9	199	9
பாற் பொருட்கள்	36	3	108	113	5	119	6	125	6	131	6	138	7
உணவு பொருட்கள் மற்றும் பதனிடுதல்	254	2	508	533	25	560	27	588	28	617	29	648	31
சிகை அலங்காரம்/ அழகுக் கலை	57	2	114	120	6	126	6	132	6	139	7	146	7
சாம்பிராணி	12	2	24	25	1	26	1	27	1	28	1	29	1

தயாரித்தல்													
தேயிலை பொதியிடல்	23	2	46	48	2	50	2	52	2	55	3	58	3
காளான் வளர்ப்பு மற்றும் பொதியிடல்	67	2	134	141	7	148	7	155	7	163	8	171	8
அரைக்கும் ஆலைகள்	45	2	90	94	4	99	5	104	5	109	5	114	5
மரம் செதுக்குதல் மற்றும் தச்சு வேலை	93	3	186	195	9	205	10	215	10	226	11	237	11
தோல் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள்	57	3	171	188	17	207	19	228	21	250	23	275	25
புகைப்படம் எடுத்தல் மற்றும் ஸ்டுடியோ	15	2	30	31	1	33	2	35	2	37	2	39	2
மர மற்றும் பழமரச் செய்கை	33	2	66	69	3	72	3	76	4	80	4	84	4
கோழி பண்ணை மற்றும் விலங்கு வேளாண்மை	08	2	16	17	1	18	1	19	1	20	1	21	1
சவர்க்காரம் மற்றும் சலவைத் தூள்	04	2	08	08	0	08	0	09	1	10	1	10	0
தீ குச்சிகள் மற்றும் பட்டாசுகள்	05	2	10	10	0	11	1	12	1	13	1	14	1
பீங்கான் தொழில்	02	3	06	06	0	06	0	07	1	07	0	7	0
தனியார் சுகாதார பராமரிப்பு மையம்	12	4	48	50	2	52	2	55	3	58	3	61	3
அணிகலன்கள்	30	3	180	189	9	198	9	208	10	218	10	229	11
களிமண் சார்ந்த பொருட்கள்	20	2	40	42	2	44	2	46	2	48	2	50	2
கொல்லர்	22	2	44	46	2	48	2	50	2	52	2	54	2
அலங்கார மலர்	32	2	64	67	3	70	3	73	3	76	3	79	3

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

அட்டவணை 3.87

நுவரெலியா மாவட்டத்தில் காணப்படுகின்ற குடிசைக் கைத்தொழிற்துறை நிறுவகங்களில் உள்ள தொழிலாளர்கள் தொடர்பான மதிப்பீடு

குடிசைக் கைத்தொழிற் துறை நிறுவகங்கள்	நிறுவகங்களின் எண்ணிக்கை	உற்பத்தி அலகு ஒன்றுக்கான தொழிலாளர்களின் எண்ணிக்கை	மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை (2013)	தொழிலாளர்கள் தொடர்பான மதிப்பீடு									
				2014	மேலதிகமானவை	2015	மேலதிகமானவை	2016	மேலதிகமானவை	2017	மேலதிகமானவை	2018	மேலதிகமானவை
வாசனைத் திரவியங்கள் பதனிடுதல் மற்றும் பொதியிடல்	70	2	140	147	7	154	7	162	8	170	8	178	8
பாற் பொருட்கள்	15	3	45	47	2	49	2	51	2	54	3	57	3
உணவு பொருட்கள் மற்றும் பதனிடுதல்	230	2	460	483	23	507	24	532	25	558	26	584	26
சிகை அலங்காரம்/ அழகுக் கலை	35	2	70	73	3	77	4	81	4	85	4	89	4
சாம்பிராணி தயாரித்தல்	40	2	80	84	4	88	4	92	4	97	5	102	5
தேயிலை பொதியிடல்	90	2	180	189	9	198	9	208	10	218	10	229	11
காளான் வளர்ப்பு மற்றும் பொதியிடல்	50	2	100	105	5	110	5	115	5	121	6	127	6
அரைக்கும் ஆலைகள்	25	2	50	52	2	55	3	58	3	61	3	64	3
மரம் செதுக்குதல் மற்றும் தச்சு	28	3	84	88	4	92	4	97	5	102	5	107	5

வேலை													
தோல் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள்	03	3	09	9	0	10	1	10	0	11	1	12	1
புகைப்படம் எடுத்தல் மற்றும் ஸ்டூடியோ	12	2	24	25	1	26	1	27	1	28	1	30	1
மர மற்றும் பழமரச் செய்கை	35	2	70	73	3	77	4	81	4	85	4	89	4
கோழி பண்ணை மற்றும் விலங்கு வேளாண்மை	08	2	16	17	1	18	1	19	1	20	1	21	1
சவர்க்காரம் மற்றும் சலவைத் தூள்	08	4	32	34	2	36	2	38	2	40	2	42	2
தீ குச்சிகள் மற்றும் பட்டாசுகள்	16	3	48	50	2	52	2	54	2	56	2	58	2
பீங்கான் தொழில்	12	2	24	25	1	26	1	27	1	28	1	29	1
தனியார் சுகாதார பராமரிப்பு மையம்	10	2	20	21	1	22	1	23	1	24	1	25	1
அணிகலன்கள்	125	2	150	157	7	165	8	173	8	182	9	191	9

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

3.9.3 தொழிலாளர்களுக்கான சராசரி வருடாந்த தேவைப்பாடுகள்

அட்டவணை 3.88 இல் மத்திய மாகாண குடிசைக் கைத்தொழிற் துறை மற்றும் தனிப்பட்ட சேவைகள் துறை ஆகியவற்றிற்கான சராசரி வருடாந்த

தொழிலாளர்களுக்கான தேவைகள் தொடர்பான விபரங்கள் தரப்பட்டுள்ளன. குடிசைக் கைத்தொழிற் துறை நிறுவகங்களில் நிலவுகின்ற மொத்த வருடாந்த தொழிலாளர்களுக்கான தேவையானது 425 ஆகும். உணவு பதனிடுதல், நகை தயாரிப்பு, மரம் செதுக்குதல் மற்றும் தச்சு வேலை, காளான் உற்பத்தி, முடி அலங்காரம் மற்றும் அழகுக் கலை, அரைக்கும் ஆலை, அலங்கார மலர்ச் செய்கை, மர மற்றும் பழமர செய்கை, பால் உற்பத்தி மற்றும் தனியார் மருத்துவ பராமரிப்பு வழங்கல் என்பன மேலேயுள்ள வேலைவாய்ப்புகளில் அதிகமாக உள்ளடங்குகின்றன.

அட்டவணை 3.88

மாகாணத்தில் காணப்படுகின்ற குடிசைக் கைத்தொழிற்துறை நிறுவகங்களில் உள்ள தொழிலாளர்கள் தொடர்பான மதிப்பீடு

குடிசைக் கைத்தொழிற்துறை நிறுவகங்கள்	சராசரி வருடாந்த தொழிலாளர்களுக்கான தேவைகள் (தொழிலாளர்களின் எண்ணிக்கை)
வாசனைத் திரவியங்கள் பதனிடுதல் மற்றும் பொதியிடல்	35
பாற் பொருட்கள்	13
உணவு பொருட்கள் மற்றும் பதனிடுதல்	97
சிகை அலங்காரம்/ அழகுக் கலை	23
சாம்பிராணி தயாரித்தல்	07
தேயிலை பொதியிடல்	20
காளான் வளர்ப்பு மற்றும் பொதியிடல்	27
அரைக்கும் ஆலைகள்	15
மரம் செதுக்குதல் மற்றும் தச்சு வேலை	47
தோல் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள்	07
புகைப்படம் எடுத்தல் மற்றும் ஸ்டூடியோ	05
மர மற்றும் பழமரச் செய்கை	15
கோழி பண்ணை மற்றும் விலங்கு வேளாண்மை	12
சவர்க்காரம் மற்றும் சலவைத் தூள்	01
தீ குச்சிகள் மற்றும் பட்டாசுகள்	03
பீங்கான் தொழில்	01
தனியார் சுகாதார பராமரிப்பு மையம்	10
அணிகலன்கள்	54
களிமண் சார்ந்த பொருட்கள்	08

கொல்லர்	07
அலங்கார மலர்	18
மொத்தம்	425

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013

3.10 சாரம்சம்

இவ் அத்தியாயத்தில் மாகாணத்திலுள்ள முக்கிய பொருளாதார துறைகளாக பின்வரும் துறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன அவையாவன: கட்டுமான துறை, இலகு பொறியியல் துறை, தன்னியக்க இயந்திரங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புத் துறை, வீட்டு மின் உபகரணங்கள் பழுதுபர்த்தல் சேவைகள், தகவல் மற்றும் தொடர்பாடல் கைத்தொழிற் துறை, அச்சிடுதல் மற்றும் பிரசுரித்தல் கைத்தொழிற் துறை, ஆடைகள் மற்றும் தைத்த ஆடைக் கைத்தொழிற் துறை, ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறை மற்றும் குடிசைக் கைத் தொழிற்துறை என்பனவாகும். துறைசார் அறிக்கைகளில் நிறுவகங்களின் எண்ணிக்கை, அவற்றின் உற்பத்தி, எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்கள், தொழில்வாய்ப்புகள், எதிர்கால தொழில்வாய்ப்பு சந்தர்ப்பங்கள், தொழில்கள்/ தொழிற் பிரிவுகளிற்கு அவசியமான பயிற்சி தேவைகள் ஆகியவை பற்றிய தகவல்களை தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. கட்டுமானம், ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறை, இலகு பொறியியல், தன்னியக்க இயந்திரவியல் துறை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறை, அச்சிடுதல் மற்றும் பிரசுரித்தல் துறை ஆகியன மாகாணத்தில் வேகமாக வளர்ந்து வரும் துறைகளாக காணப்படுகிறன. மேலும், சில குடிசைக் கைத்தொழில்கள், விசேடமாக உணவு மற்றும் பானங்கள், தனிநபர் சேவைகள் என்பனவும் வளர்ச்சிக்கும் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் கணிசமானளவு பங்களிப்புக்களை வழங்கிவருகின்றன. சமீபத்திய தசாப்தங்களில் வளர்ச்சி வீதங்கள் குறைவடைந்து காணப்படுகின்ற போதிலும், ஆடை மற்றும் தைத்த ஆடைக் கைத்தொழிற் துறையானது இம் மாகாணத்தில் தொழில்வாய்ப்புக்களை உருவாக்குகின்ற ஓர் பிரதான துறையாக காணப்படுகின்றது. இவ் அத்தியாயத்தில் உரிய துறைசார்

அறிக்கைகளின் கீழ் வெளிநாட்டு சந்தைகளிற்கு தொழிலாளர்களின் சாத்தியமான வழங்கல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. துறைசார் அறிக்கைகளில் ஓர் பாரிய எண்ணிக்கையான தொழில்களுக்கு அவசியமான பயிற்சி தேவைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அத்தியாயம் நான்கு

மத்திய மாகாணத்தின்

தொழிலாளர் சந்தைக்கு திறன்சார் மனிதவளங்களை வழங்குதல்

4.0 கண்ணோட்டம்

இந்த அத்தியாயத்தில் மத்திய மாகாணத்தின் தொழிலாளர் சந்தைக்கு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களை வழங்குதல் தொடர்பாக விபரிக்கப்படுகின்றது. இவ் அத்தியாயத்தின், பிரிவு 4.1 இல் மத்திய மாகாணத்தில் உள்ள, தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (TVET) பாடநெறிகளை கற்கக்கூடிய மாணவர்களின் (இளைஞர்கள்) எண்ணிக்கை தொடர்பாக விளக்கமளிக்கப்படுகின்றது. பகுதி 4.2 ஆனது மத்திய மாகாணத்திலும் மற்றும் மூன்று மாவட்டங்களிலும் காணப்படுகின்ற பயிற்சிகளை வழங்கும் நிறுவகங்கள் மற்றும் பயிற்சிகள் வகைகளின் அடிப்படையிலான பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் என்பவை தொடர்பான தகவல்களை வழங்குகின்றது. பிரிவு 4.3 ஆனது மாவட்ட மற்றும் மாகாண ரீதியாக தொழிற் கல்வி வேலைத் திட்டங்களிற்காக பதிவு செய்துள்ள மாணவர்களின் மதிப்பிப்பட்ட எண்ணிக்கை மற்றும் பாடநெறிகளிளை பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை என்பன தொடர்பான தகவல்களை வழங்குகின்றது. மேலும், மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற திறன்சார் தொழிலாளர்களுக்கான கேள்வி மற்றும் வழங்கல் என்பவற்றிற்கு இடையிலான இடைவெளி தொடர்பாகவும் இப்பிரிவில் விவாதிக்கப்பட்டுள்ளது. பிரிவு 4.4 இல், மாகாணத்தில் காணப்படுகின்ற பயிற்சி வழங்குநர்களின் நிறுவக கட்டமைப்புகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் என்பன தொடர்பாக விவாதிக்கப்பட்டுள்ளது. பிரிவு 4.5 ஆனது மத்திய மாகாணத்தில் தொழிற் கல்வியினை நிறைவு செய்துள்ள நபர்கள் தொடர்பான

விபரங்கள் மற்றும் அவர்கள் சார்ந்த பிரச்சினைகள் என்பன தொடர்பாக விபரிக்கின்றது. பிரிவு 4.6 ஆனது தற்போது பயிற்சியினை பெற்றுக்கொண்டிருக்கும் பயிலுநர்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான தகவல்கள் என்பனவற்றினை வழங்குகின்றது. பிரிவு 4.7 ஆனது இவ் அத்தியாயம் தொடர்பான சுருக்கமான மீளாய்வு ஒன்றினை வழங்குகின்றது.

4.1 தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (TVET) முறைமையின் கீழ் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை

இந்த பிரிவானது மத்திய மாகாணத்தில் உள்ள மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில் பயிற்சியினை மேற்கொள்ளக்கூடிய நபர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை வழங்குகின்றது. அட்டவணை 4.1 ஆனது மாகாணத்தில் தொழிற் கல்வி மற்றும் பயிற்சியினை மேற்கொள்ளக்கூடிய இளைஞர்களின் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கையினை வழங்குகின்றது. இந்த மதிப்பீடானது ஆண்டுதோறும் கல்வி முறைமையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை மற்றும் கல்வி முறைமையில் ஏற்படுகின்ற முன்னேற்றம் ஆகியவற்றினை அடிப்படையாக கொண்டுள்ளது.

மத்திய மாகாணம் ஆனது உண்மையில் நாட்டில் பல இனங்களை கொண்டுள்ள ஒரு பிரதேசமாக காணப்படுவதன் காரணமாக, மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி தேவைப்பாடுகளை/ அவை தொடர்பான கேள்விகளை எதிர்வு கூறுதல் மற்றும் அதற்கான துறைகளை அல்லது விடயங்களை இனங்காணுதல் என்பன தொடர்பாக மிக முக்கியமாக கவனம் செலுத்த வேண்டி உள்ள பிரதேசமாக காணப்படுகின்றது. மாகாணத்தின் கல்விசார் அடைவு மட்டம் உள்ளடங்கலாக, அத்தியாயம் 2 இல் தரப்பட்டுள்ள சமூக பொருளாதார பகுப்பாய்வில் விபரிக்கப்பட்டுள்ளதற்கு இணங்க, இவ் எதிர்வுகூறலுக்கான எல்லைகளை வேறுபடுத்தக்கூடியதாக உள்ளது. இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட கல்விசார் புள்ளிவிபரங்களின் அடிப்படையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் க. பொ. த.

(உ / த) இல் சித்தி பெற தவறிய மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியினை பெறத் தவறிய மாணவர்களின் எண்ணிக்கை ஆனது எம்மால் பெற்றுக்கொள்ளப்பட்டது. இத் தரவுகளில் இருந்து பல்கலைக்கழக நுழைவிற்கு தகுதி பெற்றுள்ள மாணவர்களில் 80% ஆனவர்கள் பல்கலைக்கழக கல்விக்கு தேர்ந்தெடுக்கப்படவில்லை என நாம் அனுமானித்துள்ளோம். மேலும் நாம், க. பொ. த (உ / த) இல் தகுதி பெற தவறிய மற்றும் க. பொ. த (உ / த) இல் தகுதி பெற்று பல்கலைக்கழக நுழைவுக்கான அனுமதியினை பெற்றுக்கொள்ள தவறிய 80% ஆன மாணவர்களின் எண்ணிக்கையின் கூட்டுத் தொகையில் இருந்து, உயர் கல்விக்கு தகுதி பெறாத மொத்த மாணவர்களின் எண்ணிக்கையினை பெற்றுக்கொண்டுள்ளோம். மேலே குறிப்பிடப்பட்ட மொத்த மாணவர்களில் 60% ஆன மாணவர்கள் உயர்கல்வி எதனையும் பெற்றுக் கொள்ளாமல் பாடசாலையில் இருந்து விலகியுள்ளனர் என எம்மால் அனுமானிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசாங்க மற்றும் தனியார் பாடசாலைகளில் புதிதாக அனுமதி பெறும் மாணவர்களில் 5 % ஆனவர்கள் தரம் 8 இல் இருந்து தரம் 11 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பாடசாலையில் இருந்து இடைவிலகிச் செல்கின்றனர் என எம்மால் உத்தேசிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற தவறிய மாணவர்கள், உயர் தரத்தில் தகுதி பெற தவறிய மாணவர்கள் மற்றும் பாடசாலையில் இருந்து இடைவிலகிய மாணவர்கள் ஆகியோரின் மொத்த எண்ணிக்கையானது தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) நிகழ்ச்சித்திட்டங்களிற்கு அடிப்படையான மாணவர் குழாமாக கருதப்படுகிறது.

அட்டவணை 4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கண்டி மாவட்டத்தில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் (VET) ஈடுபடக்கூடிய இளைஞர்களின் மொத்த எண்ணிக்கை ஆனது ஆண்டுக்கு ஏறத்தாழ13,794 ஆகும். மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் இவ் எண்ணிக்கையானது முறையே 4,370 மற்றும் 6,485 ஆகும். மத்திய மாகாணத்தில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி

நிகழ்ச்சித்திட்டங்களில் (VET) ஈடுபடக்கூடிய இளைஞர்களின் மொத்த எண்ணிக்கையானது சுமார் 25 ஆயிரம் ஆகும்.

அட்டவணை 4.1

மத்திய மாகாணத்தில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) துறையில் ஈடுபடக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை

தொ/ இலக்கம்	வகை	கண்டி	மாத்தளை	நுவரெலியா	மத்திய மாகாணம்
(1)	க.பொ.த (உ / த) தகுதி பெற தவறிய க.பொ.த (சா / த) மாணவர்கள்	7,501	2,660	4,795	**14,956**
(2)	பல்கலைக்கழக நுழைவுக்கு தகுதி பெற தவறிய க.பொ.த. (உ / த) மாணவர்கள்	6,106	1,775	2,115	**9,996**
(3)	க.பொ.த. (உ / த) இல் தகுதி பெற்ற பல்கலைக்கழகத்திற்கு தேர்வு செய்யப்படாத 80 % ஆன மாணவர்கள்	7,551	2,150	2,727	**12,428**
(4)	உயர்கல்விக்கு தகுதி பெறாத மாணவர்களின் மொத்த எண்ணிக்கை (1) + (2) + (3)	**21,158**	**6,585**	**9,637**	**37,380**

(5)	உயர்கல்வி எதனையும் பெற்றுக் கொள்ளாமல் பாடசாலையில் இருந்து இடை விலகிய 60 % ஆன மாணவர்கள்	12,695	3,951	5,782	22,428
(6)	அரசாங்க புதிதாக உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை	21,311	8,117	13,626	43,054
(7)	தனியார் பாடசாலைகளில் புதிதாக உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை (தனியார் பாடசாலை மற்றும் அரச பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான விகிதத்தினைஆறு (6) இனால் பெருக்குவதன் மூலம் பெறப்பட்டுள்ளது.)	669	255	428	1,352
(8)	தரம் 8 இல் இருந்து தரம் 11 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பாடசாலையில் இருந்து	*1,099*	*418*	*703*	*2,220*

	இடைவிலகிய மாணவர்களின் எண்ணிக்கை(5)+(6)(புதிதாக பாடசாலைகளுக்கு அனுமதி பெறும் மாணவர்களில் 5% ஆனவர்கள் தரம் 8 இல் இருந்து தரம் 11 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பாடசாலையில் இருந்து இடைவிலகிச் செல்கின்றனர் என உத்தேசிக்கப்பட்டுள்ளது)				
(9)	தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் (VET) ஈடுபடக்கூடிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை **(5) + (8)**	**13,794**	**4,370**	**6,485**	**24,648**

மூலம்: இலங்கை மத்திய வங்கியின், 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டது.

இவ்வாறு பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களை விடவும், ஒரு கணிசமான எண்ணிக்கையான இளைஞர்களும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி

நிகழ்ச்சித்திட்டங்களில் (VET) ஈடுபடுத்தக்கூடியவர்களாக உள்ளனர். மேலும் மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற 20 வயது முதல் 40 வயதிற்கு இடைப்பட்ட மக்கள் தொகையில் ஆகக்குறைந்தது ஒரு சதவீதத்தினர் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் (VET) இணைவார்களாயின், தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் (VET) ஈடுபடுத்தக்கூடிய நபர்களின் மொத்த எண்ணிக்கை ஆனது, மற்றொரு 10,000 இனால் அதிகரிக்கும்.

4.2 பயிற்சி நிறுவனங்களின் விபரங்கள்

பயிற்சி வழங்குநர்கள் தொடர்பான ஆய்வில், மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற ஏறத்தாழ 40% முதல் 50% வரையான பயிற்சி வழங்குநர்கள்/ நிறுவகங்கள் தனியார் துறை சார்ந்த நிறுவகங்களாக உள்ளமையினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதே பெறுபேற்றினை மத்திய மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஆயினும், தொழிற் பயிற்சி அதிகார சபை (VTA) மற்றும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி (DTET) திணைக்களம் போன்ற அரச நிறுவகங்கள் வெவ்வேறு இடங்களில் / பிரதேச செயலக பிரிவுகளில் பல பயிற்சி மையங்களை நிறுவுவதில் மத்திய மாகாணத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன. மூன்று மாவட்டங்களிலும் காணப்படுகின்ற பயிற்சி நிறுவனங்களினை அவற்றின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒப்பிடும்போது போது, கண்டி மாவட்டமானது மாகாணத்தில் காணப்படுகின்ற மொத்த நிறுவனங்களான 184 நிறுவனங்களில் 115 நிறுவனங்களினை கொண்டிருப்பதன் மூலம் ஆதிக்கம் செலுத்துகின்ற மாவட்டமாக காணப்படுகின்றது.

அட்டவணை 4.2 ஆனது மத்திய மாகாணத்தில் தொழில் கல்வி மற்றும் பயிற்சி வழங்கலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை தொடர்பான

தகவல்களை வழங்கியுள்ளது. மத்திய மாகாணத்தில் ஏறத்தாழ 185 பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் பல்வேறு தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களினை வழங்கி வருகின்றன. அவற்றில் 115 நிறுவகங்கள் (ஏறத்தாழ 62% ஆனவை) கண்டி மாவட்டத்திலும், 41 நிறுவகங்கள் (ஏறத்தாழ (22%) ஆனவை) மாத்தளை மாவட்டத்திலும் எஞ்சிய 29 நிறுவகங்கள் (ஏறத்தாழ 16% ஆனவை) நுவரெலியா மாவட்டத்திலும் உள்ளன. மாகாணத்தில் உள்ள 185 பயிற்சி வழங்கும் நிறுவனங்களில், 3% ஆனவை தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் (DTET) இனைச் சேர்ந்த தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் என்பவற்றிற்கு சொந்தமானவையாகவும், 4 % ஆனவை தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை (NAITA) இற்கு சொந்தமானவையாகவும், 11 % ஆனவை தொழிற் பயிற்சி அதிகார சபை (VTA) இற்கு சொந்தமானவையாகவும், 3% ஆனவை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் (NYSC) இற்கு சொந்தமானவையாகவும், 13% ஆனவை கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் தொழில் மேம்பாட்டு திணைக்களம் (DIDEP) இற்கு சொந்தமானவையாகவும், 17% ஆனவை ஏனைய அரச/ பொது நிறுவனங்களிற்கு சொந்தமானவையாகவும் 9% ஆனவை அரச சார்பற்ற அமைப்புக்கள் (NGO) இற்கு சொந்தமானவையாகவும் மற்றும் 39% ஆனவை தனியார் துறை பயிற்சி வழங்குநர்களிற்கு சொந்தமானவையாகவும் காணப்படுகின்றன. மத்தியமாகாணத்தில் உள்ள மொத்த பயிற்சி வழங்கும் நிறுவகங்களில் அரச சார்பற்ற மற்றும் தனியார் துறை பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் ஆகிய இரண்டும் 48% ஆன பங்களிப்பினை வழங்கியுள்ளன. எவ்வாறாயினும், தனியார் துறை மற்றும் அரச சார்பற்ற பயிற்சி வழங்கும் நிறுவகங்களின் செயற்பாடுகள் அரச பயிற்சி வழங்கும் நிறுவனங்களின் செயற்பாடுகளிலும் பார்க்க மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே காணப்படுகின்றது. மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது, தனியார் துறையினை சேர்ந்த பயிற்சி வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை ஆனது கண்டி மாவட்டத்தில் அதிகமாக காணப்படுகின்றது.

கண்டி மாவட்டத்தில் உள்ள மொத்த பயிற்சி வழங்கும் நிறுவகங்களான 115 உம் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன: 3% ஆனவை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் (DTET) இனைச் சேர்ந்த தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் என்பவற்றிற்கு சொந்தமானவையாகவும், 3% ஆனவை தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை (NAITA) இற்கு சொந்தமானவையாகவும், 7 % ஆனவை தொழிற் பயிற்சி அதிகார சபை (VTA) இற்கு சொந்தமானவையாகவும், 9 % ஆனவை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் (NYSC) இற்கு சொந்தமானவையாகவும், 2 % ஆனவை கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் தொழில் மேம்பாட்டு திணைக்களம் (DIDEP) இற்கு சொந்தமானவையாகவும், 21 % ஆனவை ஏனைய அரச நிறுவனங்களுக்கு சொந்தமானவையாகவும், 9% ஆனவை அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு சொந்தமானவையாகவும் மற்றும் 47% ஆனவை தனியார் துறை பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக்கு சொந்தமானவையாகவும் உள்ளன. அரச சார்பற்ற மற்றும் தனியார் துறை பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் ஆகிய இரண்டும் கண்டிமாவட்டத்தில் உள்ள மொத்த பயிற்சி வழங்கும் நிறுவனங்களில் 56% ஆக காணப்படுகின்றன.

30	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழில்நுட்பவியலாளர்	20	16	320	5	100	7	140
31	கணனி வரைபட வடிவமைப்பாளர்	20	10	200	5	100	5	100
32	கணனி வெளியீடு மற்றும் அச்சிடுதல்	20	4	80	3	60		
33	கணனி பிரயோக உதவியாளர்	20	14	280	6	120		
34	இணைய வடிவமைப்பாளர்	20	6	120	2	40		
35	வன் பொருள் தொழில்நுட்பவியலாளர்	20	10	200	3	60	1	20
36	வலையமைப்பு	20	5	100				

	தொழில்நுட்பவியலாளர்							
37	கணனி கற்கைகள்	20	7	140	1	20		
38	கணனி நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பு	20	2	40	1	20		
39	பல்லூடக இயக்குநர்	20	2	40				
40	மென் பொருள் தொழில்நுட்பம்	20	1	20				
41	கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கியல்	20	2	40				
	உப கூட்டுத் தொகை			**1580**		**520**		**260**
42	சுற்றுலா விடுதி முகாமைத்துவம் / இயக்குதல்	20	1	20	1	20		
43	உணவு விடுதி/ பரிமாறுபவர் குடிபான சேவைகள்	20	1	20				
44	சமையல்/ சமையற்கலை	20	5	100	1	20	2	40
45	அறை உதவியாளர்	20	1	20	1	20	2	40
46	பரிசாரகர்/	20	1	20	1	20	1	20
47	வெளிப்புற சமையற்காரர்	20			1	20		
48	தொல்பொருளியல் மற்றும் சுற்றுலா துறை	20	2	40				
49	வீட்டு பராமரிப்பு (சுற்றுலாதுறை)	20	3	60	2	40	1	20
50	சுற்றுலா தறை மற்றும் போக்குவரத்து விமான	20	1	20				

	சேவைகள்							
	உப கூட்டுத் தொகை			**300**		**140**		**120**
51	தையற் கலை/ தைத்தல்/ ஆடை தயாரித்தல்	15	9	135	3	45	3	45
52	பற்றிக் தொழில்நுட்பம்	15	1	15				
53	ஆடைகளில் பூ வேலை செய்தல்	15	4	60	3	45	1	15
54	திரைச்சீலைகள்	15	1	15	1	15		
55	வடிவமைப்பாளர்	15			1	15	2	30
56	ஒட்டு வேலை	15	1	15	1	15		
57	மணி கோர்ப்பவர்	15	1	15				
58	கைத்தொழிற்துறை தையல் இயந்திரம் இயக்குபவர்	15			1	15		
59	அலங்கார தையல்	15			1	15		
60	ஆடை தரக்கட்டுப்பாட்டாளர்	15					2	30
	உப கூட்டுத் தொகை			**255**		**165**		**120**
61	அழகுக்கலைஞர்	20	17	340	3	60	4	80
62	சிகை அலங்கரிப்பாளர்	20	12	240	3	60	3	60
63	வெதுப்புநர்	20	4	80	1	20		
64	பழங்கள் மற்றும் மரக்கறி பதனிடல்	20	1	20				
65	உணவுத் தொழில் நுட்பம்	20	1	20	1	20		
66	விவசாய/ பண்ணை முகாமைத்துவம்	20	3	60	3	60		
67	உற்பத்தி தொழில் நுட்பம்	20	1	20				

68	ஆபரண உற்பத்தியாளர்	20	2	40				
69	நவரத்தினம் வெட்டுபவர் மற்றும் பளபளப்பாக்குபவர்	20			1	20		
70	வேலை செய்வதற்கான அடிப்படை தகைமைகள்	20	1	20	2	40	2	40
71	வீட்டு பராமரிப்பு உதவியாளர்	50		50	3	150		
	உப கூட்டுத் தொகை			**890**		**430**		**180**
72	வரவேற்பாளர்/ முன் அலுவலக உதவியாளர்	50	1	30	1	50	1	50
73	தனிப்பட்ட உதவியாளர்/ செயலாளர் நடைமுறை	30	5	150	2	60	1	30
74	ஆரம்ப பாடசாலை ஆசிரியர் பயிற்சி	30	7	210			1	30
76	ஆங்கில தட்டச்சு	30			1	30		
77	தாதியியல்/ தாதி உதவியாளர்	20	4	120			2	40
78	மருந்தாளர்	30	1	20				
79	கணக்குகளை பேணுபவர்	20	1	20				
83	சந்தைப்படுத்தல், கணக்கியல் மற்றும் முகாமைத்துவம்	20	12	600	2	40	1	20
84	வனவியல்	20	2	40			2	40
85	உளவியல் மற்றும் ஆலோசனை வழங்குதல்	20	4	80				
86	வங்கி மற்றும் நிதித்துறை	20	2	40				

87	கூட்டுறவுத்துறை அபிவிருத்தி	20	2	40				
88	சமூக அபிவிருத்தி	20	1	20				
89	செயற்திட்ட ஆய்வு மற்றும் முகாமைத்துவம்	20	1	30				
90	கப்பற் பாதுகாப்பு தொடர்பான அறிவு	30	2	40				
91	தலைமைத்துவப்பண்பு மற்றும் ஆளுமை விருத்தி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்	20	2	60	2	40	3	60
92	தற் பாதுகாப்பு மற்றும் சமூக கடமைகள்	30	1	30				
	உப கூட்டுத் தொகை			**1530**		**220**		**270**
	மொத்த கூட்டுத் தொகை			**7070**		**2530**		**1650**

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) தரவுத்தளம் - மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற பதிவு செய்யப்பட்ட பயிற்சி வழங்குநர்கள் மற்றும் தேசிய தொழிற் தேர்ச்சித் தராதர (NVQ) அங்கீகாரம் பெற்ற பாடநெறிகள்.

4.5 பூர்த்தி செய்துள்ள பாடநெறிகளின் கணிக்கப்பட்ட பெறுமதி

அட்டவணை 4.8 ஆனது பயிற்சி திட்டங்களை நிறைவு செய்துள்ள மாணவர்களின் எண்ணிக்கையின் கணிக்கப்பட்ட பெறுமதி தொடர்பான தரவுகளை வழங்கியுள்ளது சில பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினை மாணவர்கள் நிறைவு செய்யும் வீதம் மிக உயர்வாக அதாவது 85 % இனை அண்மித்ததாக காணப்படுகின்ற போதும் நாம் 75 % ஆன நிறைவு வீதத்தினையே தனியார் துறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின்

குறைந்தளவான நிறைவு செய்யும் சதவீதமாக கருத்திற் கொண்டுள்ளோம். மத்திய மாகாணத்தில் தேசிய தொழிற் தேர்ச்சித் தராதரத்திற்கான (NVQ) மற்றும் தேசிய தொழிற் தேர்ச்சித் தராதரம் (NVQ) அல்லாத பாடநெறிகளினை பூர்த்தி செய்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 8,509 என மதிப்பிடப்பட்டுள்ளது. பயிற்சி திட்டங்களை நிறைவு செய்தவர்களில்: 20% ஆனவர்கள் கட்டுமான துறை சார்ந்த பயிற்சியினையும், 7% ஆனவர்கள் இலகு பொறியியல் துறை தொடர்பான பயிற்சியினையும், 8% ஆனவர்கள் தானியங்கி இயந்திர துறை சார்ந்த பயிற்சியினையும், 4% ஆனவர்கள் மின் உபகரணங்கள் பழுது பார்க்கும் துறை தொடர்பான பயிற்சியினையும், 21% ஆனவர்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறை தொடர்பான பயிற்சிகளையும், 5% ஆனவர்கள் ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான பயிற்சியினையும், 32% ஆனவர்கள் ஜவுளி மற்றும் ஆடைத் துறை தொடர்பான பயிற்சிகளினையும் 5% ஆனவர்கள் குடிசை கைத்தொழில் தொடர்பான பயிற்சிகளினையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

அட்டவணை 4.8

2013 ஆம் ஆண்டிற்கான கணிக்கப்பட்ட பதிவு செய்த மற்றும் பயிற்சியை நிறைவுசெய்த தேசிய தொழிற் தேர்ச்சித் தராதரம் (NVQ) அல்லாத மற்றும் தேசிய தொழிற் தேர்ச்சித் தராதரம் (NVQ) உள்ள மாணவர்களின்எண்ணிக்கை

மத்திய மாகாணம்.

தொ/ இல.	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பதிவு செய்த மாணவர்கள்	*பயிற்சியினை நிறைவு செய்தவர்கள்
1	மர கைவினைஞர் (தளபாடங்கள்	1050	788

தொ/ இல.	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பதிவு செய்த மாணவர்கள்	*பயிற்சியினை நிறைவு செய்தவர்கள்
	மற்றும் கட்டிடம்)		
2	கட்டுமான கைவினைஞர் / மேசன்	150	113
3	கட்டுமான உபகரணங்கள்இயக்குநர்	105	79
4	மின்னியலாளர்	360	270
5	கட்டுமான தொழில்நுட்பவியல்	30	23
6	வரைபடக்கலைஞர்	150	113
7	பிளம்பர் / குழாய் பொருத்துநர்	60	45
8	நில வடிவமைப்பாளர்	45	34
9	கட்டுமான தள மேற்பார்வையாளர்	100	75
10	கணிய அளவையியலாளர்	50	38
11	ஓட்டோ கட்	60	45
12	சிவில் பொறியியாளர்	105	79
13	வீட்டு மின்னிணைப்பாளர்	15	11
	உப கூட்டுத்தொகை	**2280**	**1710**
14	அலுமினிய வடிவமைப்பாளர்	120	90
15	காய்ச்சி இணைப்பவர்	270	203
16	பொறிவலர்	180	135
17	லேத்இயந்திரம் இயக்குபவர்	70	52
18	இலகு பொறியியல்	90	68

தொ/ இல.	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பதிவு செய்த மாணவர்கள்	*பயிற்சியினை நிறைவு செய்தவர்கள்
	உப கூட்டுத்தொகை	**765**	**574**
19	தானியங்கி இயந்திரம் பழுது பார்ப்பவர்	360	270
20	தானியங்கி இயந்திர தொழில்நுட்பம்	15	11
21	மோட்டார் சைக்கிள் திருத்துபவர்	120	90
22	முச்சக்கர வண்டி திருத்துபவர்	135	101
23	தானியங்கி இயந்திர மின்னியாளர்	135	101
24	மின் மோட்டார் முறுக்குபவர்	60	45
25	தானியங்கி இயந்திர வர்ணம் பூசுபவர்	15	11
26	விவசாய இயந்திரம் திருத்துபவர்	15	11
	உப கூட்டுத்தொகை	**855**	**641**
27	கைத் தொலைபேசி திருத்துபவர்	15	11
28	குளிர்சாதன பெட்டி மற்றும் வளிச்சீராக்கி திருத்துநர்	105	79
29	வானொலி, தொலைக்காட்சி, வீட்டு உபகரணங்கள் பழுது பார்ப்பவர்	225	169
	உப கூட்டுத்தொகை	**405**	**304**
30	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப	560	420

தொ/ இல.	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பதிவு செய்த மாணவர்கள்	*பயிற்சியினை நிறைவு செய்தவர்கள்
	தொழில்நுட்பவியலாளர்		
31	கணினி கிராபிக் வடிவமைப்பாளர்	400	300
32	கணனி வெளியீடு மற்றும் அச்சுத்துறை	140	105
33	கணினி பிரயோக உதவியாளர்	400	300
34	இணைய வலை வடிவமைப்பாளர்	160	120
35	கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர்	280	210
36	இணைய தொழில்நுட்பவியலாளர்	100	75
37	கணினி கற்கைகள்	160	120
38	கணனி செய்நிரலாக்கம்	60	45
39	பல்லூடக இயக்குநர்	40	30
40	மென்பொருள் தொழில்நுட்பம்	20	15
41	கணினி கணக்கியல்	40	30
	உப கூட்டுத்தொகை	**2360**	**1770**
42	ஹோட்டல் முகாமைத்துவம் / நிர்வாகம்	40	30
43	உணவகம் மற்றும் குடிபான சேவைகள்	20	15
44	சமையல்/ சமையற்கலை	160	120
45	அறை உதவியாளர்	80	60

தொ/ இல.	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பதிவு செய்த மாணவர்கள்	*பயிற்சியினை நிறைவு செய்தவர்கள்
46	பரிசாரகர்/ பரிமாறுபவர்	60	45
47	வெளியக சமையற்கார்ர்	20	15
48	தொல்பொருளியல் மற்றும் சுற்றுலா துறை	40	30
49	வீட்டுப் பராமரிப்பு (சுற்றுலா)	120	90
50	சுற்றுலா மற்றும் பயண விமான சேவை	20	15
	உப கூட்டுத்தொகை	**560**	**420**
51	தையற் கலை / தைத்தல் / ஆடை தயாரித்தல்	225	169
52	பற்றிக்	15	11
53	துணிகளில் கைவேலை செய்தல்	120	90
54	திரைச்சீலை தயாரிப்பு	30	23
55	வடிவமைப்புகளை உருவாக்குபவர்	45	34
56	ஒட்டுவேலை செய்பவர்	30	23
57	றேந்தை பின்னுபவர்	15	11
58	தொழில்துறை தையல் இயந்திரம் இயக்குபவர்	15	11
59	அலங்காரத் தையல்	15	11
60	தைத்த ஆடை தரக் கட்டுப்பாட்டாளர்	30	23

தொ/ இல.	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பதிவு செய்த மாணவர்கள்	*பயிற்சியினை நிறைவு செய்தவர்கள்
	உப கூட்டுத்தொகை	**540**	**405**
61	அழகுக்கலைஞர்	480	360
62	முடி ஒப்பனையாளர்	360	270
63	வெதுப்புநர்	100	75
64	பழம் மற்றும் காய்கறிகள் பதப்படுத்துநர்	20	15
65	உணவு தொழில்நுட்பம்	40	30
66	விவசாயம் / பண்ணை முகாமைத்துவம்	120	90
67	உற்பத்தி தொழில்நுட்பம்	20	15
68	நகை உற்பத்தியாளர்	40	30
69	நவரத்தினம் வெட்டுபவர் மற்றும் பளபளப்பாக்குபவர்	20	15
70	வேலைக்கான அடிப்படைத் திறன்கள்	100	75
71	வீட்டுப் பராமரிப்பு உதவியாளர்	200	150
	உப கூட்டுத்தொகை	**1500**	**1125**
72	வரவேற்பாளர் / முன் அலுவலகம்	130	98
73	தனிப்பட்ட உதவியாளர் / செயலக	240	180

தொ/ இல.	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பதிவு செய்த மாணவர்கள்	*பயிற்சியினை நிறைவு செய்தவர்கள்
	பயிற்சி		
74	பாலர் ஆசிரியர் பயிற்சி	240	180
76	தட்டச்சுஆங்கிலம்	30	23
77	தாதி / தாதிஉதவியாளர்	160	120
78	மருந்தாளர்	20	15
79	கணக்குகளை பேணுபவர்	20	15
83	சந்தைப்படுத்தல், கணக்கியல் மற்றும் முகாமைத்துவம்	660	495
84	வனவியல்	140	105
85	ஆலோசனை வழங்கல் மற்றும் உளவியல்	80	60
86	வங்கி மற்றும் நிதி	40	30
87	கூட்டுறவு அபிவிருத்தி	40	30
88	அபிவிருத்தி	20	15
89	திட்ட ஆய்வு மற்றும் முகாமைத்துவம்	30	23
90	கப்பல் பாதுகாப்பு விழிப்புணர்வு	40	30

தொ/ இல.	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பதிவு செய்த மாணவர்கள்	*பயிற்சியினை நிறைவு செய்தவர்கள்
91	தலைமைத்துவம் மற்றும் ஆளுமை வளர்ச்சி விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்	160	120
92	தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புகள்	30	23
	உப கூட்டுத்தொகை	**2080**	**1560**
	மொத்தம்	**11310**	**8509**

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) தரவுத் தளம் - மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற பதிவு செய்யப்பட்ட பயிற்சி வழங்குநர்கள் மற்றும் NVQ அங்கீகாரம் பெற்ற பாடநெறிகள்.

குறிப்பு: *பயிற்சிகளை நிறைவு செய்துள்ள நபர்களின் எண்ணிக்கையானது 75% நிறைவு வீதமாக பயன்படுத்தி கணக்கிடப்பட்டுள்ளது.

4.6 தற்போது காணப்படுகின்ற பயிற்சிக்கான பற்றாக்குறைகள் மற்றும் எதிர்கால பயிற்சித் தேவைப்பாடுகள்

அட்டவணை 4.9 ஆனது மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற தொழில்களிற்கான துறை ரீதியான ஆண்டுச் சராசரி கேள்விகள் மற்றும் வருடாந்த பயிற்சி வழங்கல்கள் தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளது. மதிப்பிப்பட்ட வருடாந்த சராசரி கேள்வியானது இவ் அறிக்கையின் அத்தியாயம் 4 இல் துறை ரீதியான அறிக்கைகளின் கீழ் தரப்பட்டுள்ளது. வருடாந்த சராசரி கேள்வியானது மாகாண

ரீதியான கேள்விகள் மற்றும் வெளிநாட்டு கேள்விகள் ஆகிய இரண்டு கேள்விகளையும் உள்ளடக்கி உள்ளது. பயிற்சிகளின் வழங்கலானது இரண்டு விதங்களாக கணிப்பிடப்பட்டுள்ளது, அவையாவன: (i). 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற்தேர்ச்சித் தராதர (NVQ) சான்றிதழ்கள், (ii). அட்டவணை 5.8 இல் தரப்பட்டுள்ளவாறான பயிற்சி நிறைவுகள் என்பனவாகும். தேசிய தொழிற் தராதர (NVQ) அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள பயிற்சிகளிற்கான கேள்விகள் மற்றும் வழங்கல்கள் என்வற்றிற்கு இடையிலான இடைவெளி தொடர்பான தரவுகள் அட்டவணை 4.9 இன் (A-B) நிரைகளிலும், பூர்த்தி செய்யப்பட்டுள்ள பயிற்சி நெறிகள் தொடர்பான கேள்விகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் தொடர்பான தரவுகள் அட்டவணை 4.9 இன் (A-C) நிரைகளிலும் தரப்பட்டுள்ளது. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) ஆனது அனைத்து தொழிற் கல்வி பயிற்சி பாடநெறிகளினையும் தேசிய தொழிற் தேர்ச்சித் தராதர (NVQ) அங்கீகாரம் அளிக்கப்பட்ட பாடநெறிகளாக மாற்றுவதன் ஊடாக வழங்கப்படும் பயிற்சிகளின் தரத்தினை முன்னேற்றுவதன் பொருட்டு தேசிய தொழிற் தேர்ச்சித் தராதர (NVQ) பயிற்சி பாடநெறிகளிற்கான கேள்விகள் மற்றும் வழங்கல்கள் ஆகியனவற்றிற்கு இடையிலான இடைவெளியானது மிகவும் முக்கியமானதாக உள்ளது.

4.6.1 கட்டுமான துறை

மத்திய மாகாணத்தில் கட்டுமான துறையில் காணப்படுகின்ற பல தொழிற் பிரிவுகளிற்கான கேள்விகளை ஒப்பிட்டு நோக்கும் போது பயிற்சி வழங்கலில் ஒரு பாரிய பற்றாக்குறை நிலவுகின்றமையினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மர கைவினைஞர் மற்றும் தச்சுத் தொழிலாளர்களிற்கான ஆண்டு ரீதியான கேள்வி 950 பேர் ஆக உள்ளது. எனினும், 2013 ஆம் ஆண்டில் 50 தேசிய தொழிற்தேர்ச்சித் தராதரத்திற்குரிய (NVQ) மர கைவினைஞர்களுக்கான சான்றிதழ்கள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. இதன் ஊடாக, மர கைவினைஞர்களிற்கான கேள்விகள் மற்றும் தேசிய தொழிற்தேர்ச்சித் தராதர (NVQ) பயிற்சி வழங்கல்களிற்கு இடையே ஒரு

பாரிய இடைவெளி காணப்படுகின்றமை தெளிவாகின்றது. எதிர்பார்க்கப்படுகின்ற பயிற்சிகளின் பூர்த்தியானது பயிற்சிகளின் வழங்கல் என எடுத்துக் கொள்ளப்படுமாயின், மேலும் மர கை வினைஞர்களிற்கான கேள்வி நிலவுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. பயிற்சி வழங்குநர்கள், பிரதானமாக DIDEP இன் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள், ஆண்டுதோறும் 788 நபர்களுக்கு பயிற்சிகளை வழங்கி வருகின்றன. தற்போதும் ஏறத்தாழ 160 மர கைவினைஞர்கள் மற்றும் தச்சர்கள் ஆகியோருக்கு அரச மற்றும் அரச சார்பற்ற பயிற்சி வழங்கும் நிறுவகங்களில் பயிற்சி வழங்கப்பட உள்ளது. மத்திய மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் இந்த வகையான பயிற்சிகளிற்கு கிடைக்கக்கூடிய வசதிகள் மேலும் விரிவாக்கப்பட வேண்டும். குறிப்பாக, தேசிய தொழிற்தேர்ச்சித் தராதர (NVQ) பயிற்சி வழங்கலானது ஒரு ஆண்டில் 900 மர கைவினைஞர்களுக்கு பயிற்சி வழங்கக் கூடியவாறு விரிவாக்கப்பட வேண்டும்.

மத்திய மாகாணத்தில் கட்டுமான கைவினைஞர்கள் மற்றும் மேசன் ஆகிய தொழில்களிற்கான ஆண்டு ரீதியான கேள்வி 1,050 பேர் ஆக உள்ளது. எனினும், 2013 ஆம் ஆண்டில் 07 தேசிய தொழிற் தேர்ச்சித் தராதர (NVQ) சான்றிதழ்கள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. மாகாணத்தில் கட்டுமான கைவினைஞர்கள் 1035 பேர்களுக்கான கேள்வி நிலவுகின்றது. எதிர்பார்க்கப்படுகின்ற பயிற்சிகளின் பூர்த்தியானது பயிற்சிகளின் வழங்கல் என எடுத்துக் கொள்ளப்படுமாயின், மாகாணத்தில் உள்ள பயிற்சி வழங்குநர்களால் 100 இற்கும் மிக சிறிதளவு அதிகமான நபர்களிற்கே அவசியமான திறன்களிற்கான பயிற்சிகளை வழங்கக் கூடியதாக இருக்கும். இதன் காரணமாக, இம் மாகாணத்திற்கான தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (TVET) ஆனது வருடாந்தம் 1000 கட்டுமான கைவினைஞர்களிற்கு தேசிய தொழிற்தேர்ச்சித் தராதர (NVQ) அங்கீகாரம் அளிக்கப்பட்ட பாடநெறிகளினை வழங்குவதற்கு உரிய வசதிகளை அதிகரிக்க வேண்டி உள்ளது. எனினும், இன்றைய இளைஞர்கள் பெரும்பாலும் இந்த வகையான பயிற்சிகளில் ஆர்வம் அற்றவர்களாக

காணப்படுவதாகவும் இவ்வாறான பயிற்சி நெறிகளிற்கு மாணவர்களை உள்வாங்குவது மிகவும் கடினமான விடயமாக காணப்படுவதாகவும் பெரும்பாலான பயிற்சி வழங்குநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். மாணவர்களை இவ்வாறான பயிற்சிகளை ஏற்றுக்கொள்ள வைப்பதன் பொருட்டு, தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி பயிற்சி (TVET) அமைப்பினை நெறிப்படுத்தும் அமைப்புக்கள், மற்றும் பயிற்சி வழங்குநர்கள் ஆகியோர், புதிய கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டி உள்ளது. பாடசாலையினை விட்டு வெளியேற உள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக இவ்வாறான பயிற்சிகள் மற்றும் திறன்கள் ஆகியவற்றினை மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமையினை உருவாக்கக்கூடியதாக இருக்கும்.

மேலும் இம் மாகாணத்தில் கட்டுமான உபகரணங்களை இயக்குபவர்கள், கனரக மற்றும் இலகு இயந்திரங்கள் ஆகிய இரண்டிற்குமான இயக்குநர்கள் ஆகியோருக்கான அதிகரித்த தேவைப்பாடு காணப்படுகின்றது. கட்டுமான உபகரணங்களை இயக்குபவர்களுக்கான கேள்விகளின் மதிப்பீடு செய்யப்பட்ட எண்ணிக்கை ஆனது 284 நபர்கள் ஆகும். 2013 ஆம் ஆண்டில் இத்துறையினருக்கான பயிற்சிகளின் பொருட்டு வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் எண்ணிக்கை ஆனது 60 ஆகும். மேலும் தேசிய தொழிற் தேர்ச்சி தராதர (NVQ) முறைமையானது சந்தையில் நிலவுகின்ற கேள்விகளிற்கு ஏற்ப தொழிலாளர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கு தவறியுள்ளது. எதிர்பார்க்கப்படுகின்ற பயிற்சிகளின் பூர்த்தியானது பயிற்சிகளின் வழங்கல் என எடுத்துக் கொள்ளப்படுமாயின், மாகாணத்தில் உள்ள பயிற்சி வழங்குநர்கள் 79 வரையான நபர்களுக்கு மட்டுமே கட்டுமான உபகரணங்களை இயக்குபவர்களிற்கான பயிற்சிகளை வழங்கியுள்ளனர். எனினும் சந்தையில் நிலவும் கேள்விகளை ஈடு செய்வதற்கு இன்னும் 205 நபர்களுக்கு பயிற்சியினை வழங்க வேண்டி உள்ளது.

மத்திய மாகாணத்தில் மேலதிகமாக 516 மின்னியலாளர்களுக்கான கேள்வி நிலவுகின்றது. இந்த கேள்வியானது உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கேள்விகளை உள்ளடக்கியுள்ளது. தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) முறைமையானது இம் மாகாணத்தில் ஆண்டு தோறும் 189 மின்னியலாளர்களுக்கான பயிற்சியினையே வழங்கி வருகின்றது. இதன் காரணமாக, மாகாணத்தின் தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) முறைமையானது வருடாந்தம் மேலும் 327 மின்னியலாளர்களுக்கான பயிற்சிகளை வழங்கக்கூடியவாறு விரிவாக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் எதிர்பார்க்கப்படுகின்ற பயிற்சிகளின் பூர்த்தியானது பயிற்சிகளின் வழங்கல் என எடுத்துக் கொள்ளப்படுமாயின், மாகாணத்தில் உள்ள அனைத்து பயிற்சி வழங்குநர்களும் 281 மின்னியலாளர்களுக்கு மட்டுமே பயிற்சியினை வழங்கியுள்ளனர். எனினும் சந்தையில் நிலவும் கேள்வியினை ஈடு செய்யும் பொருட்டு இன்னும் 235 மின்னியலாளர்கள் பயிற்சி வழங்கப்பட உள்ளனர்.

கட்டுமான தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சியினை பெறும் நபர்களுக்கான மேலதிக தேவை ஆண்டுக்கு ஏறத்தாழ 32 நபர்களாக காணப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில், இப்பயிற்சி தொடர்பாக எந்த ஒரு தேசிய தொழிற்தேர்ச்சித் தராதர (NVQ) சான்றிதழும் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் எதிர்பார்க்கப்படுகின்ற பயிற்சிகளின் பூர்த்தியானது பயிற்சிகளின் வழங்கல் என எடுத்துக் கொள்ளப்படுமாயின், மாகாணத்தில் உள்ள அனைத்து பயிற்சி வழங்குநர்களும் 23 நபர்களுக்கு மட்டுமே பயிற்சியினை வழங்கியுள்ளனர். எதிர்பார்க்கப்பட்ட மற்றும் பயிற்சிகளை பூர்த்தி செய்த நபர்களுக்கிடையிலான இடைவெளி ஆனது வருடம் ஒன்றிற்கு 9 நபர்களாக உள்ளது. எவ்வாறாயினும் தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) முறைமையானது வருடாந்தம் 32 நபர்களுக்கு கட்டுமான தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சிகளை வழங்கக்கூடியவாறு விரிவாக்கப்பட செய்யப்பட வேண்டி உள்ளது.

மாகாணத்தில் மேலதிகமாக 391 பிளம்பர்கள் அல்லது குழாய் பொருத்துநர்களுக்கான கூடுதல் தேவை/ கேள்வி காணப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில் இத்துறை சார்பாக

வழங்கப்பட்டுள்ள தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்களின் எண்ணிக்கை 13 ஆகும். ஒரு வருடத்திற்கான எதிர்பார்க்கப்படுகின்ற பயிற்சிகளின் பூர்த்தியானது 45 ஆகும். மாகாணத்தில் உள்ள பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் வரும் வருடங்களில் சுமார் 350 முதல் 380 வரையான பிளம்பர்கள் அல்லது குழாய் பொருத்துநர்களுக்கான பயிற்சியினை வழங்கக்கூடியவாறு தமது இயலுமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டி உள்ளது.

ஆண்டு தோறும் 153 மாபிள் கற்கள் பதிப்பவர்களுக்கு மேலதிகமான தேவையானது காணப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகள் தொடர்பாக எந்தவொரு தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை சான்றிதழோ வழங்கப்படவில்லை. இது தொடர்பான பயிற்சிகள் ஏதும் தற்போது காணப்படாத போதிலும் பயிற்சி வழங்குநர்கள் ஆண்டுதோறும் 153 மாபிள் கற்கள் பதிப்பவர்களுக்கான பயிற்சி வழங்கல்களை அறிமுகப்படுத்துதல் வேண்டும்.

கட்டடங்களிற்கு வர்ணம் தீட்டும் தொழிலாளர்களிக்கான வருடாந்த கேள்வியானது 204 ஆகும். மாகாணத்தின் பயிற்சி வழங்குநர்கள் இப்பயிற்சிநெறி தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை பற்றிய விபரங்களை வழங்கியுள்ளனர். பயிற்சி வழங்குநர்கள் ஆண்டுதோறும் 153 எண்ணிக்கையான கட்டடங்களிற்கு வர்ணம் பூசுபவர்களிற்கான பயிற்சி திட்டத்தினை அறிமுகப்படுத்த வேண்டும்.

கனரக இயந்திர மற்றும் இலகு இயந்திர இயக்குநர்களுக்கான கூடுதல் தேவையானது 280 ஆகும். 2013 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட எண்ணிக்கையான தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. பயிற்சியினை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற எண்ணிக்கையினை பயிற்சி வழங்கல்களின் எண்ணிக்கையாக கருதுமிடத்து மாகாணத்திலுள்ள அனைத்து பயிற்சி வழங்கும் நிறுவகங்களினாலும் 79 எண்ணிக்கையான இயந்திர இயக்குநர்களுக்கு மட்டும்

பயிற்சியானது அளிக்கப்படமுடியும். பயிற்சியானது வருடாந்தம் குறைந்த பட்சம் 200 இயந்திர இயக்குநர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

128 கட்டுமானத் துறைசார் தொழில்நுட்ப அலுவலர்களுக்கும், 146 சிவில் வேலை மேற்பார்வையாளர்/ போர்மான்களிற்கும் மற்றும் 79 மெக்கானிக்கல் பிக்ஸர்களிற்கும் பயிற்சி அளிப்பதற்கான பயிற்சி திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். தற்போது, மாகாணத்தில் அமைந்துள்ள பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் இவ்வாறான திறன்கள் மற்றும் பயிற்சித் தேவைகள் தொடர்பான பயிற்சிநெறிகளை நடாத்துவதில்லை.

அட்டவணை 4.9

மத்திய மாகாணத்தில் கணக்கிடப்பட்ட பயிற்சிகளுக்கான கேள்விகள் மற்றும் வழங்கல்கள் ஆகியவற்றுக்கிடையிலான இடைவெளிகள்

(தேசிய தொழிற் தேர்ச்சி தகைமைக்குரியவை (NVQ) மற்றும் தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை அல்லாதவை)

தொ/இல	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வருடாந்த சராசரி கேள்விகள்	வழங்கப்பட்ட பயிற்சிகள்		பயிற்சி தொடர்பான இடைவெளிகள்	
			2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள்	ஆன பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறியினை பூர்த்தி செய்திருந்தால் நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை	A-B	A-C
		(A)	(B)	(C)		
1	மர வேலை கைவினைஞர்	949	50	788	899	161

தொ/இல	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வருடாந்த சராசரி கேள்விகள்	வழங்கப்பட்ட பயிற்சிகள்		பயிற்சி தொடர்பான இடைவெளிகள்	
			2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள்	ஆன பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறியினை பூர்த்தி செய்திருந்தால் நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை	A-B	A-C
		(A)	(B)	(C)		
	(தளபாடங்கள் மற்றும் கட்டடம்)					
2	கட்டுமான கைவினைஞர் /மேசன்	1042	7	113	1035	929
3	கட்டுமான உபகரணங்கள் இயக்குபவர்	284	60	79	224	205
4	மின்னியாளர்	624	189	281	435	343
5	கட்டுமான தொழில்நுட்பம்/ தரை வடிவமைப்பு	32		23	32	9
6	பிளம்பர்/ குழாய் பொருத்துநர்	391	13	45	378	346

தொ/இல	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வருடாந்த சராசரி கேள்விகள்	வழங்கப்பட்ட பயிற்சிகள்		பயிற்சி தொடர்பான இடைவெளிகள்	
			2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள்	ஆன பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறியினை பூர்த்தி செய்திருந்தால் நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை	A-B	A-C
		(A)	(B)	(C)		
7	கணிய அளவையியலாளர்			38		38
8	ரைல் பதிப்பவர்	153			153	153
9	வர்ணம் பூசுபவர்	204			204	204
10	பொறி இயக்குபவர்	284		79	284	205
11	தொழில்நுட்ப அலுவலர்கள்	128			128	128
12	சிவில் வேலை மேற்பார்வையாளர் / போர்மேன்	146			146	146
13	மெக்கானிக்கல் பிக்ஸர் /	79			79	79

தொ/இல	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வருடாந்த சராசரி கேள்விகள்	வழங்கப்பட்ட பயிற்சிகள்		பயிற்சி தொடர்பான இடைவெளிகள்	
			2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள்	ஆன பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறியினை பூர்த்தி செய்திருந்தால் நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை	A-B	A-C
		(A)	(B)	(C)		
	மேற்பார்வையாளர்					
14	அலுமினியம் சட்டகம் புனைபவர்	182	80	90	102	92
15	காய்ச்சி இணைப்பவர்	411	54	203	357	208
16	பொறிவலர்	238	52	187	186	51
17	கடைச்சல் இயந்திர இயக்குநர்					
18	மென் பொறியியல்/ இரும்பு மற்றும் உருக்கு சட்டகம்	514		147	514	367

தொ/இல	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வருடாந்த சராசரி கேள்விகள்	வழங்கப்பட்ட பயிற்சிகள்		பயிற்சி தொடர்பான இடைவெளிகள்	
			2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள்	ஆன பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறியினை பூர்த்தி செய்திருந்தால் நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை	A-B	A-C
		(A)	(B)	(C)		
	புனைபவர்					
19	விவசாய இயந்திரம் திருத்துநர்	61		11	61	50
20	தன்னியக்க இயந்திர திருத்துநர்/ தன்னியக்கவியல் தொழில்நுட்பம்	371	44	281	327	101
21	மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர்	218	61	191	157	27

தொ/இல	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வருடாந்த சராசரி கேள்விகள்	வழங்கப்பட்ட பயிற்சிகள்		பயிற்சி தொடர்பான இடைவெளிகள்	
			2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள்	ஆன பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறியினை பூர்த்தி செய்திருந்தால் நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை	A-B	A-C
		(A)	(B)	(C)		
22	தன்னியக்கவியல் மின்னியலாளர் / மின் மோட்டார் முறுக்குநர்	149	17	101	132	48
23	தன்னியக்க வர்ணம் பூசுபவர்/ செம்மைப்படுத்துபவர்	152		12	152	140
24	கையடக்கத் தொலைபேசி திருத்துநர்	41		11	41	30

தொ/இல	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வருடாந்த சராசரி கேள்விகள்	வழங்கப்பட்ட பயிற்சிகள்		பயிற்சி தொடர்பான இடைவெளிகள்	
			2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள்	ஆன பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறியினை பூர்த்தி செய்திருந்தால் நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை	A-B	A-C
		(A)	(B)	(C)		
25	குளிர்சாதன பெட்டி மற்றும் வளிச்சீராக்கி திருத்துநர்	220		79	220	141
26	வானொலி, தொலைக்காட்சி மற்றும் வீட்டு உபகரணங்கள் பழுதுபார்ப்பவர்	96	44	169	52	75
27	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப	516	74	420	442	96

தொ/இல	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வருடாந்த சராசரி கேள்விகள்	வழங்கப்பட்ட பயிற்சிகள்		பயிற்சி தொடர்பான இடைவெளிகள்	
			2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள்	ஆன பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறியினை பூர்த்தி செய்திருந்தால் நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை	A-B	A-C
		(A)	(B)	(C)		
	தொழில்நுட்பவியலாளர்					
28	கணனி வரைபட கலைஞர்	410	24	300	386	110
29	டெஸ்க் டாப் பப்ளிஷிங் / அச்சிடுதல்	138		105	138	33
30	கணனி பிரயோக உதவியாளர்	564	305	320	259	264
31	இணையத்தள வடிவமைப்பாளர்	128		120	128	08
32	வன்பொருள் தொழில்நுட்பவியலாளர்	153	55	210	98	-57

தொ/இல	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வருடாந்த சராசரி கேள்விகள்	வழங்கப்பட்ட பயிற்சிகள்		பயிற்சி தொடர்பான இடைவெளிகள்	
			2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள்	ஆன பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறியினை பூர்த்தி செய்திருந்தால் நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை	A-B	A-C
		(A)	(B)	(C)		
33	வலையமைப்பு தொழில்நுட்பவியலாளர்	106	16	75	90	31
34	கணனி கற்கைகள்	167		120	167	47
35	கணனி புரோகிராமிங்	95		45	95	50
36	பல்லூடக இயக்குநர்	73		30	73	43
37	மென்பொருள் தொழில்நுட்பம்	68		15	68	53
38	கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீடு	34		30	34	04

தொ/இல	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வருடாந்த சராசரி கேள்விகள்	வழங்கப்பட்ட பயிற்சிகள்		பயிற்சி தொடர்பான இடைவெளிகள்	
			2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள்	ஆன பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறியினை பூர்த்தி செய்திருந்தால் நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை	A-B	A-C
		(A)	(B)	(C)		
39	ஹோட்டல் முகாமைத்துவம்/ நடுத்தர மட்டம்	81		30	81	51
40	உணவகம் மற்றும் மதுபான சேவை - மதுபானம் பரிமாறுபவர்	54		15	54	39
41	குக் / சமையற்காரர்	270		120		150
42	சமையற்காரர்	27				27
43	செஃப் டி பார்ட்டி	162				162

தொ/இல	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வருடாந்த சராசரி கேள்விகள்	வழங்கப்பட்ட பயிற்சிகள்		பயிற்சி தொடர்பான இடைவெளிகள்	
			2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள்	ஆன பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறியினை பூர்த்தி செய்திருந்தால் நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை	A-B	A-C
		(A)	(B)	(C)		
44	சமையலறை உதவியாளர்	162				162
45	அறை பணியாளர்/ பையன்	270		60		190
46	குழாம் பணியாளர்கள்	27				27
47	வெயிட்டர் / பரிசாரகர்	315		45		270
48	களஞ்சிய தொழிலாளர்கள்	81				81
49	உயிர் காப்பாளர்கள்	54				54
50	தோட்ட வேலை செய்பவர்கள்	54				54
51	பாதுகாப்பு ஊழியர்கள்	108				108

தொ/இல	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வருடாந்த சராசரி கேள்விகள்	வழங்கப்பட்ட பயிற்சிகள்		பயிற்சி தொடர்பான இடைவெளிகள்	
			2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள்	ஆன பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறியினை பூர்த்தி செய்திருந்தால் நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை	A-B	A-C
		(A)	(B)	(C)		
52	இரவு கணக்காய்வாளர்	27				27
53	காசாளர்	27				27
54	சலவை பணியாளர்கள்	81				81
55	தையல் இயந்திர இயக்குநர்கள்	1378		169		1207
56	உதவியாளர்கள்	163				163
57	இஸ்திரி போடுபவர்கள்	20				20
58	தொழில்நுட்பவியலாளர்கள்	08				08

தொ/இல	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வருடாந்த சராசரி கேள்விகள்	வழங்கப்பட்ட பயிற்சிகள்		பயிற்சி தொடர்பான இடைவெளிகள்	
			2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள்	ஆன பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறியினை பூர்த்தி செய்திருந்தால் நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை	A-B	A-C
		(A)	(B)	(C)		
59	பற்றிக்	29		11		18
60	சித்திர வேலைகள்			90		90
61	திரைச்சீலை தாயரிப்பவர்			23		23
62	வடிவமைப்பு தயாரிப்பவர்	10	6	34	04	34
63	வெட்டுபவர்கள்	02				02
64	பட்ச் வேலை			23		23
65	ஆடை தர கட்டுப்பாட்டாளர்கள்/ பரிசோதிப்பவர்கள்	43		23		20

தொ/இல	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வருடாந்த சராசரி கேள்விகள்	வழங்கப்பட்ட பயிற்சிகள்		பயிற்சி தொடர்பான இடைவெளிகள்	
			2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள்	ஆன பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறியினை பூர்த்தி செய்திருந்தால் நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை	A-B	A-C
		(A)	(B)	(C)		
66	எழுதுவினைஞர் தரங்கள்	12				12
67	மேற்பார்வையாளர்கள்	27				27
68	அழகுக் கலை நிபுணர்	25	145	360		-345
69	சிகை அலங்கார கைவினைஞர்	23		270	-97	-247
70	வெதுப்புநர்	52	11	75	41	-23
71	பழங்கள் மற்றும் காய்கறிகள் பதப்படுத்துதல்	97		15	97	82

தொ/இல	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வருடாந்த சராசரி கேள்விகள்	வழங்கப்பட்ட பயிற்சிகள்		பயிற்சி தொடர்பான இடைவெளிகள்	
			2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள்	ஆன பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறியினை பூர்த்தி செய்திருந்தால் நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை	A-B	A-C
		(A)	(B)	(C)		
72	உணவு தொழில்நுட்பம்	110	50	30	60	80
73	விவசாயம் / பண்ணை முகாமைத்துவம்	35		90	35	-55
74	உற்பத்தி தொழில்நுட்பம்	45	05	15	40	30
75	நகை உற்பத்தியாளர்	35		30	35	5
76	இரத்தினக்கற்கள் வெட்டுதல் மற்றும் பட்டை தீட்டுதல்	26		15	26	11
77	வேலைக்கான அடிப்படை		457	75		

தொ/இல	பாடநெறி/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வருடாந்த சராசரி கேள்விகள்	வழங்கப்பட்ட பயிற்சிகள்		பயிற்சி தொடர்பான இடைவெளிகள்	
			2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள்	ஆன பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறியினை பூர்த்தி செய்திருந்தால் நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை	A-B	A-C
		(A)	(B)	(C)		
	திறன்கள்					
78	வீட்டு பணி உதவியாளர்கள்		435	150		
79	முன்னணி அலுவலக / வரவேற்பாளர்	135		98		37

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) இன் தரவுத் தளம் - தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) இற்கான அங்கீகாரம் அளிக்கப்பட்ட

பாடநெறிகள் மற்றும் மத்திய மாகாணத்தில் உள்ள பதிவுசெய்யப்பட்ட பயிற்சி வழங்குநர்கள்.

* 75% இனை நிறைவு வீதமாக கொண்டு பயிற்சிநெறியினை நிறைவுசெய்கின்ற நபர்களின் எண்ணிக்கையானது கணக்கிடப்பட்டுள்ளது.

4.6.2 இலகு பொறியியல் துறை

மத்திய மாகாணத்தில் அலுமினிய சட்டகம் புனைபவர்களுக்கான வருடாந்த சராசரி தேவையானது சுமார் 182 நபர்கள் ஆகும். 2013 ஆம் ஆண்டில், இப்பயிற்சி தொடர்பாக எண்பது (80) தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற எண்ணிக்கையின் படி, சுமார் 90 நபர்கள் ஆண்டுதோறும் பயிற்சியினை பெறுகின்றனர். ஆயினும், 90 இற்கும் மேற்பட்ட கூடுதல் நபர்களுக்கு அலுமினிய சட்டகம் புனைதல் தொடர்பாக பயிற்சி அளித்தல் வேண்டும். மாகாணத்தின் பயிற்சி வழங்குநர்கள் ஆண்டுதோறும் 90 - 100 கூடுதல் அலுமினிய சட்டகம் புனைபவர்களுக்கு பயிற்சி வழங்கக்கூடியவாறு தங்கள் கொள்ளளவினை விரிவுபடுத்துதல் வேண்டும்.

மாகாணத்தில் காய்ச்சி இணைப்பவர்களுக்கு ஒரு பெரும் கேள்வி நிலவுகின்றது. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் நிலவுகின்ற தேவைகளை பூர்த்திசெய்வதற்கு மாகாணத்தில் 411 மேலதிக காய்ச்சி இணைப்பவர்கள் தேவைப்படுகின்றனர் என கணிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்களின் எண்ணிக்கை 54 ஆகும். தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழினை பெற்றுக்கொண்டுள்ள காய்ச்சி இணைப்பவர்களின் எண்ணிக்கையானது 357 ஆக காணப்படுவதுடன் அது சந்தைகளில் நிலவுகின்ற கேள்விகளிலும் பார்க்க குறைவானதாக காணப்படுகின்றது. பயிற்சியினை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நபர்களின் எண்ணிக்கையின் படி, சுமார் 203 நபர்கள் வருடாந்தம் காய்ச்சி இணைத்தல்

தொடர்பான பயிற்சியினை பெறுகின்றனர். இன்னும், மேலதிகமாக 208 நபர்களுக்கு காய்ச்சி இணைத்தல் தொடர்பான பயிற்சியானது வழங்கப்படல் வேண்டும். மாகாணத்தில் அமைந்துள்ள பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் ஓர் ஆண்டில் ஆகக் குறைந்தது 200 மேலதிக காய்ச்சி இணைப்பவர்களுக்கு பயிற்சியினை வழங்குவதற்கான நிலைமைகளை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

இலகு பொறியியற் துறையிற்கு ஒரு ஆண்டில் சராசரியாக 238 எண்ணிக்கையான பொறிவலர்கள் தேவைப்படுகின்றனர். 2013 ஆம் ஆண்டில் தேசிய தொழிற் தேரச்சி தகைமை (NVQ) முறைமையின் கீழ் லேத் இயந்திர இயக்குநர்கள்/ பொறிவலர்களுக்காக 52 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. தேவைகள் மற்றும் வழங்கப்பட்டுள்ள தேசிய தொழிற் தேரச்சி தகைமை (NVQ) சான்றிதழ்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கு இடையிலான இடைவெளியானது 187 பொறிவலர்களாக உள்ளது. பயிற்சியினை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற எண்ணிக்கையின் படி ஒரு வருடத்தில் 101 நபர்கள் பயிற்சியினை நிறைவுசெய்தல் வேண்டும். தேவைகள் மற்றும் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற எண்ணிக்கை ஆகியவற்றுக்கு இடையிலான இடைவெளியானது 51 பொறிவலர்கள் ஆகும். எனவே, தொழில்நுட்டப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி முறைமை (TVET) ஆனது ஓர் ஆண்டில் 50 தொடக்கம் 150 வரையான மேலதிக நபர்களுக்கு பொறிவலர் தொடர்பான பயிற்சியினை வழங்குவதற்கான நிலைமைகளை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்

இந்த பகுப்பாய்வில் நாம் இலகு பொறியியற் பயிற்சி மற்றும் இரும்பு மற்றும் உருக்கு காய்ச்சி இணைப்பவர்களுக்கான பயிற்சி ஆகியவற்றினை ஒருமித்ததாகவே கருதியுள்ளோம். உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளிற்கு ஆண்டுதோறும் 514 கூடுதல் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். 2013 ஆம் ஆண்டில், இத்துறைசார் பயிற்சிகள் தொடர்பாக எந்தவொரு தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்களும் வழங்கப்படவில்லை. பயிற்சியினை நிறைவு செய்வதற்கு

எதிர்பார்க்கப்படுகின்ற நபர்களின் எண்ணிக்கையின் படி, சுமார் 147 நபர்கள் இலகு பொறியியல்/ இரும்பு மற்றும் உருக்கு சட்டகம் புனைதல் குறித்த பயிற்சிநெறிகளை நிறைவு செய்தல் வேண்டும். மாகாணத்தில் அமைந்துள்ள பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் வருடாந்தம் 360 மேலதிக காய்ச்சி இணைப்பவர்களுக்கு பயிற்சியினை வழங்குவதற்கான நிலைமைகளை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

மத்திய மாகாணத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் 61 கூடுதல் விவசாய இயந்திர திருத்துநர்கள் தேவைப்படுகின்றனர். எனினும், 2013 ஆம் ஆண்டில் தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) முறைமையின் கீழ் எந்தவொரு சான்றிதழ்களும் வழங்கப்படவில்லை. மாகாணத்தின் பயிற்சி வழங்கல் முறைமையில் 11 விவசாய இயந்திர மற்றும் உபகரண திருத்துநர்களுக்கு மட்டும் பயிற்சி அளிக்கக்கூடிய நிலைமையானது காணப்படுகின்றது. மாகாணத்தில் ஆண்டுதோறும் குறைந்தது மற்றொரு 50 பேருக்கு பயிற்சி அளிப்பானது மேற்கொள்ளப்படல் வேண்டும். மாகாணத்தில் நிலவுகின்ற விவசாய இயந்திர திருத்துநர்களுக்கான தேவை/ பற்றாக்குறை தொடர்பாக இலக்கு குழு விவாதங்களிலும் கூட ஆராயப்பட்டுள்ளது.

4.6.3 தன்னியக்கவியல் இயந்திரங்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்

தன்னியக்கவியல் இயந்திர திருத்துநர்களுக்கான வருடாந்த சராசரி தேவையானது ஆண்டுக்கு சுமார் 371 ஆகும். 2013 ஆம் ஆண்டில், மாகாணத்தில் அமைந்துள்ள பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் இப் பயிற்சிநெறி தொடர்பாக 44 தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்களை வழங்கியுள்ளன. தன்னியக்கவியல் திருத்துநர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) இற்கான பயிற்சி வழங்கலானது நிலவுகின்ற தேவையினை விடவும் மிகவும் குறைவாகவே உள்ளது. நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற எண்ணிக்கையின் படி, சுமார் 281 நபர்கள் வருடாந்தம் பயிற்சியினை பெற்றுவருகின்றனர். ஆயினும், 100 க்கும்

மேற்பட்ட கூடுதல் நபர்களுக்கு தன்னியக்கவியல் திருத்துநர்/ தன்னியக்கவியல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சியானது வழங்கப்படல் வேண்டும்.

ஆண்டுதோறும், மத்திய மாகாணத்தின் தன்னியக்கவியல் துறையிற்கு 218 மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர்கள் தேவைப்படுகின்றனர். 2013 ஆம் ஆண்டில் இப்பயிற்சி தொடர்பாக வழங்கப்பட்டுள்ள தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்களின் எண்ணிக்கை 61 ஆகும். அவ்வாறே, முச்சக்கர வண்டி திருத்துநர்களுக்கான தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழிற்கான பயிற்சியினை பெற்ற நபர்களின் எண்ணிக்கையானது 76 ஆகும். அத்துடன் இது சந்தைக்கான தேவையுடன் ஒப்பிடும் போது குறைவாக காணப்படுகின்றது. பயிற்சியினை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற எண்ணிக்கையின் படி சுமார் 191 நபர்கள் வருடாந்தம் பயிற்சியினை பெற்றுக்கொள்கின்றனர். பயிற்சி முறைமையின் கீழ் ஓர் ஆண்டில் ஏறத்தாழ 30 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர்களுக்கு பயிற்சி அளித்தல் வேண்டும்.

தன்னியக்கவியல் மின்னியலாளர்/ மின்சார மோட்டார் முறுக்குநர்களுக்கான மதிப்பிடப்பட்ட தேவையானது சுமார் 150 நபர்கள் ஆகும். 2013 ஆம் ஆண்டில் தேசிய தொழிற் தேரச்சி தகைமை (NVQ) முறைமையின் கீழ் 17 சான்றிதழ்கள் மட்டும் வழங்கப்பட்டுள்ளன. சந்தைக்கான தேவைகளுடன் ஒப்பிடும் போது தேசிய தொழிற் தேரச்சி தகைமை (NVQ) சான்றிதழ்களின் எண்ணிக்கை ஆனது 132 ஆல் குறைவாக உள்ளது. பயிற்சியினை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற எண்ணிக்கையின் படி தன்னியக்கவியல் திருத்துநருக்கான பயிற்சியினை 101 நபர்கள் நிறைவுசெய்ய வேண்டும். அடுத்த ஐந்து வருடங்களுக்கு மாகாணத்தில் தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (TVET) முறைமையில் ஆண்டுதோறும் 50 தொடக்கம் 132 மேலதிகமான தன்னியக்கவியல் மின்னியலாளர்களுக்கு பயிற்சி அளித்தல் வேண்டும்.

தன்னியக்க வர்ணம் பூசுபவர்கள் மற்றும் செப்பனிடுபவர்கள் ஆகியோருக்கான மதிப்பிடப்பட்ட வருடாந்த தேவையானது சுமார் 152 நபர்கள் ஆகும். மாகாணத்தில் பயிற்சியினை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நபர்களின் எண்ணிக்கையானது 12 நபர்கள் ஆகும். பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் 150 க்கும் மேற்பட்ட மேலதிக நபர்களுக்கு தன்னியக்க வர்ணம் பூசுபவர் மற்றும் செப்பனிடுபவர் தொடர்பான பயிற்சியினை வழங்குவதற்கான நிலைமையினை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

4.6.4 வீட்டு மின்சார உபகரணங்கள் பழுதுபார்த்தல் சேவைகள்

தொலைபேசி மற்றும் கையடக்க தொலைபேசி பழுதுபார்க்கும் தொழிலாளர்களிற்கான வருடாந்த சராசரி தேவையானது ஆண்டுதோறும் 41 ஆகும். 2013 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (TVET) முறைமையானது எந்தவொரு தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழினையும் வழங்கியிருக்கவில்லை. பயிற்சிநெறிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையின் படி சுமார் 11 நபர்கள் ஆண்டுதோறும் பயிற்சியினை பெறுகின்றனர். அத்துடன், பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் ஆண்டுதோறும் 30 க்கும் மேற்பட்ட மேலதிக தொலைபேசி மற்றும் கையடக்க தொலைபேசி பழுதுபார்க்கும் தொழிலாளர்களிற்கான பயிற்சிகளை அளித்தல் வேண்டும்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, மத்திய மாகாணத்தில் உள்ள பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் ஒரு ஆண்டில் சுமார் 220 குளிர்சாதன பெட்டி மற்றும் வளிச்சீராக்கி திருத்துநர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டிய தேவையானது காணப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (TVET) முறைமையானது எந்தவொரு தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழினையும் வழங்கியிருக்கவில்லை. பயிற்சிநெறிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையின் படி

சுமார் 79 நபர்கள் ஆண்டுதோறும் பயிற்சியினை பெறுகின்றனர். எனவே, பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் ஓர் ஆண்டில் 140 இற்கும் மேற்பட்ட நபர்களுக்கு குளிர்சாதன பெட்டி மற்றும் வளிச்சீராக்கி திருத்துநர் தொடர்பான பயிற்சியினை வழங்குவதற்கான நிலைமைகளை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

வானொலி, தொலைக்காட்சி மற்றும் வீட்டு உபகரணங்களை பழுதுபார்க்கும் தொழிலாளர்களுக்கான மதிப்பிடப்பட்ட தேவையானது 96 ஆகும். 2013 ஆம் ஆண்டில் இப் பயிற்சிநெறி தொடர்பாக வெளியிடப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்களின் எண்ணிக்கையானது 44 ஆகும். இத்தேவை மற்றும் தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) வழங்கல் ஆகியவற்றுக்கு இடையேயான இடைவெளியானது 52 நபர்கள் ஆகும். பயிற்சி நெறிகளை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதன் பிரகாரம் சுமார் 169 எண்ணிக்கையான மாணவர்கள் பயிற்சிநெறியினை நிறைவுசெய்தல் வேண்டும். ஒரு வருடத்திற்குரிய தொழிலாளர்களுக்கான தேவை மற்றும் பாடநெறிகளை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கு இடையேயான இடைவெளியானது 75 நபர்கள் ஆகும். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு மாகாணத்தில் உள்ள பயிற்சி வழங்கும் நிறுவகங்கள், ஒரு வருடத்தில் 50 தொடக்கம் 75 வரையான கூடுதல் வானொலி, தொலைக்காட்சி மற்றும் வீட்டு உபகரணங்களை பழுதுபார்க்கும் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளித்தலினை மேற்கொள்ளல் வேண்டும்.

4.6.5 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறை மற்றும் அச்சு துறை

மத்திய மாகாணத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழில்நுட்பவியலாளர்களிற்கான கேள்விக்கான கணிக்கப்பட்ட வருடாந்த சராசரியானது 516 நபர்களாக காணப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழில்நுட்பவியலாளர்களிற்கான பயிற்சிக்கு வழங்கப்பட்ட தேசிய தொழிற் தகைமைக்கான சான்றிதழ்களின் எண்ணிக்கை 442

ஆகும். ஒரு வருடத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழில்நுட்பவியலாளர்களிற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை பூர்த்தி செய்ய எதிர்பார்க்கும் தொழில்நுட்பவியலாளர்களின் எண்ணிக்கை 420 ஆகும். பயிற்சிக்கான வருடாந்த கேள்வி மற்றும் வருடாந்தம் பயிற்சியை பூர்த்தி செய்பவர்களின் எண்ணிக்கை என்பவற்றிற்கிடையிலான வித்தியாசம் 96 ஆக காணப்படுகின்றது. இதன் காரணமாக மாகாணத்தில் உள்ள பயிற்சி வழங்குநர்கள் ஏறத்தாழ 450 மேலதிக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழில்நுட்பவியலாளர்களுக்கு பயிற்சி வழங்குவதன் பொருட்டு தேசிய தொழிற்தேர்ச்சித் தகைமை (NVQ) க்கான பயிற்சி நெறியினை விரிவுபடுத்த வேண்டி உள்ளது. மேலும் இவ் ஆய்வுத் தரவுகளிற்கு இணங்க தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழில்நுட்பவியலாளர்களிற்கான கேள்வி மற்றும் வழங்கல் ஆகியவற்றிற்கிடையே, கண்டி மாவட்டத்தில் ஏறத்தாழ 40% ஆன இடைவெளியும், நுவரெலியா மாவட்டத்தில் 35% ஆன இடைவெளியும், மாத்தளை மாவட்டத்தில் 25% ஆன இடைவெளியும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மத்திய மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் இனங்காணப்பட்டுள்ள ஏனைய வேலைவாய்ப்பு வகைகளிலும் சராசரியாக சமனான தொழிலாளர் பற்றாக்குறை நிலவுகின்றமையினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதன் காரணமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிற்சி வழங்கப்பட வேண்டி உள்ள தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழிலாளர்களிற்கான பரம்பலும் ஒரே மாதிரியான சதவீத பரம்பலினையே கொண்டுள்ளது.

மத்திய மாகாணத்திற்கான கணனி வரைபட வடிவமைப்பாளர்களிற்கான கணிக்கப்பட்ட கேள்வியானது ஒரு வருடத்திற்கு 410 நபர்களாக காணப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில் பயிற்சிகளின் போது வெறும் 24 சான்றிதழ்களே வழங்கப்பட்டுள்ளன. கணிக்கப்பட்ட கேள்வி மற்றும் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் என்பவற்றிற்கு இடையிலான இடைவெளியானது 386 ஆக காணப்படுகின்றது. கணனி

வரைபட வடிவமைப்பு துறையினை பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்ட கேள்வியானது வருடம் ஒன்றிற்கு 300 ஆக காணப்படுகின்றது. வருடாந்த கேள்வி மற்றும் வருடாந்த வழங்கல் என்பவற்றிற்கு இடையிலான வேறுபாடு 110 ஆக காணப்படுகின்றது. இதன் காரணமாக மாகாணத்திலுள்ள பயிற்சி வழங்குநர்கள் கணனி வரைபட வடிவமைப்பாளர்களிற்கான பயிற்சிகளை வழங்குகின்ற தமது வருடாந்த தேசிய தொழிற்தேர்ச்சித் தகைமை (NVQ) க்கான பயிற்சி பாடநெறிகளை மேலதிகமாக 386 நபர்களினால் அதிகரிக்க வேண்டி உள்ளது.

மத்திய மாகாணத்தில் கணனி மூலமான வெளியீட்டாளர்களிற்கான கணப்பீடு செய்யப்பட்ட வருடாந்த கேள்வியானது 138 நபர்களாக காணப்படுகின்றது. மாகாணத்தில் உள்ள பயிற்சி வழங்குநர்கள் 2013 ஆம் ஆண்டில் இப்பயிற்சி தொடர்பாக எந்த ஒரு சான்றிதழினையும் வழங்கி இருக்கவில்லை. கணனி மூலமான வெளியீட்டாளர்களிற்கான பயிற்சி நெறியினை பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்ட கேள்வியானது வருடம் ஒன்றிற்கு 105 ஆக காணப்படுகின்றது. இப் பயிற்சிநெறி தொடர்பாக எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த கேள்வி மற்றும் வருடாந்த வழங்கல் என்பவற்றிற்கு இடையிலான வேறுபாடு 33 ஆக காணப்படுகின்றது. இதன் காரணமாக மாகாணத்திலுள்ள பயிற்சி வழங்குநர்கள் கணனி மூலமான வெளியீட்டாளர்களிற்கான பயிற்சிகளை வழங்குகின்ற தமது வருடாந்த தேசிய தொழிற்தேர்ச்சித் தகைமை (NVQ) க்கான பயிற்சி பாடநெறிகளை 138 மேலதிக நபர்களினால் அதிகரிக்க வேண்டி உள்ளது.

மத்திய மாகாணத்தில் கணனி பிரயோக உதவியாளர்களுக்கான கணிக்கப்பட்ட வருடாந்த சராசரி கேள்வியானது 564 நபர்களாக காணப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில் தேசிய தொழிற்தேர்ச்சித் தகைமை (NVQ) முறைமையின் மூலம் இப் பயிற்சிநெறி தொடர்பாக 305 சான்றிதழ்களை வழங்க முடிந்துள்ளது. இப்பயிற்சி நெறி தொடர்பாக கணிக்கப்பட்ட கேள்வி மற்றும் வழங்கப்பட்ட தேசிய தொழிற்தேர்ச்சித் தகைமை (NVQ) க்கான சான்றிதழ்கள் என்பவற்றிற்கு இடையிலான வித்தியாசம் 259 ஆக

காணப்படுகின்றது. ஒரு வருடத்திற்கான கணனி பிரயோக உதவியாளர்களிற்கான பயிற்சிப் பாட நெறியினை பூர்த்தி செய்பவர்களின் எதிர்பார்க்கப்பட்ட பெறுமதியானது 300 ஆக காணப்படுகின்றது. இப் பயிற்சிநெறி தொடர்பாக வருடரந்த கேள்வி மற்றும் வருடாந்தம் இப் பயிற்சி நெறியினை பூர்த்தி செய்வோர் ஆகியனவற்றிற்கு இடையிலான வித்தியாசம் ஆனது 264 ஆக காணப்படுகின்றது. இதன் காரணமாக மாகாணத்திலுள்ள பயிற்சி வழங்குநர்கள் கணனி பிரயோக உதவியாளர்களுக்கான பயிற்சிகளை வழங்குகின்ற தமது வருடாந்த தேசிய தொழிற்தேர்ச்சித் தகைமை (NVQ) க்கான பயிற்சி பாடநெறிகளை 260 மேலதிக நபர்களினால் அதிகரிக்க வேண்டி உள்ளது.

மத்திய மாகாணத்தில் இணைய வடிவமைப்பாளர்களிற்கான கணிக்கப்பட்ட வருடாந்த சராசரி கேள்வியானது 128 நபர்களாக காணப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில் தேசிய தொழிற்தேர்ச்சித் தகைமை (NVQ) முறைமை ஆனது இப் பயிற்சிநெறி தொடர்பாக எந்த ஒரு சான்றிதழையும் வழங்கியிருக்கவில்லை. இணைய வடிவமைப்பாளர்களிற்கான பயிற்சிப் பாட நெறியினை பூர்த்தி செய்பவர்களின் எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையானது ஒரு வருடத்திற்கு 120 ஆக காணப்படுகின்றது. இப்பயிற்சி நெறி தொடர்பாக வருடாந்த கேள்வி மற்றும் வருடாந்தம் இப்பயிற்சி நெறியினை பூர்த்தி செய்வோர் ஆகியனவற்றிற்கு இடையிலான வித்தியாசம் ஆனது 08 ஆக காணப்படுகின்றது. இதன் காரணமாக மாகாணத்திலுள்ள பயிற்சி வழங்குநர்கள் இணைய வடிவமைப்பாளர்களிற்கான பயிற்சிகளை வழங்குகின்ற தமது வருடாந்த தேசிய தொழிற்தேர்ச்சித் தகைமை (NVQ) க்கான பயிற்சி பாடநெறிகளை ஆகக்குறைந்தது 120 மேலதிக நபர்களினால் அதிகரிக்க வேண்டி உள்ளது.

மத்திய மாகாணத்தில் கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர்களிற்கான கணிக்கப்பட்ட வருடாந்த சராசரி கேள்வியானது 153 நபர்களாக காணப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில் தேசிய தொழிற்தேர்ச்சித் தகைமை (NVQ) முறைமையின் மூலம் இப் பயிற்சிநெறி தொடர்பாக 55 சான்றிதழ்களை மட்டுமே வழங்க முடிந்துள்ளது.

இப்பயிற்சி நெறி தொடர்பாக கணிக்கப்பட்ட கேள்வி மற்றும் வழங்கப்பட்ட தேசிய தொழிற்தேர்ச்சித் தகைமை (NVQ) க்கான சான்றிதழ்கள் என்பவற்றிற்கு இடையிலான வித்தியாசம் 98 ஆக காணப்படுகின்றது. ஒரு வருடத்திற்கான பாடநெறியினை பூர்த்தி செய்பவர்களின் எதிர்பார்க்கப்பட்ட பெறுமதியானது 210 ஆக காணப்படுகின்றது. எவ்வாறாயினும் வன்பொருள் பயிற்சிப் பாட நெறி சார்ந்த பல பாடநெறிகளிற்கான இச் சதவீதமானது மதிப்பீடு செய்யப்பட்ட பெறமதியிலும் பார்க்க கூடுதலாக காணப்படலாம். இதன் காரணமாக மாகாணத்திலுள்ள பயிற்சி வழங்குநர்கள் கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர்களிற்கான பயிற்சிகளை வழங்குகின்ற தமது வருடாந்த தேசிய தொழிற்தேர்ச்சித் தகைமை (NVQ) க்கான பயிற்சி பாடநெறிகளை 98 மேலதிக நபர்களினால் அதிகரிக்க வேண்டி உள்ளது.

மத்திய மாகாணத்தில் கணனி கற்கை நெறிகள் தொடர்பாக கணிக்கப்பட்ட வருடாந்த சராசரி கேள்வியானது 167 நபர்களாக காணப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில் தேசிய தொழிற்தேர்ச்சித் தகைமை (NVQ) முறைமை ஆனது இப் பயிற்சிநெறி தொடர்பாக எந்த ஒரு சான்றிதழையும் வழங்கியிருக்கவில்லை. கணனி கற்கை நெறிகள் தொடர்பான பயிற்சிப் பாட நெறியினை பூர்த்தி செய்பவர்களின் எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையானது ஒரு வருடத்திற்கு 120 ஆக காணப்படுகின்றது. இப்பயிற்சி நெறி தொடர்பாக வருடாந்த கேள்வி மற்றும் வருடாந்தம் இப்பயிற்சி நெறியினை பூர்த்தி செய்வோர் ஆகியனவற்றிற்கு இடையிலான வித்தியாசம் ஆனது 47 ஆக காணப்படுகின்றது. இதன் காரணமாக மாகாணத்திலுள்ள பயிற்சி வழங்குநர்கள் கணனி கற்கை நெறிகள் தொடர்பான பயிற்சிகளை வழங்குகின்ற தமது வருடாந்த தேசிய தொழிற்தேர்ச்சித் தகைமை (NVQ) க்கான பயிற்சி பாடநெறிகளை ஆகக்குறைந்தது 120 மேலதிக நபர்களினால் அதிகரிக்க வேண்டி உள்ளது.

மத்திய மாகாணத்தில் கணனி புரோகிராமர்ஸ் தொடர்பாக கணிக்கப்பட்ட வருடாந்த சராசரி கேள்வியானது 95 நபர்களாக காணப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில் தேசிய தொழிற்தேர்ச்சித் தகைமை (NVQ) முறைமை ஆனது இப் பயிற்சிநெறி தொடர்பாக

எந்த ஒரு சான்றிதழையும் வழங்கியிருக்கவில்லை. கணனி புரோகிராமர்ஸ் தொடர்பான பயிற்சிப் பாட நெறியினை பூர்த்தி செய்பவர்களின் எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையானது ஒரு வருடத்திற்கு 45 ஆக காணப்படுகின்றது. இப்பயிற்சி நெறி தொடர்பாக வருடாந்த கேள்வி மற்றும் வருடாந்தம் இப்பயிற்சி நெறியினை பூர்த்தி செய்வோர் ஆகியனவற்றிற்கு இடையிலான வித்தியாசம் ஆனது 50 ஆக காணப்படுகின்றது. இதன் காரணமாக மாகாணத்திலுள்ள பயிற்சி வழங்குநர்கள் கணனி புரோகிராமர்ஸ் தொடர்பான பயிற்சிகளை வழங்குகின்ற தமது வருடாந்த தேசிய தொழிற்தேர்ச்சித் தகைமை (NVQ) க்கான பயிற்சி பாடநெறிகளை 95 மேலதிக நபர்களினால் அதிகரிக்க வேண்டி உள்ளது.

4.6.6 ஆடைகள் மற்றும் தைத்த ஆடைகள் கைத்தொழிற் துறை

மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் வெளிநாட்டு தேவைகள் உள்ளடங்கலாக, ஆண்டுதோறும் சராசரியாக 1,200 இற்கும் அதிகமான தையல் இயந்திர இயக்குநர்களுக்கு பயிற்சி அளித்தல் வேண்டும். தற்போது, மாகாணத்தின் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் ஆண்டுக்கு சுமார் 169 தையல் இயந்திர இயக்குநர்களுக்கு பயிற்சி அளித்தலினை மேற்கொள்கின்றன. மாகாணத்தின் ஆடைகள் மற்றும் தைத்த ஆடை துறையிற்கு ஒவ்வொரு வருடமும் 163 உதவியாளர்கள், 20 இஸ்திரி போடுபவர்கள், 08 தொழில்நுட்பவியலாளர்கள், 18 பற்றிக் தொடர்பான தொழிலாளர்கள், 10 வடிவமைப்பு தயாரிப்பாளர்கள் மற்றும் 20 தர பரிசோதகர்கள் கூடுதலாக தேவைப்படுகின்றனர். மேலும், அட்டவணையில் தரப்பட்டுள்ளது போன்று அலங்கார வடிவமைப்பு தொழிலாளர்கள், திரைச்சீலை தொழிலாளர்கள், இணைப்பு (பச்) போடும் தொழிலாளர்கள் மற்றும் வெட்டுபவர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளித்தல் வேண்டும். தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) முறைமையானது ஆடைகள் மற்றும் தைத்த ஆடைகள் துறைக்கு தேவையான வடிவமைப்பு தயாரிப்பவர்களுக்கான பயிற்சி வழங்கலினை தவிர ஏனையவற்றிற்கான பயிற்சிகளை மேற்கொள்ளவில்லை. இக் கைத்தொழிற் துறை

தொடர்பான பயிற்சி பாடநெறிகளை அதிகரிப்பதற்கான பெரிய தேவைப்பாடுகள் காணப்படுகின்றன.

4.6.7 ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலா துறை

மாகாணத்தில் ஹோட்டல் முகாமைத்துவம் தொடர்பான நடுத்தர அளவிலான தொழிலாளர்களுக்கான மதிப்பீடு செய்யப்பட்டுள்ள வருடாந்த சராசரி தேவையானது 81 நபர்கள் ஆகும். 2013 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (TVET) முறைமையானது இத்துறைசார் எந்தவொரு தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழினையும் வழங்கியிருக்கவில்லை. ஒரு வருடத்தில் ஹோட்டல் முகாமைத்துவ பாடநெறியினை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை 30 ஆகும். வருடாந்த தேவைகள் மற்றும் பாடநெறியினை பூர்த்திசெய்யும் மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றிக்கு இடையிலான வேறுபாடு 81 ஆகும். மாகாணத்தில் அமைந்துள்ள பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் ஒரு வருடத்தில் 81 ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சியினை வழங்குவதற்கான தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) முறைமையினை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

மாகாணத்தின் ஹோட்டல் மற்றும் சுற்றுலாதுறையிற்கு ஒரு ஆண்டில் சராசரியாக 54 கூடுதல் உணவக மற்றும் மதுபானசாலை சேவையாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது, இந்த மாகாணத்தில் உள்ள தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) முறைமையானது மதுபானசாலை சேவையாளர்களுக்கான பயிற்சி வழங்கலினை மேற்கொள்வதில்லை. ஒரு வருடத்தில் மதுபானசாலை சேவையாளர் பாடநெறியினை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை 15 ஆகும். எனவே, மாகாணத்தில் அமைந்துள்ள பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் ஓர் ஆண்டில் 54 நபர்களுக்கு உணவக மற்றும் மதுபானசாலை

சேவையாளர் தொடர்பான பயிற்சியினை வழங்கக் கூடியவாறு நிலைமைகளை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

மாகாணத்தின் பயிற்சி முறைமையானது மற்றொரு 150 குக், 189 சமையல்காரர்கள், 162 சமையலறை உதவியாளர்கள், 190 அறை வேலையாட்கள், 27 குழாம் வேலையாட்கள், 270 உணவு பரிமாறுபவர்கள் மற்றும் பரிசாரகர்கள், 81 களஞ்சிய தொழிலாளர்கள், 54 உயிர் காப்பாளர்கள், 54 தோட்டக்காரர்கள், 108 பாதுகாப்பு ஊழியர்கள், 27 இரவு கணக்காய்வாளர்கள், 27 காசாளர்கள் மற்றும் 81 சலவை ஊழியர்கள் பயிற்சி அளிக்கக்கூடியவாறு விரிவுபடுத்தப்படல் வேண்டும். என்றாலும், தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமையற்காரர், அறை உதவியாளர் மற்றும் உணவு பரிமாறுபவர்கள்/ பரிசாரகர்கள் ஆகியோருக்கான பயிற்சி வழங்கலானது சந்தை தேவைகளை பூர்த்தி செய்வதில் மிகவும் பற்றாக்குறையான நிலைமையில் உள்ளன. தற்போது, மாகாணத்தின் தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (TVET) முறைமையின் கீழ் சமையல்காரர்கள், சமையலறை உதவியாளர்கள், குழாம் வேலையாட்கள், களஞ்சிய தொழிலாளர்கள், உயிர் காப்பாளர்கள், தோட்டக்காரர், பாதுகாப்பு ஊழியர்கள், இரவு கணக்காய்வாளர்கள், காசாளர் மற்றும் சலவை ஊழியர்கள் ஆகியோருக்கான பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை.

4.6.8 குடிசைக் கைத்தொழில்

தற்போது, பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் குடிசைக் கைத்தொழில் தொடர்பாக பெருமளவு எண்ணிக்கையான தொழிலாளர்களிற்கு பயிற்சிகளை வழங்கி வருகின்றன. பயிற்சியானது பிரதானமாக அழகுக்கலை நிபுணர், சிகை அலங்கரிப்பாளர், வேலைக்கான அடிப்படை திறன்கள், வீட்டு பராமரிப்பு உதவியாளர்கள், வெதுப்புநர்கள், விவசாயம் சார்ந்ந தொழிலாளர்கள், வரவேற்பாளர்கள், ஆகிய தொழிற்துறைகளை உள்ளடக்கி உள்ளது. எவ்வாறாயினும் கீழ் குறிப்பிட்ட எண்ணிக்கையான மேலதிக தொழிலாளர்களிற்கு அதாவது,

வெதுப்புநர்கள் (41), பழங்கள் மற்றும் மரக்கறிகள் பதப்படுத்துதல் (97), உணவு பதப்படுத்துதல் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் (60), விவசாயம்/ பண்ணை முகாமைத்துவம் (35), உற்பத்தி தொழில்நுட்பம் (15), ஆபரண உற்பத்தி (35), முன் அலுவலகம் மற்றும் வரவேற்பாளர்கள் (138), மற்றும் இரத்தினக்கல் வெட்டுபவர்கள் மற்றும் பட்டை தீட்டுபவர்கள் (26) ஆகியோரிற்கு மேலதிகமாக தேசிய தொழிற்தேர்ச்சித் தகைமை (NVQ) க்கான பயிற்சியானது வழங்கப்பட வேண்டி உள்ளது.

4.7 பயிற்சி நிறுவகங்களின் பதில்கள்

மத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் தொடர்பான முதற்கட்ட தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக நிறுவகங்கள்/ பதிலளிப்பவர்கள் மத்தியில் ஒரு கணக்கெடுப்பானது நடத்தப்பட்டது. மத்திய மாகாணத்தில் உள்ள பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிறுவகங்களில் சுமார் 80% ஆனவை இந்த ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பிரதானமாக ஒரு பகுதியாக கட்டமைக்கப்பட்ட கேள்வித்தாளானது உரிய நிறுவகங்களிடம் இருந்து அளவுசார் தரவுகளை சேகரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்விற்கான கேள்வித்தாளினை விட அலுவலக நிர்வாகிகள்/ அதிபர்கள்/ பயிற்சி நிறுவகங்களில் தலைவர்கள் ஆகியோரிடையில் தரம் சார்ந்த தரவுகளை சேகரிப்பதற்காக நேர்காணல்கள் நடத்தப்பட்டன. 2014 ஆம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் இவ்வாறான கணக்கெடுப்புக்கள் அந்தந்த நிறுவகங்களின் வளாகங்களில் நடத்தப்பட்டன. இக் கணக்கெடுப்பில், பாடநெறிகளின் எண்ணிக்கை, பாடநெறிகளுக்கான காலப்பகுதி, வரலாறு மற்றும் ஏனைய விவரங்கள் போன்ற அடிப்படை விவரங்களிற்கு மேலதிகமாக மாணவர் சனத்தொகை காரணிகள், மாணவர்களின் செயல்திறன்கள் ஆகியன தொடர்பான தகவல்களும் சேகரிக்கப்பட்டுள்ளன. நிறுவகங்கள் மற்றும் பாடநெறிகள் என்பவற்றின் முன்னேற்றம், தற்போது தீர்க்கப்படாமல் உள்ள

பிரச்சினைகள் மற்றும் எதிர்கால திட்டமிடல்கள் ஆகியன தகவல்களை சேகரிக்கும் போது கவனம் செலுத்தப்பட்ட பிரதான விடயங்களாகும்.

ஆய்வு முடிவின் அடிப்படையில், கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட 90% ஆன நிறுவகங்கள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக பயிற்சி வழங்கல்களை மேற்கொண்டு வருகின்றன என்பது தெரியவருகின்றது. பல பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் டிப்ளமோ பாடநெறிகளை விட சான்றிதழ் பாடநெறிகளையே கூடுதலாக நடாத்தி வருகின்றன. அனைத்து பாடநெறிகளின் எண்ணிக்கையில் 75% ஆன பாடநெறிகள் சான்றிதழ் பாடநெறிகளாக காணப்படுகின்றன. மத்திய மாகாணத்தில் பட்டத்திற்கான பாடநெறிகளை மேற்கொள்ளும் எந்தவொரு நிறுவகமும் இல்லை. அதற்கும் மேலதிகமாக அரசு அல்லது அரசுடன் இணைந்த நிறுவகங்கள் மிக இன்னமும் தங்களது பாடநெறிகளை ஊக்குவிப்பதற்கு அடிப்படை முறைகளை பயன்படுத்திவருவதும் எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, அரசு நிறுவகம் ஊடாக விளம்பரங்களை மேற்கொள்ளல், சுவரொட்டிகள், பதாகைகள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியன இவற்றின் மத்தியில் பிரபலம் வாய்ந்தனவாக உள்ளன. பயிற்சி நிறுவகங்களில் இணைந்து கொண்டுள்ள பெரும்பாலான மாணவர்கள் மத்திய மாகாணத்தினை சார்ந்தவர்கள் ஆவர். மாணவரகளை சேர்த்துக் கொள்ளல் மற்றும் வழங்கப்பட்டுவரும் சான்றிதழ்களின் எண்ணிக்கை என்பனவற்றில் படிப்படியான அதிகரிப்பானது காணப்படுகின்றது. சில நிறுவகங்கள் தங்களது பயிற்சிநெறிகளுக்காக போதியளவு எண்ணக்கையான மாணவர்களை சேர்த்துக்கொள்ள முடியாமையின் காரணமாக தங்கள் பயிற்சிநெறிகளை தொடர்ந்து நடாத்திச் செல்லும் பொருட்டு சிரமங்களை எதிர்நோக்குகின்றன என்பதனை அறியமுடிகின்றது. கணக்கெடுப்பிற்கு உட்படுத்தப்பட்ட சுமார் 90% ஆன நிறுவகங்கள் தங்களிடம் பயிற்சி பாடநெறிகளை செயற்திறன் மிக்கதாகவும் மற்றும் திறமையாகவும் நடாத்திச் செல்வதற்கு போதுமான வளங்கள் இல்லை என்று அபிப்பிராயத்தில் உள்ளன.

மத்திய மாகாணத்தில் உள்ள பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகள் பின்வருமாறு உள்ளன:

1. பயிற்சிபெற்ற கற்பித்தல் ஊழியர்கள் மற்றும் கல்விசார் உதவும் ஊழியர்களுக்கான பற்றாக்குறை;
2. இயந்திரங்கள், உபகரணங்கள், ஏனையவை போன்ற பயிற்சி வழங்கலிற்கு அவசியமான குறிப்பிட்ட பௌதிக வளங்களை இல்லாமை;
3. மாணவர்களுக்கான தங்குமிட மற்றும் சுகாதார வசதிகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை;
4. மேசன், தச்சு வேலை, சமையல், ஏனையவை போன்ற சில பாடநெறிகளிற்கு சாதகமற்ற சமூக மனப்பாங்கு காரணமாக தேவைகள் மிகக் குறைவாக காணப்படல்;
5. பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் மற்றும் தொழிற் துறை நிறுவகங்கள் இடையில் சிறந்த ஒருங்கிணைப்பு காணப்படாமை;
6. மற்றும் பயிற்சி நிறுவகங்களிற்கு இடையிலும் மற்றும் மத்தியிலும் சரியான ஒருங்கிணைப்பு காணப்படாமை;
7. Inadequate coordination from top to bottom on major structural and policy changes. பிரதான கட்டமைப்பு மற்றும் கொள்கை மாற்றங்கள் மீது மேலிருந்து கீழாக போதிய ஒருங்கிணைப்பு இல்லாமை.

பயிற்சி நிறுவகங்களது உள்ளக முகாமைத்துவம் மற்றும் எதிர்கால வாய்ப்புக்கள் ஆகிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தும் போது, பெரிய அளவிலான சில நிறுவகங்களில் மட்டும் சரியான திட்டமிடல் மற்றும் சிறந்த உள்ளக முகாமைத்துவம் என்பன காணப்படுகின்றன. அவர்களிடம் தங்களது நிறுவகங்களுக்கான எதிர்கால திட்டங்கள், செயற்பாட்டு திட்டங்கள் மற்றும் மூலோபாய திட்டங்கள் என்பன காணப்படும் அதேவேளை சில நிறுவகங்களிடம் எதிர்கால திட்டங்கள் ஒருபோதும் காணப்படவில்லை. ஆய்வு தரவுகளின் பிரகாரம்

62% ஆன அனைத்து நிறுவகங்களும் சரியான எதிர்கால திட்டமிடல்களை மேற்கொள்ளும் அதேசமயம் அவைகளுள் 8% ஆனவற்றில் எந்தவொரு எதிர்கால திட்டங்களும் காணப்படவில்லை என்பது தெரியவந்தது. ஏனைய நிறுவகங்கள் கொழும்பில் அமைந்துள்ள தலைமை நிறுவகங்கள் மூலம் வழங்கப்படும் திட்டங்களை பின்பற்றுகின்றன. சில நிறுவகங்கள் அவர்களின் வலிமை மற்றும் பலவீனங்கள் அத்துடன் வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் ஆகியவற்றினை அடையாளம் கண்டிருக்கவில்லை. இவ் வகையான நிறுவகங்கள், ஒருவேளை, பயிற்சி வழங்கல் தொடர்பான தெளிவான முன்னேற்றங்கள் வெளிக்காட்டப்படுவதில்லை. எனினும், 83% ஆன கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் தாங்களால் வழங்கப்படும் பாடநெறிகளையும் அத்துடன் மாணவர்களின் எண்ணிக்கையினையும் விரிவாக்க முடியும் என்பதனை ஏற்றுக்கொண்டனர்.

மேற்கொள்ளப்பட்ட கள விஜயங்களின் அனுபவங்களின் அடிப்படையில், ஆராய்ச்சி குழுவானது ஓர் பயிற்சி நிறுவகத்தின் முன்னேற்றம் மற்றும் செயற்திறன் என்பன கூடுதலாக அந்நிறுவகத்தின் தலைமைத்துவத்தில் தங்கியுள்ளது என தீர்மானித்துள்ளது. பயிற்சி நிறுவகங்களின் அக்கறை மற்றும் ஆர்வம் மிக்க தலைவர்கள் பாரிய சிரமங்கள் ஏதும் இல்லாமல் தங்கள் பயிற்சி திட்டங்கள் நடாத்தி செல்கின்றன. இவ்விடயம் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக உரையாடிய போது, மாகாணத்தில் அமைந்துள்ள ஓர் முன்னணி பயிற்சி நிறுவனத்தின் நிர்வாக தலைமை அதிகாரி ஒருவர் தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (TVET) முறைமையுடன் தொடர்புடைய பங்குதாரர்களுடன் முறையான உரையாடலினை மேற்கொள்ளாமல் தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (TVET) முறைமையில் கொண்டுவரப்பட்ட கட்டமைப்பு மாற்றங்கள் தொடர்பான கொள்கைகள் தொடர்பாக தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தினர். முறைமையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் மற்றும் ஒருங்கிணைக்கப்படாத சீரமைப்புக்கள் கீழ் மட்டத்தினரின் செயற்பாட்டினை தீவிரமாக பாதித்துள்ளதுடன் மாணவர்களை

மோசமாகவும் பாதித்துள்ளது. ஆகவே, முறைமையில் கொண்டுவரப்படவேண்டிய மாற்றங்கள் தொடர்பாக ஓர் தொடரான விவாதங்களை நடாத்தப்பட வேண்டியுள்ளதுடன் அவற்றினை செயல்படுத்த முன்னர் ஏற்படக்கூடிய அனைத்து பாதிப்புகள் தொடர்பாக மதிப்பீட்டினை மேற்கொள்ள வேண்டிய தேவையும் காணப்படுகின்றது.

4.8 தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) இனை பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் பதில்கள்

4.8.1 பயிற்சி பெற்ற நபர்களிடம் அடையாளம் காணப்பட்ட இயல்புகள்

இந்த ஆய்வு கற்கையானது சமீபத்திய ஆண்டுகளில் தொழிற் கல்வியினை பயின்ற 132 நபர்களிடத்தில் மேற்கொள்ளப்பட்டது. மாதிரியானது 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டுள்ள நபர்கள் மத்தியில் இருந்து தேர்வு செய்யப்பட்டது. இந்த 132 நபர்களும் மூன்று மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். தொழிற் கல்வியினை பயிலுபவர்களது பாலின பரம்பலிலானது ஆண்கள் பக்கத்தில் சற்று பாரபட்சமாகவே உள்ளது. சுமார் 53% ஆன மாதிரியானது ஆண்கள் ஆகும்.

அட்டவணை 4.10

பயிற்றப்பட்ட நபர்களின் பால், விவாக நிலை மற்றும் கல்வி

இயல்புகள்		%	எண்ணிக்கை
பால்	ஆண்	53	
	பெண்	47	
	மொத்தம்	100	
பதிலளித்தவர்களின் எண்ணிக்கை			132

இயல்புகள்		%	எண்ணிக்கை
விவாக நிலை	திருமணமானவர்	11	
	திருமணமாகாதவர்	89	
	மொத்தம்	100	
பதிலளித்தவர்களின் எண்ணிக்கை			132
கல்வித் தகைமைகள்	க. பொ. த (சா / த) சித்திபெறவில்லை	17	
	க. பொ. த (சா / த) - சித்தி	12	
	க. பொ. த. (உ / த) சித்திபெறவில்லை	15	
	க. பொ. த. (உ / த) - சித்தி	56	
	மொத்தம்	100	
பதிலளித்தவர்களின் எண்ணிக்கை			132
க. பொ. த. (உ/ த) - பிரிவு	கலை	44	
	வர்த்தகம்	22	
	விஞ்ஞானம்	18	
	விவசாயம்	11	
	கணிதம்	5	
	மொத்தம்	100	
பதிலளித்தவர்களின் எண்ணிக்கை			94

மூலம்: கள தரவு சேகரிப்பு, ஒக்ரோபர் தொடக்கம் டிசெம்பர் வரையானவை, 2013

வெளிப்படையாக, தொழிற் கல்வியினை மேற்கொள்கின்ற சுமார் 90% ஆன நபர்கள் திருமணமாகாத இளைஞர்கள் ஆவர். பயிற்சி பெற்றவர்களில் பெரும்பாலானவர்கள் க. பொ. த. (உ/ த) பரீட்சையில் சித்தியடைந்தவர்களாவர். க. பொ. த. (உ/ த) இல் தகுதி பெற்ற மாணவர்களுக்கு தொழிற் பயிற்சியிற்கான அனுமதியினை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது. இம் மாதிரியில், க. பொ. த (உ/ த) தகைமையுடன் 94 எண்ணிக்கையான பயிற்சி பெற்றவர்கள் உள்ளனர். அவர்களில், 44% இனர் கலை பிரிவில் இருந்தும், 22% இனர் வர்த்தக பிரிவில் இருந்தும், 18% இனர் விஞ்ஞான பிரிவில் இருந்தும் மற்றும் 11% இனர் விவசாய பிரிவில் இருந்தும் வந்துள்ளனர். இங்கு சுவாரஸ்யமான விடயம் யாதெனில், தொழிற் கல்வியினை பயின்றுள்ள 56% ஆன நபர்கள் க. பொ. த (உ/ த) கலை பிரிவு பரீட்சையின் ஊடாக தகுதிபெற்று வந்தவர்கள் அல்லர்.

பயிற்சி வகை தொடர்பான மாதிரியின் கலவையானது அட்டவணை 4.11 இல் தரப்பட்டுள்ளது. மாதிரியில் 21 இற்கும் மேற்பட்ட பல்வேறு வகையான பயிற்சிகள் காணப்படுகின்றன.

அட்டவணை 4.11

பயிற்றப்பட்ட நபர்களின் அடிப்படையில் அளிக்கப்பட்ட பயிற்சிகளின் வகைகள்

தொ/ இல	பயிற்சியின் வகை	%
1	கணனி பிரயோக உதவியாளர்	7.9
2	மின்னியலாளர்	6.6
3	அழகுக்கலை நிபுணர்	5.3
4	தன்னியக்க இயந்திர திருத்துநர்	5.3

தொ/ இல	பயிற்சியின் வகை	%
5	சிகை அலங்கார கைவினைரை	3.9
6	காய்ச்சி இணைப்பவர்	5.3
7	Mason கட்டுமான கைவினைஞர் - மேசன்	1.3
8	மர வேலை கைவினைஞர் - தளபாடம்	2.6
9	மோட்டார் சைக்கிள் திருத்துநர்	3.9
10	வளிச் சீராக்கி திருத்துநர்	3.9
11	கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர்	5.3
12	வெதுப்புநர்	2.6
13	வானொலி, தொலைக்காட்சி மற்றும் வீட்டு உபகரண திருத்துநர்	2.6
14	அலுமினிய சட்டகம் புனைபவர்	5.3
15	கணனி வரைபட கலைஞர்	6.6
16	மரவேலை கைவினைஞர் - கட்டடம்	1.3
17	தையற் காரர்	1.3
18	மின் மோட்டர் முறுக்குநர்	3.9
19	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழில்நுட்பவியலாளர்	2.6
20	பொறிவலர்	3.9
21	உணவு பதப்படுத்துநர்	1.3
22	ஏனைய	3.9
	மொத்தம்	100.0
	பதில் அளித்தவர்களின் எண்ணிக்கை	132

மூலம்: கள தரவு சேகரிப்பு, ஒக்ரோபர் தொடக்கம் டிசெம்பர் வரையானவை, 2013

அட்டவணை 4.12 இல் அவர்கள் பெற்றுக்கொண்ட பயிற்சிகளின் தன்மை தொடர்பான விபரங்கள் தரப்பட்டுள்ளன. மாதிரியில் சுமார் 87% இனர் சான்றிதழ் இற்கான பயிற்சி பாடநெறியினை பயின்றுள்ளனர். அவர்களில் 76% இற்கும் மேற்பட்டவர்கள் அரச துறை பயிற்சி நிறுவகங்களிலிருந்து பயிற்சிகளை பெற்றுள்ளனர். சுமார் 71% இனர் ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதிக்குரிய பாடநெறிகளை பயின்றுள்ளனர். அத்துடன் 87% இனர் முழு நேர அடிப்படையிலான பாடநெறிகளை பின்பற்றியுள்ளனர்.

அட்டவணை 4.12

பயிற்சி மற்றும் நிறுவக தகவல்கள்

பயிற்சிகள் தொடர்பான தகவல்கள்		**%**
பயிற்சி	சான்றிதழ்	86.8
	டிப்ளமோ	13.2
நிறுவகம்	அரச துறை	76.3
	தனியார் துறை	19.7
	அரச சார்பற்ற துறை	3.9
காலம்	ஒரு வருடத்திற்கும் குறைவானவை	71.1
	ஒரு வருடத்திற்கும் கூடுதலானவை	28.9
தன்மை	முழு நேரம்	86.8

	பகுதி நேரம்	13.2
பதிலளித்தவர்களின் எண்ணிக்கை		132

மூலம்: கள தரவு சேகரிப்பு, ஒக்ரோபர் தொடக்கம் டிசெம்பர் வரையானவை, 2013

4.8.2 பயிற்சி பெற்ற நபர்களது வேலைவாய்ப்பு/ வேலைவாய்ப்பின்மை

தமது வேலைவாய்ப்பு நிலைமை பற்றிய கேள்விக்கு பதிலளித்த 124 எண்ணிக்கையான நபர்களில், தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) தொடர்பான பயிற்சியினை பெற்ற சுமார் 53% ஆனோர் வேலைவாய்ப்பினை பெற்றுக் கொண்டுள்ளதுடன் 45% ஆனோர் வேலைவாய்ப்பு அற்றவர்களாகவும் உள்ளனர் (அட்டவணை 4.13 இனை பார்க்க). பயிற்சியினை பெற்றுக்கொண்டுள்ளவர்கள் மத்தியில் வேலைவாயப்பின்மை ஆனது மிகவும் அதிகளவில் உள்ளதாக தெரிகின்றது.

அட்டவணை 4.13

தேசிய தொழிற் தகைமையினை (NVQ) பெற்றுக்கொண்ட நபர்களுக்கான வேலைவாய்ப்பு நிலைமை

பணி நிலை	%
வேலைவாய்ப்பில் ஈடுபடுதல்	53.2
வேலைவாய்ப்பின்மை	45.2
குறிப்பிடவில்லை	1.6
மொத்தம்	100.0
பதிலளித்தவர்களின் எண்ணிக்கை	124

மூலம்: கள தரவு சேகரிப்பு, ஒக்ரோபர் தொடக்கம் டிசெம்பர் வரையானவை, 2013

வரைபடம் 4.1

தேசிய தொழிற் தகைமையினை (NVQ) பெற்றுக்கொண்ட நபர்களிடையில் வேலைவாய்ப்பின்மைக்கான காரணங்கள்



மூலம்: கள தரவு சேகரிப்பு, ஒக்ரோபர் தொடக்கம் டிசெம்பர் வரையானவை, 2013, பதில் அளித்தவர்களின் எண்ணிக்கை 56 ஆகும்

வரைபடம் 4.1 மற்றும் அட்டவணை 4.14 என்பவற்றில் தேசிய தொழிற் தேர்ச்சி தகைமைகள் (NVQ) தொடர்பான பயிற்சிகளை பெற்றுக்கொண்ட இளைஞர்கள் மத்தியிலான வேலைவாய்ப்பின்மைக்குரிய காரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. சுமார் 35% ஆன வேலைவாய்ப்பற்றோர் எந்தவொரு வேலைவாய்ப்பினையும் பெற்றுக்கொள்ளாமையின் காரணமாக அவர்கள் வேலைவாய்ப்பற்றவர்களாக உள்ளனர். பல பதில் அளித்தவர்கள் தாம் இந்த கணக்கெடுப்பு முடிவடைந்ததன் பின்னர் உடனடியாக வேலைவாய்ப்பு ஒன்றினை பெற்றுக்கொள்வோமா என திட்ட குழுவிடம் மீண்டும் மீண்டும் விசாரித்துக் கொண்டமையானது உண்மையில் ஓர் கவலைக்குரிய விடயமாகும். இது பயிற்சி பெற்ற நபர்கள் அரச துறையில்

தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளமையினை எடுத்துக்காட்டுகின்றது.

பதில் அளித்தவர்களில் சுமார் 21% இனர் தாங்கள் மேலதிக கல்வி மற்றும் பயிற்சியின் காரணமாக வேலைவாய்ப்பற்றவர்களாக இருப்பதாக தெரிவித்தனர். 17% இனர் தங்களது கல்வி மற்றும் பயிற்சி என்பன பெற்றுக்கொண்ட தொழிலுடன் பொருந்தாத காரணத்தினால் தாம் வேலைவாய்ப்பற்றோராக உள்ளதாக தெரிவித்தனர். 10% இனர் தாம் பெற்றுக்கொண்ட தொழிலுக்கான சம்பளம் போதுமானதாக இல்லாமையினால் வேலைவாய்ப்பில்லாமல் உள்ளனர். சுமார் 7% பயிற்சி பெற்ற நபர்கள் தாம் பெற்றுக் கொண்ட பயிற்சியானது ஓர் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கு போதுமானதாக இல்லாமையினால் வேலைவாய்ப்பு அற்றவர்களாக உள்ளனர். ஒருமித்ததாக பயிற்சி பெற்ற வேலைவாய்ப்பற்ற சுமார் 24% நபர்கள் தாம் பெற்றுக்கொண்ட பயிற்சிகள் தொழில்களுக்கு ஏற்புடையதாகவும் போதுமானதாகவும் காணப்படாமையினை அடையாளம் கண்டுள்ளதுடன் அதுவே இவர்களது தொழில்வாய்பின்மைக்கு மிக முக்கியமான காரணமாக விளங்குகின்றது. இதுவே ஒப்பீட்டளவில் பயிற்சி பெற்றவர்கள் மத்தியிலான வேலைவாய்ப்பின்மையின் பெரிய பங்காகவும் உள்ளது. மேலும், பதிலளித்தவர்களில் 30% இனர் இதனை தங்களது வேலைவாய்ப்பின்மைக்கான இரண்டாவது காரணமாகும் என அடையாளம் கண்டுள்ளனர். இவ்வாறு, கணிசமான எண்ணிக்கையான நபர்கள் தாம் பெற்றுக்கொண்ட பயிற்சிகள் தொழில்வாய்ப்புகளிற்கு பொருத்தமற்றவையாக அல்லது போதுமற்றவையாக காணப்படுவதாக குறிப்பிடுகின்றமையின் காரணமாக பயிற்சி வழங்குநர்கள் பயிற்சித் திட்டங்கள் மற்றும் பயிற்சி வழங்கல்கள் பற்றி கவனமாக சிந்தித்தல் வேண்டும்.

அட்டவணை 4.14

தேசிய தொழிற் தகைமையினை (NVQ) பெற்றுக்கொண்ட நபர்களிடையில் வேலைவாய்ப்பின்மைக்கான காரணங்கள்

தொ/ இல	காரணம்	1வது தெரிவு	2வது தெரிவு	3வது தெரிவு
1	எந்தவொரு தொழிலினையும் பெற்றுக் கொள்ளவில்லை	34.5	0.0	0.0
2	பெற்றுக் கொண்ட தொழிலானது கல்வி மற்றும் பயிற்சி என்பவற்றுக்கு பொருத்தமானது அல்ல	17.2	20.0	33.3
3	பெற்றுக்கொண்ட தொழிலிற்கான வேலை நிலைமைகள் கவர்ச்சிகரமானதாக இல்லை	0.0	40.0	0.0
4	பெற்றுக்கொண்ட தொழிலுக்கான சம்பளம் போதுமானதாக இல்லை	10.3	0.0	33.3
5	பெற்றுக்கொண்ட தொழிலானது குடும்ப நிலையிற்கு பொருத்தமானதாக இல்லை	0.0	10.0	0.0
6	தொழில் ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கு பெற்றுக்கொண்ட பயிற்சியானது போதுமானதாக இல்லை	6.9	20.0	33.3
7	மேலதிக கல்வி/ பயிற்சி	20.7	10.0	0.0
8	பிற	10.3	0.0	0.0
	மொத்தம்	100.0	100.0	100.0
	பதிலளித்தவர்களின் எண்ணிக்கை	56	20	12

மூலம்: கள தரவு சேகரிப்பு, ஒக்ரோபர் தொடக்கம் டிசெம்பர் வரையானவை, 2013

அட்டவணை 4.15

தொழிற்கல்வி மற்றும் பயிற்சியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்மைகள்

தொ/ இல	பயிற்சியின் நன்மைகள்	1வது தெரிவு	2வது தெரிவு	3வது தெரிவு
1	ஒரு வேலை பெற்றேன்	32.8	20.0	0.0
2	பயிற்சியினை பெற்ற பின்னர் வேலைக்கான சம்பளம் அதிகரித்துள்ளது	5.2	0.0	0.0
3	சுய தொழில் வேலைவாய்ப்பில் இருந்து வருமானம் அதிகரித்துள்ளது	0.0	3.3	0.0
4	சேவையினை உறுதிப்படுத்தல்/ தொழிலில் பதவி உயர்வு	1.7	3.3	5.6
5	மற்றொரு வேலைக்கு மாற முடியும்	1.7	3.3	5.6
5	கூடுதல் வருமானத்தினை உருவாக்கல்	0.0	0.0	22.2
7	மற்றவர்களுக்கு பயிற்சி அளிக்க முடியும்	3.4	3.3	11.1
8	வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கான சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படல்	0.0	6.7	5.6
9	மேலதிக பயிற்சியினை பெற உதவியது	24.1	23.3	16.7
10	ஓர் தேர்ச்சி பெற்ற நபராக சமூக அங்கீகாரம்	19.0	36.7	33.3
11	பயிற்சி எந்தவொரு நன்மையினையும் வழங்கவில்லை	12.1	0.0	0.0
	மொத்தம்	100.0	100.0	100.0
	Number of Respondents பதிலளித்தவர்களின் எண்ணிக்கை	105	51	32

மூலம்: கள தரவு சேகரிப்பு, ஒக்ரோபர் தொடக்கம் டிசெம்பர் வரையானவை, 2013

4.8.3 பயிற்சியின் நன்மைகள்

அட்டவணை 4.15 இல் தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) பயிற்சியினால் ஏற்படும் நன்மைகள் பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன. இந்த கேள்விக்கு பதில் அளித்த நபர்களின் எண்ணிக்கையானது 105 ஆகும். பதில் அளித்தவர்களில் சுமார் 33% இனர் தாங்கள் பயிற்சி பெறுவதன் முக்கிய நோக்கமானது தொழில் ஒன்றினை பெற்றுக்கொள்வதாகும் என்பதனை ஏற்றுக்கொண்டனர். அவர்களில் சுமார் 24% இனர் தேசிய தொழிற் தேர்ச்சி தகைமைக்கான (NVQ) பயிற்சிகள் மேலதிக பயிற்சிகளை பெற்றுக்கொள்வதற்கு உதவியுள்ளன என தெரிவித்ததுடன் சுமார் 19% இனர் பயிற்சியின் மூலம் தங்களது சமூக அங்கீகாரமானது மாநில மேம்பட்டுள்ளது அல்லது உயர்ந்துள்ளது என தெரிவித்தனர். ஐந்து சதவீதத்தினர் பயிற்சி பின்னர் தங்களது சம்பளம் அதிகரித்துள்ளது என கூறினர். சுமார் 3% இனர் தங்கள் பெற்றுக்கொண்ட பயிற்சியானது ஏனைய நபர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு உதவியுள்ளது என தெரிவித்தனர். இங்கு சுவாரசியமான விடயம் யாதெனில், சுமார் 12% பதில் அளித்தவர்கள் தாங்கள் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி மூலம் எந்தவொரு நன்மையும் பெற்றுக்கொள்ளவில்லை என்பதனை ஏற்றுக்கொண்டனர்.

4.8.4. பயிற்சி நிறுவகங்களில் பயிற்சி வழங்கல் மற்றும் வசதிகள் தொடர்பான அபிப்பிராயங்கள்

தேசிய தொழிற் தேர்ச்சி தகைமைகளை (NVQ) பெற்றுக்கொண்டுள்ளவர்கள் தெரிவித்த பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் மற்றும் பயிற்சிநெறிகள் தொடர்பான வசதிகள் பற்றிய அபிப்பிராயங்கள் அட்டவணை 4.16 இல் தரப்பட்டுள்ளன. பதில்களை அளித்தவர்களின் எண்ணிக்கையானது 96 இலிருந்து 108 வரையில் வேறுபடுகின்றது. சுமார் 57% இனர் தாங்கள் பயிற்சி பெற்ற நிறுவகத்தில் பயிற்சி வழங்கலிற்கு போதுமான கட்டிட வசதிகள் உள்ளது என கூறினர். 6% இனர் மட்டுமே கட்டிட

வசதிகள் போதுமானவையாக அல்ல என தெரிவித்தனர். பதில் அளித்தவர்களில் 38% இனர் இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை அல்லது இக்கருத்துடன் உடன்படவில்லை.

மறுபுறம், 100 எண்ணிக்கையான பதில் அளித்தவர்களில் 66% இனர் பயிற்சி நிறுவகங்களில் போதுமான தங்குமிட வசதிகள் இல்லை என நம்புகின்றனர். பதில் அளித்தவர்களில் 12% இனர் நடுநிலை வகித்ததுடன் 22% இனர் பயிற்சி நிறுவகங்களில் போதுமான தங்குமிட வசதிகள் உள்ளன என நம்புகின்றனர். இவ்வாறு, தங்குமிட வசதிகள் தொடர்பான பற்றாக்குறையானது மாகாணத்தில் தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி (TVET) மற்றும் பயிற்சி முறைமையின் பௌதிக வளங்கள் குறித்து ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது.

104 எண்ணிக்கையான பதில் அளித்தவர்களில், 61% இனர் பயிற்சி நிறுவகங்களில் பயிற்சி வழங்கலிற்கு போதுமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் காணப்படுகின்றன என தெரிவித்ததுடன் 24% இனர் பயிற்சி நிறுவகங்களில் பயிற்சி வழங்கலிற்கு போதுமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் காணப்படவில்லை என தெரிவித்தனர். 106 எண்ணிக்கையான பதில் அளித்தவர்களில் ஏறக்குறைய 66% இனர் பயிற்சி நிறுவகங்களில் தகுதியான ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுநர்கள் போதிய எண்ணிக்கையில் உள்ளனர் என நம்புகின்றனர். பதில் அளித்தவர்களில் 10% இனர் மட்டுமே ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுநர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லை என தெரிவித்தனர்.

96 எண்ணிக்கையான பதில் அளித்தவர்களில், தகவலறிந்த சுமார் 59% இனர் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் பயிற்சியாளர்களை தொடர்புடைய செய்முறை பயிற்சிகளுக்கு உட்படுத்துகின்றன எனவும் மற்றும் 13% இனர் மட்டுமே இந்த கருத்துடன் உடன்பாடு இல்லை எனவும் தெரிவித்தனர். 100 எண்ணிக்கையான பதில்

அளித்தவர்களில் 44% இனர் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள், தொழிற் துறை நிறுவகங்களுக்கு பயிலுநர்களை அறிமுகப்படுத்தும் வேலைத்திட்டங்களை நடாத்துகின்றன என நம்புகின்றனர் அத்துடன் 24% இனர் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் செய்முறை பயிற்சிகளிற்கு மாணவர்களை அறிமுகப்படுத்தும் வேலைத்திட்டங்களை நடாத்துவது இல்லை எனவும் கூறினர். இந்த விடயத்தில், பதில் அளித்தவர்களில் 32% இனர் இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை அல்லது இக்கருத்துடன் உடன்படவில்லை.

108 எண்ணிக்கையான பதில் அளித்தவர்களில் 79% இனர் பயிற்சி நிறுவகமானது மாணவர்கள் சென்று வரக்கூடியதான ஓர் வசதியான இடத்தில் அமைந்துள்ளது என்று எண்ணுகின்றனர். பதில் அளித்தவர்களில் 9% இனர் மட்டுமே பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் அமைந்துள்ள இடமானது மாணவர்கள் சென்று வருவதற்கு சிரமமாக உள்ளது என நம்புகின்றனர். பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் பிரதேசத்திற்கு பொருத்தமான பயிற்சிநெறிகளை நடாத்துகின்றனவா என்ற தேசிய தொழிற் தேர்ச்சி தகைமைக்கான (NVQ) பயிற்சி பெற்றவர்கள் மத்தியில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்தவர்களில் 69% இனர் ஆம் என கூறினர். பதில் அளித்தவர்களில் 10% இனர் மட்டுமே பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் பிரதேசத்திற்கு பொருத்தமான பயிற்சிநெறிகளை நடத்தவில்லை என நம்புகின்றனர்.

அட்டவணை 4.16

பயிற்சி மற்றும் பயிற்சிக்கான வசதிகள் தொடர்பாக பயிற்சி வழங்கப்பட்ட நபர்களின் கருத்துகள்

தொ / இல	அறிக்கை: பயிற்சி நிறுவகம்	கடுமையாக உடன்பாடு இல்லை	உடன்பாடு இல்லை	நடுநிலை	அளவிற்கு ஏற்கிறேன்	வலிமையாக ஏற்கிறேன்	மொத்தம்	பதிலளித்தவர்களின் எண்ணிக்கை
1	பயிற்சி வழங்கலிற்கு போதுமான கட்டிட வசதிகள் உள்ளன	0	6	38	23	34	100	106
2	மாணவர்களுக்கு போதுமான தங்குமிட வசதிகள் உள்ளன	50	16	12	6	16	100	100
3	பயிற்சி வழங்கலிற்கு போதுமான இயந்திரங்கள்/ உபகரணங்கள் உள்ளன	12	12	15	38	23	100	104
4	தகுதியான ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுநர்கள் போதிய எண்ணிக்கையில் உள்ளனர்	8	2	25	26	40	100	106
5	தொடர்புடைய செய்முறை பயிற்சியானது மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது	13	0	29	15	44	100	96
6	கைத்தொழிற் துறை நிறுவகங்களிற்கு மாணவர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துகின்றது	8	16	32	12	32	100	100
7	மாணவர்கள் சென்று வரக்கூடியதான ஓர் வசதியான	0	9	11	31	48	100	108

தொ / இல	அறிக்கை: பயிற்சி நிறுவகம்	கடுமையாக உடன்பாடு இல்லை	உடன்பாடு இல்லை	நடுநிலை	அளவிற்கு ஏற்கிறேன்	வலிமையாக ஏற்கிறேன்	மொத்தம்	பதிலளித்தவர்களின் எண்ணிக்கை
	இடத்தில் அமைந்துள்ளது							
8	பிரதேசத்திற்கு மிகவும் பொருத்தமான பயிற்சிநெறிகளை நடத்துகிறது	2	8	21	19	50	100	104

மூலம்: கள தரவு சேகரிப்பு, ஒக்ரோபர் தொடக்கம் டிசெம்பர் வரையானவை, 2013

மேலே உள்ள பகுப்பாய்வின் சுருக்கமானது பின்வருமாறு:

1. தற்போதைய பயிற்சித் திட்டங்களை நடத்துவதில் மனித மற்றும் பௌதிக வளங்கள் தீவிர பிரச்சினைகளாக காணப்படவில்லை;
2. பயிற்சி நிறுவகங்களில் தங்குமிட வசதிகள் போதுமானவையாக இல்லை;
3. பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் பயிற்சியாளர்களை செய்முறை பயிற்சிகளிற்கு உட்படுத்தினாலும், மாணவர்களின் பதில்கள் குறைவாக உள்ளமையினால் செய்முறை பயிற்சிகள் போதாமையானதாக இருக்கலாம்;
4. தொழிற் துறை நிறுவகங்களிற்கு பயிற்சியாளர்களை அறிமுகப்படுத்தவதற்கு பயிற்சி நிறுவகங்களால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் போதுமானதாக இருக்கலாம்;
5. பயிற்சி நிறுவகங்களின் அமைவிடமானது பயிற்சி வழங்கலிற்கு ஒரு தடையாக கருதப்படவில்லை; மற்றும்
6. பயிற்சி நிறுவகங்களால் நடத்தப்பட்டுவரும் பயிற்சி பாடநெறிகள் பிரதேசத்திற்கு பொருத்தமானதாக உள்ளது.

4.8.5. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் விரிவாக்கம் தொடர்பான அபிப்பிராயங்கள்

அட்டவணை 4.17 இல் தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) இனை பெற்றுக்கொண்டவர்கள் மூலம் மத்திய மாகாணத்தில் தொழிற் கல்வி மற்றும் பயிற்சியினை மேம்படுத்துவது தொடர்பாக வழங்கப்பட்ட கருத்துக்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. இந்த கேள்விக்கு 116 தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) இனை பெற்றுக்கொண்டவர்கள் பதிலளித்தனர். பதில் வழங்கியவர்களில் சுமார் 33% இனர் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி தொடர்பாக பாடசாலையை விட்டுச் சென்ற மாணவர்களுக்கு கல்வி புகட்டுவதானது பயிற்சிகளை விரிவுபடுத்துவதற்கு மிகவும் முக்கியமானது என நம்பப்படுகின்றது. மற்றொரு 31% இனர் புதிய பாடநெறிகளை அறிமுகம் செய்வது அவசியமானது என நம்புகின்றனர். 116 எண்ணிக்கையான பதில் வழங்கியவர்களில் 16% இனர் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் பயிற்சி பாடநெறிகளிற்கு இன்னும் மேலதிகமாக மாணவர்களை சேர்த்துக்கொள்வதன் மூலம் அவற்றினை விரிவுபடுத்த முடியும் என நம்புகின்றனர். மாவட்ட மட்டத்தில் புதிய பயிற்சி நிறுவகங்களை நிறுவுவதற்கு பதில் வழங்கியவர்களில் 12% இனர் ஆதரவு வழங்கினர். பதில் வழங்கியவர்களில் சுமார் 9% இனர் தொழிற் கல்வி மற்றும் பயிற்சிகளை விரிவாக்குவதற்கு பெற்றோர்களுக்கு கல்வி புகட்டுதல் வேண்டும் என நம்புகின்றனர்.

இந்த கேள்விக்கு இரண்டாவது மற்றும் மூன்றாவது தேர்வுகளை பதில்களாக வழங்கியவர்களின் எண்ணிக்கை 78 ஆகும். அவர்கள் மத்தியில், 26% ஆனோர் மாகாணத்தில் தொழிற் கல்வி மற்றும் பயிற்சியினை மேம்படுத்துவதற்கான இரண்டாவது முக்கியமான நடவடிக்கையாக புதிய பயிற்சி நிறுவகங்களை நிறுவுதல் என நம்புகின்றனர். 42% பதில் வழங்கியவர்களில் அரைப் பங்கினர் பயிற்சிகளை விரிவாக்குவதற்கு தொழிற் பயிற்சி தொடர்பாக பாடசாலையை விட்டுச் சென்றவர்களுக்கும் மற்றும் மீதி அரைப்பங்கினர் பெற்றோர்களுக்கும் தெளிவூட்டல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என தெரிவித்தனர். 15% மற்றும் 13%

பதில் வழங்கியவர்கள் மாகாணத்தில் தொழிற் கல்வியினை விரிவாக்குவதற்கு உரிய தீர்வுகளாக முறையே தற்போது காணப்படும் பயிற்சிநெறிகளிற்கு இன்னும் மேலதிகமாக மாணவர்களை சேர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் புதிய பயிற்சி பாடநெறிகளை அறிமுகம் செய்யவேண்டும் எனவும் தெரிவித்தனர்.

அட்டவணை 4.17

தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வழங்கலினை விரிவு படுத்துவதற்கான ஆலோசனைகள்

தொ/இல	ஆலோசனைகள்	% தெரிவு		
		1ஆவது	2ஆவது	3ஆவது
1	தற்போது காணப்படும் பயிற்சி நெறிகளிற்கு இன்னும் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் சேர்த்துக்கொள்ளல்	16	15	10
2	மாவட்ட ரீதியில் புதிய பயிற்சி நிறுவகங்களை ஸ்தாபித்தல்	12	26	15
3	புதிய பயிற்சிநெறிகளை/ பாடநெறிகளை அறிமுகம் செய்தல்	31	13	31
4	தொழிற் கல்வி தொடர்பாக பாடசாலையை விட்டுச்சென்றவர்களுக்கு கற்பித்தல்	33	21	15
5	தொழிற் கல்வி தொடர்பாக பெற்றோர்களுக்கு கற்பித்தல்	9	21	10
6	பிற	0	5	18
	மொத்தம்	100	100	100
	பதிலளித்தவர்களின் எண்ணிக்கை	116	78	78

மூலம்: 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கள தரவு சேகரிப்பு

4.9 தற்போதைய தேசிய தொழிற் தகைமை (NVQ) இனை பெற்றுக்கொள்வதற்காக பயிற்சிபெறும் பயிலுநர்களின் பதில்கள்

இந்த பிரிவில் குறிப்பாக பயிற்சியாளர்களின் இயல்புகள், பாடநெறி மற்றும் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் பற்றிய மனோநிலை, பயிற்சி தொடர்பான பிரச்சினைகள் மற்றும் மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சிகளை மேம்படுத்த தேவையான பரிந்துரைகள் ஆகியன தொடர்பாக தற்போதைய பயிற்சியாளர்களது பதில்கள் ஆராயப்படுகின்றது. இம்மாதிரியானது மூன்று மாவட்டங்களிலும் அமைந்துள்ள பல்வேறு பயிற்சி நிறுவகங்களை சேர்ந்த 130 பயிற்சியாளர்கள் கொண்டுள்ளது.

4.9.1 தற்போதைய பயிலுநர்களிடம் அடையாளம் காணப்பட்ட பிரதான இயல்புகள்

பயிற்சியாளர்களின் பால் தொடர்பான பரம்பலானது கிட்டத்தட்ட சமமாக உள்ளது ஆனால் அவர்களின் கல்வி பின்னணியானது முற்றிலும் மாறுபட்டதாக காணப்படுகின்றது. பெரும்பாலான மாணவர்கள் க. பொ. த (உ/ த) வரையிலான கல்வி நிலையினை கொண்டுள்ளனர். க. பொ. த (உ/ த) இல் சித்தியடைந்துள்ள பெண் மாணவர்களின் சதவீதமானது சுமார் 85% ஆகும். ஆனால் ஆண் மாணவர்களில் 56% இனர் க. பொ. த (உ / த) விடவும் குறைந்த கல்வித் தகைமைகளை கொண்டுள்ளனர்.

அட்டவணை 4.18

தற்போதைய பயிலுநர்களின் கல்வி நிலை மற்றும் பால்

கல்வி நிலை	ஆண்	%	பெண்	%

க. பொ. த சா/ த வரை	26	40.6	2	3.0
க. பொ. த சா/ த சித்தி	10	15.6	0	0.0
க. பொ. த உ/ த வரை	16	25.0	8	12.1
க. பொ. த உ/ த சித்தி	12	18.7	56	84.8
மொத்தம்	64	100	66	100

மூலம்: கள தரவு சேகரிப்பு, ஒக்ரோபர் தொடக்கம் டிசெம்பர் வரையானவை, 2013

4.9.2 கற்பிக்கப்படும் பாடநெறிகள்

மாதிரியில் உள்ள 130 பயிற்சியாளர்களும் 24 வெவ்வேறு பாடநெறிகளை பின்பற்றுகின்றனர். அவர்கள் மத்தியில், கூடுதலான கேள்விகள் நிலவுகின்ற பாடநெறிகளாக கணனி இயக்குநர்கள் (13%), அழகுக் கலைஞர்கள் மற்றும் சிகை அலங்கார கைவினைஞர்கள் (12%), படவரைஞர்கள் (9%), மின்னியலாளர்கள் (8%), காய்ச்சி இணைப்பவர்கள் (8%), கடைசல் இயந்திரம் இயக்குநர்கள் (6%), மோட்டார் திருத்துநர்கள் (5%), ஆங்கில தட்டெழுத்தாளர்கள் (5%) மற்றும் கட்டுமான தொழில்நுட்பம் /திட்டமிடல் (5%) போன்றன காணப்படுகின்றன. பெண் மாணவர்கள் முக்கியமாக கணனி இயக்குநர்கள், அழகுக் கலைஞர்கள் மற்றும் சிகை அலங்கார கைவினைஞர்கள், கணினி படவரைஞர்கள், ஆங்கில தட்டெழுத்தாளர்கள் மற்றும் கட்டுமான திட்டமிடல் பாடநெறிகள் போன்றனவற்றினை பின்பற்றுகின்றனர். மறுபுறம், ஆண் மாணவர்கள் முக்கியமாக மின் உபகரண திருத்துநர்கள், காய்ச்சி இணைப்பவர்கள் மற்றும் கடைசல் இயந்திரம் இயக்குநர்கள் போன்ற பாடநெறிகளை பின்பற்றுகின்றனர். அட்டவணை 5.19 இல் பாலின அடிப்படையில் பல்வேறு பாடநெறிகளை பயிலுகின்ற மாதிரி பயிற்சியாளர்களின் பரம்பல் தொடர்பான விபரங்கள் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 4.19

தற்போதைய பயிலுநர்களால் பின்பற்றப்படுகின்ற பாடநெறிகள்

தொ/ இல	பாடநெறி	ஆண்	பெண்	மொத்தம்	%
1	கணனி இயக்குநர்	2	15	17	13.0
2	மின்னியலாளர்	9	1	10	7.6
3	அழகுக் கலைஞர்		12	12	9.2
4	மோட்டார் திருத்துநர்	6	-	6	4.6
5	சிகை அலங்கரிப்பாளர்		4	4	3.0
6	காய்ச்சி இணைப்பவர்	8	2	10	7.6
7	மேசன்	2	-	2	1.5
8	தச்சர்	2	-	2	1.5
9	வளிச்சீராக்கி மற்றும் குளிரூட்டி பழுதுபார்த்தல்	3	-	3	2.3
10	கணனி வன்பொருள்	2	2	4	3.0
11	லேத் இயந்திர இயக்குநர்	10	-	10	7.6
12	வெதுப்புநர்	2	-	2	1.5
13	தளபாட திருத்துநர்	2	-	2	1.5
14	அலுமினிய தொழிலாளர்	3	-	3	2.3
15	கணனி படவரைஞர்	2	10	12	9.2
16	தையற்காரர்	1	-	1	0.7
17	மின் மோட்டர் முறுக்குநர்	3	-	3	2.3
18	கணனி வரைபட கலைஞர்	2	2	4	3.0
19	கட்டுமான திட்டமிடுதல்	2	4	6	4.6
20	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப	1	4	5	3.8

தொ/ இல	பாடநெறி	ஆண்	பெண்	மொத்தம்	%
	தொழில்நுட்பவியலாளர்				
21	கட்டுமான கள மேற்பார்வையாளர்	1	2	3	2.3
22	ஆங்கில தட்டெழுத்தாளர்	-	6	6	4.6
23	விவசாயம்	-	2	2	1.5
24	கணனி கல்வி	1	-	1	0.7
	மொத்தம்	64	66	130	100

மூலம்: கள தரவு சேகரிப்பு, ஒக்ரோபர் தொடக்கம் டிசெம்பர் வரையானவை, 2013

4.9.3 பாடநெறிக்கான கால அளவு

மாதிரி தரவுகளின் அடிப்படையில், 61% மாணவர்கள் 6 முதல் 12 மாதம் வரையிலான கால அளவுள்ள பாடநெறிகளை பின்பற்றுவதுடன் 21.5% இனர் மட்டும் ஓராண்டிற்கும் அதிகமான கால அளவுள்ள பாடநெறிகளை பின்பற்றுகின்றனர்.

அட்டவணை4.20

பாடநெறிக்கான கால அளவு

கால அளவு	மாணவர்களின் எண்ணிக்கை	சதவீதம் (%)
3 தொடக்கம் 6 மாதங்கள்	22	17.0
6 தொடக்கம்12 மாதங்கள்	80	61.5
ஓராண்டிற்கும் மேற்பட்ட	28	21.5
மொத்தம்	130	100

மூலம்: கள தரவு சேகரிப்பு, ஒக்ரோபர் தொடக்கம் டிசெம்பர் வரையானவை, 2013

4.9.4. சிக்கல்கள் பயிற்சி வழங்கல் தொடர்பான பிரச்சினைகள்

இக்கணக்கெடுப்பானது மாணவர்கள் அவர்களுடைய பயிற்சி காலத்தின் போது எதிர்நோக்கும் ஆறு முக்கிய பிரச்சினைகளை அடையாளம் கண்டுள்ளது. அவ்வாறான பிரச்சினைகள் பின்வருமாறு: பற்றாக்குறையான தங்குமிடவசதிகள், போதிய நிதியுதவி கிடைக்காமை, போதுமான போக்குவரத்து வசதிகள் இல்லாமை, போதிய வகுப்பு அறை மற்றும் உபகரணங்கள் காணப்படாமை, போதிய பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் விடுமுறைகளை பெற்றுக்கொள்ள முடியாமை என்பனவாகும். முன்னுரிமை அடிப்படையிலான பதில்களின் படி, 50% மாணவர்கள் முதலாவது முன்னுரிமையாக நிதி பிரச்சினையையும், இரண்டாவதாக தங்குமிட வசதிகள் (20.9%) பற்றாக்குறையாக உள்ளமையினையும் மற்றும் அதனைத் தொடர்ந்து போக்குவரத்து வசதிகள் இல்லாமை (11.2%) மற்றும் வகுப்பறைகள் மற்றும் உபகரணங்களுக்கான (11.2%) பற்றாக்குறையினையும் தெரிவித்துள்ளனர். 6.4% மாணவர்கள் மட்டும் முதலாவது முன்னுரிமையாக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாமை என்பதனை தெரிவித்துள்ளனர்.

அட்டவணை 4.21

மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

பிரச்சினை/ பாதிப்பு	1 வது முன்னுரிமை	%	2 வது முன்னுரிமை	%	3 வது முன்னுரிமை	%
விடுதி	26	20.9	18	16.6	12	23.5

நிதி	62	50.0	28	25.9	6	11.7
போக்குவரத்து	14	11.2	24	22.2	18	35.2
வகுப்பு அறைகள் மற்றும் உபகரணங்கள்	14	11.2	16	14.8	3	5.8
பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்	8	6.4	8	7.4	10	19.6
விடுமுறை	-	-	-	-	2	3.9
பிற	-	-	14	12.9	-	
பதிலளித்தவர்களின் எண்ணிக்கை	124		108		51	

மூலம்: கள தரவு சேகரிப்பு, ஒக்ரோபர் தொடக்கம் டிசெம்பர் வரையானவை, 2013

4.9.5 பாடநெறிகள் மற்றும் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் தொடர்பான மாணவர்களின் மனோநிலை

அட்டவணை 4.22 இல் தரப்பட்டுள்ளவாறு, பெரும்பான்மையான பயிற்சியாளர்களின் கருத்துக்களின் அடிப்படையில் தற்போது காணப்படும் கட்டிட வசதிகள் (60%), பயிற்சிகளுக்கான ஆசிரியர்கள் (69.5%), பாடநெறி/ பாடத்திட்ட மாற்றங்கள் (55.7%), நிறுவகத்தினை அணுகுதல் (68.2%), நிறுவகத்தின் கவர்ச்சி (82.6%) மற்றும் வழங்கப்படும் பயிற்சிகள் பிரதேசத்திற்கு ஏற்புடையதாக இருத்தல் (83.6%) என்பன தொடர்பாக அவர்கள் திருப்தியடைகின்றனர். இருப்பினும், பெரும்பாலான பயிற்சியாளர்கள் வழங்கப்பட்டுள்ள தங்குமிட வசதிகள் தொடர்பாக திருப்தியடையவில்லை (69.8%). மேலும், கணிசமான எண்ணிக்கையான பயிற்சியாளர்கள் வழங்கப்படும் செய்முறை பயிற்சிகள் (31.1%) மற்றும் தொழிற் துறை நிறுவகங்களுக்கு மாணவர்களை அறிமுகப்படுத்துவதற்காக செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் தொடர்பாக திருப்தியடையவில்லை (36.8%).

அட்டவணை 4.22

பாடநெறிகள் மற்றும் நிறுவகங்கள் தொடர்பான மாணவர்களின் கருத்துகள்

மனோநிலைகள்	ஏற்றுக்கொ	%	மத்திமமா	%	ஏற்றுக்கொ	%	பதிலளித்த வர்கள்
நிறுவகத்தில் பயிற்சி வழங்கலிற்கு போதுமான கட்டிட வசதிகள் காணப்படுகின்றது	26	23.6	20	18.1	66	60.0	110
நிறுவகத்தில் போதுமான தங்குமிட வசதிகள் காணப்படுகின்றது	74	69.8	4	3.7	28	26.4	106
நிறுவகத்தில் போதுமான உபகரணங்கள்/ பயிற்சி இயந்திரங்கள் காணப்படுகின்றன	13	12.3	50	47.7	42	40.0	105
நிறுவகத்தில் போதுமான பயிற்சி பெற்ற மற்றும் தகுதியான ஆசிரியர்கள் உள்ளனர்	8	7.6	24	22.8	73	69.5	105
நிறுவகமானது புதிய பாடத்திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது	12	11.5	34	32.6	58	55.7	104
நிறுவகமானது செய்முறை பயிற்சிகளுக்காக மாணவர்களை வழிநடத்துகிறது	33	31.1	22	20.7	53	50.0	106
நிறுவகமானது தொழிற் துறை நிறுவகங்களிற்கு மாணவர்களை அறிமுகப்படுத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்கின்றது	38	36.8	19	18.4	46	44.6	103

மாணவர்கள் எளிதாக நிறுவகத்தினை அணுக முடியும்	4	3.7	30	28.0	73	68.2	107
நிறுவகத்தின் தோற்றம் கவர்ச்சிகரமானதாக உள்ளது	2	1.9	18	17.3	86	82.6	104
நிறுவகமானது பிரதேசத்திற்கு பொருத்தமான பாடநெறிகளை வழங்குகிறது	0	-	17	16.3	87	83.6	104

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையானவை

4.9.6 பாடநெறிகள் நிறைவுசெய்யப்பட்டிருத்தல்

இக்கணக்கெடுப்பில் மாணவர்களின் அடைவு மட்டங்கள் மற்றும் அவர்களின் சமூக நலன்கள் என்பனவற்றினை அவதானிப்பதன் மூலம் பாடநெறிகளின் பொருத்தப்பாடு தொடர்பான ஆராய்ச்சியானது மேற்கொள்ளப்பட்டது. பயிற்சியாளர்களின் கருத்துக்களின் படி, அவர்களது தொழிற் பயிற்சிகளிலிருந்து கிடைக்கும் அறிவு மற்றும் பயிற்சி என்பன திருப்திகரமானதாக உள்ளது (76.2%). பயிற்சி பெறுபவர்கள் வாழ்க்கைத் தரம் (91%), சுயமரியாதை (82%), மற்றும் சமூக அந்தஸ்து (87%) ஆகியன மேம்படுகின்றன என நம்புகின்றனர். மேலும், பயிற்சியாளர்கள் தொழிற் பயிற்சி மூலம் தங்களது இலக்கினை அடைய முடியும் என்று நம்புகின்றனர் (80%).

அட்டவணை 4.23

பாடநெறிகளின் அடைதல் மட்டம்/ திருப்தி நிலைமை தொடர்பான மாணவர்களின் கருத்துக்கள்

அடைவு மட்டம்	ஏற்றுக்கொள்ளவில்லை	%	மத்திமமான	%	ஏற்றுக்கொள்ளுதல்	%	பதிலளித்தவர்கள் இல்லை
அறிவு மற்றும் பயிற்சி வழங்கல் என்பன போதுமானது	12	10.1	16	13.5	90	76.2	118
தொழிற் பயிற்சியானது வாழ்க்கை தரத்தினை மேம்படுத்துகிறது	2	1.7	8	7.0	103	91.1	113
தொழிற் பயிற்சியானது சுயமரியாதையை மேம்படுத்துகின்றது	8	7.0	12	10.6	93	82.3	113
தொழிற் பயிற்சியானது சமூக அந்தஸ்தினை உயர்த்துகிறது	4	3.4	10	8.6	102	87.3	116
தொழிற் பயிற்சியானது இலக்குகளை அடைவதற்கு உதவுகிறது	8	6.7	16	13.5	94	79.6	118
தொழிற் கல்வி மற்றும் பயிற்சிற்கு குழந்தைகளை அல்லது குடும்ப உறுப்பினர்களை அனுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது	12	10.3	10	8.6	94	81.0	116

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையானவை

அட்டவணை 4.24

மாகாணத்தில் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி வேலைத்திட்டத்தினை விரிவாக்கம் செய்வதற்கான ஆலோசனைகள்

ஆலோசனைகள்	1 வது முன்னுரிமை		2 வது முன்னுரிமை		3 வது முன்னுரிமை	
	எண்ணி	%	எண்ணி	%	எண்ணி	%
தற்போதுள்ள பயிற்சி நிறுவகங்களுக்கு பயிற்சிகளிற்காக மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதை அதிகரித்தல்	24	20.7	6	6.3	4	4.8
மாவட்ட மட்டத்தில் புதிய நிறுவகங்களை நிறுவுதல்	20	17.2	10	10.4	3	3.6
மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குதல்	2	1.7	12	12.5	12	14.3
மாணவர்கள் போக்குவரத்து வசதிகளை வழங்குதல்	0	0.0	14	14.6	6	7.1
மாணவர்களுக்காக கல்வி உதவி தொகை/ புலமைப் பரிசில் திட்டங்களை ஆரம்பித்தல்	18	15.5	9	9.4	16	19.0
புதிய தொழிற் பயிற்சி திட்டங்களை அறிமுகம் செய்தல்	16	13.8	8	8.3	16	19.0
பாடசாலைகளிலிருந்து விலகியோர்/	12	10.3	16	16.7	9	10.7

மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்						
பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்	16	13.8	16	16.7	9	10.7
தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (VET) திட்டங்கள் தொடர்பாக விளக்கமளிப்பதற்கு பொது மக்களுக்கு கிராமிய மட்டத்தில் குறுகிய கால செயலமர்வுகள்/ முகாம்களை ஆரம்பித்து நடாத்துதல்	8	6.9	5	5.2	9	10.7
பதிலளித்தவர்களின் எண்ணிக்கை	116	100.0	96	100.0	84	100.0

மூலம்: கள தரவு சேகரிப்பு, 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையானவை

மாகாணத்தில் தொழிற் பயிற்சி வழங்கலை மேம்படுத்தும் பொருட்டு பயிற்சியாளர்களால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அட்டவணை 4.24 இல் தரப்பட்டுள்ளன. பயிற்சியாளர்களது பரிந்துரைகள் முன்னுரிமைகளின் படி பின்வருமாறு, தற்போதைய நிறுவகங்கள் மாணவர்களை சேர்த்துக்கொள்வனை அதிகரித்தல் (21%), மாவட்ட ரீதியில் புதிய நிறுவகங்களை நிறுவுதல் (17%), மாணவர்களுக்கான புலமைப்பரிசில்/ கல்வி உதவி தொகை திட்டங்கள் போன்றவற்றினை உருவாக்குதல் (16%), புதிய தொழிற் பயிற்சி பாடநெறிகளை அறிமுகப்படுத்தல் (14%), பெற்றோர்கள் மத்தியில் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல் (14%), பாடசாலையை விட்டுச் சென்ற மாணவர்கள் மற்றும் தற்போதைய மாணவர்கள் மத்தியில் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல் (10%) மற்றும் பொதுமக்களுக்கு தொழிற் கல்வி

மற்றும் பயிற்சி திட்டத்தின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு கிராமிய மட்டத்திலான குறுகிய கால செயலமர்வுகள் அல்லது விழிப்புணர்வு முகாம்கள் என்பவற்றை நடாத்துதல் (7%).

4.10 பயிற்சி மற்றும் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் தொடர்பான பிரச்சினைகள்

10. கைத்தொழிற் துறை நிறுவகங்கள், பயிற்சி வழங்கும் நிறுவகங்கள், தேசிய தொழிற் தேர்ச்சி தர (NVQ) சான்றிதழ்களை வைத்திருப்பவர்கள் மற்றும் தற்போதைய பயிற்சியாளர்கள் ஆகியோரிடையில் மேற்கொள்ளப்பட்ட கள தரவு சேகரிப்புக்கள் மற்றும் இலக்கு குழு விவாதங்கள் மற்றும் திட்டமிடல் செயலமர்வு கலந்துரையாடல்கள் என்பன மத்திய மாகாணத்தின் தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி முறைமை தொடர்பான கீழ்வரும் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கு உதவியுள்ளன:

1. தொழில் முனைவோர்/ வர்த்தகர்கள் மத்தியில் தொழிற் கல்வி மற்றும் பயிற்சிநெறி சான்றிதழ்களை வைத்திருப்பவர்களது திறன்கள் மற்றும் மனோநிலைகளின் மட்டம் தொடர்பாக நம்பிக்கையீனமான தன்மை காணப்படுகின்றது. தொழிற் துறை நிறுவக உரிமையாளர்கள் மற்றும் முகாமையாளர்கள் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (VET) சான்றிதழ்களை வைத்திருப்பவர்கள் அதிக சம்பளத்தினை எதிர்பார்ப்பதாகவும் மற்றும் அவர்கள் அனுபவம் மற்றும் செய்முறை பயிற்சிகளை பெற்றுக்கொண்டதன் பின்னர் வேலையை விட்டுச்செல்வதாகவும் நம்புகின்றனர். எனவே, கைத்தொழிற் துறையினர் பயிற்சி பெறாத தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களுக்கு வேலையினை மேற்கொள்வதன் மூலமாக பயிற்சிகளை வழங்குவதற்கு விரும்புகிறனர். கைத்தொழிற் துறையினரது இவ்வாறான

சிந்தனைகள் மற்றும் நடைமுறைகள் என்பன தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (TVET) முறைமையிற்கு உண்மையில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதனால் இவற்றினை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் தொழிலதிபர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் மத்தியில் மாற்றுதல் வேண்டும். தொழிலதிபர்கள் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோரின் அபிலாஷைகளுக்கு மதிப்பளித்து ஒரு போட்டியான சூழலில் தொழில் புரிவதற்கு ஏதுவாக பயிற்சியாளர்களின் அணுகுமுறைகள் மேம்படுத்தப்படல் வேண்டும்.

2. பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் தச்சு வேலை, மேசன், பொறிவலர், மோட்டார் திருத்துநர், காய்ச்சி இணைத்தல், இரும்பு மற்றும் உருக்கு புனைதல், இயந்திர மற்றும் கனரக உபகரண இயக்குநர், ஏனையவை போன்ற சில பயிற்சி பாடநெறிகளிற்கு போதிய எண்ணிக்கையான மாணவர்களை சேர்த்துக்கொள்வது தொடர்பாக கடுமையான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. இந்த பயிற்சிநெறிகளிற்காக போதிய எண்ணிக்கையான மாணவர்களை சேர்த்துக்கொள்ள முடியாமைக்கான காரணங்களாவன: எதிர்மறையான சமூக மனப்பாங்குகள் மற்றும் முறைசாராத் துறையில் பயிலுநர் உதவியாளர் பதவிகளிற்கு நிலவும் பணவியல் கவர்ச்சி என்பனவாகும். பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் தற்பொழுது வினைத்திறனற்ற மற்றும் திறமையற்ற பயிற்சி வழங்கலிற்கு வசதிகள் தொடர்பான பற்றாக்குறையே காரணமாகும் என அடிக்கடி குற்றம் சுமத்தி வருகின்றன. பின்வருவன மாகாணத்தில் உள்ள பயிற்சி வழங்குநர்கள் எதிர்நோக்குகின்ற பிரதான பிரச்சினைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன: பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை அல்லது கவர்ச்சிகரமற்ற கொடுப்பனவு திட்டங்களின் காரணமாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களை துறையில் தக்கவைத்துக் கொள்வதில் உள்ள பிரச்சினைகள், பயிற்சிநெறிகளை நடாத்துவதற்கான பௌதிக வள

பற்றாக்குறை, மாணவர்களுக்கான தங்குமிட வசதிகள் இல்லாமை, புலமைப் பரிசில்கள்/ கல்வி உதவி தொகை/ கடன் திட்டங்கள் போன்றவாறு மாணவர்களுக்கான நிதி உதவித் திட்டங்கள் காணப்படாமை மற்றும் மற்றும் அனேகமாக தனியார் துறையினர் மூலம் வழங்கப்பட்டு வரும் தராதர அங்கீகாரம் அல்லாத தரம் குறைந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றமை என்பனவாகும். மேலும், பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (TVET) முறைமை தொடர்பான கொள்கைகளில் மேற்கொள்ளப்படுகின்ற திடீர் மற்றும் ஒருங்கிணைக்கப்படாத மாற்றங்களை ஏற்றுக்கொள்வதற்கு மறுக்கின்றன.

3. தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்களை வைத்திருப்பவர்கள் மற்றும் தற்போதைய பயிலுநர்கள் ஆகியோர் இடையிலான மாதிரி கணக்கெடுப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரச்சினைகள் மாகாணத்தின் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை மேம்படுத்துவதற்கு தேவையான கொள்கைத் தலையீடுகளிற்கு பயனுள்ளதாக காணப்படுகின்றன. வேலைகள் இல்லாமை மற்றும் காணப்படும் வேலைகள் மற்றும் பயிற்சிகள் இடையில் பொருத்தப்பாடுகள் காணப்படாமை, பற்றாக்குறையான பயிற்சிகள் ஆகியன மாகாணத்தில் தேசிய தொழிற் தேர்ச்சி தர சான்றிதழ் வைத்திருப்பவர்கள் மத்தியில் அதிகமான வேலையின்மைகளுக்கு பிரதான காரணங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும், தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினால் (VET) தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை (NVQ) சான்றிதழ்களை வைத்திருப்பவர்களில் கணிசமான எண்ணிக்கையானோருக்கு எந்தவொரு நன்மைகளையும் உருவாக்க முடியவில்லை என்பதனை அறியமுடிகின்றது. இவ்வாறான காரணங்கள், நிறுவகங்களினது பயிற்சி வழங்கல்களை மறு பரிசீலனை செய்வதற்கும் மற்றும் இப் பிரச்சினைகளுக்கான காரணங்களை

கண்டறிவதற்கும் தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (TVET) முறைமையினை நிர்ப்பந்திக்கின்றன. இது மேலே பிரச்சினை 1 இன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு தொழிற் துறை நிறுவகங்கள் மற்றும் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் மற்றும் பயிற்சி பெறுபவர்கள் ஆகியோர் மத்தியில் காணப்படும் ஒருங்கிணைப்பு மற்றும் புரிந்துணர்வு என்பனவற்றின் பற்றாக்குறை காரணமாக ஏற்படலாம். தேசிய தொழிற் தேர்ச்சி (NVQ) சான்றிதழ்களை வைத்திருப்பவர்கள் மற்றும் தற்போதைய பயிற்சியாளர்கள் ஆகியோர் பயிற்சி நிறுவகங்களில் போதிய தங்குமிட வசதிகள் காணப்படாமை, வழங்கப்படும் செய்முறை பயிற்சிகள் போதுமானதாக காணப்படமை மற்றும் தொழிற் துறை நிறுவகங்களிற்கு பயிற்சி பெறுபவர்களை அறிமுகப்படுத்துவதற்கு பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் போதுமான முயற்சிகளை எடுக்காமை போன்ற பயிற்சி வழங்கல்களுடன் தொடர்பான பிரதான பிரச்சினைகள் தொடர்பாக சிந்தித்தல் வேண்டும்.

4.11 சாரம்சம்

இந்த அத்தியாயத்தில் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் அவைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், பாடநெறிகளின் கலவை மற்றும் பயிற்சி வகைகளின் அடிப்படையில் பாடநெறிகள் இடம்பெறும் தன்மை, தொழிற் கல்வி திட்டங்களில் பதிவு செய்துள்ள மாணவர்கள் தொடர்பான மதிப்பீடு, பயிற்சிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுவோரின் எண்ணிக்கை, திறன்சார் தொழிலாளர்களுக்கான கேள்வி மற்றும் வழங்கல் என்பவற்றிற்கு இடையிலான இடைவெளிகள் மற்றும் தேசிய தொழிற் தேர்ச்சி தகைமைகளிற்கான பயிற்சிகளை பெற்றுள்ளவர்களின் பதில்கள், தற்போதைய பயிலுநர்களின் தொழில்வாய்ப்புகள், பயிற்சிகளினால் ஏற்படும் நன்மைகள், பயிற்சிகளின் தரங்கள், பயிற்சிகள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் பயிற்சி வழங்கலினை மேம்படுத்துவதற்கு தேவையான ஆலோசனைகள் ஆகியவை தொடர்பான தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு

விவரிக்கப்பட்டுள்ளது. இந்த அத்தியாயத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அத்தியாயம் ஐந்தில் விபரிக்கப்பட்டுள்ள மத்திய மாகாணத்திற்கான தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

அத்தியாயம் 05

மத்திய மாகாண தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டம்

5.0 கண்ணோட்டம்

இந்த அத்தியாயத்தில் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான ஐந்தாண்டு காலப்பகுதியில் மத்திய மாகாணத்திற்கு தேவையான தொழிற் கல்வி மற்றும் பயிற்சி என்பன தொடர்பாக முன்மொழியப்பட்ட பயிற்சித் திட்டமானது தரப்பட்டுள்ளது. பயிற்சி திட்டமானது பயிற்சிகளுக்கான கேள்விகள் மற்றும் வழங்கல்கள் என்பவற்றுக்கு இடையிலான இடைவெளிகள் என்பன தொடர்பாக, பயிற்சி நிறுவகங்கள், பயிற்சி பெற்ற நபர்கள், தற்போதைய பயிற்சியாளர்கள் மற்றும் நிபுணர்கள் ஆகியோரிடத்தில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி ஆய்வுகளின் முடிவுகள் மற்றும் இலக்கு குழு கலந்துரையாடல்கள் என்பனவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. பல்வேறுபட்ட தொழிற் துறைசார் பயிற்சி தேவைகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட பயிற்சி வழங்குநர்கள் என்பன இதில் தரப்படுகின்றன. மேலும், இவ் அத்தியாயத்தில், கற்பிக்கப்படும் பாடநெறிகள் மற்றும் முன்மொழியப்பட்ட பயிற்சிநெறிகளை மேற்கொள்வதற்கான பயிற்சி நிறுவகங்கள் என்பன தொடர்பான விபரங்கள் தரப்பட்டுள்ளதுடன் அவை அடையாளப்படுத்தி காட்டப்பட்டுமுள்ளது. மேலும், மத்திய மாகாணத்திற்கான தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை அபிவிருத்தி செய்யும்போது குறுகிய கால மற்றும் நடுத்தர கால தலையீடுகள் மற்றும் அவற்றுக்குரிய அமைப்புகள் ஆகியன அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ் அத்தியாயத்தின் 5.4 ஆம் பிரிவில் மத்திய மாகாணத்திற்கான தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டமானது தரப்பட்டுள்ளது.

5.1 பயிற்சி தேவைகள்

இவ் அத்தியாயமானது மாகாணத்தில் அடுத்துவரும் ஆண்டுகளிற்கான பயிற்சித் தேவைகளை அடையாளம் கண்டுள்ளது. துறைசார் அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள பயிற்சிக்கான கேள்விகள் மற்றும் மாகாணத்தின் தற்போதைய பயிற்சியளித்தல் அறிக்கையில் காணப்படும் பயிற்சி வழங்கல் என்பவற்றுக்கிடையிலான இடைவெளியின் அடிப்படையில் பயிற்சித் தேவைகள் கணக்கிடப்பட்டுள்ளன. அட்டவணை 5.1 இல் தற்போதைய தொழில்வாய்ப்புகள், வெவ்வேறு காலப்பகுதிக்கான பயிற்சித் தேவைகள், சம்பந்தப்பட்ட பயிற்சித் திட்டங்கள், பயிற்சி வழங்கலிற்கு பொறுப்பான நிறுவகங்கள் மற்றும் ஒவ்வொரு தொழிற் பிரிவின் கீழும் தேசிய தொழிற் தேர்ச்சி தகைமைக்கான பாடநெறிகள் காணப்படுகின்ற தன்மை போன்ற விடயங்கள் தரப்பட்டுள்ளன. இத்தகவல்கள் பயிற்சி வழங்கல்கள் மற்றும் பல்வேறுபட்ட அரசாங்க மற்றும் தனியார் துறை பயிற்சி நிறுவகங்களிடையில் பயிற்சி அளித்தல் செயற்பாடுகளை ஒப்படைத்தல் என்பவற்றுக்கு அவசியமாகும். மேலும், மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் பயிற்சி வழங்கலை மேம்படுத்துவதற்கு பொருத்தமான தேசிய தொழிற் தேர்ச்சி தகைமையினை கொண்ட பயிற்சிநெறிகள் மற்றும் தேசிய தொழிற் தேர்ச்சி நியமங்கள் ஆகியவற்றினை அமுல்படுத்துவதற்கான இடங்களை அடையாளம் காண்பதற்காக இத்தகவல்கள் பயன்படுத்தப்படமுடியும். அட்டவணை 5.1 இல் காட்டப்பட்டுள்ளதற்கு இணங்க, இம் மாகாணத்தில் தேசிய தொழிற் தகைமைக்கான பயிற்சி வழங்கல் தொடர்பான புதிய பாடநெறிகளை அறிமுகம் செய்தல், தற்போது காணப்படும் பாடநெறிகளை விரிவாக்கம் செய்தல், தற்போது காணப்படும் பாடநெறிகளிற்கு தராதர அங்கீகாரம் அளித்தல், மாணவர் ஆட்சேர்ப்பினை அதிகரித்தல், புதிய பயிற்சி நிறுவகங்கள் மற்றும் பயிற்சி நிலையங்களை ஸ்தாபித்தல் மற்றும் மாகாணத்தின் தொலைதூர பகுதிகளில்

மாணவர் ஆட்சேர்ப்பு நிலையங்களை உருவாக்கல் என்பனவற்றினை மேம்படுத்துவதற்கான பாரிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

அட்டவணை 5.1

மத்திய மாகாணத்தில் தற்போது வழங்கப்படுகின்ற பயிற்சிகள் மற்றும் மற்றும் பயிற்சித் தேவைப்பாடுகள்

தொடர் இல	தொழில்	தற்போதைய எண்ணிக்கை 2013 (தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை)	மேலதிக தொழிலாளர்களுக்கான தேவைகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கேள்விகள் (வெளிநாட்டு கேள்விகள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன*)						தொடர்பான பயிற்சித் திட்டங்கள்	பயிற்சி வழங்கலிற்கு பொறுப்பான முகவர்/ முகவர்கள்	தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை சான்றிதழ்கள் காணப்படல் மற்றும் காணப்படாமை
			2014	2015	2016	2017	2018	2019			
1	மரவேலை கைவினைஞர் / தச்சு வேலை செய்பவர் (தளபாடங்கள் மற்றும் கட்டிடம்)	788 (50)	684 [215]	752 [226]	828 [237]	910 [249]	1001 [261]	1102 [274]	மரவேலை கைவினைஞர் / தச்சு வேலை செய்பவர் (தளபாடங்கள் மற்றும் கட்டிடம்)	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் தொழிற் பயிற்சி அதிகாரசபை கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் தொழில்முயற்சி ஊக்குவிப்பு திணைக்களம், அரச சார்பற்ற நிறுவகங்கள்	மொத்த பாடநெறிகளில் 40% ஆனவை தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை பாடநெறிகளாகும்

தொடர் இல	தொழில்	தற்போதைய எண்ணிக்கை 2013 (தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை)	மேலதிக தொழிலாளர்களுக்கான தேவைகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கேள்விகள் (வெளிநாட்டு கேள்விகள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன*)						தொடர்பான பயிற்சித் திட்டங்கள்	பயிற்சி வழங்கலிற்கு பொறுப்பான முகவர்/ முகவர்கள்	தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை சான்றிதழ்கள் காணப்படல் மற்றும் காணப்படாமை
			2014	2015	2016	2017	2018	2019			
2	கட்டுமான கைவினைஞர் / மேசன்	113 (07)	693 [236]	762 [248]	839 [260]	922 [273]	1015 [287]	1116 [301]	கட்டுமான தொழில்நுட்பவியல்/ கைவினைஞர், மேசன்	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் தொழிற் பயிற்சி அதிகாரசபை ,	மொத்த பாடநெறிகளில் 72% ஆனவை தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை பாடநெறிகளாகும்
3	கட்டுமான உபகரணங்கள் இயக்குநர்	79 (60)	205	226	248	273	300	330	Construction equipment operator கட்டுமான உபகரணங்கள் இயக்குநர்	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் தொழிற் பயிற்சி அதிகாரசபை தனியார் துறை	08 மொத்த பாடநெறிகளில் 63% ஆனவை தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை பாடநெறிகளாகும்
4	மின்னியலாளர்	281(189)	80 [263]	88 [276]	97 [290]	106 [304]	117 [320]	129 [336]	மின்னியலாளர்	தொழில்நுட்	22 மொத்த

தொடர் இல	தொழில்	தற்போதைய எண்ணிக்கை 2013 (தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை)	மேலதிக தொழிலாளர்களுக்கான தேவைகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கேள்விகள் (வெளிநாட்டு கேள்விகள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன*)						தொடர்பான பயிற்சித் திட்டங்கள்	பயிற்சி வழங்கலிற்கு பொறுப்பான முகவர்/ முகவர்கள்	தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை சான்றிதழ்கள் காணப்படல் மற்றும் காணப்படாமை
			2014	2015	2016	2017	2018	2019			
										ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் தொழிற் பயிற்சி அதிகாரசபை, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், அரச சார்பற்ற நிறுவகங்கள் மற்றும் தனியார் துறை	பாடநெறிகளில் 77% ஆனவை தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை பாடநெறிகளாகும்

தொடர் இல	தொழில்	தற்போதைய எண்ணிக்கை 2013 (தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை)	மேலதிக தொழிலாளர்களுக்கான தேவைகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கேள்விகள் (வெளிநாட்டு கேள்விகள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன*)						தொடர்பான பயிற்சித் திட்டங்கள்	பயிற்சி வழங்கலிற்கு பொறுப்பான முகவர்/ முகவர்கள்	தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை சான்றிதழ்கள் காணப்படல் மற்றும் காணப்படாமை
			2014	2015	2016	2017	2018	2019			
5	நில வடிவமைப்பாளர்	23	9	10	11	12	13	14	நில வடிவமைப்பாளர்	ஏனைய அரச துறை	காணப்படவில்லை
6	பிளம்பர் / குழாய் பொருத்துநர்	45 (13)	120 [226]	132 [237]	145 [249]	160 [262]	176 [275]	193 [288]	பிளம்பர் / குழாய் இணைப்பவர் மற்றும் பொருத்துநர்	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் தொழிற் பயிற்சி அதிகாரசபை,	04 மொத்த பாடநெறிகளில் 75% ஆனவை தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை பாடநெறிகளாகும்
7	கணிய அளவையாளர்	38	38	42	46	51	56	62	கணிய அளவையாளர்	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம், தொழிற் பயிற்சி அதிகாரசபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்	02 மொத்த பாடநெறிகளில் 100% ஆனவை தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை பாடநெறிகளாகும்

தொடர் இல	தொழில்	தற்போதைய எண்ணிக்கை 2013 (தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை)	மேலதிக தொழிலாளர்களுக்கான தேவைகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கேள்விகள் (வெளிநாட்டு கேள்விகள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன*)						தொடர்பான பயிற்சித் திட்டங்கள்	பயிற்சி வழங்கலிற்கு பொறுப்பான முகவர்/ முகவர்கள்	தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை சான்றிதழ்கள் காணப்படல் மற்றும் காணப்படாமை
			2014	2015	2016	2017	2018	2019			
8	ரைல் பதிப்பவர்	00	120 [33]	132 [35]	145 [36]	160 [38]	176 [40]	193 [42]	ரைல் பதிப்பவர்	பாடநெறிகள் இல்லை	
9	வர்ணம் பூசுபவர்	00	95 [109]	105 [114]	115 [120]	126 [126]	139 [132]	153 [139]	கட்டிட வர்ணம் பூசுபவர்	பாடநெறிகள் இல்லை	
10	கனரக வாகன இயக்குநர்	79	80 [125]	88 [131]	97 [138]	106 [145]	117 [152]	129 [160]	கனரக மற்றும் இலகு வாகன இயக்குநர்	தனியார் துறை	08 மொத்த பாடநெறிகளில் 63% ஆனவை தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை பாடநெறிகளாகும்
11	தொழிற்சாலை தையல் இயந்திர இயக்குநர்கள்	169	98 [1109]	108 [1164]	119 [1223]	130 [1284]	143 [1348]	158 [1415]	தையல் / தொழிற்சாலை தையல் இயந்திர இயக்குநர்கள்	தொழிற் பயிற்சி அதிகாரசபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தனியார் துறை, ஏனைய அரச துறை, அரச சார்பற்ற துறை	17 மொத்த பாடநெறிகளில் 41% ஆனவை தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை பாடநெறிகளாகும்
12	பிளாஸ்டிக்	00	24	24	26	29	32	35	பிளாஸ்டிக்	பாடநெறிகள்	

தொடர் இல	தொழில்	தற்போதைய எண்ணிக்கை 2013 (தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை)	மேலதிக தொழிலாளர்களுக்கான தேவைகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கேள்விகள் (வெளிநாட்டு கேள்விகள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன*)						தொடர்பான பயிற்சித் திட்டங்கள்	பயிற்சி வழங்கலிற்கு பொறுப்பான முகவர்/ முகவர்கள்	தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை சான்றிதழ்கள் காணப்படல் மற்றும் காணப்படாமை
			2014	2015	2016	2017	2018	2019			
	பதப்படுத்தல் இயந்திர இயக்குநர்								பதப்படுத்தல்	இல்லை	
13	தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்	00	119 [09]	131 [09]	144 [10]	158 [10]	174 [11]	192 [11]	கட்டுமான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்	பாடநெறிகள் இல்லை	

* 2012 ஆம் ஆண்டில் வழங்கல்களை மேற்கொள்ளமுடியாமற் போன தொழிலாளர்களில் 10% இற்கு மத்திய மாகாணத்தினால் பயிற்சியளிக்கமுடியும் என்ற எடுகோளின் அடிப்படையில் வெளிநாட்டு கேள்விகள் கணக்கிடப்பட்டுள்ளன. இவ் எடுகோளானது நியாயமானது ஏனெனில் மத்திய மாகாணத்தின் மக்கள் தொகையானது இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 12.6% ஆகும். மேலும், இலங்கையின் தேர்ச்சி பெற்ற தொழிலாளுக்கான வெளிநாட்டு கேள்வியானது 5% வருடாந்த வளர்ச்சியினை கொண்டுள்ளது என எடுகோள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அட்டவணை 5.1 தொடர்ச்சி

மத்திய மாகாணத்தில் தற்போது வழங்கப்படுகின்ற பயிற்சிகள் மற்றும் மற்றும் பயிற்சித் தேவைப்பாடுகள்

தொடர் இல	தொழில்	தற்போதைய எண்ணிக்கை 2013 (தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை)	மேலதிக தொழிலாளர்களுக்கான தேவைகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கேள்விகள் (வெளிநாட்டு கேள்விகள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன*)						தொடர்பான பயிற்சித் திட்டங்கள்	பயிற்சி வழங்கலிற்கு பொறுப்பான முகவர்/ முகவர்கள்	தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை சான்றிதழ்கள் காணப்படல் மற்றும் காணப்படாமை
			2014	2015	2016	2017	2018	2019			
14	சிவில் வேலை மேற்பார்வையாளர்/ போர்மேன்	00	130 [16]	143 [17]	157 [18]	173 [19]	190 [19]	209 [20]	கட்டுமான தள மேற்பார்வையாளர்	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்,	காணப்படுகின்றது
15	மெக்கானிக்கல் பிக்ஸர்/ சிவில் பொறியியல்	00	39 [40]	43 [42]	47 [44]	52 [46]	57 [49]	63 [51]	சிவில் பொறியியல்	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம், தொழிற் பயிற்சி அதிகாரசபை	4 மொத்த பாடநெறிகளில் 25% ஆனவை தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை பாடநெறிகளாகும்

தொடர் இல	தொழில்	தற்போதைய எண்ணிக்கை 2013 (தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை)	மேலதிக தொழிலாளர்களுக்கான தேவைகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கேள்விகள் (வெளிநாட்டு கேள்விகள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன*)						தொடர்பான பயிற்சித் திட்டங்கள்	பயிற்சி வழங்கலிற்கு பொறுப்பான முகவர்/ முகவர்கள்	தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை சான்றிதழ்கள் காணப்படல் மற்றும் காணப்படாமை
			2014	2015	2016	2017	2018	2019			
16	அலுமினிய சட்டகம் புனைபவர்	90 (80)	64 [28]	70 [29]	77 [31]	85 [32]	94 [34]	103 [36]	அலுமினிய சட்டகம் புனைதல்	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம், தொழிற் பயிற்சி அதிகாரசபை, ஏனைய அரச துறை, அரச சார்பற்ற துறை	8 மொத்த பாடநெறிகளில் 88% ஆனவை தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை பாடநெறிகளாகும்
17	காய்ச்சி இணைப்பவர்	203 (54)	92 [276]	101 [290]	111 [304]	122 [320]	135 [335]	148 [352]	காய்ச்சி இணைப்பவர்/ காய்ச்சி இணைத்தல் வேலைகள்	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம், தொழிற் பயிற்சி அதிகாரசபை, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, ஏனைய அரச	18 மொத்த பாடநெறிகளில் 100% ஆனவை தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை பாடநெறிகளாகும்

தொடர் இல	தொழில்	தற்போதைய எண்ணிக்கை 2013 (தேசிய தொழிற் தேர்ச்சி தகைமை)	மேலதிக தொழிலாளர்களுக்கான தேவைகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கேள்விகள் (வெளிநாட்டு கேள்விகள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன*)						தொடர்பான பயிற்சித் திட்டங்கள்	பயிற் வழா பொ முக முக
			2014	2015	2016	2017	2018	2019		
										துறை சார்பற் தேசிய சேவை
18	பொறிவலர்	187 (52)	31 [103]	34 [108]	38 [114]	41 [119]	45 [125]	50 [131]	பொறிவலர்/ லேத் இயந்திர இயக்குநர்	தொழி கல்வி பயிற்ச திணை தேசிய மற்று கைத் பயிற்ச அதிகா தொழி அதிகா ஏனை துறை சார்பற்
19	இரும்பு மற்றும் உருக்கு புனைபவர்	147	90 [277]	99 [291]	109 [305]	120 [321]	132 [337]	145 [354]	இரும்பு மற்றும் உருக்கு புனைபவர், இலகு பொறியியல்	ஏனை துறை பயிலு

